മഞ്ജരി

மேகலை

இ. சுந்தரமூர்த்தி

28.2.71

வெளியிடுவோர் :

பாண்டியன்
பதிப்பகம்

28, டவுன்

ஹால் ரோடு, மதுரை.

விலை ரூ. 1—50

பாண்டியன் பதிப்பகத்துக்காக கே. ராமனுல் விஜயா பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்டில் அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது.

முகவுரை.

நல்லிசைக் கவிஞர் இயற்றிய நயமிக்க இலக்கியங்கள் பல செந்தமிழணங்கின் சீரிய அணிகலன்களாய்த் திகழ்வன. அவற்றுள் சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி முதலிய உயரிய பொருட்டொடர் நிலைச் செய்யுட்கள் சிறப்புடையன. அவை தம்முள்ளும், தன்னலந்துறந்து மன்னுயிர்க்கெல்லாம் அருளறம் பூணும் அரும் செயல் ஆற்றித் தூய்மை மிக்க துறவு நெறி ஒழுகிய மணிமேகலையின் வரலாறுகூறும் மணிமேகலை நூல், மக்களைப் பிறர் நலம் பேணும் பெருமையராக்கி வாழ்க்கைப் பயனை எய்துவிப்பதில் தன்னிகரற்று முன்னிற்பதாகும். இதனை மக்கள் வாழ்க்கையின் வழிகாட்டி என்பது தக்கதே யாகும். சீரிய கூரிய சொல்நடையழகும், தெளிவும், இனிமையும் இக்காப்பியத்தின் சிறப்பியல்புகளாம்.

இங்ஙனம் தலையாகச் சிறந்த இவ்விலக்கியத்தினைக் கல்லூரி மாணவரும் ஏனைய இளைஞரும் படித்துப் பயனெய்துமாறு குறிப்புரை ஒன்று எழுதும் பொறுப்பைத் திருவாளர்கள் R. வீரராகவன் அவர்களும் S. கோவிந்தன் அவர்களும் அன்புடன் ஏற்றுச் செய்து முடித்துள்ளனர். அவர்கட்கு எங்கள் நன்றி உரியதாகும்.

மணிமேகலையமுதை மக்கட்கு வழங்குவதில் வெய்துகிறோம். அறம் செழிக்க!

பெருமகிழ்

மதுரை
16—11—57.

கா. இராமன்
பாண்டியன் பதிப்பகம்.

எங்கள் அடுத்த
மலிவுப் பதிப்புகள்:

1. தொல்காப்பியம்
2. குறுந்தொகை
3. அகநானூறு
4. புறநானூறு

பதிகம்

பண்டொருகால், நாவலந்தீவிற்கு அரக்கரால் பெருந்துயர் வருமென உணர்ந்து, அது வாராமைப் பொருட்டு மேருமலையில் பெருந் தவமியற்றி, இத்தீவினைக் காத்தருளிய சம்பு என்னும் பேரணங்கு காவிரிப்பூம் பட்டினத்தின்கண் வீற்றிருந்தனள். காந்தன் என்னும் சோழன் நீர்வளம் வேண்ட அகத்தியனால் காவிரி தோற்றுவிக்கப்பட்டு, பொங்கும் வெள்ளத்தோடு காவிரிப்பூம் பட்டினத்தை நெருங்கிற்று. சம்புவினால் காவிரி அன்னை வரவேற்கப்பட்டு அவ் அணங்கினை வணங்கினள். அச் சம்புவும் காவிரியை நோக்கி மகிழ்ந்து 'இதுகாறும் என் பெயரால் சம்பாபதி என வழங்கிய இவ்வூர் இனி நின பெயரால் காவிரிப்பூம் பட்டினம் என வழங்குக' என்றருளினள். இங்ஙனம் இரு பெருந் தெய்வத் திருப்பெயர்களைக் கொண்ட புகாரில் இந்திர விழா நிகழ்தற்கு முரசு அறையப் பெற்றமை முதலாக, மணிமேகலை துறவு பூண்டு நோற்றமை ஈறாக உள்ள வரலாற்றினைத் தமிழ் நெறி பிறழாமல் முப்பது காதைகளால்தாம் பாடி முடித்த இந் நூலைக் கூலவாணிகன் சாத்தனார் இளங்கோவடிகளிடம் மொழிய, அவர் கேட்டு மகிழ்ந்தனர்.

இளங்கதிர் ஞாயிறு
எள்ளும் தோற்றத்து,
விளங்கு ஒளி மேனி; விரிசடையாட்டி;

பொன் திகழ்
நெடுவரை உச்சித்
தோன்றி,

தென் திசைப் பெயர்ந்த இத்தீவத் தெய்வதம்;

5. சாகைச் சம்பு-தன்
கீழ் நின்று,

1-5
எள்ளும்-இகழும்-ஒத்த இத்

தீவம்-இந்த நாதலந் தீவு. சாகைச் சம்பு

தன்கீழ்-கிளைகள்

ஓங்கிய நாவல் மரத்தின் அடியில்,

2

மாநில மடந்தைக்கு வரும் துயர் கேட்டு,

வெந்திறல் அரக்கர்க்கு வெம்பகை நோற்ற
சம்பு என்பாள்-சம்பாபதியினள்.

செங்கதிர்ச் செல்வன்
திருக்குலம் விளக்கும்
கஞ்ச வேட்கையின்
காந்தமன் வேண்ட

அமர முனிவன் அகத்தியன் தனது
கரகம் வீழ்த்த காவிரிப் பாவை

செங்குணக்கு ஒழுகி
அச் சம்பாபதி அயல்
பொங்கு
நீர்ப் பரப்பொடு பொருந்தித்
தோன்ற;

ஆங்கு இனிது இருந்த அருந்தவ முதியோள்
ஓங்கு நீர்ப் பாவையை உவந்து எதிர்கொண்டு-ஆங்கு,
'ஆணு விசும்பின் ஆகாய கங்கை
வேணவாத் தீர்த்த விளக்கே! வா' என;
பின்னிலை முனியாப் பெருந்தவன் கேட்டு ஈங்கு
'அன்னை! கேள்; இவ் அருந் தவ முதியோள்
நின்னால் வணங்கும் தகைமையள்; வணங்கு' என;
பாடல் சால் சிறப்பின் பரதத்து ஓங்கிய
கோடாச் செங்கோல் சோழர்—தம் குலக்கொடி;
கோள் நிலை திரிந்து, கோடை நீடினும்,
தான் நிலை திரியாத் தண் தமிழ்ப் பாவை;

6-10 பகைநோற்ற-பகையாகத் தவம் புரிந்த. சம்பாபதியினள்-சம்பாபதி என்னும் புகாரில் இருந்தாள். கதிர்-கிரணம். கஞ்சம் வேட்கை-நீர் வளத்தை உண்டாக்கும் விருப்பம். காந்தன்-ஒரு சோழன் பெயர். மன்-அரசன்.

11-20 அமர முனிவன்-தெய்வ முனிவன். தனது-தன்னுடைய. கரகம்-கமண்டலம். கவிழ்த்த-கவிழ்த்தமையால் தோன்றிய. செங்குணக்கு-நேர் கிழக்காக. பொங்கு நீர்-வெள்ளம். இனிதுஇருந்த-வீற்றிருந்த. அருந்தவ முதியோள்-சம்புத் தெய்வம். ஆஞு-நேயத்தை உடைய. ஆகாய கங்கை-வானில் ஒழுங்கும் கங்கை, வேணவா-மிக்க விருப்பம். பின்னிலை-வழிபாடு செய்தல். முனியா-வெறுத. பெருந்தவன்-அகத்தியன். கேட்டு-சம்புவின் பாராட்டுரையைக் கேட்டு. அன்னை-காவிரியே!

21-25 தகைமையள்-பெருமையுடையவள். பரதத்து-பரத கண்டத்தில். கோடால்-வளைத இல்லாத கோள்-கிரகம். கோடை-மழை பெய்யாத, மேல் காற்று வீசும் காலம். நிலை திரியா-ஒழுகும் நிலைமை மாறாத. தண்தமிழ்ப் பாவை-காவிரி,

தொழுதனள் நிற்ப—அத் தொல் மூதாட்டி
கழுமிய உவகையின் கவான் கொண்டிருந்து,
'தெய்வக் கருவும் திசை முகக் கருவும்
செம்மலர் முதியோன் செய்த அந் நாள்
என் பெயர்ப் படுத்த இவ் இரும் பெயர் மூதூர்
நின் பெயர்ப் படுத்தேன்; நீ வாழிய!' என,
இருபால் பெயரிய உரு கெழு மூதூர்—
ஒரு நூறு வேள்வி உரவோன்—தனக்குப்
பெரு விழா அறைந்ததும்; 'பெருகியது அலர்' என,
சிதைந்த நெஞ்சின் சித்திராபதி—தான்
வயந்த மாலையான் மாதவிக்கு உரைத்ததும்;
மணிமேகலை—தான் மா மலர் கொய்ய,

அணி மலர்ப் பூம் பொழில் அகவயின் சென்றதும்;
ஆங்கு அப் பூம்பொழில், அரசு இளங் குமரனைப்
பாங்கில் கண்டு, அவள் பளிக்கறை புக்கதும்;
பளிக்கறை புக்க பாவையைக் கண்டு, அவன்
துளக் குறு நெஞ்சில் துயரொடும் போய பின்,
மணிமேகலா தெய்வம் வந்து தோன்றியதும்;
மணிமேகலையை மணிபல்லவத்து உய்த்ததும்;
உவவன மருங்கின் அவ் உரைசால் தெய்வதம்

26–30 தொல் மூதாட்டி-சம்பாபதி. கழுமிய-கலந்த. கவான்-துடைமீது. முதியோன்-பிரமன். என் பெயர்ப்படுத்த-என் பெயரால் (சம்பாபதி என) வழங்கிய. இரும் பெயர்-பெரும் புகழ். மூதூர்-புகார்நகரம்

31–40 நின் பெயர்ப் படுத்தேன்-உனது பெயரால் (காவிரிப்பூம்பட்டினம் என) வழங்கினேன். வாழிய-வாழ்க. உருகெழு-(பகைவர்க்கு) அச்சம் மிகுகின்ற. உரவோன்-வலிமிக்க இந்திரன். அறைந்ததும்-சாற்றியமையும். அலர் பலரும் கூறும் பழி. சித்திராபதி-மாதவியின் தாய். வயந்தமாலையான்-மாதவியின் தோழியாகிய வயந்தமாலையின் வாயிலாக. அகவயின்-உள்ளே. பளிக்கறை-பளிங்கினால் அமைந்த அறை.

41–45 துளக்கு-சஞ்சலம். மணிபல்லவம்-ஒரு தீவு. உய்த்ததும்-சேர்த்தமையும். மருங்கின்-இடத்தில். உரைசால்-புகழ் மிக்க. சுதமதி-மாதவியின் தோழி. எடுப்பியது-எழுப்பியமை.

சுதமதி—தன்னைத் துயில் எடுப்பிய தூஉம்;
ஆங்கு, அத்தீவகத்து, ஆயிழை நல்லாள்
தான் துயில் உணர்ந்து, தனித்துயர் உழந்ததும்;
உழந்தோள் ஆங்கண் ஓர் ஒளி மணிப் பீடிகைப்
பழம் பிறப்பு எல்லாம் பான்மையின் உணர்ந்ததும்;
உணர்ந்தோள் முன்னர், உயர் தெய்வம் தோன்றி,
'மனம் கவல் ஒழிக' என மந்திரம் கொடுத்ததும்;
தீப திலகை செவ்வனம் தோன்றி,
மா பெரும் பாத்திரம் மடக்கொடிக்கு அளித்ததும்;
பாத்திரம் பெற்ற பைந்தொடி தாயரொடு
யாப்புறு மா தவத்து அறவணர்த் தொழுததும்;
அறவண அடிகள் ஆபுத்திரன் திறம்
நறு மலர்க் கோதைக்கு நன்கனம் உரைத்ததும்;
அங்கைப் பாத்திரம் ஆபுத்திரன் பால்
சிந்தா தேவி கொடுத்த வண்ணமும்;
மற்றும் அப் பாத்திரம் மடக்கொடி ஏந்தி,
பிச்சைக்கு அவ் ஊர்ப் பெருந்தெரு அடைந்ததும்;
பிச்சை ஏற்ற பெய்வளை கடிஞையில்
பத்தினிப் பெண்டிர் பாத்தூண் ஈத்ததும்;
காரிகை நல்லாள் காயசண்டிகை வயிற்று

46–50 ஆங்கு – அசைநிலை. ஆயிழை – ஆராய்ந்த அணிகலமுடைய மணிமேகலை. உழந்தது – அனுபவித்தமை. ஆங்கண் – அவ்விடத்தில். ஒளிமணிப் பீடிகை – ஒளிரும் மணிப்பீடிகையால். பான்மையின் – உள்ளபடியே.

51-60 கவல் – கவலைப்படுதல். தீபதிலகை – ஓர் அணங்கு. செவ்வனம் – கண்எதிரில். பாத்திரம்–அமுதசுரபிப் பாத்திரம். தாயரோடு– மாதவி, சுதமதி ஆகிய தாயரோடு. யாப்புறுமாதவம்– உறுதியாய பெருந்தவம். அறவணர் – ஒரு பௌத்த முனிவர். திறம் – வரலாறு. அங்கை – உள்ளங்கை. ஆபுத்திரன்பால்– ஆபுத்திரனிடம். சிந்தாதேவி – ஒரு தெய்வம்.

61-65 பெய்வளை – மணிமேகலை. கடிஞை – பிச்சைப்பாத்திரம். பத்தினிப் பெண்டிர் – கற்புடைப் பெண்டிர்-ஆதிரை என்னும் நல்லாள். பாத்தூண் – பகுத்துண்ணும் உணவு. நல்லாள் – மணிமேகலை. காயச்சண்டிகை-ஒரு விஞ்சையர் மகள்.

5

ஆனைத்தீக் கெடுத்து அம்பலம் அடைந்ததும்;

அம்பலம் அடைந்தனள் ஆய்-இழை என்றே
கொங்கு அலர் நறுந்தார்க் கோமகன் சென்றதும்;
அம்பலம் அடைந்த அரசுஇளங் குமரன் முன்
வஞ்ச விஞ்சையன் மகள் வடிவு ஆகி,

மறம் செய் வேலோன்
வான் சிறைக் கோட்டம்
அறம் செய் கோட்டம்
ஆக்கிய வண்ணமும்;
காயசண்டிகை என
விஞ்சைக் காஞ்சனன்
ஆய்இழை-தன்னை
அகலாது அணுகலும்;
வஞ்ச விஞ்சையன்
மன்னவன் சிறுவனை
மைந்து உடை வாளின்
தப்பிய வண்ணமும்;
ஐ அரி உண்-கண்
அவன் துயர் பொறுஅள்,

தெய்வக் கிளவியின்
தெளிந்த வண்ணமும்;
அறை கழல் வேந்தன்
'ஆய்-இழை-தன்னைச்
சிறை செய்க' என்றதும்;
சிறை வீடு செய்ததும்;

நறு மலர்க் கோதைக்கு
நல்-அறம் உரைத்து-ஆங்கு
ஆய்-வளை ஆபுத்திரன்
நாடு அடைந்ததும்;

ஆங்கு-அவன்-தன்னொடு அணி-இழை போகி,
ஓங்கிய மணிபல்லவத்திடை உற்றதும்;
உற்றவள் ஆங்கு ஓர் உயர் தவன் வடிவு ஆய்,
பொன் கொடி வஞ்சியில் பொருந்திய வண்ணமும்;

'நவை அறு நன் பொருள் உரை மினே' என,
சமயக் கணக்கர்-தம் திறம் கேட்டதும்;

66–70 ஆனைத்தீ - தீராத பசிநோய். அம்பலம் - உலக அறவி என்னும் மன்றம். கொங்கு-மகரந்தம். தார்-மாலை. கோமகன்-உதய குமரன். வஞ்சம் - பொய்த்தோற்றமாக. மகள் - காயசண்டிகை.

71–80 சிறைக் கோட்டம்-சிறைச்சாலை. காஞ்சனன்-காயசண்டிகையின் கணவன். மைந்து-வலிமை. தப்பிய-கொன்ற. ஐ அரி உண் கண்- (அழகிய அரிபடர்ந்த மையுண்ட கண்ணையுடையவள்) மணி

மேகலை. பொருஅள்-பொருதவளாகி. தெய்வக் கிளவி-கந்திற் பாவை என்னும் தெய்வம் புகன்ற மொழி. அரைகழல்-ஒலிக்கும் வீரக் கழல். வீடு-விடுதலை.

81–88 நறுமலர்க் கோதை - சோழனது பெருந்தேவி, பொன் கொடி

வஞ்சி-அழகிய கொடிகள் பறக்கின்ற வஞ்சிநகரம். நவை-குற்றம் சமயக் கணக்கர் தம் திறம்-சமய நூல் வல்லோர் கூறும் சமய நெறிகள்.

6

ஆங்கு, அத் தாயரோடு அறவணர்த் தேர்ந்து.
பூங்கொடி கச்சி மா நகர் புக்கதும்;
புக்கு, அவள் கொண்ட பொய் உருக் களைந்து,
மற்று அவர் பாதம் வணங்கிய வண்ணமும்;
தவத் திறம் பூண்டு தருமம் கேட்டு
'பவத்திறம் அறுக' எனப் பாவை நோற்றதும்—
இளங்கோ வேந்தன் அருளிக் கேட்ப,
வளம் கெழு கூல வாணிகன் சாத்தன்
மா வண் தமிழ்த் திறம் மணிமேகலை துறவு
ஆறு-ஐம்பாட்டினுள் அறிய வைத்தனன்-என்.

ஆங்கு-அசை நிலை: அறவணர்த் தேர்ந்து-அறவண அடிகளை நாடி. பூங்கொடி-பூங்கொம்பர் போன்ற மணிமேகலை.

பொய் உரு-பொய்யாகக் கொண்ட ஆணுருவம். மற்று அசை நிலை. தவத்திறம்-தவநெறியை. தருமம்-பௌத்த தருமம். பவத்திறம்-பிறவியின் பகுதி. வளம்கெழு-தமிழ் வளம் மிக்க. கூலம்-பண்டம். மா வண் தமிழ்த் திறம்-மிக்க வளம்பட்ட தமிழின் இலக்கண நெறியால். மணிமேகலை துறவு-இந்நூற் பெயர். ஆறு ஐம்பாட்டின் - முப்பது காதைகளால். என் - அசை நிலை,

மணிமேகலை

---

1. விழா அறை காதை

நாடு நோய் இன்றி வளம் உற இந்திர விழாவினை நிகழ்த்துமாறு அக்த்தியன் கூற, அதனை நயந்து தொடிதோட் செம்பியன் என்னும் சோழன் இந்திரனை வேண்டி அவன் இசைவு பெற்று, ஆண்டுதோறும் இந்திர விழா நிகழ்த்தி வந்தான். அவன் வழியரசர்களாலும் ஆண்டுதோறும் அவ்விழா மேற்கொள்ளப்பெற்று நன்கு நிகழ்ந்து வந்தது. அம்முறையே அவ்வாண்டிலும் பல சமயப் பெரியோர்களும்

அரசியலாளரும் பிறரும் குழுமி அவ்விழா நிகழ்த்த முடிவு செய்தனர்.

வள்ளுவமுதியோன் யானையின் பிடரில் பெரு முரசினை ஏற்றி அறைந்து, இந்திரவிழாத் தொடங்குமாறும்,

வீடுகள், மன்றங்கள், தெருக்கள் முதலியவற்றை நகர மாந்தருக்கு அறிவித்தான்.

அணியுமாறும்

உலகம் திரியா, ஓங்கு உயர் விழுச் சீர்

பலர் புகழ் மூதூர்ப் பண்பு மேம்படீஇய,
ஓங்கு உயர் மலயத்து அருந் தவன் உரப்ப—
தூங்கு எயில் எறிந்த தொடித் தோள் செம்பியன்
விண்ணவர் தலைவனை வணங்கி, முன் நின்று,
'மண்ணகத்து என்-தன் வான் பதி-தன்னுள்,
மேலோர் விழைய, விழாக் கோள் எடுத்த
நால்-ஏழ் நாளினும் நன்கு இனிது உறைக' என,
அமரர் தலைவன் ஆங்கு-அது நேர்ந்தது
கவராக் கேள்வியோர் கடவார். ஆகலின்,
மெய்த் திறம், வழக்கு, நன்பொருள், வீடு, எனும்
இத் திறம் தம்-தம் இயல்பினின் காட்டும்
சமயக் கணக்கரும்; தம் துறை போகிய
அமயக் கணக்கரும்; அகலார் ஆகி,
கரந்து உரு எய்திய கடவுளாளரும்;
பரந்து ஒருங்கு ஈண்டிய பாடை மாக்களும்;
ஐம் பெருங்குழுவும்; எண் பேர் ஆயமும்;
வந்து ஒருங்கு குழீஇ, 'வான்பதி-தன்னுள்,
கொடித் தேர்த் தானைக் கொற்றவன் துயரம்
விடுத்த பூதம், விழாக்கோள் மறப்பின்,

1-10 உலகம்-உயர்ந்தோர். விழுச்சீர்-உயர்புகழ். மூதூர்-தலைநகரினது-புகாரினது. மேம்படீஇய-மிகுவதற்காக. மலையம்-பொதிய மலை. தூங்கு எயில்-வானில் இயங்கும் கோட்டைகள். தொடி-வீரவளை. செம்பியன்-சோழன். முன்னின்று-வழிபாடு செய்து. வான்பதி-பேரூர்-புகார். விழாக்கோள்-இந்திர விழாக் கொண்டாடுதல். நேர்ந்தது-இசைந்தது. கவரா-தவறாத. கடவார்-

கடந்து

செல்லார்-நீங்கார்.

11-20 மெய்த்திறம்-உண்மை நூல்; அன்றி, தத்துவங்களின் வகை என்னவுமாம். வழக்கு-உலக நடை; அன்றி உய்த்தற்குரிய நெறி என்னவும் ஆம். சமயக் கணக்கர்-சமய நூல் வல்லுநர். அமயக் கணக்கர்-காலநூல் வல்லோர்.

கரந்துரு-மாறுவேடம். பாடை-
வேற்று மொழி,
ஐம்பெருங்குழு,எண்பேராயம்
என்பன அரசியல்
துறைச் செயலாற்றும்
பல வகைப் பிரிவினரைக்
குறிக்கும்
தொகைச் சொற்கள்.
குழீஇ-ஒன்று கூடி.
தானை-சேனை. கொற்ற
வன்-முசுகுந்தன்
என்னும் சோழனது.
துயரம்-அசுரரால் உண்
டாக்கப்பெற்ற மதி
மயக்கமாகிய துன்பம்.

மடித்த செவ் வாய் வல் எயிறு இலங்க,
இடிக் குரல் முழக்கத்து, இடும்பை செய்திடும்;
தொடுத்த பாசத்து, தொல் பதி நரகரைப் புடைத்து உணும்
பூதமும் பொருந்தாது ஆயிடும்;
மா இரு ஞாலத்து அரசு தலை ஈண்டும்
ஆயிரம் கண்ணோன் விழாக் கால்கொள்க' என—
வச்சிரக் கோட்டத்து மணம் கெழு முரசம்
கச்சை யானைப் பிடர்தலை ஏற்றி.
ஏற்று உரி போர்த்த, இடி உறு முழக்கின்,
கூற்றுக் கண் விளிக்கும், குருதி வேட்கை,
முரசு கடிப்பு இகூஉம் முது குடிப் பிறந்தோன்,
'திரு விழை மூதூர் வாழ்க!' என்று ஏத்தி,
'வானம் மும் மாரி பொழிக! மன்னவன்
கோள் நிலை திரியாக் கோலோன் ஆகுக!
தீவகச் சாந்தி செய்தரு நல் நாள்,
ஆயிரம்கண்ணோன்-தன்னோடு, ஆங்கு உள
நால் வேறு தேவரும், நலத்தகு சிறப்பின்
பால் வேறு தேவரும், இப் பதிப் படர்ந்து
மன்னன் கரிகால்வளவன் நீங்கிய நாள்,
இந் நகர் போல்வதோர் இயல்பினது ஆகி—
பொன்-நகர் வறிதாப் போதுவர் என்பது
தொல் நிலை உணர்ந்தோர் துணிபொருள்: ஆதலின்,

21-25 விழாக்கோள்-இந்திர விழாக் கொண்டாடுதல். இலங்க-விளங்க. முழக்கத்து-முழக்கத்துடன் கூடி. தொடுத்த பாசம்-கட்டிய பாசக் கயிறு. தொல் பதி-பேரூர். நரகர் - பாவியர். ஞாலம்-உலகம். அரசு தலை ஈண்டும்-அரசர் குழுமுதற்கு உரிய. கால் கொள்க-தொடங்குக.

26-30 கோட்டம்-கோவில். கெழு-மிக்க. கச்சை—கட்டுக் கயிறு. ஏற்று உரி-காளையின் தோல். கண் விழிக்கும்-அழைக்கும். குருதி-இரத்தம். கடிப்பு இகூஉம்—குறுந்தடியை ஓச்சுதற்குரிய, முது குடி-வள்ளுவக் குலம்.

31-42 கோள்-(மழைக்குரிய) கிரகம். தீவகம்-நாவலந்தீவின் இடம்.

பால்வேறு-பகுதி வேறு பட்ட, படர்ந்து-எண்ணி. பொன்

நகர்-அமராவதி. துணி பொருள்-கோட்பாடு.

தோரண வீதியும், தோம் அறு கோட்டியும்;
பூரண-கும்பமும், பொலம் பாலிகைகளும்,
பாவை—விளக்கும், பல உடன் பரப்புமின்;
காய்க் குலைக் கமுகும், வாழையும் வஞ்சியும்,
பூக் கொடி வல்லியும், கரும்பும், நடுமின்;
பத்தி வேதிகைப் பசும்பொன் தூணத்து,
முத்துத் தாமம் முறையொடு நாற்றுமின்;

விழவு மலி மூதூர் வீதியும், மன்றமும்,
பழ மணல் மாற்றுமின்; புது மணல் பரப்புமின்;
கதலிகைக் கொடியும் காழ் ஊன்று விலோதமும்
மதலை மாடமும், வாயிலும், சேர்த்துமின்;
நுதல் விழி நாட்டத்து இறையோன் முதலா,
பதி வாழ் சதுக்கத்துத் தெய்வம் ஈறு ஆக,
வேறுவேறு சிறப்பின் வேறுவேறு செய்வினை
ஆறு அறி மரபின் அறிந்தோர்! செய்யுமின்;
தண் மணல் பந்தரும், தாழ்தரு பொதியிலும்,
புண்ணிய நல்லுரை அறிவீர்! பொருந்துமின்;
ஒட்டிய சமயத்து உறு பொருள் வாதிகள்!
பட்டி-மண்டபத்து, பாங்கு அறிந்து, ஏறுமின்;
பற்றுமாக்கள்-தம்முடன் ஆயினும்,
செற்றமும் கலாமும் செய்யாது அகலுமின்—
வெண் மணல் குன்றமும், விரி பூஞ் சோலையும்,
தண் மணல் துருத்தியும், தாழ் பூந் துறையும்,
தேவரும் மக்களும் ஒத்து, உடன் திரிதரும்
நால்-ஏழ் நாளினும், நன்கு அறிந்தீர்!' என,
ஒளிறு வாள் மறவரும், தேரும் மாவும்,

களிறும், சூழ்தர; கண் முரசு இயம்பி;
'பசியும், பிணியும், பகையும் நீங்கி;

43-70 தோம்-குற்றம். பொலம் பாலிகை-பொன்னாலாகிய பாலிகை. பத்தி-வரிசை. வேதிகை-திண்ணை. தூணம்-தூண். தாமம்-மாலை. நாற்றுமின்-தொங்கவிடுமின்.

கதலிகைக் கொடி-ஒருவகைத் துகிற்கொடி. காழ் ஊன்று விலோதம்-கழியில் ஊன்றி வைக்கப்பெறும் ஒருவகைத் துகிற்கொடி. மதலை-கொடுங்கை. நுதல்விழி நாட்டத்து இறையோன்-சிவபிரான். ஆறு-நெறி. மரபு-இயல்பு. தாழ்தருபொதியில்-விரும்புதற்குரிய பொதுவிடம். ஒட்டிய-வஞ்சினம் சாற்றிய. பட்டி மண்டபம்-கல்வி மண்டபம். பற்றுமாக்கள் – மனம் ஒட்டாத மக்கள். செற்றம் - மாறுபாடு. கலாம் - கலகம். துருத்தி-நீர் சூழ்ந்த நடுத் திடல். ஒளிறுவாள்-விளங்கும் வாள்.

வசியும் வளனும் சுரக்க!' என வாழ்த்தி;
அணி விழா அறைந்தனன், அகநகர் மருங்-என

2. ஊரலர் உரைத்த காதை

காவிரிப் பூம்பட்டினத்தில் இந்திர விழா நிகழத் தொடங்கிற்று. மாதவி கோவலன் இறந்த கொடுந்துயரத்தால் உலகப்பற்றொழிந்து, மணிமேகலையொடு தானும் துறவு பூண முற்பட்டிருந்தனள். ஆதலின் அவ்விழாவில் ஆட வரவில்லை. மாதவியின் தாயாகிய சித்திராபதி மாதவியும் மணிமேகலையும் தவக்கோலம் பூணுதலை விரும்பாதவளாய், மாதவியின் தோழியாகிய வசந்தமாலையை அழைத்து, 'நீ சென்று நாடக மகளாகிய மாதவியும் மணிமேகலையும் விழாவின்கண் ஆட வராமை பற்றியும், தவம் பூணுதல் பற்றியும் ஊரினர் பழி கூறுகின்றமையை மாதவிக்கு எடுத்துரைத்து, அவளை ஈண்டு அழைத்து வருக' என்று பணித்தனள். வயந்த மாலையும் மாதவியிருக்கும் மலர் மண்டபத்திற்குச் சென்று சித்திராபதி கூறியவாறே மாதவியிடம் கூறினள். மாதவி 'கண்ணகியின் மகளாகிய மணிமேகலைக்குத்தவமே உரியதாகும் பரத்தையர் ஒழுக்கம் தகாது. நான் சித்திராபதியின் மகளேயாயினும், அறவண அடிகளால் தவத்தில் சேர்க்கப்பட்டுள்ளேன் ஆகையால் நானும் அங்கு வாரேன்' என்று கூறி மறுத்தனள். அது கேட்ட வயந்தமாலையும் மிக வருந்திச் சித்திராபதியிடம் திரும்பி வந்தனள்.

2.

ஊர் அலர் உரைத்த காதை

நாவல் ஓங்கிய மாபெருந் தீவினுள்,
காவல் தெய்வதம், தேவர்கோற்கு எடுத்த
தீவகச் சாந்தி செய்தரு நல் நாள்,
மணிமேகலையொடு மாதவி வாராத்
தணியாத துன்பம் தலைத்தலை மேல் வர,

61–72 வசி-மழை. வளன்-விளைபயன்
1–5 தெய்வதம் - சம்புத் தெய்வம். தீவகச் சாந்தி - இந்திர விழா. தலைத்தலை-மேன்மேலும்.

11

சித்திராபதி-தான் செல்லல்

உற்று இரங்கி,
தத்து அரி நெடுங் கண்
தன் மகள் தோழி

வயந்தமாலையை, 'வருக' எனக் கூஉய்,
'புயம் கெழு மா நகர் அலர் எடுத்து உரை' என—
வயந்தமாலையும் மாதவி துறவிக்கு
அயர்ந்து, மெய் வாடிய அழிவினள் ஆதலின்,

மணிமேகலையொடு மாதவி
இருந்த

அணி மலர் மண்டபத்து அகவயின் செலீஇ,
ஆடிய சாயல் ஆய் இழை மடந்தை
வாடிய மேனி கண்டு, உளம் வருந்தி,
'பொன் நேர்-அனையாய்! புகுந்தது கேளாய்;
உன்னோடு இவ்ஊர் உற்றது ஒன்று உண்டுகொல்?
"வேத்தியல், பொதுவியல், என்று இரு திறத்துக்
கூத்தும், பாட்டும், தூக்கும் துணிவும்,
பண்–யாழ்க் கரணமும், பாடைப் பாடலும்,
தண்ணுமைக் கருவியும், தாழ் தீம் குழலும்
கந்துகக் கருத்தும், மடைநூல் செய்தியும்,

சுந்தரச் சுண்ணமும், தூ
நீர் ஆடலும்,
பாயல் பள்ளியும்,
பருவத்து ஒழுக்கமும்,
காயக் கரணமும், கண்ணியது உணர்தலும்,
கட்டுரை வகையும், கரந்து உறை கணக்கும்,
வட்டிகைச் செய்தியும், மலர் ஆய்ந்து தொடுத்தலுங்,
கோலம் கோடலும், கோவையின் கோப்பும்,

காலக் கணிதமும்,
கலைகளின் துணிவும்,
நாடக மகளிர்க்கு நன் கனம் வகுத்த

6–10 கூஉய் - அழைத்து. பயம்
கெழு - வளம் மிக்க.
துறவிக்கு-துறத்

தலுக்கு.

11-20 அயர்ந்து-சோர்ந்து. அழிவினள்-துன்பமுடையவள், அகவயின்-உள்ளே. செலீஇ-சென்று. ஆடிய-அசைந்த. சாயல்-மென்மை. பொன் நேர் அனையாய்-திருமகளுக்கு ஒப்பானவளே!. புகுந்தது-நேர்ந்துள்ள துன்பத்தை. உன்னோடு- உன்னால். உற்றது ஒன்று-அடைந்ததொரு வசை மொழி. கொல்-அசைநிலை. (இவ்வூரில் நாடக மடந்தையாகிய நீ தவ மேற் கொள்ளப் புக்கமை இவ்வூர்க்குப் பெரியதொரு நாணந்தரும் செயலாம் என்றவாறு).

21-30 கருவி-மத்தளம் என்னும் வாத்தியம். தாழ்தீம் குழல்-விரும்பும் இனிய குழல் வாத்தியம். கந்துகம் - பயந்து. மடைநூல்-பாகசாத்திரம். கண்ணியது-கருதிய செய்தி. கட்டுரை வகை-பேசும் திறமை. கரந்து உறை கணக்கு - மறைந்து உறையும் முறை. வட்டிகைச் செய்தி-சித்திரக் கலை. கோப்பு-கோத்தல்.

ஓவியச் செந் நூல் உரை நூல் கிடக்கையும்—
கற்று, துறைபோகிய பொன் தொடி நங்கை
நல் தவம் புரிந்தது நாண் உடைத்து" என்றே,
அலகு இல் மூதூர் ஆன்றவர் அல்லது,
பலர் தொகுபு உரைக்கும் பண்பு இல் வாய்மொழி
நயம்பாடு இல்லை; நாண் உடைத்து' என்ற
வயந்தமாலைக்கு மாதவி உரைக்கும்;
'காதலன் உற்ற கடுந் துயர் கேட்டு,
போதல் செய்யா உயிரொடு நின்றே,
பொன் கொடி மூதூர்ப் பொருளுரை இழந்து,
நல் தொடி நங்காய்! நாணுத் துறந்தேன்.
காதலர் இறப்பின், கனை எரி பொத்தி,
ஊது உலைக் குருகின் உயிர்த்து, அகத்து அடங்காது,
இன் உயிர் ஈவர்; ஈயார் ஆயின்,
நல நீர்ப் பொய்கையின் நளி எரி புகுவர்;
நளி எரி புகாஅர் ஆயின், அன்பரோடு
உடன் உறை வாழ்க்கைக்கு நோற்று, உடம்பு அடுவர்—
பத்தினிப் பெண்டிர், பரப்பு நீர் ஞாலத்து:
அத் திறத்தாளும் அல்லள், எம் ஆய்-இழை:
கணவற்கு உற்ற கடுந் துயர் பொறாஅள்,
மணம் மலி கூந்தல் சிறுபுறம் புதைப்ப,
கண்ணீர் ஆடிய கதிர் இள வன முலை
திண்ணிதின் திருகி, தீ-அழல் பொத்தி,
காவலன் பேர் ஊர் கனை எரி ஊட்டிய
மா பெரும் பத்தினி மகள், மணிமேகலை,

31-40 துறை போகிய-நெறியறிந்த-திறமை மிக்க. ஆன்றவர் அல்லது-பெரியோர்களே அன்றியும். தொகுபு-சேர்த்து, பண்பில் வாய் மொழி-(உனது) பண்பின்மை பற்றிய உண்மை மொழி. பொருளுரை-புகழுரை.

41-50 நங்காய்-வயந்த மாலாய்! கனை எரி-மிக்க தீ. பொத்தி-பொருத்தி.

உலைக் குருகு-உலையின் மூக்கு. அகத்து-வீட்டினுள். நளி எரி-செறிந்த நெருப்பு. உடம்பு அடுவர்-மெய்யினை வருத்திக்கொள்வர். பரப்பு நீர் ஞாலம்-கடல் சூழ்ந்த மண்ணுலகம். ஆய் இழை-ஆராய்ந்த ஆபரணத்தை உடையவள்-கண்ணகி. பொறு அள்-பொறுமல்.

51-55 சிறு புறம்-பிடர். ஆடிய-படிந்த. கதிர்-ஒளி. வன முலை-அழகிய முலை. தீஅழல்-பெரு நெருப்பினை. பொத்தி-மூட்டி, ஊட்டிய-உண்பித்த,

13

அருந் தவப் படுத்தல் அல்லது, யாவதும்
திருந்தாச் செய்கைத் தீத் தொழில் படாஅள்.
ஆங்கனம் அன்றியும், ஆய்-இழை! கேளாய்;
ஈங்கு இம் மாதவர் உறைவிடம் புகுந்தேன்;
மறவணம் நீத்த, மாசு அறு கேள்வி
அறவண அடிகள் அடிமிசை வீழ்ந்து;
மா பெருந் துன்பம்
கொண்டு, உளம் மயங்கி,
காதலன் உற்ற கடுந் துயர் கூற,
"பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்;
பிறவார் உறுவது பெரும் பேர் இன்பம்,
பற்றின் வருவது, முன்னது; பின்னது
அற்றோர் உறுவது; அறிக!" என்று அருளி,
ஐ-வகைச் சீலத்து அமைதியும் காட்டி,

“உய் வகை இவை; கொள்” என்று உரவோன் அருளினன்
மைத் தடங் கண்ணார்-தமக்கும், எற்பயந்த
சித்திராபதிக்கும் செப்பு, நீ' என—
ஆங்கு அவள் உரை கேட்டு, அரும் பெறல் மா மணி
ஓங்கு திரைப் பெருங் கடல் வீழ்த்தோர் போன்று,
மையல் நெஞ்சமொடு, வயந்தமாலையும்
கையற்றுப் பெயர்ந்தனள், காரிகை திறத்து-என்.

56-60

தீத் தொழில் படா அள்-தீமையாகிய பரத்தைமைத் தொழிலில் சேர்க்கத் தகாதவள். ஆங்கனம் அன்றியும்-அப்படி அல்லா

மலும.

61-70 மறவணம்-பாவத் திறம். நீத்த-நீக்கிய. அற்றோர்-பற்றற்றவர்கள். ஐவகைச் சீலம்-காமமின்மை, கொல்லாமை, கள் குடியாமை, பொய்கூறாமை, களவு செய்யாமை என்பனவாம். உய்வகை-உய்யும் நெறிகள். கொள்-அறிந்துகொள். உரவோன்-அறிவு வலியுடையவன்-அறவணன்.

71-75 மைத் தடங் கண்ணார் - மை தீட்டிய அகன்ற கண்களை யுடையோர்-தோழியர். மையல்-அறிவு கலங்கல்-மயங்குதல். கையற்று-செயலற்று. பெயர்ந்தனள் – திரும்பினாள். காரிகை திறத்து-மாதவியின் செய்தியினால்.

3. மலர்வனம் புக்க காதை

வயந்தமாலைக்கு மாதவி கூறிய மொழிகளைக் கேட்டிருந்த மணிமேகலைக்குப் புத்த பீடிகையைக் கண்டு பழம் பிறப்புணர்ந்து துறவெய்துதற்குரிய நல்லூழ் விளைந்து நின்றது. ஆதலால், கோவலனும் கண்ணகியும் உற்ற துன்பத்தை எண்ணி வருந்திய மணிமேகலை கண்ணீர் பெருக்கினாள். அக் கண்ணீர் அவள் தொடுக்கும் மாலையில் வடியக்கண்ட மாதவி, அவளது மனத்து

யர் தணிக்க எண்ணி, அவளை நோக்கி, கண்ணீர் சோர்ந்து மாலை தூய்மை இழந்தது, மலர்வனம் சென்று நீ புது மலர் பறித்து வருக, என்றனள். அது கேட்டு அருகிலிருந்த சுதமதி, புகாரில் உள்ள ஐந்து மலர் வனங்களின் தன்மைகளையும் விளக்கி, உபவனத்திற்கே மணிமேகலை செல்லத் தக்கவள் என்றும், அவள் தனியே சென்றால் தீங்கு நேரும் என்றும், தானும் அவளுடன் செல்லவேண்டும் என்றும் கூறினள். மாதவியும் இசைய, இருவரும் தேரியங்கும் பெருந் தெரு வழியே சென்றனர். அங்குப் பல விநோதக் காட்சிகளைக் கண்டிருந்த பலரும் மணிமேகலையைக் கண்டு 'இவ் வழகிய தோற்றத்தோடு இவளைத் துறவறத்திற் சேர்க்கும் மாதவி மிகக் கொடியவள்' என்று கூறி மனமுருகி நின்றனர். அவ்விருவரும் மெல்ல நடந்து பன்மரம் பூத்த இன் பொழிலாகிய உபவனத்தினுட் சென்றனர்.

வயந்தமாலைக்கு மாதவி உரைத்த
உயங்கு நோய் வருத்தத்து உரைமுன் தோன்றி
மா மலர் நாற்றம் போல், மணிமேகலைக்கு
ஏது-நிகழ்ச்சி, எதிர்ந்துளது; ஆதலின்,
தந்தையும் தாயும் தாம் தனி உழந்த

1–5 உயங்கு நோய்-மிக்கநோய். உரைமுன்-மொழியினிடமாக.

ஏது

நிகழ்ச்சி-நல்வினை விளைவு. எதிர்ந்து உளது-தோன்றியுள்ளது. தாய்-நுண்ணறி, உழந்த-அனுபவித்த,

வெந் துயர் இடும்பை
செவிஅகம் வெதுப்ப,
காதல் நெஞ்சம் கலங்கி, காரிகை
மாதர் செங் கண் வரி வனப்பு அழித்து,
புலம்பு நீர் உருட்டி,
பொதி அவிழ் நறு மலர்

இலங்கு இதழ் மாலையை இட்டு, நீராட்ட—
மாதவி மணிமேகலை முகம் நோக்கி,

தாமரை தண் மதி சேர்ந்தது போல,
காமர் செங் கையின் கண்ணீர் மாற்றி,
'தூ நீர் மாலை தூத்தகை
இழந்தது;
நிகர் மலர் நீயே கொணர்வாய்'
என்றலும்—
மது மலர்க் குழலியொடு
மா மலர் தொடுக்கும்
சுதமதி கேட்டு,
துயரொடும் கூறும்:
'குரவர்க்கு உற்ற
கொடுந் துயர் கேட்டு,
தணியாத் துன்பம்
தலைத்தலை எய்தும்
மணிமேகலை-தன் மதி

முகம்-தன்னுள்
அணி திகழ் நீலத்து ஆய் மலர் ஒட்டிய
கடை மணி உகு நீர் கண்டனன் ஆயின்,
படை இட்டு நடுங்கும் காமன்; பாவையை
ஆடவர் கண்டால், அகறலும் உண்டோ?
பேடியர் அன்றோ, பற்றியின் நின்றிடின்?
ஆங்கனம் அன்றியும், அணி-இழை! கேளாய்,
ஈங்கு இந் நகரத்து யான் வரும் காரணம்.
பாராவாரப் பல் வளம் பழுநிய
காராளர் சண்பையில், கௌசிகன் என்போன்,
இருபிறப்பாளன், ஒரு மகள் உள்ளேன்,

6–10 காதல்-அன்பு. காரிகை - அழகு நீர்மையளாகிய மணிமேகலை மாதர் - காதல். வரி - மைதீட்டியகோலம். வனப்பு - அழகு. புலம்பு-பிரிவுத் துயரம். பொதி-முடிப்பு. நீர் ஆட்ட-நனைப்ப.

11–20 காமர்-அழகிய. மாற்றி-போக்கி. தூ நீர்-தூய்மைத் தன்மை. தூத் தகை-தூய்மைத் தன்மை. நிகர் மலர்-வாடாத மலர். மது மலர்க் குழலி-மணிமேகலை. குரவர்-கோவலனும் கண்ணகியும். தலைத் தலை-மேன்மேலும்.

21–30 அணி-அழகு. ஆய்மலர்-ஆராய்ந்தெடுத்த மலர். ஒட்டிய-வென்ற கடை மணி-கடைக் கண். உகும்-சொரியும். நடுங்கும்-நடுங்குவதற்குக் காரணமாகிய. அகறல்-நீங்கல். பெற்றியின்-நிறையுடன்-மனம் காமவிகாரப்படாமல். ஆங்கனம் அன்றியும்-அப்படியல்லாமலும், மேலும் அணிஇழை - அழகிய ஆபரணம் அணிந்த மாதவி! பாராவாரம் - கடல். பழுநிய-முதிர்ந்த. காராளர்-ஒரு சாதியினர். சண்பை-ஒரு நகரம். இரு பிறப்பாளன்-அந்தணன்.

ஒரு தனி அஞ்சேன், ஓரா நெஞ்சமோடு
ஆராமத்திடை அலர் கொய்வேன்-தனை
மாருதவேகன் என்பான் ஓர் விஞ்சையன்,
திரு விழை மூதூர் தேவர்கோற்கு எடுத்த
பெரு விழாக் காணும் பெற்றியின் வருவோன்,
தாரன், மாலையன், தமனியப் பூணினன்,
பாரோர் காணாப் பலர் தொழு படிமையன்—
எடுத்தனன், எற் கொண்டு எழுந்தனன் விசும்பில்;
படுத்தனன்; ஆங்கு, அவன் பான்மையேன் ஆயினேன்;
ஆங்கு-அவன் ஈங்கு எனை அகன்று, கண்மாறி
நீங்கினன், தன் பதி நெட்டிடை ஆயினும்,
மணிப் பூங் கொம்பர் மணிமேகலை-தான்
தனித்து அலர் கொய்யும் தகைமையள் அல்லள்.
பல் மலர் அடுக்கிய நல் மரப் பந்தர்
இலவந்திகையின் எயில் புறம் போகின்,
உலக மன்னவன் உழையோர் ஆங்கு உளர்.
விண்ணவர் கோமான் விழாக் கொள் நல் நாள்,
மண்ணவர் விழையார், வானவர் அல்லது;
பாடு வண்டு இமிரா, பல் மரம் யாவையும்
வாடா மா மலர் மாலைகள் தூக்கலின்;

31-40 ஒரு தனி-தன்னந்தனிமை. ஓரா-எண்ணுதல்அற்ற. ஆராமம்-பூஞ்சோலை. திரு விழை மூதூர்-திருமகள் விரும்பும் புகார். எடுத்த-தொடங்கிய. பெற்றியின்-மனநிலையோடு. தமனியம்-தங்கம். படிமை-ஆடை அணிகளினால் செய்துகொள்ளும் வெளித் தோற்றம். எழுந்தனன்-எழுந்தவன் ஆகி. படுத்தனன்-வசப்படுத்திக் கொண்டான். அவன் பான்மையேன் ஆயினேன்-அவன் குறிப்பின்

படி ஒழுகுபவன் ஆயினன்,

41-50 ஆங்கு-அசைநிலை. கண் மாறி-இடம் மாறி-திரும்பி வாராமல், கண்ணோட்டம் இன்றி என்றும் கூறலாம். நெட்டிடை-நெடுந் தூரம். (நெட்டிடையில் உள்ள தன் பதிக்கு, ஈங்கு என்னை அகன்று, கண்மாறி நீங்கினன் எனக் கூட்டுக). மணிப் பூங் கொம்பர்-அழகிய பூங்கொப்பு போன்றவள். கொய்யும் தகைமையள் - பறிக்கும் தன்மையள். இலவந்திகை - ஒருசோலை. எயில் புறம்-மதிலின் இடம். உழையோர்-அருகில் இருந்து ஏவல் புரிவோர். விழையார்-விரும்பார். பாடு-ஒலி. இமிரா-ஒலிக்குமாட்டா,

"கை பெய் பாசத்துப் பூதம் காக்கும்" என்று,
உய்யானத் திடை உணர்ந்தோர் செல்லார்.
வெங்கதிர் வெம்மையின் விரி சிறை இழந்த
சம்பாதி இருந்த சம்பாதி வனமும்;
தவா நீர்க் காவிரிப் பாவை-தன் தாதை,
கவேரன், ஆங்கு இருந்த கவேர வனமும்;
மூப்பு உடை முதுமைய; தாக்கு அணங்கு உடைய;
யாப்பு உடைத்தாக அறிந்தோர் எய்தார்.
அருளும், அன்பும், ஆர் உயிர் ஓம்பும்
ஒரு பெரும் பூட்கையும், ஒழியா நோன்பின்
பகவனது ஆணையின் பல் மரம் பூக்கும்
உவவனம் என்பது ஒன்று உண்டு அதன் உள்ளது.
விளிப்பு அறைபோகாது, மெய்புறத்து இடூஉம்
பளிக்கறை மண்டபம் உண்டு: அதன் உள்ளது
தூ நிற மா மணிச் சுடர் ஒளி விரிந்த
தாமரைப் பீடிகை-தான் உண்டு; ஆங்கு இடின்,
அரும்பு அவிழ்செய்யும்; அலர்ந்தன வாடா,
சுரும்பு இனம் மூசா, தொல் யாண்டு கழியினும்;
மறந்தேன் அதன் திறம், மாதவி! கேளாய்:
கடம் பூண்டு, ஓர் தெய்வம் கருத்திடை வைத்தோர்

51–60 கை பெய் பாசத்துப் பூதம் - கையில் வைத்துள்ள பாசம் என்னும் கொலைக் கருவியை உடைய பூதம். உய்யானம்–

ஒரு சோலே. சம்பாதி-ஒரு கழுகு. தவா-தப்பாத. காவிரிப் பாவையின் தாதை - காவிரியணங்கின் தந்தை - காவிரியைத் தோற்றுவித்தவன் (ஆகிய) கவேரன் - ஒரு சோழன். முன் காந்தன் எனப்பட்டவனும் இவனே போலும். முதுமைய-

முதுமை யுடையன.

தாக்கணங்கு-தாக்கி வருத்தும் தெய்வம்.

யாப்புடைத்தாக-உறுதியாக.

பூட்கை - மேற்கொண்ட கொள்கை.

61–70 பகவன்-புத்தபிரான்.

விளிப்பு அறை போகாது-ஓசை

வெளியே செல்லாதபடி.
மெய்-உருவத்தை தூ நிற மா
மணி—தூய நிற
முடைய சிறந்த
மாணிக்கம். சுடர்
ஒளி-பேரொளி. தாமரைப்
பீடிகை-தாமரை
வடிவாய பீடம்.
ஆங்கு-அதன்கண். அவிழ்
செய்யும்-மலரும்,
சுரும்பு-வண்டின் வகை. மூசா -
மொய்யா,
தொல் யாண்டு-பல
ஆண்டுகள். அதன் திறம்-அதன்
பகுதியை

(உரைக்க). கடம்

நேர்த்திக் கடன்.

18

ஆங்கு, அவர் அடிக்கு இடின், அவர் அடி-தான் உறும்;
நீங்காது யாங்கணும், நினைப்பிலராய் இடின்.
"ஈங்கு இதன் காரணம் என்னை?" என்றியேல்,
"சிந்தை இன்றியும், செய் வினை உறும்" எனும்
வெந் திறல் நோன்பிகள் விழுமம் கொள்ளவும்,
"செய் வினை, சிந்தை இன்று எனின், யாவதும்
எய்தாது" என்போர்க்கு ஏது ஆகவும்,
பயம் கெழு மாமலர் இட்டுக்காட்ட,
மயன் பண்டு இழைத்த மரபினது, அது-தான்.
அவ் வனம் அல்லது, அணி-இழை! நின் மகள்
செவ்வனம் செல்லும் செம்மை-தான் இலள்.
மணிமேகலையொடு, மா மலர் கொய்ய,
அணி இழை நல்லாய்! யானும் போவல்' என்று,
அணிப் பூங் கொம்பர்-அவளொடும் கூடி,
மணித் தேர் வீதியில், சுதமதி செல்வுழி இ—
சிமிலிக் கரண்டையன், நுழை கோல் பிரம்பினன்,

தவல்-அருஞ் சிறப்பின் அராந்தாணத்து உளோன்,
நாணமும் உடையும் நன்கனம் நீத்து,
காணா உயிர்க்கும் கையற்று ஏங்கி,
உண்ணா நோன்போடு, உயவல் யானையின்,

71-80 உறும்-அடையும். யாங்கணும்-எங்கும் இடின்-வைத்தா; ஈங்கு-அசை. இதன் - இத்தகைய பீடம் அமைத்தமைக்கு என்றியேல்-என்பாயாகில். சிந்தை இன்றியும்-மனமறிந்து செய்தல் இல்லையாயினும். செய்வினை-செய்தவினையின் பயன். வெந்திறல்-மிக்க தவ வலிமை. நோன்பிகள்-ஆசிவக முனிவர். விழுமம் கொள்ளவும்-(தம் கொள்கை தவறென விளங்குதலால்) துன்பம் எய்து மாறும். யாவதும்-சிறிதும். என்போர்க்கு-என்று கூறும் பௌத்த மதத்தினர்க்கு. ஏது-சான்று. பயம்-வளம். மயன்-தெய்வத் தச்சன். மரபினது—தன்மையுள்ள

அணி இழை! - மாதவி.

81-90 செவ்வனம் - தனியாக.

செம்மை-செவ்வி - ..ருவம். தாள்·

அசை இல. போவல்-போவேன். செல்வுழிஇ-சொல்லும் பொழுது. சிமிலிக் கரண்டையன் - உறியில் வைத்து கொண்ட கமண்டலத்தை உடையவனாய். நுழைகோல் பிரம்பன்-நுண்ணிய திரட்சியையுடைய பிரப்பங்கோலை உடையவனாய். தவல்அரும் சிறப்பின் - தவறுதல் நிகழாத மேன்மை உடைய. அராந்தாணம்-அருகன் கோயில். நன்கனம் - நன்று முழுமையும். காணா - காணப்படாத. கையற்று - செயலற்று உயவல்-வருந்துதல்.

மண்ணா மேனியன்
வருவோன்-தன்னை,
'வந்தீர் அடிகள்!
எம்-தம் அடிகள்!
நும் மலர் அடி தொழுதேன்;
எம் உரை கேண்மோ;
அழுக்கு உடை
யாக்கையில் புகுந்த நும் உயிர்
புழுக்கறைப் பட்டோர் போன்று உளம் வருந்தாது,
இம்மையும், மறுமையும், இறுதி இல் இன்பமும்,
தன் வயின் தரூஉம்; என் தலைமகன் உரைத்தது;
கொலையும் உண்டோ, கொழு மடல் தெங்கின்
விளை பூந் தேறலில்? மெய்த் தவத்தீரே!
உண்டு, தெளிந்து, இவ் யோகத்து உறு பயன்
கண்டால், எம்மையுப்

கையுதிர்க்கோண்ம்' என,
உண்ணு
நோன்பி-தன்னொடும்
சூளுற்று.
'உண்ம்' என இரக்கும் ஓர் களிமகன் பின்னரும்—
கணவிர மாலையின் கட்டிய திரள் புயன்,
குவி முகிழ் எருக்கின்
கோத்த மாலையன்,
சிதவல் துணியொடு, சேண் ஓங்கு நெடுஞ் சினைத்
ததர் வீழ்பு ஒடித்துக் கட்டிய உடையினன்,
வெண் பலி சாந்தம்,
மெய்ம் முழுது உரீஇ,
பண்பு இல் கிளவி பலரொடும் உரைத்து - ஆங்கு,
அழூஉம், விழூஉம், அரற்றும், கூஉம்,

91-100 மண்ணு-தேய்த்துக் குளியாத. அடிகள்-முனிவரே! கேண்ம்-கேளும். 'ஓ'-அசை. புழுக்கறை-காற்றியங்காத அறை. (இது குற்றம் புரிந்தோர்களைத் தண்டித்தற்குரிய அறை). தன்வயின்-தன் வழியே - தன்னால். தெங்கு-தென்னை. பூந் தேறல்-இனிய (கள்ளின்) தெளிவு. யோகம்-தவ ஒழுக்கம். உறுபயன்-மிக்க பயன.

101-110 கை உதிர்க் கொண்ம்-(கையை உதறி) நீக்கி விடுக. சூள்-உண்மை செப்பல். உண்ம்-உண்மின் இரக்கும்-கெஞ்சுகின்ற. களிமகன்-கட்குடியன். பின்னரும்-பின்னே நிற்போரும். கணவிரம்-அலரி மலர். குவி முகிழ்

எருக்கின்-எருக்கின துகுவிந்த மொட்டினுல். சிதவல் - கந்தை. சினை - மரக்கிளைகளிலுள்ள.

ததர் வீழ்பு - செறிந்து உதிர்ந்த சுள்ளிகள்.

வெண்பலி-சாம்பல்.

சாந்தம்-சந்தனம். உறீஇ - பூசிக்கொண்டு. ஆங்கு-அசை நிலை.

அரற்றும் - கத்துவான்.

•

20

தொழூஉம், எழூஉம், சுழலலும் சுழலும்

ஓடலும் ஓடும், ஒரு
சிறை ஒதுங்கி,
நீடலும் நீடும்,
நிழலொடு மறலும்,
மையல் உற்ற மகன்
பின், வருந்தி,
கையறு துன்பம்
கண்டு, நிற்குநரும்—
சுரியல் தாடி, மருள் படு
பூங் குழல்,
பவளச் செவ் வாய்,
தவள வாள் நகை,
ஒள் அரி நெடுங் கண்,

வெள்ளி வெண் தோட்டு,
கருங் கொடிப்
புருவத்து, மருங்கு வளை பிறை
நுதல்,
காந்தள் அம் செங் கை,
ஏந்து இள வன முலை,
அகன்ற அல்குல், அம் நுண் மருங்குல்,
இகந்த வட்டுடை, எழுது வரிக்கோலத்து,

வாணன் பேர் ஊர்
மறுகிடைத் தோன்றி,

நீள் நிலம் அளந்தோன் மகன், முன், ஆடிய
பேடிக் கோலத்துப் பேடு காண்குநரும்—
வம்ப மாக்கள் கம்பலை மூதூர்
சுடுமண் ஓங்கிய நெடு நிலை மனைதொறும்,
மை அறு படிவத்து வானவர் முதலா,
எவ் வகை உயிர்களும் உவமம் காட்டி,
வெண் சுதை விளக்கத்து, வித்தகர் இயற்றிய

111–120 சுழலலும் சுழலும்-சுழலவும் செய்வன். ஒரு சிறை-ஒரு பக்கத்தில். ஒதுங்கி-நடந்து. நீடல்-தாமதித்தல். மறலும்-பகையாடுவன். மையல்-பித்து. சுரியல் தாடி-சுருண்ட மோவாயின் உரோமம். மருள்படுபூங்குழல்-வியப்புத் தோன்றுதற் குரிய அழகிய கூந்தல். தவளம்-வெண்மை. வெள்ளி வெண்தோடு-மிக வெண்மையான (சங்கினால் ஆகிய) ஓலை என்னும் காதணி. கொடிப் புருவம்-நீண்ட புருவம். மருங்கு-பக்கங்களில்.

121–130 மருங்குல்-இடுப்பு. வட்டுடை-ஒருவகை உடை. வாணன்-ஓர் அரசன். மறுகுஇடை-தெருவினில். நீள் நிலம் அளந்தோன்-கண்ணபிரான். பேடு-ஒருவகைக்கூத்து. வம்பமாக்கள்-நிலைப்பின்றி வந்திருக்கும் அயலூர் மக்கள். கம்பலை-ஓசை. சுடுமண்-செங்கல். மை-குற்றம். படிவம்-உருவம். உவமம் காட்டி-பொருத்தமாக அமைத்து. சுதை-சுண்ணாம்பு. வித்தகர்-வல்லுநர்.

கண் கவர் ஓவியம் கண்டு நிற்குநரும்—
விழவு ஆற்றுப் படுத்த கழி பெரு வீதியில்,
பொன் நாண் கோத்த நன் மணிக் கோவை,
ஐயவி அப்பிய நெய் அணி முச்சி,
மயிர்ப் புறம் சுற்றிய கயிற்கடை முக் காழ்
பொலம் பிறைச் சென்னி நலம் பெறத் தாழ,
செவ் வாய்க் குதலை மெய் பெறு மழலை
சிந்துபு சில் நீர் ஐம்படை நனைப்ப,
அற்றம் காவாச் சுற்று உடைப் பூந் துகில்
தொடுத்த மணிக் கோவை உடுப்பொடு துயல்வர,
தளர் நடை தாங்காக் கிளர் பூண் புதல்வரை,
பொலந் தேர் மீமிசைப் புகர் முக வேழத்து,
இலங்கு தொடி நல்லார் சிலர் நின்று ஏற்றி,
'ஆல் அமர் செல்வன் மகன் விழாக் கால்கோள்
காண்மினோ' என, கண்டு நிற்குநரும்—

**விராடன் பேர் ஊர், விசயன் ஆம் பேடியைக்
காணிய சூழ்ந்த கம்பலை மாக்களின்,
மணிமேகலை-தனை வந்து புறம் சுற்றி**

'அணி அமை

தோற்றத்து அருந் தவப்

படுத்திய

150 தாயோ கொடியள்; தகவு இலள்; ஈங்கு-இவள்

131–140 ஆற்றுப்படுத்த-நடத்தி முடித்த. நாண்-கயிறு. கோவை-வடம். ஐயவி-வெண் சிறு கடுகு. முச்சி-மயிர் முடி, உச்சந்தலை. கயில் கடை-கொக்கியும், அது மாட்டுதற்குரிய வாயும். முக் காழ் மூன்று கோவையாக அமைந்த முத்து வடம். பொலம்-பொன். பிறைச்சென்னி-பிறைவடிவாய் அமைந்த ஒருவகைஆபரணத்தின் முனைகளில். குதலை-இனிமைத் தன்மையுள்ள மொழி மெய் பெறு-சொல்லின் வடிவம் நிரம்பாத. மழலை-இளமைப் பேச்சு. சிந்துபு-சிந்தி. சின்னீர்-வாய்நீர், ஐம்படை-ஐம்படைத் தாலி. அற்றம் காவா-மறைக்கத் தக்க உறுப்பினை மறையாத. பூந்துகில்-அழகிய பட்டாடை. துயல்வர-அசைய.

141–150 கிளர்பூண்-அழகுமிகும் அணிகலன். புகர்-செந்நிறம். வேழம்-யானை தொடி-வளை, ஆலமர் செல்வன்-சிவபெருமான். கால் கோள்-தொடக்கம். விசயன் ஆம் பேடியை-பேடியுருவிலிருந்த அருச்சுனனை, காணிய - காண்பதற்கு. கம்பலை - ஆரவாரம். அணி அமை தோற்றது - அழகு நிரம்பிய தோற்றத்தின் கண்-இளம் பருவத்தின்கண். ஓ கொடியள் - மிகக் கொடியவள். தகவு-உலக நடை,

மா மலர் கொய்ய

மலர்வனம் - தான் புகின்,

நல் இள அன்னம், நாணுது, ஆங்கு உள,
வல்லுநகொல்லோ, மடந்தை - தன் நடை?

மா மயில் ஆங்கு உள,
வந்து முன் நிற்பன,

155 சாயல்

கற்பனகொலோ, தையல் -
தன்னுடன்?

பைங் கிளி - தாம்
உள, பாவை - தன்
கிளவிக்கு

எஞ்சலகொல்லோ?

இசையுந அல்ல'—
என்று இவை சொல்லி,
யாவரும் இனைந்து உக'

செந் தளிர்ச் சேவடி
நிலம் வடு உருமல்,
குரவமும், மரவமும்,
குருந்தும், கொன்றையும்,

திலகமும், வகுளமும்,
செங் கால் வெட்சியும்,
நரந்தமும், நாகமும்,

பரந்து அலர் புன்னையும்,

பிடவமும், தளவமும்,
முட முள் தாழையும்,
குடசமும், வெதிரமும்,
கொழுங் கால் அசோகமும்,
செருந்தியும்,
வேங்கையும், பெருஞ்
சண்பகமும்,
எரி மலர்
இலவமும்—விரி மலர்
பரப்பி,

வித்தகர் இயற்றிய
விளங்கிய கைவினைச்
சித்திரச் செய்கைப்
பாடம் போர்த்ததுவே
ஒப்பத் தோன்றிய
உவவனம் - தன்னைத்
தொழுதனள் காட்டிய
சுதமதி - தன்னொடு,
மலர் கொய்யப்
புகுந்தனள், மணிமேகலை -
என்.

151-160 தான் - அசை நிலை. சாயல் - மென்மைத் தன்மை. எஞ்ச
கொல்லோ-தோற்று ஓடாவோ; இணைந்து உக - வருந்தி மனம்
உருகிச் சோர. சேவடி-சிவந்த பாதங்களால். குரவம் முதலிய
மரவகைகள்.

161-171 வித்தகர்-சித்திரம் வல்லுநர். விளங்கிய கைவினை-கையி
தொழில் திறம் விளங்கப்பெற்ற. படாம்-ஆடை, தொழுதனர்-
தொழுதவளாகி.

4.

பளிக்கறை புக்க காதை

உபவனத்தில் பற்பல இயற்கைக் காட்சிகளைச் சுதமதி மணிமேகலைக்குக் காட்டிக்கொண்டிருந்தாள். இப்பால் அந்நகரில் அரசனது பட்டத்து வேழம் ஆகிய காலவேகம் என்னும் யானை மதவெறி கொண்டு பாகர்க்கு அடங்காமல் ஊரைக் கலக்கித் திரிந்தது. அரசகுமாரன் ஆகிய உதயகுமரன் அதன் மதவெறியைத் தன் தோள்வலியால் அடக்கித் தேர்மீது ஏறிச் செல்லும் போது நாடக மடந்தையர் வீதியில் ஒரு வீட்டில் எட்டிகுமரனாகிய ஒரு வணிக குமரன் சோர்வுற்றிருக்கக் கண்டு அதன் காரணத்தை அவனிடம் வினவினன். எட்டிகுமரன் அரச குமரனைப் பணிந்து "மணிமேகலை தெருவழியே அணி இழந்த தோற்றத்தோடு மலர் வனம் செல்வதைக் கண்ட யான் அவள் தந்தை கோவலன் அடைந்த பெருந் துன்பத்தை எண்ணி மனமுடைந்துள்ள நிலையில் யாழ் இசைத்தமையால், யாழின் பகைநரம்பில் என் கையைச் செலுத்தித் தவறு புரிந்து விட்டேன்; இதுவே என் சோர்விற்குக் காரணம்" என்றனன். அது கேட்ட அரசகுமரன் 'நான் இன்றே மணிமேகலையை என் தேர் மேல் ஏற்றி அழைத்துச் செல்வேன்' என்று கூறித் தேரை ஊர்ந்து உபவனத்தை அடைந்தான். அத் தேரொலி கேட்ட மணி

மேகலை உதயகுமரனே வந்திருத்தல்கூடும் என உய்த்துணர்ந்து சுதமதியை நோக்கி, "உதயகுமரன் என்பால் காதல் கொண்டுள்ளான் என்பதை வயந்தமாலை மாதவியிடம் கூறியவாற்றால் நான் அறிந்துள்ளேன்; இத் தேரொலி அவ் உதயகுமரனது தேரொலியே போலும்; யான் யாது செய்வேன்" என்று உசாவினாள். சுதமதியும் துணுக்குற்று மணிமேகலையை அங்குள்ள பளிக்கறையில் புகுவித்தாள். பின் உதயகுமரன் உபவனத்தினுள் புகுந்து சுதமதியைக் கண்டு மணிமேகலை திறம்பற்றி, தனது விருப்பம் தோன்றச் சில கூறினன். சுதமதியும் அவன் மனம் திருந்தும் வண்ணம் அறிவுரை கூறினள். அவ்வளவினில் நாற்புறமும் நோக்கி நின்ற உதயகுமரன் பளிக்கறையில் மணிமேகலையின் உருவம் விளங்கக் கண்டனன்.

24.

'பரிதி அம் செல்வன் விரி கதிர்த் தானைக்கு
இருள் வளைப்புண்ட மருள் படு பூம்பொழில்,
குழல் இசை தும்பி கொளுத்திக்காட்ட,
மழலை வண்டு இனம் நல் யாழ்செய்ய,

வெயில் நுழைபு அறியா, குயில் நுழை பொதும்பர்,
மயில் ஆடு அரங்கில், மந்தி காண்பன காண் !
மாசு அறத் தெளிந்த மணி நீர் இலஞ்சி,

பாசடைப் பரப்பில், பல் மலர் இடை நின்று,
ஒரு தனி ஓங்கிய விரை மலர்த் தாமரை,

அரச அன்னம் ஆங்கு இனிது இருப்ப,
கரை நின்று ஆலும் ஒரு மயில் - தனக்கு,
கம்புள் - சேவல் கனை குரல் முழுவா,
கொம்பர் இருங் குயில் விளிப்பது காணாய்!
இயங்கு தேர் வீதி எழுதுகள் சேர்ந்து,
வயங்கு ஒளி மழுங்கிய மாதர் நின் முகம் போல்,
விரை மலர்த் தாமரை கரை நின்று ஓங்கிய
கோடு உடை தாழைக் கொழு மடல் அவிழ்ந்த
வால் வெண் சுண்ணம் ஆடியது; இது காண்!
மாதர் நின் கண் போது எனச் சேர்ந்து,
தாது உண் வண்டு இனம் மீது கடி செங்கையின்,

1-10 கதிர்த்தானைக்கு - கிரணங்களாகிய சேனையால். மருள்-கலக்கம். கொளுத்தி - பொருத்தி. மழலை - இனிய ஓசை. நுழைபு-நுழைதல். பொதும்பர்-அடர்ந்த சோலை. அரங்கு-மேடை.

[தும்பியின் இசை குழலிசை போலவும், வண்டின் இசை யாழிசை போலவும், மயில் ஆடுதல் நாடக மங்கையின் நடனம் போலவும் இருத்தலால், மந்திகள் வியப்போடு கண்டிருந்தன.] மணி - பளிங்குமணி. இலஞ்சி - பொய்கை. விரை - நறுமணம்.

11-20 ஆலும்-ஆடுகின்ற. கம்புள் சேவல் - சம்பங் கோழியின் ஆண். கனை குரல் - மிக்க குரல். இருங் குயில் - கருங் குயில். விளிப்பது - கூவுதல். இயங்கு தேர்வீதி-தேர் இயங்கும் வீதி. வயங்கு ஒளி - மிக்க ஒளி. கோடு உடை தாழை - சங்கு போல் மலர்ந்த தாழை மலர், அவிழ்ந்த - நெகிழ்ந்த. வால் வெண் சுண்ணம் ஆடியது - மிக வெண்மையாகிய மகரந்தத்துகள் படியப் பெற்றுள்ளது. போது - நீல மலர். தாது மகரந்தம்.

அம் சிறை விரிய,
அலர்ந்த தாமரைச்

செங் கயல் பாய்ந்து பிறழ்வன கண்டு, ஆங்கு
எறிந்து, அது பெருஅது, இரை இழந்து வருந்தி,

மறிந்து நீங்கும் மணிச்
சிரல் காண்!' என,
பொழிலும் பொய்கையும்
சுதமதி காட்ட,

மணிமேகலை அம்
மலர்வனம் காண்புழி—
மதி மருள் வெண்குடை
மன்னவன் சிறுவன்,

உதயகுமரன்—உரு கெழு
மீது ஊர்
நீயான் நடுங்க, நடுவு
நின்று ஓங்கிய
கூம்பு முதல் முறிய, வீங்கு
பிணி அவிழ்ந்து
கயிறு கால் பரிய, வயிறு
பாழ்பட்டு, ஆங்கு,
இதை சிதைந்து ஆர்ப்ப,
திரை பொரு முந்நீர்,
இயங்கு திசை அறியாது,
யாங்கணும் ஓடி,
மயங்கு கால் எடுத்த
வங்கம் போல,
காழோர் கையற,

மேலோர் இன்றி,
பாகின் பிளவையின்
பணை முகம் துடைத்து ;
கோவியன் வீதியும்,
கொடித் தேர் வீதியும்,

பீடிகைத் தெருவும்,
பெருங் கலக்குறுத்து - அங்கு ;
இரு பால் பெயரிய உரு
கெழு மூதூர்,
ஒரு பால் படாஅது, ஒரு
வழித் தங்காது ;

21–30 பிறழ்வன - பிறழ்கின்றவற்றை. எறிந்து - தாக்கி. மறிந்து - திரும்பி. மணிச்சிரல் - நீலமணி போன்ற சிச்சிலிப் பறவை. உரு கெழு-அச்சம் மிகுதற்குக் காரணமாகிய. மீது ஊர் நீயான்- (கப்பலின்) மேலே அமர்ந்து செலுத்தும் மாலுமி.

31–40 கூம்பு முதல் - பாய் மரத்தின் அடி. வீங்கு பிணி - இறுகிய கயிற்று முடிப்பு. கால்பரிய - அறுபட. வயிறு – (பாயின்) நடுவிடம். இதை - பாய். திரை-அலை. முந்நீர் - கடலில். மயங்கு கால் - சுழிக் காற்றினால். எடுத்த - அகப்படுத்தப்பட்ட. காழோர் - யானையை அடக்கும் குத்துக்கோலினர். கையற - செயலற - திகைக்க, மேலோர்-பாகர். பாகின் பிளவையின் - பாகனால் உண்டாக்கப்பட்ட பிளப்பாகிய புண்ணினை உடைய. பணை முகம் - பருத்த முகம். வியன் வீதி - அகலமாகிய வீதி. பீடிகைத் தெரு-பெரிய கடைத்தெரு, பெருங்கலக்கு உறுத்து - பெருங்கலக்கத்தை எய்துவித்து. ஆங்கு-அசை. இருபால்பெயரிய- இருவகையால் பெயரெய்தியுள்ள, உருகெழு மூதூர்– (பகைவர்க்கு) அச்சம் மிகுதற் குரிய புகார் நகரில். ஒரு பால் படாது - ஒரு பக்கத்தில் அமையாமல். ஒரு வழி - ஓர் இடம்.

26

பாகும், பறையும், பருந்தின் பந்தரும்,

ஆதுல மாக்களும், அலவுற்று விளிப்ப;
நீல மால் வரை நிலனொடு படர்ந்தெனக்

காலவேகம் களி
மயக்குற்றென—
விடு பரிக் குதிரையின்
விரைந்து சென்று எய்தி,

கடுங்கண் யானையின்
கடாத் திறம் அடக்கி,

அணித் தேர்த்
தானையொடு அரசு இளங்
குமரன்
மணித் தேர்க் கொடுஞ்சி
கையால் பற்றி,

கார் அலர் கடம்பன்
அல்லன் என்பது,
ஆரங்கண்ணியின், சாற்றினன் வருவோன்—
நாடக மடந்தையர் நலம் கெழு வீதி
ஆடகச் செய்வினை மாடத்து ஆங்கண்,
சாளரம் பொளித்த கால் போகு பெருவழி,
வீதி மருங்கு இயன்ற பூ
அணைப் பள்ளி,
தகரக் குழலாள் -
தன்னொடு மயங்கி,
மகர யாழின் வான்
கோடு தழீஇ,

வட்டிகைச் செய்தியின்
வரைந்த பாவையின்,
எட்டிகுமரன்
இருந்தோன் - தன்னை,
'மாதர் - தன்னொடு
மயங்கினை இருந்தோய்!
யாது நீ உற்ற
இடுக்கண்?' என்றலும்—

41-50 பாகும் - பாகனும். பறை - (யானை மதம் கொண்டமை அறிவிக்கும்) பறை. ஆதல மாக்கள்-வருத்தமுற்ற மக்கள். அலவுற்று-கலங்கி. விளிப்ப - சத்தம் இட. நிலனொடு - நிலத்தில். படர்ங்

தென - நடந்தால் ஒப்ப. காலவேகம் - சோழனது பட்டத்து யானையின் பெயர். களி மயக்கு - மத வெறி. உற்றென - உற்ற தென - உற்றதனால். விடு பரிக் குதிரை - தூண்டப்படும் விரைவை உடைய குதிரை. கடுங்கண் - அஞ்சா நெஞ்சம். கடாத் திறம் - மதக் கூறு. கொடுஞ்சி - தேரின் தட்டில் உள்ள ஓர் உறுப்பு. கடம்பன் - முருகன். ஆர்அம் கண்ணியின்—ஆத்திப் பூ மாலையினால்.

51-60 ஆடகம் - ஒருவகைப் பொன். சாளரம் - சன்னல். பொளித்த - துளைத்த. கால் போகு பெரு வழி - காற்று இயங்கும் பெரிய வழி. [பொளித்த சாளரமாகிய கால் போகு பெரு வழி எனக் கூட்டுக.] தகரக் குழலாள் தன்னொடு - மயிர்ச் சாந்து பூசிய கூந்தலை உடைய காதற் பரத்தையோடு. மகர யாழ் - ஒரு வகை வீணை. கோடு - யாழின் உறுப்பினுள் ஒன்று. வட்டிகை - ஓவியம் வரையும் கோல். எட்டி குமரன் - எட்டிப் பட்டம் எய்திய வணிக குமரன்.

ஆங்கு அது கேட்டு, வீங்கு இள - முலையொடு
பாங்கில் சென்று, தான் தொழுது ஏத்தி,
மட்டு அவிழ் அலங்கல் மன்ன குமரற்கு
எட்டிகுரன் எய்தியது உரைப்போன்;
'வகை வரிச் செப்பினுள் வைகிய மலர் போல்,
தகை நலம் வாடி, மலர் வனம் புகூஉம்,
மாதவி பயந்த மணிமேகலையொடு
கோவலன் உற்ற கொடுந் துயர் தோன்ற,
நெஞ்சு இறை கொண்ட நீர்மையை நீக்கி,
வெம் பகை நரம்பின் என் கைச் செலுத்தியது;
இது யான் உற்ற இடும்பை' என்றலும்—
மது மலர்த் தாரோன் மனம் மகிழ்வு எய்தி,
'ஆங்கு அவள் - தன்னை என் அணித் தேர் ஏற்றி,
ஈங்கு யான் வருவேன்' என்று அவற்கு உரைத்து - ஆங்கு,
ஓடு மழை கிழியும் மதியம்போல,
மாட வீதியில் மணித் தேர் கடைஇ,
கார் அணி பூம்பொழில் கடைமுகம் குறுக, அத்
தேர் ஒலி மாதர் செவிமுதல் இசைத்தலும்—
"சித்திராபதியோடு உதயகுமரன் உற்று
என்மேல் வைத்த உள்ளத்தான்" என,

61-70 பாங்கில் - அருகில். ஏத்தி - துதித்து. மட்டு அவிழ் அலங்கல் - தேன் நிரம்பிய மலர்களால் தொடுத்த மாலை. உரைப்போன் - கூறுபவனாய். வகை வரிச் செப்பு - திறம்பட்ட கைத்தொழில் அமைந்த செப்பு. வைகிய - (அணியப்படாமல் வாடிக்) கிடந்த. தகை நலம் - இயற்கை அழகு. மணிமேகலையொடு - மணிமேகலை(யைக் கண்டமை)யால். நெஞ்சு இறைகொண்ட நீர்மையை - மனம் புறம் போகாமல் பொருந்திய தன்மையை - மனம் இசையையே நோக்கியிருக்கும் தன்மையை. வெம்பகை - கொடிய பகை ஆகிய.

71-80 இடும்பை - துன்பம். தாரோன் - உதயகுமரன். மழை - மேகம். கிழியும் - கிழிதற்குக் காரணமாக உள்ள. கடைஇ - செலுத்தி. கார் அணி பூம் பொழில் - மேகம் போன்ற (கரேரென்ற) பூக்களை உடைய உபவனம். கடை முகம் - வாயிலின் முன். மாதர் - மணிமேகலை. செவி முதல் - காதின் இடத்தில். சித்திராபதியோடு - சித்திராபதியால். உற்று - மனம் பொருந்தி; துணிவு கொண்டு என்னவும் ஆம்.

வயந்தமாலை மாதவிக்கு ஒரு நாள்
கிளந்த மாற்றம் கேட்டேன்; ஆதலின்,
ஆங்கு அவன் தேர் ஒலி போலும், ஆய்-இழை!
ஈங்கு, என் செவிமுதல் இசைத்தது; என் செய்கு?' என,
அமுது உறு தீம் சொல் ஆய்-இழை உரைத்தலும்—
சுதமதி கேட்டு, துளக்குறு மயில் போல்,
பளிக்கறை மண்டபம் பாவையைப் 'புகுக' என்று
ஒளித்து, அறை தாழ் கோத்து, உள்ளகத்து இரீஇ,
ஆங்கு-அது-தனக்கு ஓர் ஐ-வியின் கிடக்கை
நீங்காது நின்ற நேர்-இழை-தன்னை
கல்லென் தானையொடு கடுந்தேர் நிறுத்தி,
பல் மலர்ப் பூம்பொழில் பகல் முளைத்தது போல்,
பூ மரச் சோலையும், புடையும், பொங்கரும்,
தாமரைச் செங் கண் பரப்பினன் வரூஉம்
அரசு இளங் குமரன், 'ஆரும் இல் ஒரு சின்ற,
ஒரு தனி நின்றாய்! உன் திறம் அறிந்தேன்:
வளர் இடை அறியும் தன்மையள்கொல்லோ?
விளையா மழலை விளைத்து, மெல்-இயல்
முளை எயிறு அரும்பி முத்து நிரைத்தனகொல்?
செங் கயல் நெடுங் கண் செவி மருங்கு ஓடி
வெங் கணை நெடு வேள் வியப்பு உரைக்கும்கொல்?
மாதவர் உறைவிடம் ஒரீஇ, மணிமேகலை
தானே தமியள் இங்கு எய்தியது உரை? என—
பொதி-அறைப் பட்டோர் போன்று உளம் வருந்தி,

82-90 இளந்த - கூறிய, மாற்றம் - மொழி. ஆங்கு - அசை. ஆய் இழை!-சுதமதியே!. என் செய்கு-என் செய்வேன். துளக்கு உறும்-நடுக்கம் உற்ற. இரீஇ-இருககச் செய்து.

91-100 கல் என் தானை-ஆரவாரத்தோடு கூடிய சேனை. கடுந்தேர்-விரைவுள்ள தேர். பகல் முளைத்தது போல்-சூரியன் தோன்றியது போல. புடை-பக்கம். பொங்கர்-அடர்ந்த மரக்கிளை. ஒரு சிறை-ஒரு பக்கத்தில். எயிறு-பற்கள். முத்து நிரைத்தன கொல்-முத்துக்களை வரிசைப்படுத்தினாற்போல் உள்ளனவோ?

101-105 மருங்கு-பக்கம். வெம்கணை-கொடிய அம்பு. நெடு வேள்-மன்மதன். ஓரீஇ-நீங்கி. தானே தமியள்-தன்னந்தனியளாய். பொதி அறைப் பட்டோர்-காற்று நுழையாத நிலவறையில் அடைபட்டோர்.

மது மலர்க் கூந்தல் சுதமதி உரைக்கும்:
'இளமை நாணி, முதுமை எய்தி,
உரை முடிவு காட்டிய உரவோன் மருகற்கு
அறிவும், சால்பும், அரசியல் வழக்கும்,
செறி வளை மகளிர் செப்பலும் உண்டோ?
அனையது ஆயினும், யான் ஒன்று கிளப்பல்;
வினை விளங்கு தடக் கை விறலோய்! கேட்டி:
வினையின் வந்தது; வினைக்கு விளைவு ஆயது;
புனைவன நீங்கின், புலால் புறத்திடுவது;
மூப்பு, விளிவு உடையது; தீப் பிணி இருக்கை;
பற்றின் பற்றிடம்; குற்றக் கொள்கலம்;
புற்று அடங்கு அரவின் செற்றச் சேக்கை;
அவலம், கவலை கையாறு, அழுங்கல்,
தவலா உள்ளம் தன் - பால் உடையது;
மக்கள் யாக்கை இது என உணர்ந்து,
மிக்கோய்! இதனைப் புறமறிப்பாராய்'
என்று அவள் உரைத்த இசை படு தீம் சொல்
சென்று, அவன் உள்ளம் சேராமுன்னர்,
பளிங்கு புறத்து எறிந்த பவளப் பாவையின்,
இளங்கொடி தோன்றுமால், இளங்கோ முன் - என்.

106–110 உரை - வழக்கு. முடிவு காட்டிய - தீர்ப்பை அறிவித்த. உரவோன் - அறிவு வலிமை உடைய கரிகாற் சோழனது. மருகற்கு - வழியில் தோன்றிய உனக்கு, சால்பு - பெருமை. அரசியல் வழக்கு - அரசர்க்குரிய நீதி. செப்பல் - அறிவுறுத்தல்.

111-120 இளப்பல் கூறுவேன். வினை - போர்ச் செயல். விறலோய்- வீரம் உடையோய்! கேட்டி - கேள். புனைவன - அணியும் மாலை முதலியவை. புலால் - தீ நாற்றம். விளிவு - மரணம். குற்றக் கொள்கலம் - தீமைகளின் வைப்பிடம். செற்றச் சேக்கை - பகைமைக் குணத்தின் இருப்பிடம். அவலம், கவலை, கையாறு, அழுங்கல் என்பன துயரத்தின் நிலை வேறுபாடுகள். தவலா - தவறாத.

121-125 புறம் மறிப் பாராய் - புறத்தே திருப்பிப் பார்ப்பாயாக. இசை படு தீஞ் சொல் - இசையை ஒத்த இனிய சொல். பளிங்கு புறத்து எறிந்த - பளிங்கினிடத்தே தீட்டப்பெற்ற. பவளப் பாவையின் - பவளத்தால் இயன்ற பதுமை போல. இளங் கொடி - மணிமேகலை.

5. மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதை

உதயகுமரன் பளிக்கறையினுள்

மணிமேகலையின் உருவம் துலங்குவதைக் கண்டு பெரு வேட்கை யுற்று, அவ்வறையைச்

சுற்றித் தடவி நின்று உட்புகும் வழியறியாமல், சுதமதியை நோக்கி மணிமேகலையின் மனநிலை பற்றி வினவினன். சுதமதி, மணி மேகலை காமங்கடந்து தவநெறி ஒழுக்கத்தில் கருத்தூன்றிய

வாற்றை அறிவித்து, அவனை விரும்புதல் செங்கோல் மன்னன் மைந்தனாகிய உதய குமரனுக்குத் தகாது என்பதையும் எடுத்தியம்பினள். அது கேட்ட உதயகுமரன் சுதமதியின் நிலை பற்றி அறிய எண்ணி, "நீ அராந்தாணத்துள் ஓர் விஞ்சையனால் விட்டு நீங்கப்பெற்றுத் தங்கியிருந்தாய் என்று நான் கேட்டுள்ளேன். இவளுடன் நீ இங்கு வந்த காரணம் யாது" என வினவினன். சுதமதி, 'நான் மாருத வேகன் என்னும் விஞ்சையனால் கவரப் பெற்றேன். அவன் பலநாட்களுக்குப் பின் என்னை இவ்வூரில் நீக்கிச் சென்றான். நான் அராந்தாண முனிவருடன் உறைந்தேன், என் தந்தை பசுவினால் பாயப்பெற்றுப் புண்ணுற்று வருந்தி என்னை அணுகினன். அதுகண்ட அராந்தாணத்திலுள்ள முனிவர்கள் என்னையும் என் தந்தையையும் வெளியேற்றினர். சங்க தருமன் என்னும் பௌத்த முனிவன் எம்மைப் பேணினான். பௌத்ததருமத்தின்கண் மனம்ஊன்றியமாதவியுடன் வாழ்வதை விரும்பி அவளை அடைந்தேன். மாதவி ஏவலால் மணிமேகலையுடன் உபவனம் வந்தேன்' என்று கூறினாள். அதுகேட்ட உதயகுமரன் மணிமேகலைபால் சென்ற மனம் மீளாதவனாய்த் திரும்பிச் சென்றனன். பின் மணிமேகலை வெளியே போந்து, தன் மனம் உதய குமரன்பால் சென்று கலங்கியதனைச் சுதமதிக்குக் கூறிக் காமத்தினை வெறுத்துரைத்தனள். இங்ஙனம் நிகழும்போது மணிமேகலையைநல்வழிப்படுத்த எண்ணிய மணிமேகலாதெய்வம்ஒரு முதியவள்யுருவாய்த் தோன்றிப் பளிக்கறைப் பீடிகையை வலம் வந்து வணங்கிப் பலவாறு துதித்துநின்றது; பகலும் கழிந்து மாலையும் வந்துற்றது.

31

இளங்கோன் கண்ட இளம்பொன் பூங்கொடி
விளங்கு ஒளி மேனி விண்ணவர் வியப்ப,
பொரு முகப் பளிங்கின் எழினி வீழ்த்து,
திருவின் செய்யோள் ஆடிய பாவையின்,
விரை மலர் ஐங் கணை மீன விலோதனத்து
உருவிலாளனொடு, உருவம் பெயர்ப்ப—
ஓவியன் உள்ளத்து உள்ளியது வியப்போன்,
காவி அம் கண்ணி ஆகுதல் தெளிந்து,
தாழ் ஒளி மண்டபம் தன் கையின் தடைஇச்
சூழ்வோன், சுதமதி - தன் முகம் நோக்கி,
'சித்திரக் கைவினை திசைதொறும் செறிந்தன!
எத் திறத்தாள் நின் இளங்கொடி? உரை' என—
'குருகு பெயர்க் குன்றம் கொன்றோன் அன்ன நின்
முருகச் செவ்வி முகந்து, தன் கண்ணால்
பருகாள்; ஆயின் பைந்தொடி நங்கை:

1-10 பொன் பூங் கொடி - பொன்னாலாகிய காமவல்லிக் கொடி. பொருமுகப் பளிங்கின் எழினி - பளிங்கினாலாகிய ஒருவகைத் திரைச் சீலையை. திருவின் செய்யோள் - திருமகள். பாவை- ஒரு வகைக் கூத்து. மீன விலோதனத்து உரு இலாளனொடு - மீனாகிய கொடியை உடைய காமனுடன். உருவம் பெயர்ப்ப - வடிவம் மாறாகி (ஒப்பாகி) இருப்ப. [காமனால் காமவிகாரம் உண்டாதல் போல, மணிமேகலையின் உருவினைக் காண்டலால் உதயகுமரனுக்கு அவ்விகாரம் உண்டானமையின் அவளுருவம் காமனது மாற்றுருவம் போல் உள்ளது என்றவாறு.] ஓவியன் - சித்திரம் எழுதுவோன். உள்ளியது - அழகிய உருவத்தை எழுத நினைத்த புனைவுத் திறத்தினை. [உதயகுமரன் மணிமேகலையின் வடிவத்தைப் பளிங்கின் கண் ஓவியன் வரைந்த ஓவியம் என எண்ணி இங்ஙனம் வியந்தான்] காவி - நீல மலர். தாழ் - தங்கிய; விரும்புதற்குரிய என்னலும் ஆம். தடைஇ - தடவி. சூழ்வோன் - நாற்புறமும் சுற்றி வருவோனாகி.

11-15 சித்திரக் கைவினை - சித்திரத் தொழில். செறிந்தன - நிரம்பியுள்ளன. நின் இளங்கொடி எத்திறத்தாள் - நின் மணிமேகலை எத்தன்மையினள். குருகு - கிரௌஞ்சம். கொன்றோன் - முருகன். முருகச் செவ்வி - அழகின் செவ்வி; வாடாத அழகு என்றவாறு.

32

ஊழ் தரு தவத்தள்; சாப சரத்தி;
காமற் கடந்த வாய்மையள்' என்றே
தூ மலர்க் கூந்தல் சுதமதி உரைப்ப—
'சிறையும் உண்டோ, செழும் புனல் மிக்குழீஇ?
நிறையும் உண்டோ, காமம் காழ்கொளின்?
செவ்வியள் ஆயின் என் செவ்வியள் ஆக!' என,
அவ்விய நெஞ்சமொடு அகல்வோன், ஆயிடை,
'அம் செஞ் சாயல்! அராந்தாணத்துள் ஓர்
விஞ்சையன் இட்ட விளங்கு-இழை என்றே
கல்லென் பேர் ஊர்ப் பல்லோர் உரையினை;
ஆங்கு-அவர் உறைவிடம் நீங்கி, ஆய்-இழை!
ஈங்கு-இவள்-தன்னோடு எய்தியது உரை' என
'வார் கழல் வேந்தே! வாழ்க, நின் கண்ணி!
தீ நெறிப் படரா நெஞ்சினை ஆகு-மதி!
ஈங்கு-இவள்-தன்னோடு எய்திய காரணம்
வீங்குநீர் ஞாலம் ஆள்வோய்! கேட்டருள்!
யாப்பு உடை உள்ளத்து எம் அனை இழந்தோன்,
பார்ப்பன முதுமகன், படிம உண்டியன்,
மழை வளம் தருஉம் அழல் ஓம்பாளன்,
பழ வினைப் பயத்தான் பிழை மணம் எய்திய

16–20 ஊழ் தரு தவத்தள் - ஊழ்வினையால் தரப்பட்ட தவத்தை உடையவள். "தவமும் தவமுடையார்க்கு ஆகும்" என்பது நோக்குக. சாப சரத்தி - சாபமாகிய அம்பினை உடையவள். தூ மலர் - தூய்மையாகிய மலர். சிறை - கரை. மிக்குழீஇ - மிக்க விடத்து. நிறை - மன அடக்கம். காழ் கொளின் -, வைரமேறின் - முதிர்ந்துவிடின்.

21–30 செவ்வியள் - நேர்மையுடையவள். என் செவ்வியள் ஆக - எனதுமனநிலைக்கு ஒத்தமனநிலையை உடையவளாகவேண்டும். அவ்வியம் - கோட்டம் - நேர்மை யற்ற தன்மை. அம் செம் சாயல்! - அழகிய சிவந்த மென்மையுடையோய்! அராந்தாணத்துள் - அருகன் கோட்டத்துள். இட்ட - வைத்துள்ள. விளங்கிழை - மடந்தை, உரையினை - உரைக்கப்படுதலை உடையாய். படரா - செல்லாத. நெஞ்சினை ஆகு மதி - மனத்தினை உடையவனாக இருப்பாயாக.

31–35 விங்கு நீர் ஞாலம் - கடல் சூழ்ந்த உலகம். யாப்பு உடை உள்ளத்து எம் அனை - உறுதியோடு கூடிய மனத்தினை உடைய எம் தாயை. படிம உண்டியன் - தவ வேடத்துக்கு உரிய உணவை உடையோன். பிழை மணம் - நெறி தவறிய மணம்: அஃதாவது மாருதவேகனால் கவர்ந்து செல்லப்பட்டு எய்திய மணம்.

33

எற்கெடுத்து இரங்கி, தன் தகவு உடைமையின்,
குரங்கு செய் கடல் குமரி-அம் பெருந் துறைப்
பரந்து செல் மாக்களொடு தேடினன் பெயர்வோன்,
கடல் மண்டு பெருந் துறைக் காவிரி ஆடிய
வடமொழியாளரொடு வருவோன், கண்டு ஈங்கு
"யாங்கனம் வந்தனை, என் மகள்?" என்றே
தாங்காக் கண்ணீர் என்-தலை உதிர்த்து-ஆங்கு,
ஓதல் அந்தணர்க்கு ஒவ்வேன்ஆயினும்
காதலன் ஆதலின், கைவிடலீயான்,
இரந்து ஊண் தலைக்கொண்டு, இந் நகர் மருங்கில்
பரந்து படு மனைதொறும் திரிவோன்—ஒரு நாள்,
புனிற்று-ஆப் பாய்ந்த வயிற்றுப் புண்ணினன்,
கணவிர மாலை கைக்கொண்டென்ன,
நிணம் நீடு பெருங் குடர் கைஅகத்து ஏந்தி,
"என் மகள் இருந்த இடம்" என்று எண்ணி,
தன் உறு துன்பம் தாங்காது புகுந்து,
"சமணீர்காள்! நும் சரண்" என்றேனை,
"இவண் நீர் அல்ல" என்று, என்னொடும் வெகுண்டு,
மை அறு படிவத்து மாதவர், புறத்து, எமைக்
கையுதிர்க்கோடலின், கண் நிறை நீரேம்,
"அறவோர் உளிரோ? ஆரும் இலோம்!" என,
புறவோர் வீதியில் புலம்பொடு சாற்ற—
மங்குல் தோய் மாட மனைதொறும் புகூஉம்

36–40 என் கெடுத்து - என்னைக் காணமல், தன் தகவு உடைமையின் - தனது கடமை உணர்ச்சி உடைமையினல். குரங்கு செய் கடல் - குரங்குகள் கரை செய்த கடல். பரந்து - கூட்டமாக. தேடினன் பெயர்வோன் - தேடிச்சென்று திரும்புகின்றவன். கடல் மண்டு பெருந்துறைக் காவிரி ஆடிய - கடலில் விரைந்து புகும் காவிரிப் பெருந்துறையில் நீராடுதற்காக. வடமொழி யாளர் - வடமொழி பேசுவோர்.

41–50 என் தலை - என் முன். ஒவ்வேன் - பொருந்தேன். கைவிடல் ஈயான் - கைவிட்டுச் செல்ல மாட்டாதவனாகி. ஊண் - உண்ணுதல். தலைக் கொண்டு - மேற்கொண்டு. புனிற்று ஆ - ஈன்ற அணிமையை உடைய பசு. கணவிர மாலை - செவ் அலரி மாலை.

51-58 உறு துன்பம் - மிக்க துன்பம். நும் சரண் - உங்கள் அடைக்கலம் யான். இவண் நீர் அல்ல - இவ்விடத்திற்கு இயல்பு அன்று. (சுற்றத் தொடர்புடையோர் அராந்தாணத்துள் தங்குதல் இயல்பன்று என்றவாறு). கை உதிர்க்கோடல் - கையை மறித்தசைத்து நீக்குதல். புறவோர் - வெளியிடத்தில் உள்ளவர். புலம்பு - துன்பம். மங்குல் - மேகம்.

34

60

அங்கையில் கொண்ட பாத்திரம் உடையோன்,
கதிர் சுடும் அமயத்துப் பனி மதி முகத்தோன்,

பொன்னின் திகழும்
பொலம் பூ ஆடையன்,
"என்
உற்றனிரோ?" என்று, எமை
நோக்கி,
அன்புடன் அளைஇய அருள்மொழி-அதனால்
அஞ்செவி நிறைத்து, நெஞ்சகம் குளிர்ப்பித்து,
தன் கைப் பாத்திரம் என்
கைத் தந்து, ஆங்கு,

எந்தைக்கு உற்ற
இடும்பை நீங்க,
எடுத்தனன் தழீஇ,
கடுப்பத் தலை ஏற்றி,

மாதவர் உறைவிடம்
காட்டிய மறையோன்,
சா துயர் நீக்கிய தலைவன், தவ முனி,
சங்கதருமன், தான் எமக்கு அருளிய—

எம் கோன், இயல் குணன்,
ஏதம் இல் குணப் பொருள்,
உலக நோன்பின் பல கதி
உணர்ந்து,
தனக்கு என வாழாப்
பிறர்க்கு உரியாளன்,
இன்பச் செவ்வி மன்பதை
எய்த

அருளறம் பூண்ட ஒரு பெரும்
பூட்கையின்,
அறக் கதிர் ஆழி திறப்பட
உருட்டி,
காமற் கடந்த
வாமன்—பாதம்
தகைபாராட்டுதல் அல்லது,
யாவதும்
மிகை நா இல்லேன்;
வேந்தே, வாழ்க!' என—
'அம் சொல்
ஆய்-இழை! நின் திறம்
அறிந்தேன்;
வஞ்சி நுண் இடை
மணிமேகலை-தனைச்

சித்திராபதியால் சேர்தலும்
உண்டு' என்று, அப்
பொழில் ஆங்கு-அவன்
அயர்ந்து போய பின்—
பளிக்கறை திறந்து, பனி
மதி முகத்துக்

59-70

அங்கை - அகங்கை. பொலம் - அழகு; பொன் எனலும் ஆம். அளை இய - கலந்த. அஞ்செவி - செவியகம். கடுப்ப - விரைய.

மாதவர் - பௌத்தமுனிவர்கள்.
மதத் துறவி.
சங்கதருமன் - ஒரு பௌத்த

71-83 இயல்குணன் - இயல்பினால் அமைந்த குணங்களை உடையவன்.

உலக நோன்பின் - உலக சிலத்தினால். பல கதி - பல வகைப் பிறவிகளையும். இன்பச் செவ்வி - நிர்வாணம் என்னும் பேரின்ப மெய்தும் பக்குவம். பூட்கை - கோட்பாடு - மேற்கோள். அறக் கதிர் ஆழி - ஒளிரும் தரும சக்கரம். காமற் கடந்த வாமன் - மாரனை வென்ற அழகன் - புத்தன். தகை பாராட்டுதல் - இயல்பினைக் கொண்டாடுதல் - துதித்தல். மிகை நா இல்லேன் - (வேறு ஒருவரைத் துதிக்கும்) குற்றமுடைய நாவினை உடையேன் அல்லேன். அயர்ந்து-மயுங்கி; சோர்வுற்று.

களிக் கயல் பிறழாக் காட்சியள் ஆகி,
"கற்புத் தான் இலள்; நல் தவ உணர்வு இலள்;
வருணக் காப்பு இலள்; பொருள் விலையாட்டி" என்று,
இகழ்ந்தனன் ஆகி, நயந்தோன் என்னாது,
புதுவோன் பின்றைப் போனது, என் நெஞ்சம்:
இதுவோ, அன்னாய்! காமத்து இயற்கை?
இதுவே ஆயின், கெடுக தன் திறம்!' என,
மது மலர்க் குழலாள் மணிமேகலை-தான்
சுதமதி-தன்னொடும் நின்ற எல்லையுள்—
இந்திர கோடணை விழா அணி விரும்பி,
வந்து காண்குறூஉம் மணிமேகலா தெய்வம்
பதி அகத்து உறையும் ஓர் பைந்தொடி ஆகி,
மணி அறைப் பீடிகை வலம் கொண்டு ஓங்கி,
'புலவன், தீர்த்தன், புண்ணியன், புராணன்,
உலக நோன்பின் உயர்ந்தோய், என்கோ!
குற்றம் கெடுத்தோய், செற்றம் செறுத்தோய்,
முற்ற உணர்ந்த முதல்வா, என்கோ!
காமற் கடந்தோய், ஏமம் ஆயோய்,
தீ நெறிக் கடும் பகை கடிந்தோய், என்கோ!
ஆயிர ஆரத்து ஆழி அம் திருந்து அடி,
நா ஆயிரம் இலேன், ஏத்துவது எவன்?' என்று,
எரி மணிப் பூங் கொடி இரு நில மருங்கு வந்து
ஒரு தனி திரிவது ஒத்து, ஓதியின் ஒதுங்கி,

85–90 களிக் கயல்-களிப்புடைய கயல் மீன் போலும் கண். காட்சியள் - காணுதலை உடையவள். நயந்தோன் - விரும்பியவன். புதுவோன் பின்றை - புதியவன் பின்னாக.
91–100 தன் திறம் - தன் இயல்பு. இந்திர கோடணை விழா - இந்திரனுக்கு உரிய, முழக்கம் மிக்க விழா - இந்திர விழா. காண்குறூஉம் - காண்கின்ற. பதி அகத்து - புகாரின் கண். பைந்தொடி - பெண். மணி அறை - பளிக்கறை. ஓங்கி -

உரத்த குரலால். புலவன் - மெய்யுணர்ந்தவன் - புத்தன். தீர்த்தன் — தூய்மை தருவோன். உலக நோன்பின் - உலக சீலத்தினால் - உலகத்திற்காகப் புரியும் நோன்பினால். என்கோ - என்று கூறுவேனோ!. குற்றம் - காம வெகுளி மயக்கங்கள். செற்றம் செறுத்தோய்! - பகைமையை ஒழித்தோய்!

101–107 கடந்தோய்! - வென்றோய்! ஏமம் ஆயோய்! - காவலாக இருப்பவனே! ஆயிரம் ஆரத்து ஆழி அம் திருந்து அடி - ஆயிரம் ஆர்களை உடைய சக்கர ரேகை பொருந்திய நல்ல அடிகளை. இலேன் - இல்லாத நான். ஏத்துவது - புகழ்வது. எவன் - எங்ஙனம்? எரி மணி - தீயைப் போன்று ஒளிரும் மாணிக்கம். இரு நிலம் மருங்கு - பெரிய பூமியின் கண். ஓதியின் - மெய்யுணர்வோடு. ஒதுங்கி - நடந்து,

நில வரை இறந்து, ஓர் முடங்கு நா நீட்டும்.
புல வரை இறந்த புகார் எனும் பூங்கொடி,
பல் மலர் சிறந்த நல் நீர் அகழிப்
புள் ஒலி சிறந்த தெள் அரிச் சிலம்பு அடி,
ஞாயில் இஞ்சி நகை மணி மேகலை,
வாயில் மருங்கு இயன்ற வான் பணைத் தோளி,
தருநிலை, வச்சிரம், என இரு கோட்டம்
எதிர் எதிர் ஓங்கிய கதிர் இள வன முலை,
ஆர் புனை வேந்தற்குப் பேர் அளவு இயற்றி,
ஊழி எண்ணி நீடு நின்று ஓங்கிய
ஒரு பெருங் கோயில் திருமுகவாட்டி,
குண திசை மருங்கில் நாள் முதிர் மதியமும்,
குட திசை மருங்கில் சென்று வீழ் கதிரும்,
வெள்ளி வெண் தோட்டொடு, பொன் தோடு ஆக.
எள் அறு திருமுகம் பொலியப் பெய்தலும்—
அன்னச் சேவல், அயர்ந்து விளையாடிய
தன்னுறு பெடையைத் தாமரை அடக்க,
பூம் பொதி சிதையக் கிழித்து, பெடை கொண்டு,
ஓங்கு இருந் தெங்கின் உயர் மடல் ஏற;
அன்றில் பேடை அரிக் குரல் அழைஇ,
சென்று வீழ் பொழுது சேவற்கு இசைப்ப;

109–110 நிலவரை இறந்து - பூமியில் உள்ளவர்களது அறிவெல்லையை விஞ்சி. முடங்கு நா நீட்டும் - வளையும் நாவினை நீட்டுகின்றாள்- துதிக்கின்றாள். புலவரை - அறிவின் எல்லையை. பூங்கொடி - மடந்தை.

111–120 தெள் அரி - தெளிவாகிய ஓசை தரும் பரல். ஞாயில் - குட்டு என்னும் மதிலுறுப்பு. இஞ்சி - மதில். நகை - ஒளி. வாயில் மருங்கு - வாயிலிடம். வான் பணை - உயரிய மூங்கில் போன்ற. தருநிலை வச்சிரம் என இரு கோட்டம் - கற்பகக் கோயிலும் வச்சிரக் கோயிலுமாகிய இரு கோயில்கள். ஆர் - ஆத்திமலர். பேரளவு இயற்றி பெரியதோர் அளவாக அமைக்கப்பெற்று. கோயில் - சோழன் மாளிகை.

[அகழியாகிய சிலம்பினையும் மதிலாகிய மேகலையையும் வாயி[illegible] தோளினையும் கோட்டங்களாகிய

முலைகளையும் சோழன் கோயிலாகிய திருமுகத்தினையும் உடைய புகார் ஆகிய மடந்தை என உருவகித்தார்.]

குணதிசை - கீழ்த்திசை. குடதிசை - மேற்றிசை.

121–128 தோடு - ஒருவகைக் காதணி. எள் அறு திரு முகம் - குற்றம் அற்ற அழகுள்ள முகம். அயர்ந்து - மெய்ம்மறந்து. தன் உறு பெடை - தனது அன்புள்ள பேடை. பூம்பொதி - பூவின் மூட்டம்-மொட்டு. அரி - அழகிய ஓசை. அழைஇ-அழைத்து. சென்றுவீழ் பொழுது - ஞாயிறு மலை வாயில் வீழும் மாலைப் பொழுதினை.

பவளச் செங் கால் பறவைக் கானத்து,
குவளை மேய்ந்த குடக் கண் சேதா

முலை பொழி தீம் பால் எழு துகள் அவிப்ப,
கன்று நினை குரல மன்று வழிப் படர;
அந்தி அந்தணர் செந் தீப் பேண;
பைந் தொடி மகளிர் பலர் விளக்கு எடுப்ப;
யாழோர் மருதத்து இன் நரம்பு உளர;

கோவலர் முல்லைக் குழல்
மேற்கொள்ள;
அமரக மருங்கில் கணவனை இழந்து,
தமர் - அகம் புகூஉம் ஒரு மகள் போல,
கதிர் ஆற்றுப்படுத்த முதிராத் துன்பமோடு;
அந்தி என்னும் பசலை மெய்யாட்டி
வந்து இறுத்தனளால், மா நகர் மருங்கு - என்.

129–130 செங்கால் பறவைக் கானம் - அன்னப் பறவைகள் மிகுந்த மருத நிலத்தில். குடக்கண் சேதா-வளைந்த கண்களை உடைய செந்நிறப் பசுக்கள்.

131–141 தீம் பால் - இனிய பால். துகள் - தூசி. குரல - குரலை உடையன ஆகி; மன்று வழிப்படர - நிற்றற்குரிய மன்றுகளை நோக்கிச் செல்ல. எடுப்ப-ஏற்ற. யாழோர் - வீணையிசை வல்லுநர். மருதம் - ஒருவகை யாழ்; ஒருபண் எனலும் ஆம். உளர-இசைப்ப. முல்லைக் குழல்-ஒரு வகைக் குழல் வாச்சியம்; முல்லை - ஒருவகைப் பண்ணும் ஆம். அமரகம் - போர் முனை. தமரகம் - பிறந்த அகம். கதிர் ஆற்றுப் படுத்த - ஞாயிற்றினைப் போக்கிய. முதிராத் துன்பமோடு-புதிய கைம்மைத் துன்பத்தோடு. பசலை மெய்யாட்டி - பசலை நிறம் பொருந்திய உடம்பினை உடையவள். இறுத்தனள் - தங்கினள்.

6. சக்கரவாளக் கோட்டம் உரைத்த காதை

அந்தி வானத்தில் சந்திரன் உதித்தான். மணிமேகலா தெய்வம் மீண்டும் புத்த பீடிகையை வலம் வந்து வணங்கித் துதித்து, வாடிநின்ற சுதமதியை நோக்கி 'வாட்டத்தின் காரணம் யாது?' என வினவ, சுதமதி, உதயகுமரன் மணிமேகலைபால் காமம் மிக்குடையவனு யிருத்தலைக் கூறி, இதுவே யாம் உற்ற இடுக்கண் என்றனள். அது கேட்டு மணிமேகலா தெய்வம் 'இது முனிவர் வனமாதலால் உதயகுமரன் தீங்கு செய்யத் துணியாது சென்றனன். மணிமேகலை இவ்வனத்தை நீங்கிச் செல்லும் போது அவன் இவளை வலிந்து கைப்பற்றிக் கொள்ளுவான். ஆகையால் நீவிர் இருவீரும் இவ்வனத்திற்கு மேல்பால் உள்ள முனிவர்களின் இருக்கையாகிய சக்ரவாளக் கோட்டத்திற் சென்று தங்குக. அங்கு அவனுல் ஒரு துன்பமும் நேராது' என்றது.

சுதமதி மணிமேகலா தெய்வத்தை நோக்கி 'யாவரும் இவ்விடத்தினைச் சுடுகாட்டுக் கோட்டம் என்பர். நீ சக்ரவாளக் கோட்டம் என்கின்றாய். மாருதவேகன் என்னும் விஞ்சையனும் இங்ஙனமே கூறுவான். இதன் காரணம் யாது?' என வினவினள். மணிமேகலா தெய்வம், அச்சுடுகாட்டுக் கோட்டத்தின் தன்மையை விரித்துக் கூறி, அது சக்கரவாளக் கோட்டம் எனப் பெயர் பெற்றமையையும் விளக்கிற்று:- 'முன்னொரு நாள் சார்ங்கலன் என்னும் பார்ப்பனச் சிறுவன் இம்மயானத்தை நகரம் என நினைத்து இதனுள் நுழைந்து இங்கு வாழும் ஒரு பேயால் தாக்கப்பட்டு அலறிக்கொண்டு தன் வீடு சென்று தாயாகிய கௌதமியிடம் நிகழ்ந்ததைக் கூறி இறந்தனன். அவளும் தன் ஒரு மகனுக்கு மிகவும் இரங்கி இம்மயானத்திற்கு வந்து ச்ம்பாபதியிடம் அவன் பிழைத்தெழுமாறு அருள வேண்டி முறையிட்டனள். சம்பாபதி சார்ங்கலன் ஊழ்வினைப் பயனால் இறந்தனன் என்றும், அவன் உயிரை மீட்டு நல்கல் தன்னாலும் மற்றைய தெய்வங்களாலும் இயலாது என்றும் கூறிற்று. கௌதமி தேவர்கள் எவ்வரத்தையும் நல்கும் ஆற்றல் வாய்ந்தவர் என்று பெரியோர் கூறுவராதலால், பெருந்தெய்வமாகிய சம்பாபதியே! நீ என் மகனைப் பிழைப்பித்தல் வேண்டும் என்று வரம் வேண்டியழுதனள். சம்பாபதி கௌதமியை நோக்கி "இங்கு தேவர்களை எல்லாம் வருவிப்பேன்; நீ அவர்களிடம் இவ்வரம் கேள்; யாரேனும் இவ்வரம் நல்குவரேல் யானும் நல்குவேன்" என்று கூறித் தேவரை எல்லாம் வருவித்தது. அவர்களிடம் கௌதமி தன் மகனைப் பிழைப்பிக்குமாறு வேண்ட, அவர் அது செய்யலாகாது என்றனர். அவளும் ஊழ்வினைக்கு நொந்து இறந்தொழிந்தனள். இங்ஙனம் தேவர்களை வருவித்த சம்பாபதியின் பெருமைக்குச் சான்றாக மயனால் இங்குச் சக்கரவாளமும்

(உலகமும்), அதனகத்துள்ள தேவர் முதலிய உயிர்களும், பிறவும் சுண்ணும்பிறைல் அமைத்து வைக்கப்பட்டுள்ளமையால் இது சக்கரவாளக் கோட்டம் எனப் பெயர் பெற்றது.'

39

அந்தி மாலை நீங்கிய
பின்னர்,
வந்து தோன்றிய மலர் கதிர் மண்டிலம்,
சான்றோர் - தம் - கண் எய்திய குற்றம்
தோன்றுவழி விளங்கும்
தோற்றம் போல,
மாசு அறு விசும்பின் மறு
நிறம் கிளர;

ஆசு அற விளங்கிய அம்
தீம் தண்கதிர்,

வெள்ளி வெண் குடத்துப் பால் சொரிவது போல்,
கள் அவிழ் பூம் பொழில் இடைஇடைச் சொரிய—

உருவு கொண்ட மின்னே
போல,

திருவில் இட்டுத் திகழ்தரு மேனியள்
ஆதி முதல்வன், அற ஆழி ஆள்வோன்,

பாத பீடிகை பணிந்தனள்

ஏத்தி,

பதிஅகத்து உறையும் ஓர் பைந்தொடி ஆகி,
சுதமதி நல்லாள் மதி முகம் நோக்கி,
'ஈங்கு நின்றீர், என்
உற்றீர் ?' என,
ஆங்கு - அவள்
ஆங்கு - அவன் கூறியது
உரைத்தலும்,
'அரசு இளங் குமரன்
ஆய்-இழை-தன் மேல்

தணியா நோக்கம்
தவிர்ந்திலன் ஆகி,

அறத்தோர் வனம் என்று
அகன்றனன்; ஆயினும்,
புறத்தோர்
வீதியில் பொருந்துதல் ஒழியான்;
பெருந் தெரு ஒழித்து,
இப் பெரு வனம் சூழ்ந்த
திருந்து எயில் குடபால்
சிறு புழை போகி,
மிக்க மாதவர் விரும்பினர்
உறையும்
சக்கரவாளக் கோட்டம்
புக்கால்,

1-10 மண்டிலம் - சந்திரன்.
எய்திய - சேர்ந்த. தோன்று வழி
- (சான்றோர்) தோன்றும்
போழ்தில். தோற்றம் - காட்சி.
மறு
நிறம் கிளர - களங்கம்
நிறம் மிக்குத் தோன்ற. ஆசு -
குற்றம்.

அம் தீம் தண் கதிர் - அழகிய இனிய குளிர்ந்த நிலாக் கதிர். வெள்ளி வெண் குடத்து - மிக்க வெண்ணிறமுள்ள குடத்திலிருந்து. திரு வில் இட்டு - வான வில் போலும் ஒளி விட்டு.

11-20 அற ஆழி ஆள்வோன் - புத்தன். பதி அகத்து - புகார் நகரிடத்தில். ஆங்கு - அசை நிலை. அவன் - உதயகுமரன். ஆயிழை - மணிமேகலை. நோக்கம் - காதல். அறத்தோர் - முனிவர்களது. புறத்தோர் - மற்றையோரது. பொருந்துதல்- (மணிமேகலையைத்) தீண்டுதல்.

21-24 எயில் குடபால் - மதிலின் மேல்புறத்தில் உள்ள. நுழைந்து செல்லும் வாயில் - சிறிய வாயில்.

சிறு புழை -

40

கங்குல் கழியினும், கடு நவை எய்தாது;
அங்கு நீர் போம்' என்று அருந் தெய்வம் உரைப்ப—
'வஞ்ச விஞ்சையன் மாருதவேகனும்
அம் செஞ் சாயல் நீயும் அல்லது,
நெடு நகர் மருங்கின் உள்ளோர் எல்லாம்
சுடுகாட்டுக் கோட்டம் என்று அலது உரையார்;
சக்கரவாளக் கோட்டம் அஃது என,
மிக்கோய்! கூறிய உரைப் பொருள் அறியேன்;
ஈங்கு இதன் காரணம் என்னையோ?' என—
'ஆங்கு - அதன் காரணம் அறியக் கூறுவன்;
மாதவி மகளோடு வல் இருள் வரினும்,
நீ கேள்' என்றே நேர்-இழை கூறும்: 'இந்
நாமப் பேர் ஊர் - தன்னொடு தோன்றிய
ஈமப் புறங்காடு ஈங்கு - இதன் அயலது;
ஊரா - நல் - தேர் ஓவியப் படுத்து,
தேவர் புகுதரூஉம் செழுங் கொடி வாயிலும்;
நெல்லும், கரும்பும், நீரும், சோலையும்,
நல்வழி எழுதிய நலம் கிளர் வாயிலும்;
வெள்ளி வெண் சுதை இழுகிய மாடத்து,
உள் உரு எழுதா வெள்ளிடை வாயிலும்;
மடித்த செவ் வாய், கடுத்த நோக்கின்,
தொடுத்த பாசத்து, பிடித்த சூலத்து,
நெடு நிலை மண்ணீடு நின்ற வாயிலும்;
நால் பெரு வாயிலும் பாற்பட்டு ஓங்கிய
காப்பு உடை இஞ்சிக் கடி வழங்கு ஆர் இடை,

25–30 கங்குல் - இரவு. கழியினும் - மிகினும். நவை - தீங்கு. அம் செம் சாயல்! - அழகிய சிவந்த மென்மையை உடையோய்!.

31-40 மிக்கோய்! - பெரியோய்!. என்னையோ? - யாதோ?. ஆங்கு - அசைநிலை. (வல்லிருள் வரினும் மாதவி மகளொடு நீ கேள் எனக் கூட்டுக). நாமப் பேரூர் - (பகைவர்க்கு) அச்சந் தரும் புகார் நகர். ஈமம் - பிணஞ் சுட அடுக்கும் விறகு. புறங் காடு - சுடுகாடு. ஈங்கு - அசைநிலை. ஊரா நல் தேர் - செலுத்துதல் இல்லாத நல்ல தேரினை - தேவ விமானத்தை. ஓவியப் படுத்து - ஓவியமாக அமைத்து. புகுதரூஉம் - புகுதற்கு உரிய.

41-50 நல்வழி - நல்ல முறையினில். நலம் கிளர் வாயில் - அழகு

41-50 [illegible] மிக்க வாயில். வெள்ளி வெண் சுதை - மிக்க வெண்ணிறமுள்ள சுண்ணும்பு. இழுகிய - பூசப்பட்ட. உள் உரு எழுதா வெள்ளிடை வாயில் - ஓவிய உருவம் தீட்டப் பெருத வெண்ணிலையாக உள்ள வாயில். கடுத்த - வெகுளியைப் புலப்படுத்துகின்ற. தொடுத்த பாசம் - பாவியரைக் கட்டிய கயிறு. நெடு நிலை மண்ணீடு - நீண்ட தன்மையுள்ள; சுண்ணும்பினுல் அமைந்த பூதவடிவம். பாற்பாட்டு - வகை பெற்று. இஞ்சி - மதில். கடி - பேய். ஆர் இடை - செல்லுதற்கு அரிய இடம்.

உலையா உள்ளமோடு உயிர்க் கடன் இறுத்தோர்
தலை தூங்கு நெடு மரம் தாழ்ந்து புறம் சுற்றி,
பீடிகை ஓங்கிய பெரும் பலி முன்றில்
காடு அமர் செல்வி கழி பெருங் கோட்டமும்;
அருந் தவர்க்கு ஆயினும், அரசர்க்கு ஆயினும்,
ஒருங்கு உடன் மாய்ந்த பெண்டிர்க்கு ஆயினும்,
நால் வேறு வருணப் பால் வேறு காட்டி,
இறந்தோர் மருங்கில் சிறந்தோர் செய்த
குறியவும் நெடியவும் குன்று கண்டன்ன,
சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டமும்;
அருந் திறல் கடவுள் திருந்து பலிக் கந்தமும்;
நிறைக் கல் தெற்றியும்; மிறைக் களச் சந்தியும்;
தண்டும் மண்டையும் பிடித்து, காவலர்
உண்டு, கண் படுக்கும் உறையுள் குடிகையும்;
தூமக் கொடியும்; சுடர்த் தோரணங்களும்;
ஈமப் பந்தரும்; யாங்கணும் பரந்து—
சுடுவோர், இடுவோர், தொடு குழிப் படுப்போர்,
தாழ் வயின் அடைப்போர், தாழியில் கவிப்போர்,
இரவும் பகலும் இளிவுடன் தரியாது,

50-60 உயிர்க் கடன் - உயிர்ப் பலி யாகிய கடன். இறுத்தோர் - கொடுத்து முடித்தவரது. தலை தூங்கு நெடு மரம் - தலைகள் தொங்கி அசைகின்ற நீண்டுயர்ந்த மரங்கள். தாழ்ந்து - (தொங்கும் தலைகளின் பாரத்தால்) தாழப்பெற்று. சுற்றி - சூழப் பெற்று. (பெரும் பலி பீடிகை ஓங்கிய முன்றில் எனக் கூட்டுக.) காடமர் செல்வி - கொற்றவை. ஒருங்கு உடன் மாய்ந்த - கணவர் இறந்த பொழுதிலே தாமும் உயிர் பிரியப் பெற்ற. பால் - பாகுபாடு. மருங்கு - (புதைத்த) இடத்தில். சிறந்தோர் - உற்ருர். (குறியவும் நெடியவும் ஆகிய குன்று என்க.) சுடுமண் - செங்கல். அருந் திறல் கடவுள் திருந்து பலிக் கந்தம் - மிக்க ஆற்றல் வாய்ந்த தெய்வங்களைத் தம் மிடத்தே கொண்ட, திருந்திய பலிபெறும் தூண்கள்.

61-68 நிறைக் கல் தெற்றி - நிறுத்தப்பெற்ற கற்களால் அமைந்த திண்ணைகள். பிறைக் களச் சந்தி - வளைந்த இடத்தினை யுடைய, வழிகள் கூடும் இடம். தண்டு - மரவைக் கலம். மண்டை - ஒருவகை மட்கலம். காவலர் - மயானம் காப்பவர். கண்படுக்கும் - உறங்குகின்ற. குடிகை - குடிசைகள். தூமக் கொடி - புகையின் ஒழுங்கு. சுடர்த் தோரணங்கள் - தீப்பொறி யாகிய தோரணங்கள். ஈமம் - சிதை. (இறந்தோர் உடலை எரித்தற்கு அடுக்கியவிறகு.)சுடுவோர் - பிணங்களை எரிப்பவர். இடுவோர் - பிணங்களை எரியாமலும் புதையாமலும் விட்டுச் செல்பவர். தொடு குழிப்படுப்போர் - தோண்டிய குழியில் பிணங்களைப் போகடுவோர். தாழ்வயின் அடைப்போர் - பள்ளமாகிய இடத்தே பிணங்களை அடைத்து வைப்போர். தாழியின் கவிப்போர் - பிணங்களைத் தாழிகளால் மூடுவோர். இளிவு - அருவருப்பு. தரியாது - மனம் தாங்காமல்-ஆற்ருமல்.

வருவோர் பெயர்வோர் மாருச் சும்மையும்;
எஞ்சியோர் மருங்கின் ஈமம் சாற்றி
நெஞ்சு நடுக்குறூஉம் நெய்தல் ஓசையும்;
துறவோர் இறந்த தொழு விளிப் பூசலும்;
பிறவோர் இறந்த அழு விளிப் பூசலும்;
நீள் முக நரியின் தீ விளிக் கூவும்;
சாவோர்ப் பயிரும் கூகையின் குரலும்;
புலவு ஊண் பொருந்திய குராலின் குரலும்;
ஊண் தலை துற்றிய ஆண்டலைக் குரலும்—
நல் நீர்ப் புணரி நளி கடல் ஓதையின்,
இன்னா இசை ஒலி என்றும் நின்று அறாது,
தான்றியும், ஒடுவையும், உழிஞ்சிலும், ஓங்கி;
கான்றையும், சூரையும், கள்ளியும், அடர்ந்து;
காய் பசிக் கடும் பேய் கணம் கொண்டு ஈண்டும்,
மால் அமர் பெருஞ் சினை வாகை மன்றமும்—
வெண் நிணம் தடியொடு மாந்தி, மகிழ் சிறந்து,
புள் இறைகூரும் வெள்ளில் மன்றமும்—
சுடலை நோன்பிகள் ஒடியா உள்ளமொடு
மடை தீ உறுக்கும் வன்னி மன்றமும்—
விரத யாக்கையர் உடை தலை தொகுத்து - ஆங்கு,
இருந் தொடர்ப் படுக்கும் இரத்தி மன்றமும்—
பிணம் தின் மாக்கள் நிணம் படு குழிசியில்

69-70 சும்மை-ஒலி. எஞ்சியோர் மருங்கின் - சாவாமல் எஞ்சியிருப்ப வர் திறத்தில். ஈமம் சாற்றி - ஈமம் உண்டென்பதை அறிவித் துக்கொண்டு.

71-79 நடுக்குறூஉம் - நடுங்கச் செய்கின்ற. நெய்தல் - சாவுக்கு அறையும் பறை-சாப்பறை. இறந்த-இறத்தலால் உளதாகிய. தொழு விளிப் பூசல் - துதிக்கும் ஒலியால் ஆகிய முழக்கம். அழுவிளிப் பூசல் - அழுகைக் குரலால் ஆகிய கம்பலை. தீவிளிக்கூ - இன்னாத ஊளைக் குரல். பயிரும் - அழைக்கின்ற. புலவூண் - புலாலுணவு. ஊண் தலை துற்றிய - தலையை உணவாக உண்ட. ஆண்டலை - ஒருவகைப் பறவை. நன்னீர் - மிக்க நீரை உடைய. புணரி - அலை. நளி - பெரிய. இன்னா - இனிமையற்ற.

80-90 தான்றி, ஒடுவை, உழிஞ்சில் - மர வகைகள். கான்றை, சூரை, கள்ளி - தாவர வகைகள். காய் பசி - கடும் பசி. மால் அமர்

பெருஞ்சினை - மேகம் தங்கும் பெரிய கிளைகளை உடைய. நிணம் - கொழுப்பு. தடி - தசை. மாந்தி - அருந்தி. புன் - பேராந்தை. இறைகூரும் - மிகுதியாகத் தங்கப்பெற்ற. வெள்ளில் - ஒருவகை மரம். சுடலை நோன்பிகள் - காபாலிகர். (சுடலை - ஈமத்தீ.) ஒடியா - தளராத. மடை - சோறு. தீ உறுக்கும் - தீயில் இடுகின்ற. வன்னி - ஒருவகை மரம். உடைதலை - உடைந்த தலை ஓடுகளை. தொகுத்து - ஒன்று சேர்த்து. தொடர்ப்படுக்கும் - மாலையாகத் தொடுக்கின்ற. இரத்தி - இலந்தை மரம். குழிசி - பானை.

43

விருந்தாட்டு அயரும் வெள்ளிடை மன்றமும்—
அழல் பெய் குழிசியும், புழல் பெய் மண்டையும்,
வெள்ளில் பாடையும், உள்ளீட்டு அறுவையும்,
பரிந்த மாலையும், உடைந்த கும்பமும்,
நெல்லும், பொரியும், சில் பலி அரிசியும்,
யாங்கணும் பரந்த ஓங்கு இரும் பறந்தலை—
தவத் துறை மாக்கள், மிகப் பெருஞ் செல்வர்,
ஈற்று இளம் பெண்டிர், ஆற்றாப் பாலகர்,
முதியோர், என்னான்; இளையோர் என்னான்;
கொடுந்தொழிலாளன் கொன்றனன் குவிப்ப; இவ்
அழல் வாய்ச் சுடலை தின்னக் கண்டும்,
கழி பெருஞ் செல்வக் கள்ளாட்டு அயர்ந்து,
மிக்க நல் அறம் விரும்பாது வாழும்
மக்களின் சிறந்த மடவோர் உண்டோ ?
ஆங்கு அது - தன்னை ஓர் அருங் கடி நகர் என,
சார்ங்கலன் என்போன், தனி வழிச் சென்றோன்—
என்பும், தடியும், உதிரமும், யாக்கை என்று,
அன்புறு மாக்கட்கு அறியச் சாற்றி,
வழுவொடு கிடந்த புழு ஊன் பிண்டத்து,
அலத்தகம் ஊட்டிய அடி நரி வாய்க் கொண்டு,
உலப்பு இல் இன்பமோடு உளைக்கும் ஓதையும்;
கலைப் புற அல்குல் கழுகு குடைந்து உண்டு,
நிலைத்தலை நெடு விளி எடுக்கும் ஓதையும்;
கடகம் செறித்த கையைத் தீ நாய்

91–100 விருந்தாட்டயரும் - விருந்துணவளித்து மகிழ்கின்ற. வெள் ளிடை - (மரம் முதலியன இல்லாத) வெற்றிடம். அழல் - தீ. புழல் - ஈமதீர். உள்ளீட்டறுவை - பிணத்தை மூடிய துணி பரிந்த - சிதைந்த. கும்பம் - தண்ணீர்ப் பாண்டம். சில்பலி அரிசி - பிணங்களுக்கு இடும் அரிசி. ஓங்கிரும் பறந்தலை - மிகப் பெரிய மயானம். ஈற்றிளம் பெண்டிர் - தலைப்பிள்ளை பெற்ற பெண்கள். கொடுந்தொழிலாளன் - இயமன்.

101–110 கள்ளாட்டயர்ந்து - கட்குடியால் களித்து. கடி - காவல், என - என்று நினைத்து. தனிவழிச் சென்றோன் - துணையின்றித் தனியே சென்றவனாய். தடி - தசை. உதிரம் - இரத்தம். அன்புறும் - உடம்பினில் அன்பு கொள்ளுகின்ற. சாற்றி - சொல்லி. வழுவொடுகிடந்த - அழுகலுற்றுக்கிடந்த. ஊன் பிண்டம் - பிணம். அலத்தகம் - செம் பஞ்சின் குழம்பு.

111–113 உலப்பு - முடிவு. உளைக்கும் - கூச்சலிடும். கலைப்புற அல்குல் - மேகலையைத் தன்னிடத்தே தாங்கியிருந்த நிதம்பத்தினை. நிலைத்தலை நெடுவிளி எடுக்கும் - நீங்குதலற்ற ஓங்கிய சத்தம் எழுப்புதால் உளதாகிய. தீநாய் - மயானத்தில் வாழும் நாய்.

உடையக் கவ்வி ஒடுங்கா ஓதையும்;
சாந்தம் தோய்ந்த ஏந்து இள வன முலை
காய்ந்த பசி எருவை கவர்ந்து ஊண் ஓதையும்—
பண்பு கொள் யாக்கையின் வெண்பலி அரங்கத்து—
மண் கணை முழவம் ஆக; ஆங்கு ஓர்
கருந் தலை வாங்கி, கைஅகத்து ஏந்தி,
இரும் பேர் உவகையின் எழுந்து, ஓர் பேய் மகள்,
புயலோ, குழலோ; கயலோ, கண்ணோ;
குமிழோ, மூக்கோ; இதழோ, கவிரோ;
பல்லோ, முத்தோ, என்னாது; இரங்காது;
கண் தொட்டு உண்டு; கவை அடி பெயர்த்து;
தண்டாக் களிப்பின் ஆடும் கூத்துக்
கண்டனன் வெரீஇ, கடு நவை எய்தி,
விண்டு, ஓர் திசையின் விளித்தனன் பெயர்ந்து, "ஈங்கு,
எம் அனை! காணாய்; ஈமச் சுடலையின்
வெம் முது பேய்க்கு என் உயிர் கொடுத்தேன்" என,
தம் அனை - தன் முன் வீழ்ந்து, மெய் வைத்தலும்—
"பார்ப்பான் - தன்னொடு, கண் இழந்து இருந்த இத்
தீத்தொழிலாட்டியேன் சிறுவன் - தன்னை
யாரும் இல் தமியேன் என்பது நோக்காது,
ஆர் உயிர் உண்டது, அணங்கோ? பேயோ?
துறையும், மன்றமும், தொல் வலி மரனும்,
உறையுளும், கோட்டமும், காப்பாய்! காவாய்;
தகவு இலைகொல்லோ, சம்பாபதி?" என,
மகன் மெய் யாக்கையை மார்பு உறத் தழீஇ,
ஈமப் புறங்காட்டு எயில் புற வாயிலில்,

114–120 சாந்தம் - சந்தனம். எருவை - பருந்தின் வகை. பண்பு கொள் யாக்கையின் - தனது இயல்பினை (அருவருக்கத்தக்க தன்மையை) எய்திய பிணமாய உடலின். வெண்பலி அரங்கத்து - சாம்பலாகிய மேடையில். மண் - மார்ச்சனை. கருந் தலை-பெரிய தலை. உரோமம் அடர்ந்த தலை எனலும் ஆம்.

121–130 இரும்பேருவகை - மிக்க பெரு மகிழ்சி. புயல் - மேகம். குமிழ்-குமிழம்பூ. கவிர்-முள்முருக்கம்பூ. தொட்டு-தோண்டி.

கவை அடி பெயர்த்து - கவையாகிய அடிகளை அசைத்து. தண்டா - அமையாத - எல்லையற்ற. வெரீஇ - அஞ்சி. நவை.(பேயால் ஆகிய) துன்பம். விண்டு-நீங்கி. விளித்தனன்- கதறிக்கொண்டு. எம்மனை ! - எந்தாயே!.

131–140 மெய் வைத்தலும் - இறந்து பட்டவுடன். தமியேன் - கதியற்றுள்ளேன். துறை - நீர்த் துறைகள். தொல்வலிமரன் - பெரிய வலிமையுள்ள மரங்கள். தகவு - நீதி.. மெய்யாக்கை - சவம். ஈமப் புறங்காடு - சிதைகளை உடைய மயானம்.

45

கோதமை என்பாள் கொடுந்துயர் சாற்ற—
"கடி வழங்கு வாயிலில் கடுந் துயர் எய்தி,
இடை இருள் யாமத்து, என்னை ஈங்கு அழைத்தனை;
என் உற்றனையோ? எனக்கு உரை" என்றே,
பொன்னின் பொலிந்த நிறத்தாள் தோன்ற,
"ஆரும்இலாட்டியேன் அறியாப் பாலகன்
ஈமப் புறங்காட்டு எய்தினேன் - தன்னை
அணங்கோ, பேயோ, ஆர் உயிர் உண்டது;
உறங்குவான் போலக் கிடந்தனன் காண்" என—
"அணங்கும் பேயும் ஆர் உயிர் உண்ணா;
பிணங்கு நூல் மார்பன் பேது கந்தாக
ஊழ்வினை வந்து, இவன் உயிர் உண்டு கழிந்தது;
மா பெருந் துன்பம் நீ ஒழிவாய்" என்லும்—
"என் உயிர் கொண்டு, இவன் உயிர் தந்தருளில், என்
கண் இல் கணவனை இவன் காத்து ஓம்பிடும்;
இவன் உயிர் தந்து, என் உயிர் வாங்கு" என்றலும்—
முது மூதாட்டி இரங்கினள் மொழிவோள்,
"ஐயம் உண்டோ—ஆர் உயிர் போனால்,
செய்வினை மருங்கின் சென்று, பிறப்பு எய்துதல் ?
ஆங்கு - அது கொணர்ந்து, நின் ஆர் இடர் நீக்குதல்
ஈங்கு எனக்கு ஆவது ஒன்று அன்று; நீ இரங்கல்;
'கொலை அறம் ஆம்' எனும் கொடுந் தொழில் மாக்கள்
அவலப் படிற்று - உரை ஆங்கு - அது; மடவாய் !
உலக மன்னவர்க்கு உயிர்க்கு உயிர் ஈவோர்
இலரோ? இந்த ஈமப் புறங்காட்டு,
அரசர்க்கு அமைந்தன,

ஆயிரம் கோட்டம்!

....

141–150 கோதமை - இறந்த சிறுவன் தாய். கடி - பேய். என் உற்றனை-என்ன துன்ப மெய்தினாய்? நிறத்தாள்-சம்பாபதி. ஆருமிலாட்டியேன் - ஒருவரது துணையும் இல்லாத எனது.

151–160 பிணங்கு நூல் மார்பன் - பூணூலணிந்த மார்பினன் - சார்ங்கலன். பேது - பேதைமை. கந்து-காரணம். முதுமூதாட்டி-மிகப் பெரிய சம்பாபதி. செய்வினை மருங்கின் - செய்த வினையின்படி. ஆங்கு - அசை நிலை.

161–166 ஈங்கு-அசை நிலை. ஆவது-இயல்வது. இரங்கல்-வருந்தற்க. கொலை - கொல்லுதல். அவலப் படிற்றுரை - கேட்டிற்குக் காரணமாய பொருத்தமற்ற பேச்சு. [செத்தோரது உயிரைத் தெய்வத்தால் மீட்கலாம் என்பது. கொலையை அறமாகக் கருதிச் செய்து ஒழுகும் ஒரு சாரார் கூறும் பிழைபட்ட பேச்சு என்றவாறு.] உயிர்க்கு - (இறந்த) உயிரை மீட்டற்கு.

46

நிரயக் கொடு மொழி நீ ஒழி" என்றலும்—

“தேவர் தருவர் வரம் என்று, ஒரு முறை,
நான்மறை அந்தணர் நல் - நூல் உரைக்கும்;
மா பெருந் தெய்வம்! நீ அருளாவிடின்,
யானோ காவேன், என் உயிர், ஈங்கு” என

"ஊழி முதல்வன் உயிர் தரின் அல்லது,
ஆழித் தாழி அகவரைத் திரிவோர்-
தாம் தரின், யானும் தருகுவன்; மடவாய்!
ஈங்கு, என் ஆற்றலும் காண்பாய்" என்றே
நால் வகை மரபின் அரூபப் பிரமரும்,
நால் - நால் வகையின் உரூபப் பிரமரும்,
இரு வகைச் சுடரும், இரு - மூவகையின்
பெரு வனப்பு எய்திய தெய்வத கணங்களும்,
பல் வகை அசுரரும், படு துயர் உறூஉம்
எண் வகை நரகரும், இரு விசும்பு இயங்கும்
பல் மீன் ஈட்டமும், நாளும், கோளும்,
தன் அகத்து அடக்கிய சக்கரவாளத்து,
வரம் தரற்கு உரியோர் - தமை முன் நிறுத்தி,
"அரந்தை கெடும்; இவள் அருந்துயர் இது" என,
சம்பாபதி - தான் உரைத்த அம் முறையே,
எங்கு வாழ் தேவரும் உரைப்பக் கேட்டே,
கோதமை உற்ற கொடுந் துயர் நீங்கி,
ஈமச் சுடலையில் மகனை இட்டு, இறந்த பின்—
சம்பாபதி - தன் ஆற்றல் தோன்ற

167–170 நிரயக் கொடுமொழி - நரகத்துக்குக் காரணமாக உள்ள தீய மொழியை (மகனுக்காக என் உயிரைக் கொடுப்பேன் என்னும் பாவச் சொல்லை). வரம் - சாவை ஒழிக்கும் வரம்.

நன்னூல் - வேதம்.

1171–80 ஊழி முதல்வன்-ஊழியை இயற்றும் தலைவன்-மகாப்பிரமன் ஆழித் தாளி அகவரை-சக்கரவாளகிரியாகிய பெருந்தாளியின் அகத்திலே - மஹாப்பிரமன் படைத்த உலக முழுமையிலும். திரிவோர் - வாழும் தேவர்கள். அருபப்பிரமர், உருபப்பிரமர் என்போர் பௌத்த மதத்தினர் கொண்ட தேவர்கள். இரு வகைச் சுடர் - திங்களும் ஞாயிறும். இரு மூவகையில் பெருவனப்பு எய்திய தெய்வத கணங்கள் - பௌத்த சமயத்தோர் கொண்ட அறுவகைத் தெய்வ கணத்தினர். படுதுயர்-மிக்க துன்பம்.

181–190 எண்வகை நரகர் - எட்டு வகை நரகத்தினர். மீன் ஈட்டம் - நட்சத்திரங்களின் கூட்டம். நாள்—அசுவதி முதலிய இருபத்தேழு நட்சத்திரங்கள். கோள் - கிரகங்கள். அரந்தை கெடும்—(கோதமையின்) துன்பத்தை நீக்குமின்.

எங்கு வாழ் தேவரும் கூடிய இடம் - தனில்,
சூழ் - கடல் வளைஇய ஆழி - அம் குன்றத்து,
நடுவு நின்ற மேருக் குன்றமும்,
புடையின் நின்ற எழு - வகைக் குன்றமும்,
நால் வகை மரபின் மாபெருந் தீவும்,
ஓர் ஈர் - ஆயிரம் சிற்றிடைத் தீவும்,
பிறவும், ஆங்கு - அதன் இடவகை உரியன
பெறு முறை மரபின் அறிவு வரக் காட்டி;
ஆங்கு வாழ் உயிர்களும், அவ் உயிர் இடங்களும்,
பாங்குற மண்ணீட்டில் பண்புற வகுத்து,
மிக்க மயனால் இழைக்கப்பட்ட
சக்கரவாளக் கோட்டம் ஈங்கு - இது - காண்.
இடு பிணக் கோட்டத்து எயில் புறம்; ஆதலின்,
சுடுகாட்டுக் கோட்டம் என்று அலது உரையார்;
இதன் வரவு இது' என்று இருந் தெய்வம் உரைக்க—
மதன் இல் நெஞ்சமொடு வான் துயர் எய்தி,
பிறந்தோர் வாழ்க்கை சிறந்தோள் உரைப்ப,
இறந்து இருள் கூர்ந்த இடை இருள் யாமத்து,
தூங்கு துயில் எய்திய சுதமதி ஒழிய,
பூங்கொடி - தன்னைப் பொருந்தித் தழீஇ,
அந்தரம் ஆறா, ஆறு - ஐந்து யோசனைத்
தென் திசை மருங்கில் சென்று, திரை உடுத்த
மணிபல்லவத்திடை, மணிமேகலா தெய்வம்

அணி-இழை-தன்னை

வைத்து, அகன்றது-தான்-என்.

191-200 வளை இய - சூழ்ந்த. ஆழியங்குன்றம் - சக்கரவாளகிரி. புடை- பக்கம். இடவகை உரியன - இடத்தின் கூறுகளைத் தமக்கு உரிமையாகக் கொண்டவை. மரபு - தன்மை. பாங்குற - செவ்வையாக மண்ணீட்டில் - சுதையால் அமைக்கப்பட்ட ஓவிய உருவினில்.

201-210. மிக்க மயன் - (சிற்பத்தில்) மேம்பட்ட தெய்வத்தச்சன், சக்கரவாளக் கோட்டம் - சக்கரவாளமாகிய உலகத்தின் கோட்டம். இடு பிணக் கோட்டம் - பிணங்களைப் புதைத்த கோட்டங்கள். எயில்புறம் - மதிலின் உள்ளிடம். இதன் வரவு - இப்பெயரின் வரலாறு. வான் - பெரிய. சிறந்தோள் - மணிமேகலா தெய்வம். இறந்து இருள் கூர்ந்த-இருள் அளவு கடந்து மிகுந்துள்ள, ஒழிய - பிரிந்திருக்க. பூங்கொடி - மணிமேகலை. பொருந்தித் தழீஇ - அணைத்துத் தழுவி.

211-214 அந்தரம் அரு - ஆகாய வழியாக. யோசனை - பல காவதம் கொண்டதொரு நீட்டல் அளவை. திரை உடுத்த - கடல் சூழ்ந்த. அணி இழை - மணிமேகலை.

7. துயில் எழுப்பிய காதை

மணிபல்லவத் தீவில் மணிமேகலையை விட்டு நீங்கிய மண
மேகலா தெய்வம், மணிமேகலையை எளிதினில் கைப்பற்றிவி
இயலுமென்று எண்ணம் கொண்டுள்ள உதயகுமரன் கண்
ணெதிரே சென்று நின்று, “தவநெறியில் மனம் ஊன்றி
மணிமேகலை மேற் காதல் கொள்ளுதல், செங்கோல் மன்ன
மகனாகிய உனக்குத் தகாது” என்று அறிவுறுத்திற்று. பின்
துயிலில் ஆழ்ந்துள்ள சுதமதிபாற் சென்று அவளை எழுப்
‘நான் மணிமேகலா தெய்வமாவேன். மணிமேகலையை யான்
மணிபல்லவத்தில் கொண்டு சேர்த்துள்ளேன். அவள் புத்த
பீடிகையைக் கண்டு பழம்பிறப்பினை உணர்ந்து ஏழு நாட்களில்
இங்குத் திரும்புவாள். மாதவி மணிமேகலைக்கு என் பெயரை
இட்ட அந்நாள் இரவினில் மாதவியின் கனவில் யான் தோன்றி
“தவத்துறை பேணும் தையலை ஈன்றனை” எனக் கூறினேன்.
இதனை நீ மாதவியிடம் கூறுக.’ என்று கூறி மறைந்தது. பின்
சுதமதி மணிமேகலையைப் பிரிந்த ஆற்றாமையோடு சக்கரவாளக்
கோட்டத்திலுள்ள உலக அறவி என்னும் அம்பலத்தை
அடைந்தனள். அங்குக் கந்திற் பாவையில் உள்ள தெய்வம்
‘மணிமேகலை ஏழாம் நாள் இங்கு மீள்வாள். அவள் உன் பழம்
பிறப்பினையும் தன் பழம்பிறப்பினையும் உணர்ந்து விளங்குவாள்.
நீ அவள் திறம் பற்றிக் கவலைப்பட வேண்டாம்” என்றது. சுதமதி
அத்தெய்வ மொழியினைக் கேட்ட அச்சத்தோடு விடியுமளவும்
அங்கிருந்து, விடிந்ததும் மாதவியிடம் சென்று நிகழ்ந்ததெல்லாம்
கூறினள். மாதவி உயிரனைய மகளைப் பிரிந்த மிக்க வருத்தத்
தோடு அவள் வரவினை எதிர்பார்த்திருந்தனள்.

மணிமேகலை-தனை, மணிபல்லவத்திடை,
மணிமேகலா தெய்வம் வைத்து நீங்கி—
மணிமேகலை-தனை மலர்ப் பொழில்-கண்ட
உதயகுமரன் உறு துயர் எய்தி,
'கங்குல் கழியில் என் கைஅகத்தாள்' என,

1-5 உறு துயர் – மிக்க துன்பம். கங்குல் – இரவு. கையகத்தாள் – வசப்படுவாள்.

49

பொங்கு மெல் அமளியில் பொருந்தாது இருந்தோன்
முன்னர்த் தோன்றி—'மன்னவன் மகனே!

கோல் நிலை திரிந்திடின், கோள் நிலை திரியும்;
கோள் நிலை திரிந்திடின், மாரி வறம் கூரும்;
மாரி வறம் கூரின், மன் உயிர் இல்லை:
மன் உயிர் எல்லாம் மண் ஆள் வேந்தன்-
தன் உயிர் என்னும் தகுதி இன்று ஆகும்;
தவத் திறம் பூண்டோர்-தன்மேல் வைத்த
அவத் திறம் ஒழிக' என்று அவன்வயின் உரைத்த பின்—
உவவனம் புகுந்து, ஆங்கு, உறு துயில் கொள்ளும்
சுதமதி-தன்னைத் துயிலிடை நீக்கி,

'இந்திர கோடணை இந் நகர்க் காண
வந்தேன்; அஞ்சல்; மணிமேகலை யான்;
ஆதிசால் முனிவன் அறவழிப்படூஉம்
ஏது முதிர்ந்தது இளங்கொடிக்கு; ஆதலின்,
விஞ்சையின் பெயர்த்து, நின் விளங்கு-இழை-தன்னை, ஓர்
வஞ்சம் இல் மணிபல்லவத்திடை வைத்தேன்;
பண்டைப் பிறப்பும் பண்புற உணர்ந்து-ஈங்கு,
இன்று ஏழ் நாளில், இந் நகர் மருங்கே,
வந்து தோன்றும், மடக்கொடி நல்லாள்;
களிப்பு மாண் செல்வக் காவல் பேர் ஊர்
ஒளித்து உரு எய்தினும், உன் திறம் ஒளியாள்;

6–10 அமளி – பஞ்சணை. பொருந்தாது – கண்ணிமை, கூடப்பெறுமல் – துயில் பெறுமல். கோல் நிலை திரிந்திடின் – செங்கோல் நெறி தவறினால். கோள் – கிரகம். மாரி – மழை. வறம் கூரும் – வறட்சி மிகும்.

11–20 தருறி–நீதி. இன்று ஆகும்–ஒழியும். தவத்திறம் பூண்டோள்– தவ நெறியை மேற்கொண்ட மணிமேகலை அவத் திறம் – அழிவு தரும் செயல் புரிதலை – காம வேட்கை கொள்ளுதலை. அவன் வயின் – அவ்வுதய குமரனுக்கு. துயில் இடை – உறக்கத்தினின்று. இந்திர கோடணை – இந்திரனுக்குரிய முழக்க மிக்க விழா. அஞ்சல்–அஞ்சாதே. ஆதிசால் முனிவன்– முதன்மை வாய்ந்த புத்த பகவன். ஏது முதிர்ந்தது – வினை

விளைவு (ஏது நிகழ்ச்சி) முற்றி நின்றது. மேகலை.

இளங்கொடி – மணி

21–27

விஞ்சை – வித்தை. வஞ்சம் – பொய்யறிவு. (மெய்யறிவு நல்கும் புத்த பீடிகை இருத்தலின் "வஞ்சமில் மணிபல்லவம்" என்றனள்.) பண்புற – நன்றாக.

இன்று – இற்றை நாளிலிருந்து. களிப்பு மாண் செல்வம் – களிப்பு மிகுதற்குரிய பெருஞ் செல்வம். ஒளித்துரு – மாறு வேடம். உன் திறம் – உன்னிடத்தில்.

ஆங்கு-அவள் இந் நகர் புகுந்த அந் நாள்,
ஈங்கு நிகழ்வன ஏதுப் பல உள;
மாதவி-தனக்கு யான் வந்த வண்ணமும்,

ஏதம் இல் நெறி மகள் எய்திய வண்ணமும்,
உரையாய், நீ; அவள் என் திறம் உணரும்—
"திரை இரும் பௌவத்துத் தெய்வம் ஒன்று உண்டு" என,
கோவலன் கூறி, இக் கொடி-இடை-தன்னை என்
நாமம் செய்த நல் நாள், நள் இருள்,
"காமன் கையறக் கடு நவை அறுக்கும்

மா பெருந் தவக்கொடி ஈன்றனை" என்றே,
நனவே போலக் கனவுஅகத்து உரைத்தேன்:
ஈங்கு இவ்வண்ணம் ஆங்கு-அவட்கு உரை' என்று,
அந்தரத்து எழுந்து-ஆங்கு, அருந் தெய்வம் போய பின்,
வெந் துயர் எய்தி, சுதமதி எழுந்து-ஆங்கு—
அகல் மனை அரங்கத்து, ஆசிரியர்-தம்மொடு,
வகை தெரி மாக்கட்கு வட்டணை காட்டி,

ஆடல் புணர்க்கும் அரங்கு இயல் மகளிரின்
கூடிய குயிலுவக் கருவி கண்-துயின்று,
பண்ணுக் கிளை பயிரும் பண்-யாழ்த் தீம் தொடை
கொளை வல் ஆயமோடு இசை கூட்டுண்டு,
வளை சேர் செங் கை மெல் விரல் உதைத்த
வெம்மை வெய்து உருது, தன்மையில் திரியவும்;
பண்பு இல் காதலன் பரத்தமை நோனது,

28–30 நிகழ்வன ஏது – நிகழ்வனவாக உள்ள அறிகுறிகள்.

31–40 ஏதம் இல் நெறி – குற்ற மற்ற தவநெறி. உரையாய் – உரைப்பாயாக. பௌவம் – கடல். கொடி யிடை தன்னை மணிமேகலையை. நாமம் செய்த – பெயரிட்ட. நள்ளிருள் – மிக்க இருளுள்ள இரவில். நவை – குற்றம். நனவு – விழிப்பு.

41-50 அரங்கம் – நடன மேடை. ஆசிரியர் – நாடகம் பயிற்றுவோர். வகை – நடனக் கூறுபாடுகள். வட்டணை – கமல வட்டணை என்னும் அபிநயம். ஆடல் புணர்க்கும் – நடனம் புரிகின்ற. மகளிரின் – மகளிரைப் போன்று கூடிய குயிலுவக் கருவி – பலவும்கூடி இசைக்கப்படும் இசைக்கருவிகள். கண் துயின்று – கண் ஒடுங்கி – ஒலி அடங்கி. பண்ணுக் கிளை - பண்ணின் வகைகள். பயிரும் – இசைக்கின்ற தீம் தொடை – இனிய நரம்புகள். கொளை – பாட்டு. ஆயம் – குழாம். கூட்டுண்டு – சேர்ந்து அனுபவித்து வெம்மை வெய்துருது – அழுத்தம் நன்கு, உறுதலின்றி, தன்மையில் திரிய – தம் இயல்பினில் வேறுபட. [துயில் உறுவதால், யாழிசைக்கும் மகளிர், தம் விரலால் யாழ் நரம்புகளை நன்கு தெறித்திலர்; எனவே யாழ் நரம்புகள் தம் இசையால் வேறுபட்டன என்க.] பரத்தமை – பரத்தையோடு கூடும் தன்மை. நோனது – பொறுமல்.

உண் கண் சிவந்து-ஆங்கு, ஒல்கு கொடி போன்று,
தெருட்டவும் தெருளாது, ஊடலொடு துயில்வோர்,
விரைப் பூம் பள்ளி வீழ் துணை தழுவவும்;
தளர் நடை ஆயமொடு தங்காது ஓடி,
விளையாடு சிறு தேர் ஈர்த்து, மெய் வருந்தி,
அமளித் துஞ்சும், ஐம்படைத் தாலி,
குதலைச் செவ்வாய், குறு நடைப் புதல்வர்க்கு,
காவல் பெண்டிர் கடிப்பகை எறிந்து,
தூபம் காட்டி, தூங்கு துயில் வதியவும்;
இறை உறை புறவும், நிறை நீர்ப் புள்ளும்,

கா உறை பறவையும், நா உள் அழுந்தி,
விழவுக் களி அடங்கி, முழவுக் கண் துயின்று,
பழ விறல் மூதூர் பாயல் கொள் நடு நாள்,
கோமகன் கோயில், குறு நீர்க் கன்னலின்
யாமம் கொள்பவர் ஏத்து ஒலி அரவமும்;
உறையுள் நின்று ஒடுங்கிய, உண்ணு உயக்கத்து,
நிறை அழி யானை நெடுங் கூ விளியும்;
தேர் வழங்கு தெருவும், சிற்றிடை முடுக்கரும்,
ஊர் காப்பாளர் எறி-துடி ஓதையும்
முழங்கு நீர் முன்-துறைக் கலம் புணர் கம்மியர்
துழந்து அடு கள்ளின் தோப்பி உண்டு, அயர்ந்து
பழஞ் செருக்கு உற்ற அனந்தர்ப் பாணியும்;
அர வாய்க் கடிப்பகை, ஐயவிக் கடிப்பகை,
விரவிய மகளிர் ஏந்திய தூமத்து,
புதல்வரைப் பயந்த புனிறு தீர் கயக்கம்

51–60 உண்கண்–மையுண்ட கண். ஒல்கு கொடி–தளர்ந்து அசையும் கொடி. தெருட்ட–தெளிவிக்க. விரை–நறுமணம். வீழ்துணை–விரும்பும் கணவர். ஈர்த்து – இழுத்து. காவற்பெண்டிர் – செவிலியர். கடிப்பகை – பேய்க்குப் பகையாகிய வெண் சிறு கடுகு. வதிய – தங்க. இறை – வீட்டின் இறப்பு.

61–70 கா – சோலை. விறல் மூதூர் – வெற்றிச் சிறப்புடைய நகரம். நடு நாள்–நள்ளிரவு. குறு நீர்க்கன்னலின்–நாழிகை வட்டிலினால், யாமம் கொள்பவர் – யாமங்களை அறிந்து கொள்பவர். ஏத்து – துதி. உறையுள் – கட்டும் இடத்திலே. ஒடுங்கிய – வாடிய. உயக்கம் – வருத்தம். நிறை – அறிவு கலங்காது நிற்கும் நிலை. கூவிளி – கூக்குரல். சிற்றிடை முடுக்கர்–சிறிய இடத்தையுடைய முடுக்குத் தெருக்கள். துடி ஓதை – துடி என்னும் வாத்தியத்தின் ஓசை. கலம்புணர் கம்மியர்–கப்பலில் தொழில் புரிவோர்.

71–75 துழந்து – வருந்தி. கள்ளின் தோப்பி – தோப்பிக் கள்ளினை–அரிசிக் கள்ளினை. பழஞ்செருக்கு–முதிர்ந்த களிப்பு. அனந்தர்ப் பாணி – களிப்பினால் பாடும் பாட்டு. அரவாய்–அரம்போலும் வாயை உடைய வேப்பிலை. ஐயவி–வெண் சிறு கடுகு புனிறு–ஈன்ற அணிமைக் காலம். கயக்கம் – வாட்டம்.

தீர் வினை மகளிர் குளன் ஆடு அரவமும்;
வலித்த நெஞ்சின் ஆடவர் இன்றியும்,
புலிக் கணத்து அன்னோர் பூத சதுக்கத்து,
'கொடித் தேர் வேந்தன் கொற்றம் கொள்க' என,
இடிக் குரல் முழக்கத்து, இடும் பலி ஓதையும்;
ஈற்று இளம் பெண்டிர், ஆற்றாப் பாலகர்,
கடுஞ் சூல் மகளிர், நெடும் புண் உற்றோர்,
தம் துயர் கெடுக்கும் மந்திர-மாக்கள்,
'மன்றப் பேய்மகள் வந்து கைக்கொள்க' என,
நின்று எறி பலியின் நெடுங் குரல் ஓதையும்;
பல் வேறு ஓதையும்; பரந்து ஒருங்கு இசைப்ப—
கேட்டு, உளம் கலங்கி, ஊட்டு இருள் அழுவத்து,
முருந்து ஏர் இள-நகை, நீங்கிப் பூம்பொழில்;
திருந்து எயில் குடபால் சிறு புழை போகி;
மிக்க மா தெய்வம் வியந்து எடுத்து உரைத்த
சக்கரவாளக் கோட்டத்து-ஆங்கண்,
பலர் புகத் திறந்த பகு வாய் வாயில்
உலக அறவியின் ஒரு புடை இருத்தலும் —
கந்து உடை நெடு நிலைக் காரணம் காட்டிய

அந்தில் எழுதிய அற்புதப் பாவை,
மைத் தடங் கண்ணாள் மயங்கினள் வெருவ,
திப்பியம் உரைக்கும் தெய்வக் கிளவியின்,
'இரவிவன்மன் ஒரு பெரு மகளே;

76-80 குளன்–குளம் வலித்த நெஞ்சின் பகைமை பொருந்திய மனத்தினை உடைய. ஆடவர் – வீரர். பூத சதுக்கம் - பூதம் வாழும் நாற்சந்தியிடம். முழக்கத்து - முழக்கத்தோடு கூடி.

81-90 ஈற்றிளம் பெண்டிர் - புதல்வரைப் பயந்த இளம் பெண்கள். கடுஞ்சூல் - முதலாவது கருப்பம். ஊட்டு இருள் அழுவத்து - செயற்கையால் கருமையூட்டப் பட்டாற் போன்றுள்ள இருளின் பரப்பினில். (ஊட்டிருள் என்றது தற்குறிப்பேற்ற வணி) முருந்து ஏர் இள நகை - இறகின் குருத்தினைப் போல் அழகிய இளம் பற்களையுடையவள் மணிமேகலை. குடபால் - மேல்புறம். புழை – நுழைந்து செல்லுதற்குரிய சிறு வாயில்.

91–99 பகுவாய் – விரிந்த இடத்தை உடைய. உலக அறவி – ஊர் அம்பலம். புடை – பக்கம் (நெடு நிலை உடைக் கந்து எனக் கூட்டுக.) காரணம் பழவினை. பழவினை யாவற்றுக்கும் காரணம் ஆதலால் 'காரணம்' எனப்பட்டது காட்டிய – காட்ட அந்தில் – அங்கு; அசை நிலையும் ஆம் மைத்தடங் கண்ணாள் – சுதமதி. வெருவ – அஞ்ச. திப்பியம் உரைக்கும் – அற்புத அறிவினால் பேசும். தெய்வக் கிளவியின் – தெய்வத்தின் பேச்சினால். (தெய்வக் கிளவியின் திப்பியம் உரைக்கும் என இயையும்.) இரவி வன்மன் – ஓரரசன்; இவன் முற்பிறப்பினில் சுதமதிக்குத் தந்தை

58

துரகத் தானைத் துச்சயன் தேவி!
தயங்கு இணர்க் கோதைத் தாரை சாவுற,
மயங்கி யானை முன், மன் உயிர் நீத்தோய்!
காராளர் சண்பையில் கௌசிகன் மகளே!

மாருதவேகனோடு இந் நகர் புகுந்து,
தாரை தவ்வை-தன்னொடு கூடிய
வீரை ஆகிய சுதமதி! கேளாய்;
இன்று ஏழ்நாளில், இடை இருள் யாமத்து,
தன் பிறப்பு-அதனொடு நின் பிறப்பு உணர்ந்து, ஈங்கு,
இலக்குமி ஆகிய நினக்கு இளையாள் வரும்;
அஞ்சல்' என்று உரைத்தது. அவ்வுரை கேட்டு,
நெஞ்சம் நடுக்குறூஉம் நேர் இழை நல்லாள்—
காவலாளர் கண் துயில்கொள்ள,
தூ மென் சேக்கைத் துயில் கண் விழிப்ப;
வலம் புரிச் சங்கம் வறிது எழுந்து ஆர்ப்ப,
புலம் புரிச் சங்கம் பொருளொடு முழங்க;
புகர் முக வாரணம் நெடுங் கூவிளிப்ப,
பொறி மயிர் வாரணம் குறுங் கூ விளிப்ப;
பணை நிலைப் புரவி பல எழுந்து ஆல,
பணை நிலைப் புள்ளும் பல எழுந்து ஆல;
பூம்பொழில் ஆர்கைப் புள் ஒலி சிறப்ப,
பூங்கொடியார் கைப் புள் ஒலி சிறப்ப;

99–110 துரகம் - குதிரை. துச்சயன் - ஓரரசன் தயங்கிணர் - விளங்கும் பூவிணர்கள் · தாரை - முற்பிறப்பினில் சுதமதிக்குத் தமக்கை. மயங்கி - கலங்கி. முன் - முன்னே சென்று.

நீத்தோய்! – நீக்கியவளே!. காராளர் – ஒருவகைப் பிரிவினர். சண்பை – ஒரு நகரம். கௌசிகன் – எய்திய பிறவியில் சுதமதியின் தந்தை. தாரை தவ்வை – தாரையாகிய தமக்கை. வீரை ஆகிய சுதமதி – முற்பிறப்பில் வீரை என்னும் பெயருடன் விளங்கிய சுதமதி. இலக்குமி ஆகிய நினக்கு இளையாள் – முற்பிறப்பில் இலக்குமி என்னும் பெயரெய்திய நின் தங்கையாகிய மணிமேகலை. நல்லாள் – சுதமதி.

111–120 தூமென் சேக்கை – தூய மெல்லிய படுக்கை. வறிது – பொருளின்றி. புலம் புரிச் சங்கம் – அறிவைப் பேணும் புலவர் குழாம். புகர்முக வாரணம் – செந்நிறத்தினை நெற்றியில் உடைய யானைகள். பொறி – புள்ளி. வாரணம் – கோழிச் சேவல்கள். கூவிளிப்ப – கூப்பிட. பணை – குதிரை கட்டுமிடம். ஆல – ஆட. பணை – பண்ணை – மருத நிலம். ஆல – ஒலிக்க. ஆர்கை – நிறைதல். பூக்கொடியார் – பூக்கொடி போன்ற மகளிர். கைப் புள் – கைவளைகள்.

கடவுள் பீடிகைப் பூப் பலி கடைகொள,
கலம் பகர் பீடிகைப் பூப் பலி கடைகொள;
குயிலுவர் கடைதொறும் பண்-இயம் பரந்து எழ,
கொடுப்போர் கடைதொறும் பண்ணியம் பரந்து எழ;
ஊர் துயில் எடுப்ப, உரவுநீர் அழுவத்து,
கார் இருள் சீத்து, கதிரவன் முளைத்தலும்—
ஏ உறு மஞ்ஞையின் இனைந்து, அடிவருந்த,
மா நகர் வீதி மருங்கில் போகி,
போய கங்குலில் புகுந்ததை எல்லாம்
மாதவி-தனக்கு வழு இன்று உரைத்தலும்—
நல் மணி இழந்த நாகம் போன்று, அவள்
தன் மகள் வாராத் தனித் துயர் உழப்ப,
இன் உயிர் இழந்த யாக்கையின் இருந்தனள்,
துன்னியது உரைத்த சுதமதி-தான்-என்.

121–130 பூப்பலி – பொலிவுடைய பலி. கடைகொள – முடிவுற, கலம் பகர் பீடிகை – அணிகலன்களை விற்கும் கடைத் தெருக்களில். பூப்பலி – பூவாகிய அருச்சனையை. கடை – கடைகள். குயிலுவர் – தோற் கருவி வாசித்தலில் வல்லுநர். கடை தொறும் – வாயில்தோறும். கொடுப்போர் – வள்ளியோர். பண்ணியம் - பண்டங்கள். எடுப்ப – எழுப்ப. உரவு நீர் அழுவத்து – கடல் சூழ்ந்த நிலப் பரப்பில். சீத்து – போக்கி. ஏ உறும் – அம்பினால் எய்யப் பெற்ற. இனைந்து – துயருற்று.

131–134 நல் மணி – நல்லதாகிய ரத்தினம். அவள் – மாதவி. தனித் துயர் – மிக்க துயரம். உழப்ப – அனுபவிக்க. துன்னியது – உற்ற செய்தியை. தான் – அசை நிலை.

8. மணிபல்லவத்துத் துயருற்ற காதை

மணிபல்லவம் கடல்சூழ்ந்த எழில்மிக்க தீவு: அதன் கடற்கரையில், அலைகளோடு பவளக் கொடிகளும் உடன் புரளும்;

சங்குகள் ஊர்ந்து செல்வது வெண்புலத்தில் ஏர் உழும் காட்சி போலும்; அவை ஊர்ந்து சென்ற நெறியில் முத்துக்கள் சிந்திக் கிடப்பன, அவ் உழுசாலில் விளைந்த விளைபொருள் எனத் தோன்றும். எனவே முத்து விளை கழனி என்று சொல்லத்தக்க மாண்புடையது அக்கடற்கரை. அதனை அடுத்து வெண்ணிலா அனைய மணற்குன்றுகள் பல உள. அவற்றின் அருகில் பன்மலர் பொலிந்த ஓர் இலஞ்சியின் கரையில் வெயில்நுழையாமல் அடர்ந்த

பன் மரப் பந்தரின்கண் வெண்மணல்மீது மலர்களாலாய பள்ளியில் துயின்ற மணிமேகலை கண்விழித்தனள். அவள், அங்குக் காலை ஞாயிறு கடலருகினில் தோன்றுவதையும், கண்டறியாத பொருள்களையும்கண்டு, தான் வேற்றிடம்சேர்ந்தமையை உணர்ந்தாள்; கலக்கமுற்றுச் சுதமதியை நாற்புறமும் தேடி அழைத்தாள்; தன் தந்தையை எண்ணி அரற்றி அழுதாள; அந்நிலையில் அங்குள்ள புத்தபீடிகையைக் கண்டாள்.

ஈங்கு இவள் இன்னணம் ஆக—இருங் கடல்
வாங்கு திரை உடுத்த மணிபல்லவத்திடை,
தத்து நீர் அடைகரை, சங்கு உழு தொடுப்பின்
முத்து விளை கழனி, முரி செம் பவளமொடு
விரை-மரம் உருட்டும் திரை உலாப் பரப்பின்,
ஞாழல் ஓங்கிய தாழ் கண் அசும்பின்,
ஆம்பலும் குவளையும் தாம் புணர்ந்து மயங்கி,
வண்டு உண மலர்ந்த குண்டு நீர் இலஞ்சி;
முடக் கால் புன்னையும், மடற் பூந் தாழையும்,
வெயில் வரவு ஒழித்த பயில் பூம் பந்தர்;
அறல் விளங்கு நிலா மணல் நறு மலர்ப் பள்ளித்
துஞ்சு துயில் எழூஉம் அம் சில்-ஓதி,
காதல் சுற்றம் மறந்து கடைகொள,
வேறு இடத்துப் பிறந்த உயிரே போன்று,
பண்டு அறி கிளையொடு பதியும் காணாள்;
கண்டு அறியாதன கண்ணில் காணூ,
நீல மாக் கடல் நெட்டிடை அன்றியும்,
காலை ஞாயிறு கதிர் விரித்து முளைப்ப—
'உவவன மருங்கினில் ஓர் இடம்கொல், இது!
சுதமதி ஒளித்தாய்? துயரம் செய்தனை!

1–10 இன்னணம் - இவ்வண்ணம். வாங்குதிரை - வளைகின்ற அலைகள். (வாங்குதிரை இருங்கடல் என்க.) உடுத்த - ஆடையாக உடைய - சூழப்பெற்ற. அடைகரை - கரைச் சார்பினில். தொடுப்பு - விளாக் கொண்டு உழும் சால். முரிதல் - சிதைதல். விரை - நறுமணம். (அடைகரை ஆகிய கழனியில் என்க.) ஞாழல் - புலிநகக்கொன்றை மரம். தாழ்கண் அசும்பின் - ஆழமாகிய இடத்தில் சேற்றினை உடைய. குண்டுநீர் - ஆழமாகிய நீர். இலஞ்சி - பொய்கை. முடக்கால் - வளைவாகிய அடியினை உடைய. பயில் - செறிவு.

11–20 அறல் - நீர் ஒழுகுவதால் மணலில் உளதாகும் வரைகள். நிலா மணல் - நிலவினை ஒத்த மணல். அம் சில் ஓதி - மணிமேகலை; ஓதி - கூந்தல். கடைகொள - முடிவுற்று; எச்சத் திரிபு. கிளை - உறவினர். பதி - ஊர். கெட்டிடை - சேய்மையிடம்.

56

நனவோ, கனவோ? என்பதை அறியேன்!
மனம் நடுக்குறூஉம்; மாற்றம் தாராய்!
வல் இருள் கழிந்தது; மாதவி மயங்கும்;
எல்-வளை! வாராய்; விட்டு அகன்றனையோ?

விஞ்சையின் தோன்றிய விளங்கு இழை மடவாள்
வஞ்சம் செய்தனள்கொல்லோ ? அறியேன் !
ஒரு தனி அஞ்சுவென் ; திருவே, வா !' என—
திரை தவழ் பறவையும், விரி சிறைப் பறவையும்,
எழுந்து வீழ் சில்லையும், ஒடுங்கு சிறை முழுவலும் ;
அன்னச் சேவல் அரசன் ஆக,
பல் நிறப் புள் இனம் பரந்து ஒருங்கு ஈண்டி ;
பாசறை மன்னர் பாடி போல,
வீசு நீர்ப் பரப்பின் எதிர் எதிர் இருக்கும்
துறையும், துறை சூழ் நெடு மணல் குன்றமும்,
யாங்கணும் திரிவோள்—பாங்கு இனம் காணாள்,
குரல்-தலைக் கூந்தல் குலைந்து பின் வீழ,
அரற்றினள், கூஉய் ; அழுதனள், ஏங்கி ;
வீழ் துயர் எய்திய விழுமக் கிளவியின்,
தாழ் துயர் உறுவோள், தந்தையை உள்ளி,
'எம் இதில் படுத்தும் வெவ் வினை உருப்ப,
கோல் தொடி மாதரொடு வேற்று நாடு அடைந்து,
வை வாள் உழந்த மணிப் பூண் அகலத்து
ஐயாவோ !' என்று அழுவோள் முன்னர்—
விரிந்து இலங்கு அவிர் ஒளி சிறந்து, கதிர் பரப்பி,
உரை பெறு மும் முழம் நிலமிசை ஓங்கி,
திசைதொறும் ஒன்பான் முழ நிலம் அகன்று,

21-30 மாற்றம் - மறுமொழி. வல்லிருள் - இரவு. எல் - ஒளி; எல்வளை! - சுதமதி!. விஞ்சை - வித்தையினால். மடவாள் - (உபவனத்தில் தோன்றிய) முதியவள். ஒருதனி - மிக்க தனிமை. சில்லை, முழுவல் என்பன ஒருசார் நீர்ப்பறவைகள்.

31-40 ஒருங்கு ஈண்டி - ஒன்றித்திரண்டு. பாடி - பாசறை. வீசுநீர் - கடற்கரை. குரல் தலைக் கூந்தல் - பூங்கொத்தினைத் தன்னகத்தே கொண்ட கூந்தல். அரற்றினள் கூஉய் - கதறி ஓலமிட்டு. வீழ்துயர் எய்திய - மிக்க வருத்தமுறுதலால் தோன்றிய. விழுமக் கிளவி - சோகமொழி. தாழ்துயர் - ஆழ்ந்த வருத்தம். எம் இதில் படுத்தும் - எம்மை இத்துன்பத்தில் சேர்க்கும். வெவ் வினை - கொடுவினை. உருப்ப - சினப்ப.

41-46 கோல் - திரட்சி. மாதர் - கண்ணகி. வை - கூர்மை. உழந்த - வருந்திய. அகலம் - மார்பு. அவிர் ஒளி - மிக்க ஒளி. விரிந்து - விரிய. ஒன்பான் முழம் - ஒன்பது முழம்.

57

விதி மாண்

ஆடியின் வட்டம் குயின்று,
பதும சதுரம் மீமிசை
விளங்கி,

'அறவோர்க்கு அமைந்த

ஆசனம்' என்றே,
நறு மலர் அல்லது பிற மரம்
சொரியாது ;
பறவையும் முதிர் சிறை
பாங்கு சென்று அதிராது ;
தேவர் கோன் இட்ட மா
மணிப் பீடிகை,
பிறப்பு விளங்கு அவிர்
ஒளி அறத்தகை ஆசனம்—
கீழ் நில மருங்கின் நாக
நாடு ஆளும்
இருவர் மன்னவர் ஒரு வழித்
தோன்றி, 'எமது, ஈது'
என்றே எடுக்கல் ஆற்ருர்,

தம பெரும் பற்று நீங்கலும் நீங்கார்,
செங் கண் சிவந்து, நெஞ்சு புகையுயிர்த்து,

தம் பெருஞ் சேனையொடு,
வெஞ் சமம் புரி நாள்,

'இருஞ் செரு ஒழிமின்; எமது, ஈது' என்றே
பெருந் தவ முனிவன் இருந்து அறம் உரைக்கும்,

பொரு அறு சிறப்பின்
புரையோர் ஏத்தும்

தரும பீடிகை—தோன்றியது ஆங்கு-என்.

47–50 விதி மாண் - சிற்ப விதி மாண ('மாண்' என்னும் முதனிலை, வரிப்புனை பந்து என்புழி 'வரி' என்னும் முதனிலை போல வினையெச்சமாய் நின்றது.) ஆடியின் - பளிங்கினுல். குயின் று -

அமைந்து. பதும சதுரம் - தாமரை மலரை உடைய சதுர வடிவம். மீமிசை - உச்சியில். அறவோன் - புத்தன். பிற - ஏனைய பூக்களை. சொரியாது - சொரியாதபடி;

51–63 அதிராது - ஒலியாதபடி. (சொரியாது அதிராது என்பன எச்சரித் திரிபாய்நின்று இட்ட என்னும் பிறவினை கொண்டு முடிந்தன.) அறத்தகை - புத்தன். ஒருவழி - ஓரிடத்தில். சமம் - போர். புரையோர் - பெரியோர். தரும பீடிகை - புத்த பீடிகை (புத்தன் அதன்மீதமர்ந்து தருமம் உணர்த்தலால் அது தரும பீடிகை எனப்பட்டது. மாமணிப் பீடிகையும் அறத்தகை ஆசனமும் ஆகிய தரும பீடிகை என்க.)

9. பீடிகை கண்டு பிறப்புணர்ந்த காதை

புத்த பீடிகையைக் கண்ட மணிமேகலையின் கைகள் அவள் அறியாமலே தலைமேல் குவிந்தன. அவள் கண்கள் உவகையால் கலங்கி நீர் சொரிந்தன. பத்தி மிகுந்து அப் பீடிகையை மும்முறை வலம் வந்து வணங்கிய மணிமேகலை தன் பழம் பிறப்பின் நிகழ்ச்சிகள் யாவற்றையும் தெள்ளிதின் உணர்ந்தனள். முற்பிறப்பினில் தனக்கு வருவதுரைத்த பிரமதரும முனிவனை முன்னிலையாக்கிப் பின் வருமாறு கூறினாள்:— 'பிரமதரும! நீ, காந்தார நாட்டில் பூருவதேயத்தை ஆண்ட அத்திபதியிடம்

அறங்கூற அணுகிய ஞான்று, அவனிடம் "நின்நாடு உட்பட நாகநாட்டின் நானூறு யோசனைப் பரப்பாய நிலம் ஏழு நாளில் நில நடுக்கத்தால் பெரும் பாதலம் புகும்; ஆதலால் மாவும் மாக்களும் உடன் கொண்டு வேற்றிடம் செல்க" என்று கூறினாய். அவனும் அங்ஙனமே புரிந்து வடக்கு நோக்கிப் புறப்பட்டுக் காயங்கரை என்னும் ஆற்றின் கரையில் பாசறை அமைத்திருந்தான். நீ கூறிய படியே ஏழாம் நாள் நில நடுக்கம் உற்று அந்நிலப்பரப்புப் பாதாளத்துற்றமையை அரசனும் மக்களும் அறிந்து நின்னடி பணிந்தனராக, நீ அவர் எல்லோர்க்கும் அருளறம் உரைத்தனை. நின்னை இராகுலனுடன் யான் பணிந்து நிற்ப, நீ என்னிடம் "இராகுலன் பதினாறு நாளில் திட்டிவிடத்தால் இறப்பான்; நீ அவனுடலுடன் வேவாய், பின் காவிரிப்பூம்பட்டினத்திற் பிறப்பெய்துவாய்; நினக்கு ஒரு துன்பமுற்ற ஞான்று மணிமேகலா தெய்வத்தால் ஒரு தீவிற் சேர்க்கப் பெறுவாய்; அங்குப் புத்த பீடிகையைத் தரிசித்துப் பழம் பிறப்பறிந்து என் உரையும் தெளிவாய்" என்றனை. என் காதலன் எய்தும் பிறப்பினையும் கூறுமாறு யான் நின்னை வினவினேன். நீ "மணிமேகலா தெய்வம் உணர்த்தும்" என்றனை. அத் தெய்வம் வரவில்லையே!' என்று கூறி ஏங்கி அழுதாள்.

ஆங்கு, அது கண்ட ஆய்-இழை அறியாள்;
காந்தள் அம் செங் கை தலை மேல் குவிந்தன;
தலைமேல் குவிந்த கையள் செங் கண்,
முலை மேல், கலுழ்ந்து, முத்தத் திரள் உகுத்து, அதின்
இடமுறை, மும் முறை, வலமுறை வாரா,
கொடி மின் முகிலொடு நிலம் சேர்ந்தென்ன,
இறு நுசுப்பு அலச, வெறு நிலம் சேர்ந்து-ஆங்கு
எழுவோள் பிறப்பு வழு இன்று உணர்ந்து—
'தொழு தகை மாதவ! துணி பொருள் உணர்ந்தோய்!
காயங்கரையில் நீ உரைத்ததை எல்லாம்

1–10 ஆயிழை - மணிமேகலை. அறியாள் - அறியாளாக. காந்தள் - காந்தள் மலர். குவிந்த கையள் - கூப்பிய கையை உடையவளாய். கலுழ்ந்து - (உவகையால்) கலங்கி, முத்தத் திரள் -

(கண்ணீராகிய) திரண்ட முத்துக்களை. உகுத்து - சொரிய; எச்சத் திரிபு. அதனிடம் - அப்பீடிகையின் இடப்புறத் திலிருந்து. வலமுறை வாரா - வலமுறையாக வந்து. இறும் நுசுப்பு - இறுவது போலும் (வளையும்) இடை. அலச - அலைய. வழு இன்றி - தவறு இல்லாமல்; எச்சத்திரிபு. தொழு தகை - தொழுதற்குரிய பெருமை. துணிபொருள் - முடிவாயபொருள் - சித்தாந்தம். காயங்கரை - ஓர் ஆறு. உரைத்ததை - கூறிய பொருள்; 'ஐ' சாரியை.

59

வாயே ஆகுதல் மயக்கு அற உணர்ந்தேன்;
காந்தாரம் என்னும் கழி பெரு நாட்டுப்
பூருவ தேயம் பொறை கெட வாழும்
அத்திபதி எனும் அரசு ஆள் வேந்தன்
மைத்துனன் ஆகிய பிரமதருமன்!
ஆங்கு-அவன்-தன்பால் அணைந்து, அறன் உரைப்போய்,
"தீம் கனி நாவல் ஓங்கும் இத் தீவிடை,
இன்று ஏழ் நாளில், இரு நில மாக்கள்
நின்று நடுக்கு எய்த, நீள் நில வேந்தே!
பூமி நடுக்குறூஉம் போழ்தத்து, இந் நகர்,
நாக நல் நாட்டு நானூறு யோசனை,
வியன் பாதலத்து வீழ்ந்து கேடு எய்தும்;
இதன்பால் ஒழிக" என—இரு நில வேந்தனும்,
மா பெரும் பேர் ஊர் மக்கட்கு எல்லாம்,
"ஆவும் மாவும் கொண்டு கழிக" என்றே,
பறையின் சாற்றி, நிறை-அருந் தானையோடு
இடவயம் என்னும் இரும் பதி நீங்கி,
வட வயின் அவந்தி மா நகர்ச் செல்வோன்,
காயங்கரை எனும் பேர் யாற்று அடைகரை,
சேய் உயர் பூம்பொழில், பாடி செய்து இருப்ப—
எம் கோன் நீ ஆங்கு உரைத்த அந் நாளிடைத்
தங்காது அந் நகர் வீழ்ந்து கேடு எய்தலும்,
மருள் அறு புலவ! நின் மலர் அடி-அதனை,
அரசொடு மக்கள் எல்லாம் ஈண்டிச்
சூழ்ந்தனர், வணங்கித் தாழ்ந்து பல ஏத்திய,
அருளறம் பூண்ட ஒரு பேர் இன்பத்து
உலகு துயர் கெடுப்ப,
அருளிய அந் நாள்—

அரவக் கடல் ஒலி அசோதரம் ஆளும்
இரவிவன்மன் ஒரு பெருந்தேவி
அலத்தகச் சீறடி அமுதபதி வயிற்று,

11–20 வாயே - மெய்யே. கழி - மிகுதி. பூருவதேயம் - ஒரு நாடு. பொறை - (பூமியின்) பாரம் - பாவம். அவன் தன்பால் - அத்தி பதியிடம். இன்று - இந்நாளிலிருந்து. நடுக்குறாஉம் - நடுங்கும்.
21–30 வியன் - பெருமை - சேண்மை. இதன் பால் - இதன் பகுதியை. ஒழிக - நீங்குக. கொண்டு - உடன் கொண்டு. கழிக - அகல்க. நிறை - நிறுத்துதல். தானை - சேனை. வடவயின் - வடக்கின் கண். சேய்உயர் - மிக உயர்ந்த. பாடி - பாசறை.
31–40 நாளிடை - நாளில். தங்காது - நிலையாமல். மருள் - மயக்க அறிவு. புலவ! - தெளிந்த அறிவுடையோய்! ஈண்டி - குழுமி. தாழ்ந்து - விரும்பி. ஏத்திய - துதிக்க. (ஏத்திய என்னும் வினையெச்சம் அருளிய என்பதனோடு முடியும்.) அருள் - இரக்கமாகிய. பூண்ட - பூணுதலால் உளதாகும். பேர் இன்பத்து - பெரிய இன்பத்தினை. உலகு - உயிர்களுடைய. அருளிய - அருளால் கூறிய. அசோதரம் - ஒரு நகரம். அலத்தகம் - அரக்கு.

இலக்குமி என்னும் பெயர் பெற்றுப் பிறந்தேன்;
அத்திபதி எனும் அரசன் பெருந்தேவி,
சித்திபுரம் ஆளும் சீதரன் திருமகள்,
நீலபதி எனும் நேர்-இழை வயிற்றில்,

காலை ஞாயிற்றுக் கதிர்
போல் தோன்றிய
இராகுலன்-தனக்குப்
புக்கேன்; அவனொடு

பராவரும் மரபின் நின்
பாதம் பணிதலும்,
“எட்டு-இரு நாளில் இவ்
இராகுலன்-தன்னைத்

திட்டிவிடம் உணும்; செல்
உயிர் போனல்,
தீ-அழல் அவனெடு
சேயிழை! மூழ்குவை;
ஏது-நிகழ்ச்சி
ஈங்கு இன்று; ஆதலின்,
கவேர கன்னிப்
பெயரொடு விளங்கிய

தவாக் களி மூதூர்ச் சென்று, பிறப்பு எய்துதி:
அலரி-இழை! நினக்கு ஓர் அருந் துயர் வரு நாள்,
மணிமேகலா தெய்வம் வந்து தோன்றி,
அன்று அப் பதியில் ஆர் இருள் எடுத்து,
தென் திசை மருங்கில் ஓர் தீவிடை வைத்தலும்,
வேக வெந் திறல் நாக நாட்டு அரசர்
சின மாசு ஒழித்து, மன மாசு தீர்த்து-ஆங்கு,

அறச் செவி திறந்து,
மறச் செவி அடைத்து,

பிறவிப் பிணி மருத்துவன் இருந்து அறம் உரைக்கும்
திருந்து ஒளி ஆசனம், சென்று, கைதொழுதி;
அன்றைப் பகலே உன் பிறப்பு உணர்ந்து, ஈங்கு
இன்று யான் உரைத்த உரை தெளிவாய்" என,
சா துயர் கேட்டுத் தளர்ந்து உகு மனத்தேன்,

41–50 நேர் இழை - ஒத்த அணிகலன் அணிந்தவள் - மங்கை. புக்கேன் - வாழ்க்கைப்பட்டேன். பரவரும் மரபின் - துதித்தற்கரிய இயல்பினை உடைய. திட்டிவிடம் - ஒருவகைப் பாம்பு. செல்உயிர் - வினையின் வழியே கதிக்கட் செல்வதாய உயிர். சேயிழை! - இலக்குமி!

51–60 ஏது நிகழ்சி - ஊழின் எதிர்ப்பாடு. ஈங்கு - இந்நாட்டில். கவேரகன்னி - காவிரி. (காவிரிப் பெயர் என்பார், கவேர கன்னிப் பெயர் என்றார்.) தவா - கெடாத. எய்துதி - அடைவாய். ஆரிருள் - மிக்க இருள். வேகம் - சினத்தின் விரைவு. சினம் மாசு - சினமாகிய குற்றம். அறச் செவி திறந்து - அற உபதேசம் செய்து. மறச் செவி அடைத்து - பாவ மொழிகளைச் செவிகள் கேளாமற் செய்து.

61–65 பிறவிப்பிணி மருத்துவன் – புத்தன். தொழுதி - வணங்குவாய். சா துயர் - சாதலாகிய துன்பச் செய்தியை. உகும் - உடைந்து சோரும்.

"காதலன் பிறப்பும் காட்டாயோ?" என,
"ஆங்கு உனைக் கொணர்ந்த அரும் பெருந் தெய்வம்
பாங்கில் தோன்றி, 'பைந்தொடி! கணவனை
ஈங்கு-இவன்' என்னும்" என்று எடுத்து ஓதினை;
ஆங்கு அத் தெய்வதம் வாராதோ?' என,
ஏங்கினள் அழூஉம், இளங்கொடி-தான்-என்.

66–70 தெய்வதம் - தெய்வம். பாங்கில் - அருகில். என்னும் - என்று கூறும். வாராதோ! - வரவில்லையே!

10. மந்திரம் கொடுத்த காதை.

மணிமேகலை புத்தபீடிகையைக் கண்டு தன் பழம் பிறப்பறிந்தமையை எண்ணி மகிழ்ந்த மணிமேகலா தெய்வம், வானிலிருந்திறங்கி மணிமேகலையின் காதிற் படும்வண்ணம் புத்தபீடிகையைத் துதித்தது. துதிப்பது மணிமேகலா தெய்வமென்றுணர்த மணிமேகலை அதனை அடிவணங்கி 'நின் திருவரு வருளால் என் பிறப் புணர்ந்தேன்; என் கணவன் யாண்டுளன்' என்று வினவ, அத்தெய்வம் கூறிற்று:— 'இலக்குமி! ஒருநாள், நீயும் இராகுலனும் தனித்திருந்தபோது, உன் ஊடலைத் தீர்க்க அவன் உன் காலில் வீழ்ந்து இரந்தனன். அந்நிலையில் சாதுசக்கரமுனிவன் அங்கு விசும்பின் வழியே வந்தான். நீ மனங்கலங்கி அவனை வணங்கினாய். இராகுலன் "வந்தோன் யார்" என அவனை வெகுண்டுரைத்தனன். நீ அவனை வாயடக்கி

முனிவனை வணங்குமாறு உணர்த்த, அவனும் வணங்கினன். பின் அம்முனிவனுக்கு உணவும் நீரும் அளித்து வழிபட்டனை. அவ் அறம் உன் பிறப்பறுத்திடும். இராகுலன் உதயகுமரனாகத் தோன்றினன். உன் உள்ளம் பண்டைத் தொடர்பால் அவன்பால் ஓடிற்று. அதனை நீங்கி நீ நன்னெறிப் படர்தற் பொருட்டுப் புத்த பீடிகையைக் கண்டு பழம்பிறப்புணரும் வண்ணம் உன்னை யான் இங்குக் கொணர்ந்தேன். பழம் பிறப்பினில் உன் தமக்கையராகிய தாரையும், வீரையும் அறவண முனிவன் அருளியபடியே பாதபங்கய மலையை வழிபட்ட புண்ணியத்தால் மாதவியும் சுதமதியுமாகத் தோன்றி உன்னோடு தொடர்புற்றனர். நீ சமயவாதியர்பால் சமயக் கருத்துக்களைக் கேட்கப் புகும்போது அவர்கள், நீ அழகிய இளம் பெண் என்ற காரணத்தால், தம் சமயக் கருத்

துக்களை உனக்குக் கூறார். ஆகையால் மாற்றுருக் கொள்ளுதற்குரிய மந்திரத்தையும், வானூடு இயங்கும் மந்திரத்தையும் உனக்குக் கூறுவேன். நீ அவற்றைக் கொள்க'! என்று அம் மந்திரங்களைக்கூறி வானூடெழுந்த அத்தெய்வம் மறித்தும் இறங்கி மணிமேகலைக்குப் பசியற்றிருக்கும் மந்திரத்தையும் ஈந்து சென்றது.

அறவோன் ஆசனத்து, ஆய்-இழை அறிந்த
பிறவியள் ஆயினள்; பெற்றியும் ஐது' என
விரை மலர் ஏந்தி, விசும்பூடு இழிந்து,
பொரு அறு பூங் கொடி பூமியில் பொலிந்தென,
வந்து தோன்றிய மணிமேகலா தெய்வம்,
முந்தைப் பிறப்பு எய்தி நின்றோள் கேட்ப,
'உயிர்கள் எல்லாம் உணர்வு பாழாகி,
பொருள் வழங்கு செவித் துளை தூர்ந்து, அறிவு இழந்த
வறம் தலை உலகத்து அறம் பாடு சிறக்க,
சுடர் வழக்கு அற்றுத் தடுமாறுகாலை, ஓர்
இள வள ஞாயிறு தோன்றியதென்ன,
நீயோ தோன்றினை; நின் அடி பணிந்தேன்;
நீயே ஆகி, நிற்கு அமைந்த இவ் ஆசனம்
நாமிசை வைத்தேன்; தலைமிசைக் கொண்டேன்;
பூமிசை ஏற்றினேன்; புலம்பு அறுக' என்றே,
வலம் கொண்டு, ஆசனம் வணங்குவோள் முன்னர்,
பொலம்-கொடி நிலமிசைச் சேர்ந்தெனப் பொருந்தி,
'உன் திருவருளால் என் பிறப்பு உணர்ந்தேன்;
என் பெருங் கணவன் யாங்கு உளன்?' என்றலும்—
'இலக்குமி! கேளாய் இராகுலன்-தன்னொடு

1–10 அறவோன் ஆசனத்து - புத்தனது ஆசனத்தால். பிறவி - பழம் பிறப்பு. பெற்றி - தன்மை; பெருமை; பேறு எனலும் ஆம். ஐது என - அழகாயது என்று. விரை - நறுமணம். விசும்பு - ஆகாயம். பொரு - ஒப்புமை. கொடி - காமவல்லிக் கொடி. பொலிந்தென - விளங்கிற்றுபோல. எய்தி - அறிந்து. பாழ் ஆகி - பயனின்றிக் கழிந்து. பொருள் - பௌத்த தருமம். தூர்ந்து - மூடப்பெற்று. அறிவு - மெய்யறிவு. வறம் தலை உலகம் - அறிவின் வறட்சியைத் தன்னிடத்தே உடைய உலகம். பாடு - பெருமை. சுடர் - திங்களும் பரிதியும். தடுமாறு காலை - அல்லற்படுங்காலத்தில்.

11–20 'நீ' என்றது புத்தபெருமானை எதிர்பெய்து கூறியது. ஆகி - (வீற்றிருப்போன்) ஆக. நிற்கு - உனக்கு. நாமிசை வைத்தேன் - துதித்தேன். பூமிசை ஏற்றினேன் - பூவினால் அருச்சித்தேன். புலம்பு - துன்பம். வணங்குவோள் - மணிமேகலா தெய்வத்தினது. பொலம் - கொடி - காமவல்லிக் கொடி பெருங்கணவன் - உயிரினும் சிறந்த கணவன். இலக்குமி! - முற்பிறப்பின் பெயரை இட்டு மணிமேகலையை விளித்தவாறு. இராகுலன் - இலக்குமியின் கணவன்.

புலத்தகை எய்தினை பூம்பொழில் அகவயின்;
இடங்கழி காமமொடு அடங்கானாய், அவன்
மடந்தை மெல் இயல் மலர் அடி வணங்குழி—
சாதுசக்கரன், மீவிசும்பு திரிவோன்,
தெருமரல் ஒழித்து-ஆங்கு, இரத்தினத் தீவத்துத்
தரும சக்கரம் உருட்டினன் வருவோன்,
வெங்கதிர் அமயத்து, வியன் பொழில் அகவயின்
வந்து தோன்றலும்—மயங்கினை கலங்கி,
மெல்-இயல்! கண்டனை, மெய்ந் நடுக்குற்றனை,
நல்கூர் நுசுப்பினை, நாணினை இறைஞ்ச,
இராகுலன், "வந்தோன் யார்?" என வெகுளலும்,
விரா மலர்க் கூந்தல்! அவன் வாய் புதையா,
"வானூடு இழிந்தோன் மலர் அடி வணங்காது,
நா நல்கூர்ந்தனை" என்று, அவன்-தன்னொடு
பகை அறு பாத்தியன் பாதம் பணிந்து ஆங்கு,
"அமர! கேள்; நின் தமர் அலம் ஆயினும்,
அம் தீம் தண்ணீர் அமுதொடு கொணர்கேம்;
உண்டி; யாம் உன் குறிப்பினம்" என்றலும்,
"எம் அனை! உண்கேன்; ஈங்குக் கொணர்க" என
அந் நாள் அவன் உண்டருளிய அவ் அறம்

21–30 புலத்தகை - ஊடல். அகவயின் - இடத்தில். இடங்கழிகாமம் - அளவிறந்த காமம் - காமவெறி. மெல்லியல்! - நங்காய்! வணங்குழி - வணங்கியபோழ்து. சாதுசக்கரன் - ஒருமுனிவன். மீவிசும்பு - ஆகாயத்தின் மேல். தெருமரல் - மனக்கவலை. தருமம் - புத்ததருமம். (தருமத்தைச் சக்கரம் என்றல் மரபு.) வெங்கதிர் அமயம் - நடுப்பகல். வியன் - அகலம். மயங்கினை - கலக்கமுற்று. (கண்டனை, உற்றனை, நாணினை என்னும் முற்றெச்சங்கள் இறைஞ்ச என்பதனோடு முடிந்தன.) நல்கூர் நுசுப்பினை! – நுண்ணிய இடையினையுடையாய்! இறைஞ்ச - வணங்க,

31–40 வெகுளலும் - சினந்தவுடன். (சாது சக்கரன் வந்தமை தன் காம ஒழுக்கத்திற்கு இடையூறு விளைத்தலின் வெகுண்டான்.) விராமலர் - விரவிய மலர்கள். புதையா - மூடி. நாநல்கூர்ந்தனை - சொல்வறுமையுற்றனை – துத்திலை பகை - காமவெகுளி மயக்கங்கள். பாத்தியன் - புத்தனது பாதத்திற்கு அன்பன். அமர! - தேவனே! (என்றது சாதுசக்கரனது தெய்வஞானத்தைக் கருதி). நின் தமர் அலம் - உனது ஞானத்தொடர்புடையோம் அல்லோம். கொணர்கேம் - கொணர்வோம். உண்டி - உண்க. குறிப்பினம் - கருத்தின்படி ஒழுகுவோம். எம்அனை - எந்தாயே! உண்கேன் - உண்பேன்.

நின்னுங்கு ஒழியாது, நின் பிறப்பு அறுத்திடும்.

உவவன

மருங்கில் உன்பால் தோன்றிய

உதயகுமரன்-அவன் உன் இராகுலன்;
ஆங்கு-அவன் அன்றியும், அவன்பால் உள்ளம்
நீங்காத் தன்மை நினக்கும் உண்டு; ஆகலின்,
கந்தசாலியின் கழி பெரு வித்து ஓர்
வெந்து உகு வெங் களர் வீழ்வது போன்ம் என,
அறத்தின் வித்து-ஆங்கு ஆகிய உன்னை ஓர்
திறப்படற்கு ஏதுவா, சேயிழை! செய்தேன்:
இன்னும் கேளாய், இலக்குமி! நீ; நின்
தவ்வையர் ஆவோர், தாரையும் வீரையும்:
ஆங்கு-அவர்-தம்மை, அங்க நாட்டு அகவயின்
கச்சயம் ஆளும், கழல் கால் வேந்தன்,
துச்சயன் என்போன் ஒருவன் கொண்டனன்;
அவருடன் ஆங்கு-அவன் அகல் மலை ஆடி,
கங்கைப் பேர் யாற்று அடைகரை இருந்துழி—
மற வணம் நீத்த மாசு அறு கேள்வி
அறவணன் ஆங்கு-அவன்பால் சென்றோனை,
"ஈங்கு வந்தீர் யார்?" என்று எழுந்து, அவன்
பாங்கு உளி, மாதவன் பாதம் பணிதலும்—
"ஆதி முதல்வன், அற ஆழி ஆள்வோன்,
மா துயர் எவ்வம் மக்களை நீக்கி,
விலங்கும் தம்முள் வெரூஉம் பகை நீக்கி,
உடங்கு உயிர் வாழ்க என்று, உள்ளம் கசிந்து உக,
தொன்று காலத்து நின்று அறம் உரைத்த

41 50 நின்னுங்கு - நின்னிடத்திலிருந்து. அவன் அன்றியும் - உதய குமரன் நின்மீது காதல்கொண்டமை அல்லாமலும். கந்தசாலி - ஒருவகைநெல். உகுவெம்களர் - பயிர் சோர்ந்து படுதற்குரிய கொடியஉவர் நிலத்தில். போன்ம் - போலும். ஓர் திறம் படற்கு - ஒப்பற்ற அறநெறியில் தங்குதற்கு. (ஒருநெறிப்பாடாகிய வைராக்கியம் எய்துதற்கு எனலும் ஆம்.)

51–60 தவ்வையர் - தமக்கையர். ஒருவன் - ஒப்பற்றவன். மலையாடி - மலைவளம் கண்டு, அடைகரை - கரைச்சார்பில். இருந்துழி - இருந்தபொழுதினில். மறவணம் - பாவத்திறம். நீத்த - நீங்கிய. அவன்பால் - துச்சயனிடம். அறவணன் சென்றோனை - சென்ற அறவணனை. பாங்குளி - முறைப்படி.

61–65 அறவாழி - தருமசக்கரம். மாதுயர் எவ்வம் - பிறப்பும் இறப்பும் ஆகிய பெருந்துன்பம். வெரூஉம் - அஞ்சுதற்குரிய. உடங்கு - மனம் ஒருமித்து. வாழ்க என்று - வாழவேண்டுமென்றெண்ணி. கசிந்து உக - இரங்கிஉருக. தொன்று - பழமை.

குன்ற மருங்கில் குற்றம் கெடுக்கும்
'பாத-பங்கயம் கிடத்தலின், ஈங்கு-இது
பாதபங்கய மலை எனும் பெயர்த்து ஆயது;
தொழுது வலம் கொள்ள வந்தேன், ஈங்கு; இப்
பழுது இல் காட்சியீர்! நீயிரும் தொழும்" என—
அன்று அவன் உரைத்த அவ் உரை பிழையாது,
சென்று கைதொழுது சிறப்புச் செய்தலின்,
மாதவி ஆகியும், சுதமதி ஆகியும்,
கோதை அம் சாயல்! நின்னொடு கூடினர்.
அறிபிறப்பு உற்றனை; அறம் பாடு அறிந்தனை;
பிற அறம் உரைப்போர் பெற்றியும் கேட்குவை;
பல் வேறு சமயப் படிற்று-உரை எல்லாம்,
அல்லி அம் கோதை! கேட்குறும் அந் நாள்,
இளையள், வளையோள், என்று உனக்கு யாவரும்
விளை பொருள் உரையார்; வேற்று உரு எய்தவும்,
அந்தரம் திரியவும், ஆக்கும் இவ் அருந் திறல்
மந்திரம் கொள்க' என, வாய்மையின் ஓதி,
'மதி நாள் முற்றிய மங்கலத் திருநாள்
பொது அறிவு இகழ்ந்து, புலம் உறு மாதவன்
திருவறம் எய்துதல் சித்தம் என்று உணர் நீ:
மன் பெரும் பீடிகை வணங்கினை ஏத்தி,
நின் பதிப் புகுவாய்' என்று, எழுந்து ஓங்கி,
'மறந்ததும் உண்டு' என, மறித்து ஆங்கு இழிந்து,
'சிறந்த கொள்கைச் சேயிழை! கேளாய்;
மக்கள் யாக்கை உணவின் பிண்டம்;

66–70 குன்றம் - இருத்திரகூடம் என்னும் மலை. பாத பங்கயம் - புத்தனது திருவடித்தாமரை - திருப்பாதச்சுவடு. ஈங்கு - அசைநிலை. பழுது - குற்றம். காட்சியீர்! - அறிவினை உடையீர்!. தொழும் - தொழுமின்.

71–80 பிழையாது - தவறாமல். சிறப்பு - திருவிழா, கோதை அம் சாயல்! - மாலைபோலும் மெல்லியலாய்! அறிபிறப்பு உற்றனை - பழம் பிறப்பினை அறிந்துகொண்டனை. அறம்பாடு - அறத்தின் தோற்றம். பெற்றி - திறம் - நெறி. படிற்றுரை - குற்றமுள்ள சொற்கள். அல்லிஅம்கோதை - மணிமேகலை. (இளையள், வளையள் என்பன மணிமேகலையின் இளமைச் செவ்வியை உணர்த்தி நின்றன.) வினைபொருள் -(சமயங்களின்) துணிபொருள் - மெய்ப்பொருள்.

81–90 வாய்மையின் - மனம் உவந்து. நாள் - நாள்தொறும். திருநாள் - பூரணைநாள்.

பொதுஅறிவு - தெளியாதஅறிவு - பொய்யறிவு. புலம் - தெளிந்தஅறிவினை. மாதவன் - புத்தனது. சித்தம் -

ஒருதலை. ஓங்கி - வானத்தில் எழுந்து. மறித்து இழிந்து - திரும்பவும்இறங்கி. உணவின் பிண்டம் - உணவினால் ஆய திரளை.

இப் பெரு மந்திரம் இரும்
பசி அறுக்கும்' என்று
ஆங்கு-அது
கொடுத்து, ஆங்கு, அந்தரம்
எழுந்து
நீங்கியது, ஆங்கு நெடுந்
தெய்வம்-தான்-என்.

91–93 இரும்பசி - பெரும்பசி.

11. பாத்திரம் பெற்ற காதை.

மணிமேகலா தெய்வம் நீங்கியபின் மணிமேகலை மணிபல்லவத்தீவின் இயற்கை வனப்பினைக் கண்டவண்ணம் திரிந்துலாவ நிற்புழித் தீவிலகை என்னும் தெய்வம் அவள் முன் தோன்றி, அவளை நோக்கி, கப்பல் கவிழ்ந்து உயிர்பிழைத்து இங்கு வந்தெய்திய மகள் போன்று யாரும் இல்லாத இத்தீவின்கண் வந்துள்ள நீ யார்? என்று வினவிற்று. அதுகேட்ட மணிமேகலை, 'நான், முந்திய பிறப்பில் இலக்குமி என்னும் பெயரை உடையவளாய் இராகுலன் என்னும் அரசன் மனைவியாக வாழ்ந்தேன்; இப்பிறப்பில் மாதவியின் மகளாகத் தோன்றி மணிமேகலை என்னும் பெயர் உடையேன்; மணிமேகலா தெய்வம் இங்கு என்னைக் கொணர்ந்தமையால் யான் புத்தபீடிகையைக் கண்டு என் பழம் பிறப்பினை உணர்ந்தேன். நீ யார்?' என்று வினவினள். மறு மொழி கூறத் தொடங்கிய தீவலகை, 'பண்டொருநாள், அருகிலுள்ள இரத்தின தீவத்தில் சமந்தமலையில் உள்ள புத்த பாதங்களை வணங்கிவந்த என்னை இந்திரன் இத்தீவில் உள்ள புத்தபீடிகையைக் காக்கும்வண்ணம் ஆணையிட்டமையால் யான் இப்பீடிகையைக் காத்து வருகின்றேன். அறம் முதிர்ந்தோர்க்கல்லால், இப் பீடிகையைக் கண்டு பிறப்புணர்தல் ஆகாது. நீ இப்பேறு பெற்றமையால் நின் தகைமை மாண்புடைத்தேயாகும். இங்குப் புத்தபீடிகையின் அருகில் உள்ள கோமுகப் பொய்கையில்

ஆபுத்திரனது அமுதசுரபி என்னும் தெய்வப் பாத்திரம் உள்ளது. அஃது ஆண்டுதோறும் வைகாசிப் பௌர்ணமியினில் வெளித் தோன்றும். இன்று அது வெளித்தோன்றும் நன்னாளாம் அது நின்கையகத்தே வந்து புகும்' அறங்கள யாவற்றினும் சிறந்த அன்னதானத்தினை அதன் உதவியால் நீ செய்து வருவாய் என்றது. மணிமேகலை மிக்க மகிழ்ச்சியுற்று, அமுதசுரபி தன் கையில் புகுதற்கு, தான் முற்பிறப்பினிறுதியில் உயிர்வீயும்சால் சாதுசக்கரனுக்கு உணவளித்த நினைவுடன் உயிர்விட்டமை காரண மாகும் என்பதைத் தீவதிலகைக்குக் கூறி, அத் தெய்வத்துடன் சென்று புத்தபீடிகையை வணங்கிக் கோமுகிப் பொய்கையை

வலம்வந்து நின்றனள். அமுதசுரபி அப்பொய்கையினின்றும் வெளித்தோன்றி அவள் கையகத்திற் புக்கது. பின் அவள் தீவ திலகையிடம்விடைபெற்று வானூடியங்கும் மந்திரத்தினால்வானூ டெழுந்து 'தெய்வம் கூறியபடி ஏழாம்நாளில் என்மகள் வந்திலளே! என்றேங்கி நின்ற மாதவியும் சுதமதியும் மகிழும் வண்ணம் அவரி டம சென்றெய்தினள். தான் மணிபல்லவம் சென்றதுமுதல் நிகழ்ந் தனவெல்லாம் கூறி, அவர்தம் பழம் பிறப்பினையும் அறிவித்து, அமுதசுரபியின் மாண்பினையும் உணர்த்தி அவர்களுடன் அறவண அடிகளை வணங்கச் சென்றனள்.

மணிமேகலா தெய்வம் நீங்கிய பின்னர்,

மணிபல்லவத்திடை மணிமேகலை-தான்
வெண் மணல் குன்றமும், விரி பூஞ்சோலையும்,
தண் மலர்ப்பொய்கையும், தாழ்ந்தனள் நோக்கி,
காவதம் திரிய—கடவுள் கோலத்துத்
தீவதிலகை செவ்வனம் தோன்றி,

'கலம் கவிழ் மகளிரின் வந்து ஈங்கு எய்திய
இலங்கு தொடி நல்லாய்! யார், நீ?' என்றலும்—
'எப் பிறப்பு அகத்துள், "யார் நீ" என்றது ?
பொன்-கொடி அன்னாய்! பொருந்திக் கேளாய்;
போய பிறவியில், பூமி-அம் கிழவன்
இராகுலன் மனை, யான்;
இலக்குமி என் பேர்;
ஆய பிறவியில், ஆடல்-அம் கணிகை
மாதவி ஈன்ற மணிமேகலை, யான்;
என் பெயர்த் தெய்வம் ஈங்கு எனைக் கொணர, இம்
மன் பெரும் பீடிகை என் பிறப்பு உணர்ந்தேன்;
ஈங்கு என் வரவு இது; ஈங்கு எய்திய பயன் இது;
பூங் கொடி அன்னாய்! யார், நீ?' என்றலும்—
ஆய்-இழை தன் பிறப்பு அறிந்தமை அறிந்த
தீவதிலகை செவ்வனம் உரைக்கும்:

1–10 தாழ்ந்தனள் - விரும்பி. காவதம் - காதம். கடவுட்கோலத்து - தெய்வப்படிமத்தை உடைய. தீவதிலகை - ஒரு தெய்வம். செவ்வனம் - நேரே. கலம் கவிழ் மகளிரின் - கப்பல் கவிழப் பெற்று உயிருய்ந்து வந்த மகளிர் போல. இலங்கு தொடி - விளங்கும் வளை. எப்பிறப் பகத்துள் - எப்பிறவியின் மாட்டு. பொருந்தி - மனம் ஒன்றி.

11–20 போய — கழிந்த. பூமியங் கிழவன் - அரசன். மனை — மனைவி. என்பேன் - எனப்பட்டேன். ஆய - எய்தியுள்ள. பீடிகை - பீடிகையால். பூங்கொடியன்னாய்! - தீவதிலகையே! ஆயிழை - மணிமேகலை. செவ்வனம் - விளக்கமாக.

68

'ஈங்கு - இதன் அயல்அகத்து இரத்தினத் தீவத்து,
ஓங்கு உயர் சமந்தத்து உச்சி மீமிசை
அறவியங் கிழவோன் அடி இணை ஆகிய,
பிறவி என்னும் பெருங் கடல் விடூஉம்
அறவி நாவாய் ஆங்கு உளது ஆதலின்,
தொழுது வலம் கொண்டு வந்தேன், ஈங்கு;
பழுது இல் காட்சி இந் நல் மணிப் பீடிகை,
தேவர் கோன் ஏவலின், காவல் பூண்டேன்;
தீவதிலகை என் பெயர்—இது கேள்,
தரும தலைவன் தலைமையின் உரைத்த
பெருமைசால் நல் அறம் பிறழா நோன்பினர்
கண்டு கைதொழுவோர்; கண்டதன் பின்னர்,
பண்டைப் பிறவியர் ஆகுவர், பைந்தொடி!
அரியர், உலகத்து; ஆங்கு - அவர்க்கு அறமொழி
உரியது, உலகத்து ஒருதலையாக:
ஆங்கனம் ஆகிய அணி-இழை! இது கேள் :
ஈங்கு இப் பெரும் பெயர்ப் பீடிகை முன்னது,
மா மலர்க் குவளையும் நெய்தலும் மயங்கிய
கோமுகி என்னும் கொழு நீர் இலஞ்சி ;
இருது இளவேனிலில், எரி கதிர் இடபத்து,
ஒருபதின் மேலும் ஒருமூன்று சென்ற பின்,
மீனத்து இடைநிலை மீனத்து அகவையின்,
போதித் தலைவனொடு பொருந்தித் தோன்றும்—
ஆபுத்திரன் கை அமுதசுரபி எனும்
மா பெரும் பாத்திரம்; மடக்கொடி! கேளாய் ;

21–30 அயல் அகத்து - பக்கத்தில். சமந்தம் - ஒரு மலை. அறவி அறம்; கிழவோன் - தலைவன்; என்றது புத்தனை. விடூஉம் - [illegible] கும். ஆங்கு - அசை நிலை. பழுதில் காட்சி - வழுவற்ற அ[illegible] வினை (நல்கும்.) தலைமையின் - முதன்மையாக.

31–40 பிறழா - தவறாத. பண்டைப் பிறவியர் – பழம்பிறப்புணர் தவர். அறமொழி - தருமோபதேசம். அணியிழை! - ம[illegible] மேகலை! பெயர் - புகழ். மா—கருமை; பெருமையும் ஆ[illegible] (குவளை மாமலரும் என்க.) இருது - பருவம். எரி கதிர் இட பத்து – காயும் பரிதியை (உடைய.) வைகாசித்திங்களில்.

41–45 மீனம் - நட்சத்திரம். இடைநிலை மீனத்தகவையின்-நடுவில் நி
றலுடைய நட்சத்திரமாகிய விசாகத்தில். (மீனத்து ஒருபதி
மேலும் ஒரு மூன்று சென்றபின் இடைநிலை மீனத் தகவையி
எனக் கூட்டுக.) போதித்தலைவனொடு - அரசமரத்தடியி
அமர்ந்து மெய்ஞானம் பெற்ற புத்தனோடு, பொருந்தித் தோ
றும் - ஒத்துவெளிப்படுவதாகிய. (புத்தன் இளவேனிற்பருவத்
வைகாசித் திங்களில் விசாகத்தோடு கூடிய பௌர்ணமிய
தோன்றியவாறுபோல,அமுதசுரபியும் ஆண்டுதோறும் அந்நாளி
கோமுகிப் பொய்கையினின்றும் வெளிப்படும் என்பதாம்.

அந் நாள் இந் நாள்; அப் பொழுது இப் பொழுது;
நின்னுங்கு வருவது போலும், நேர்-இழை!
ஆங்கு—அதில் பெய்த ஆருயிர்மருந்து
வாங்குநர் கைஅகம் வருத்துதல் அல்லது,
தான் தொலைவு இல்லாத் தகைமையது ஆகும்;
நறு மலர்க் கோதை! நின் ஊர் ஆங்கண்
அறவணன்-தன்பால் கேட்குவை இதன் திறம்'
என்று அவள் உரைத்தலும்—இளங்கொடி விரும்பி,
மன் பெரும் பீடிகை தொழுதனள் வணங்கி,
தீவதிலகை-தன்னொடும் கூடி,
கோமுகி வலம் செய்து, கொள்கையின் நிற்றலும்;
எழுந்து வலம் புரிந்த இளங்கொடி செங் கையில்,
தொழும்தகை மரபின் பாத்திரம் புகுதலும்;
பாத்திரம் பெற்ற பைந் தொடி மடவாள்
மாத்திரை இன்றி மனம் மகிழ்வு எய்தி—
'மாரனை வெல்லும் வீர! நின் அடி,
தீ நெறிக் கடும் பகை கடிந்தோய்! நின் அடி,
பிறர்க்கு அறம் முயலும் பெரியோய்! நின் அடி,
துறக்கம் வேண்டாத் தொல்லோய்! நின் அடி,
எண் பிறக்கு ஒழிய இறந்தோய்! நின் அடி,
கண் பிறர்க்கு அளிக்கும் கண்ணோய்! நின் அடி,
தீ மொழிக்கு அடைத்த செவியோய்! நின் அடி,
வாய்மொழி சிறந்த நாவோய்! நின் அடி,
நரகர் துயர் கெட நடப்போய்! நின் அடி,
உரகர் துயரம் ஒழிப்போய்! நின் அடி—

46–50 நின்னுங்கு - நின்னிடம். வருவது போலும் - வருவதாகும். போலும் - அசை நிலை. பெய்த - இட்ட. ஆருயிர் மருந்து - பசிப்பிணியை அகற்றி, அருமையாகிய உயிரைக் காக்கும் மருந்து - உணவு. வாங்குநர் - ஏற்பவர். தொலைவு - தீர்தல். தகைமையது - தன்மையது.

51-60 கொள்கையின் - நற்சிந்தனையுடன்; நியமத்துடன் என்னலும் ஆம். எழுந்து - வெளிப்போந்து. தொழும்தகை மரபின் பாத்திரம் - தொழத்தக்க பெருமையியல்போடு கூடிய அமுதசுரபி. (பாத்திரம் எழுந்து இளங்கொடி செங்கையிற் புகுதலும் என இயையும்.) மாத்திரை - அளவு.

61-70 மாரன் - காமன். கடிந்தோய்! - நீக்கியோய்! பிறர்க்கு அறம் முயலும் - பிறர் அறம் எய்துதற்கு உழைக்கின்ற (பிறர் அறத்திற்கு என உருபு பிரித்துக்கூட்ட நின்றது). துறக்கம் - சுவர்க்கம். தொல்லோய் - பெரியோய்! எண் பிறக்கு ஒழிய இறந்தோய்! - (உன் பெருமையை எண்ணுங்கால்) எண்கள் போதாமல் பிற்படும்படி பெருமைமிக்கோய்! வாய்மொழி - மெய்ம்மொழி - சத்தியம். நரகர் - நரகத்தின் கண் துன்புறுவோர். நடப்போய்! - (நரக உலகிற்குச்) சென்றோய்! உரகர் - நாகர். ஒழிப்போய்! - நீக்கியோய்!

70

வணங்குதல் அல்லது, வாழ்த்தல் என் நாவிற்கு
அடங்காது!' என்ற ஆய்-இழை முன்னர்—
போதி நீழல் பொருந்தித் தோன்றும்
நாதன் பாதம் நவை கெட ஏத்தி,
தீவதிலகை சேயிழைக்கு உரைக்கும்;
'குடிப் பிறப்பு அழிக்கும்; விழுப்பம் கொல்லும்;
பிடித்த கல்விப் பெரும் புணை விடூஉம்;
நாண் அணி களையும்; மாண் எழில் சிதைக்கும்;
பூண் முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்;
பசிப் பிணி என்னும் பாவி; அது தீர்த்தோர்
இசைச் சொல் அளவைக்கு என் நா நிமிராது—
புல் மரம் புகையப் புகை அழல் பொங்கி,
மன் உயிர் மடிய மழைவளம் கரத்தலின்;
அரசு தலைநீங்கிய அரு மறை அந்தணன்,
இரு நில மருங்கின் யாங்கணும் திரிவோன்,
அரும் பசி களைய ஆற்றுவது காணான்,
திருந்தா நாய் ஊன் தின்னுதல் உருவோன்,
இந்திர-சிறப்புச் செய்வோன் முன்னர்,
வந்து தோன்றிய வானவர் பெருந்தகை
மழை வளம் தருதலின், மன் உயிர் ஓங்கி,
பிழையா விளையுளும் பெருகியது அன்றோ?—
ஆற்றுநர்க்கு அளிப்போர் அறம் விலைபகர்வோர்;

71–80 நாவிற்கு அடங்காது - நாவின் ஆற்றலுக்கு உட்படாது. ஆயிழை - மணிமேகலை. போதி - அரசமரம். நவை - தீமை. சேயிழை - மணிமேகலை. குடிப்பிறப்பு - உயர்குடியிற்பிறந்தோர்க்குரிய பண்பு. விழுப்பம் - பெருமை. புணைவிடூஉம் - தெப்பத்தை நீக்கச் செய்யும். களையும் - போக்கும். மாண் எழில் - மாட்சியாம் அழகினை - அறிவினை. புறங்கடை - வாயில்புறத்தில். பாவி - கொடுமைப்படுத்தும் தன்மையது. (பசியைப் பாவம் என்னாது 'பாவி' என்றது, கொடியாரைப் பாவியர் என்னும் வழக்குப்பற்றிய வழுவமைதியாம்.)

81–92 இசைச் சொல் அளவைக்கு - புகழ்மொழியை அளவிடற்கு. நிமிராது - உயராது - ஆற்றலற்றது. புன்மரம் - புல்லும் மரமும். ("புறக்காழனவே புல் என மொழிப. அகக் காழனவே மரம் என மொழிப".) அழல் - தீ.

மறை அந்தணன் - தவத்தால் வரம் பெற்று அரசமரபு நீங்
அந்தண மரபினை எய்திய முனிவன் - விசுவாமித்திர முனிவன்
இரு நிலம் - பெரிய பூமி. திரிவோன் - (உணவு தேடி) அலை
வனாகி. ஆற்றுவது - தணிக்கும் உணவினை. திருந்தா - சீ
கெட்ட. உறுவோன் - தொடங்கியவனாகி. ஓங்கி - ஓங்க.
பிழையா விளையுளும் - விளையவேண்டிய அளவு தப்பாது வி
யும் பொருள்களும். ஆற்றுநர் - செல்வ வளமையுடையோர்
அறவிலை பகர்வோர் - அறத்தினை விற்பவராவர். ஆற்றுநர்க்
அளிப்போர். அவ் ஆற்றுநர்பால் கைம்மாறு பெறுதலின் அ
விலை பகர்வோர் ஆவர்.

71

ஆற்றா மாக்கள் அரும் பசி களைவோர்
மேற்றே, உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை;
மண் திணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே;
உயிர்க் கொடை பூண்ட உரவோய் ஆகி,
கயக்கு அறு நல் அறம் கண்டனை' என்றலும்—
'விட்ட பிறப்பில் யான் விரும்பிய காதலன்
திட்டிவிடம் உணச் செல் உயிர் போவுழி,
உயிரொடு வேவேன் உணர்வு ஒழி காலத்து,
வெயில் விளங்கு அமயத்து, விளங்கித் தோன்றிய
சாதுசக்கரன்-தனை யான் ஊட்டிய
காலம் போல்வதோர் கனா மயக்கு உற்றேன்;
ஆங்கு-அதன் பயனே ஆர் உயிர் மருந்து ஆய்,
ஈங்கு, இப் பாத்திரம் என் கைப் புகுந்தது—
நாவலொடு பெயரிய மா பெருந் தீவத்து,
வித்தி, நல் அறம்; விளைந்த அதன் பயன்
துய்ப்போர்-தம் மனை—துணிச் சிதர் உடுத்து;
வயிறு காய் பெரும் பசி அலைத்தற்கு இரங்கி;
வெயில் என முனியாது, புயல் என மடியாது,
புறங்கடை நின்று, புன்கண் கூர்ந்து, முன்
அறங்கடை நில்லாது, அயர்வோர் பலரால்:
ஈன்ற குழவி முகம் கண்டு இரங்கி,
தீம் பால் சுரப்போள்-தன் முலை போன்றே,

93–100 ஆற்ற - செல்வ வலிமையற்ற. களைவோர் மேற்றே - நீக்கு வோர் மாட்டே உளதாகும். மெய்ந்நெறி வாழ்க்கை - மெய்யா கிய அறநெறியால் வாழ்தல். மண்திணி ஞாலம் - மண்ணின் அணுக்கள் செறிந்த உலகம் - பூமி. பூண்ட - மேற்கொண்ட. உரவோய் - அறிவு வலிமையுடையோய். கயக்கு - கசங்குதல் - வாடுதல். விட்ட பிறப்பில் - முற்பிறப்பில். திட்டிவிடம் - கண் ணில் விடம் உடைய ஒருவகைப் பாம்பு. செல்லுயிர் – ஆயுள் முடிந்த உயிர். போவுழி – நீங்கியபொழுது.

101–110 உயிரொடுவேவேன்-தீயில் வீழ்ந்துவேகின்றயான். உணர்வொழி காலத்து - என் அறிவு ஒடுங்கும் நிலையில். கறு மயக்கு உற் றேன் – மருண்ட நினைவினை அடைந்தேன். நாவலொடு பெய ரிய – நாவல் மரத்தால் பெயர் எய்திய. தீவம் – தீவு. (நல் லறம் வித்தி விளைந்த அதன் பயன் என இயையும்). துய்ப் போர் – அனுபவிப்போர். சிதர் – கந்தை. அலைத்தல் – வருத்துதல். இரங்கி – நொந்து.

111–115 முனியாது - வெறுமல். மடியாது – சோம்பியிராமல். புறங் கடை – வாயிலின்புறத்தே. புன்கண் – துன்பம். கூர்ந்து - மிகுந்து. அறங்கடை – அறத்திற்குப் புறம்பாய பாவத்தால். நில்லாது அயர்வோர் – அலைந்து வருந்துவோர்.

நெஞ்சு வழிப்படூஉம் விஞ்சைப் பாத்திரத்து
அகன் சுரைப் பெய்த ஆருயிர்மருந்து அவர்
முகம் கண்டு சுரத்தல் காண்டல் வேட்கையேன்.' என—
மறந்தேன் அதன் திறம்; நீ எடுத்து உரைத்தனை;
அறம் கரியாக அருள் சுரந்து ஊட்டும்
சிறந்தோர்க்கு அல்லது செவ்வனம் சுரவாது;
ஆங்கனம் ஆயினை; அதன் பயன் அறிந்தனை;
ஈங்கு நின்று எழுவாய்' என்று, அவள் உரைப்ப—
தீவதிலகை-தன் அடி வணங்கி,
மா பெரும் பாத்திரம் மலர்க் கையின் ஏந்தி,
கோமகன் பீடிகை தொழுது, வலம் கொண்டு,
வானூடு எழுந்து, மணிமேகலை-தான்—
'வழு அறு தெய்வம் வாய்மையின் உரைத்த
எழு-நாள் வந்தது; என் மகள் வாராள்!
வழுவாய் உண்டு!' என மயங்குவோள் முன்னர்—
வந்து தோன்றி, அவர் மயக்கம் களைந்து,
அந்தில் அவர்க்கு ஓர் அற்புதம் கூறும்:
'இரவிவன்மன் ஒரு பெரு மகளே!
துரகத் தானைத் துச்சயன் தேவி!
அமுதபதி வயிற்று அரிதின் தோன்றி,
தவ்வையர் ஆகிய தாரையும் வீரையும்
அவ்வையர் ஆயினீர்; நும் அடி தொழுதேன்;
வாய்வதாக, மானிட யாக்கையில்
தீவினை அறுக்கும் செய் தவம் நுமக்கு, ஈங்கு;
அறவண அடிகள்-தம்பால் பெறுமின்,

116–120 நெஞ்சு வழிப்படூஉம் – மனம் எண்ணியபடியே ஒழுகுகின்[ற]
[நி]னைத்தபடி உணவு சுரக்கின்ற. அகன் சுரை – அகலமா[ன]
உள்ளிடம். அவர்–ஆற்றுமாக்களது. காண்டல் வேட்[கை]
யேன் – காணும் அவா உடையேன். அதன் திறம் – அவ்வ[மு]
சுரபியின் வரலாற்றினைக் கூற. அறம் கரியாக – தரும[ம்]
சாட்சியாக. அருள் – இரக்கம். ஊட்டும் – உண்பிக்கும்.

உள்ளாய். அதன் – உண்டிகொடுத்தலின். அவள் –
திலகை. கோமகன் – புத்தன். வழு அறு தெய்வம் – கு
மற்ற மணிமேகலா தெய்வம். எழுநாள் – ஏழாம் நா
வழுவாய் – ஏதம். மயங்குவோள் – மாதவி.

131–140 அந்தில் – அங்கு. அற்புதம் – வியத்தகு செய்தி; என்
அவர் தம் பழம்பிறப்பின் திறத்தினை. துரகம் – குதி
துச்சயன் – ஓரரசன். தவ்வையர்–தமக்கையர். அவ்வைய
தாயர். வாய்வதாக – தப்பாதாருக. (நுமக்குச் செய்தவம் வ
வதாக என முடிக்க. செய்தவம் என்பது வாய்வதாக என
தனோடும் ,பெறுமின் என்பதனோடும் இயைந்து பொ
கொண்டது).

செறி தொடி நல்லீர்! உம் பிறப்பு; ஈங்கு-இஃது
ஆபுத்திரன் கை அமுதசுரபி எனும்
மா பெரும் பாத்திரம்; நீயிரும் தொழும்!' என—
தொழுதனர் ஏத்திய தூமொழியாரொடும்,
'பழுது அறு மாதவன் பாதம் படர்கேம்;
எழுக' என எழுந்தனள்—இளங்கொடி-தான்-என்.

141–146 தொடி – கைவளை. தூமொழியார் – தூயமொழியினர் – மாத
வியும் சுதமதியும். பழுது – குற்றம். படர்கேம் – எய்து
வோம். எழுக – எழுமின். இளங்கொடி – மணிமேகலை.

12.

அறவணர்த் தொழுத காதை.

மணிமேகலை மாதவியோடும் சுதமதியுடனும் அறவண அடிகள் தவம்புரியும் இடத்தை அடைந்து, அவரடிக்கீழ் மும்முறை வணங்கி எழுந்தனள். பின் சுதமதியும் தானும் உபவனம் சென்றதும், உதயகுமரன் ஆங்குவந்து மீண்டதும், மணிமேகலா தெய்வம் தன்னை மணிபல்லவத்து உய்த்ததும், தான் பீடிகை கண்டு பிறப்புணர்ந்ததும், அத் தெய்வம் அவள் முன் தோன்றி மாதவி சுதமதி இருவர் தம் முற்பிறப்பினை அவளுக்கு உணர்த்தியதும், மந்திரம் ஈந்து மறைந்ததும், தீவதிலகை என்னும் தெய்வம் வந்ததும், பாத்திரம் பெற்றதும், மீண்டதும் கூறினள். அது கேட்ட முனிவர் வீரை மது மயக்கத்தால் யானை முன் சென்று மாண்டதும், அது பொருத தாரை அரமியம் ஏறி விழுந்து உயிர்விட்டதும் துச்சயன் கூறத் தான் கேட்டமையை அவளுக்கு உணர்த்தினர். பின் "இவ்வுலகில் பௌத்த தருமம் குன்றிப் பாவம் மிக்கது. சிறிதாயினும் தருமம் உளதாமெனக்கருதி யான் அறம்கூறி வருவல். புத்தன் ஆயிரத் தறுநூற்றுப் பதினரும்

ஆண்டு தோன்றி

அறமுரைப்பான். அதன்
மின்னரே அறம்
மக்கள் செவியில்
புகும். உன்ருல் இவ்வூரில் பல
அதிசயங்கள்
நிகழும். அதன்பின்னே நீ
பௌத்த தருமத்தைப்
பொருந்தக்
கடவாய்.। மாதவியும்
சுதமதியும் பாதபங்கய மலையை
வணங்கின
ராதலின், உன்ெருடு
பொருந்தியிருந்து பிறப்பறுத்து

வீடு பெறுவர். யாவர்க்கும் ஒத்த பேரறம் உண்டி கொடுத்தலே யாகும். அதனை நீ மேற்கொள்க.” என்றனர்.

ஆங்கு-அவர்-தம்முடன், 'அறவண அடிகள்
யாங்கு உளர்?' என்றே இளங்கொடி வினூஅய்,
நரை முதிர் யாக்கை, நடுங்கா நாவின்
உரை மூதாளன் உறைவிடம் குறுகி—
மைம் மலர்க் குழலி மாதவன் திருந்து அடி
மும் முறை வணங்கி, முறையுளி ஏத்தி,
புது மலர்ச் சோலை பொருந்திய வண்ணமும்;
உதயகுமரன் ஆங்கு உற்று, உரைசெய்ததும்;
மணிமேகலா தெய்வம் பணிபல்லவத்திடை,
அணி-இழை-தன்னை அகற்றிய வண்ணமும்;
ஆங்கு அத் தீவகத்து, அறவோன் ஆசனம்
நீங்கிய பிறப்பு நேர்-இழைக்கு அளித்ததும்;
அளித்த பிறப்பின் ஆகிய கணவனை,
களிக் கயல் நெடுங் கண் கடவுளின் பெற்றதும்;
'தவ்வையர் ஆகிய தாரையும் வீரையும்
வெவ் வினை உருப்ப, விளிந்து கேடு எய்தி,
மாதவி ஆகியும், சுதமதி ஆகியும்,
கோதை அம் சாயல்! நின்னொடும் கூடினர்;
ஆங்கு-அவர்-தம் திறம் அறவணன்-தன்பால்,
பூங் கொடி நல்லாய்! கேள்' என்று உரைத்ததும்;
உரைத்த பூங்கொடி ஒரு மூன்று மந்திரம்
தனக்கு உரைசெய்து, தான் ஏகிய வண்ணமும்;
தெய்வம் போய பின், தீவதிலகையும்
ஐயெனத் தோன்றி, அருளொடும் அடைந்ததும்;
அடைந்த தெய்வம், ஆபுத்திரன் கை,
வணங்குறு பாத்திரம் வாய்மையின் அளித்ததும்;
'ஆபுத்திரன் திறம் அறவணன்-தன்பால்
கேள்' என்று உரைத்து, கிளர் ஒளி மா தெய்வம்,
'போக' என, மடந்தை போந்த வண்ணமும்;
மாதவன்-தன்னை வணங்கினள் உரைத்தலும்—

1–10 அவர் – சுதமதியும் மாதவியும். இளங்கொடி – மணிமேகலை வினூஅய் – வினவி அறிந்து. நடுங்கா – தளராத சொல். உரை மூதாளன் - சொல்வன்மையுடைய அறவணன். குறுகி – அணுகி. முறையுளி – முறைப்படி. சோலை – உபவனம். உற்று – எய்தி. அணியிழை தன்னை – என்னை. (மணிமேகலை தன்னை அணியிழை எனக் குறித்தல் இடவழுவமைதியாம். மேல் 'நேரிழைக்கு' என

வருவதும் அது.) அகற்றிய – நீக்கிய.

11–20 அறவோன் – புத்தன். அளித்ததும் - அறிவித்தலையும் ஆகிய- அமைந்திருந்த. கடவுளின் பெற்றதும் – தெய்வத்தால் அறிந்தமையும். தவ்வையர் – தமக்கையர். வெவ்வினை – கொடுவினை. உருப்ப - சினத்தலால். விளிந்து - இறந்து. கோதையஞ் சாயல்! - மணிமேகலாய்!

21–30 பூங்கொடி - மணிமேகலா தெய்வம். ஐயென - விரைவினில். பாத்திரம் - அமுதசுரபி. வாய்மையின் - மனம் பொருந்தி. திறம் - வரலாறு. இளர் ஒளி - மிகும் ஒளி.

75

மணிமேகலை உரை மாதவன் கேட்டு,
தணியா இன்பம் தலைத்தலை மேல் வர,
'பொன் தொடி மாதர்! நல் திறம் சிறக்க;
உற்று உணர்வாய் நீ, இவர் திறம் உரைக்கேன்:
நின் நெடுந் தெய்வம் நினக்கு எடுத்து உரைத்த
அந் நாள் அன்றியும், அரு வினை கழூஉம்
ஆதி முதல்வன் அடி இணை ஆகிய
பாதபங்கய மலை பரவிச் செல்வேன்,
கச்சயம் ஆளும் கழல் கால் வேந்தன்
துச்சயன்-தன்னை ஓர் சூழ் பொழில் கண்டேன்;
"மா பெருந் தானை மன்ன! நின்னொடும்
தேவியர்-தமக்கும் தீது இன்றே?" என,
அழிதகவு உள்ளமொடு அரற்றினன்ஆகி,
ஒளி இழை மாதர்க்கு உற்றதை உரைப்போன்,
புதுக் கோள் யானைமுன் போற்றாது சென்று,
மதுக் களி மயக்கத்து, வீரை மாய்ந்ததூஉம்;
ஆங்கு, அது கேட்டு, ஓர் அரமியம் ஏறி,
தாங்காது வீழ்ந்து, தாரை சாவுற்றதூஉம்;
கழி பெருந் துன்பம் காவலன் உரைப்ப,
"பழ வினைப் பயன்; நீ பரியல்" என்று எழுந்தேன்;
ஆடும் கூத்தியர் அணியே போல,

வேற்று ஓர் அணியொடு வந்தீரோ?' என,
மணிமேகலைமுன் மடக்கொடியார் திறம்

31–40 தலைத் தலை – ஒருபொழுதைக்கொருபொழுது. மேல்வர – பொங்கிவர. நற்றிறம் – தவநெறி. உற்று – மனம் பொருந்தி. இவர் – மாதவியும் சுதமதியும். உரைக்கேன் – கூறுவேன். கழூஉம் – கழுவும். ஆதி முதல்வன் – புத்தன். ஆகிய – அமைந்துள்ள. பரவி – துதித்து. கழல் – வீரக்கழல். சூழ்பொழில் - அடர்ந்த சோலை.

41–50 தானை – சேனை. அழிதகவு - துன்பம். அரற்றினன் – கதறி அழுதவனுகி. உற்றதை – நேர்ந்த துன்பத்தினை. புதுக்கோள் யானை – புதிதாகப் பிடித்துவரப்பட்ட யானை. போற்றுது – கருதாமல். வீரை – துச்சயன் தேவியருள் ஒருத்தி. அது - அச்செய்தியை. அரமியம் – நிலாமுற்றம். தாங்காது – துன்பம் பொறுக்கமாட்டாமல். தாரை – துச்சயன் தேவியருள் மற்றொருத்தி. கழி – மிகுதி. காவலன் – துச்சயன். (மாய்ந்ததூஉம் சாவுற்றதூஉம் ஆகிய கழிபெருந்துன்பம்,) பரியல் – வருந்தற்க. எழுந்தேன் – சென்றேன்.

51–53 கூத்தியர் - நாடகமகளிர். மடக்கொடியார் - மாதவியும் சுதமதியும்.

துணி பொருள் மாதவன் சொல்லியும் அமையான்,
'பிறவியும் அறவியும் பெற்றியின் உணர்ந்த
நறு மலர்க் கோதாய்! நல்கினை கேளாய்;
தரும தலைவன் தலைமையின் உரைத்த
பெருமைசால் நல் அறம் பெருகாதாகி,
இறுதி இல் நல்-கதி செல்லும் பெரு வழி
அறுகையும் நெருஞ்சியும் அடர்ந்து கண் அடைத்தாங்கு,
செயிர் வழங்கு தீக் கதி திறந்து, கல்லென்று
உயிர்வழங்கு பெரு நெறி ஒரு திறம் பட்டது;
தண் பனி விழுங்கிய செங்கதிர் மண்டிலம்
உண்டு என உணர்தல் அல்லது, யாவதும்
கண்டு இனிது விளங்காக் காட்சி போன்றது;
சலாகை நுழைந்த மணித் துளை அகவையின்
உலா நீர்ப் பெருங் கடல் ஓடாது ஆயினும்,
ஆங்கு-அத் துளை வழி உகு நீர் போல,
ஈங்கு நல் அறம் எய்தலும் உண்டு எனச்
சொல்லலும் உண்டு, யான்—சொல்லுதல் தேற்றார்,
மல்லல் மா ஞாலத்து மக்களே, ஆதலின்:
சக்கரவாளத்துத் தேவர் எல்லாம்
தொக்கு ஒருங்கு ஈண்டி, துடித-லோகத்து
மிக்கோன் பாதம் விழுந்தனர் இரப்ப,
இருள் பரந்து கிடந்த மலர் தலை உலகத்து,

54-60 துணிபொருள் - மெய்ப்பொருளை (உணர்ந்த). அமையான் - ஒழியானாகி. பிறவி - பழம்பிறவி. அறவி - அறநெறி. பெற்றி யின் - உள்ளபடி. பாக்கியத்தினால் எனலும் ஆம். நல்கினை கேளாய் - விரும்பிக் கேள். தருமதலைவன் - புத்தன். தலைமை யின் - முதன்மையாக. இறுதியில் நற்கதி - முத்தி. அறுகை - அறுகம்புல். கண் அடைத்து - இடம் அடைபட்டு. ஆங்கு - அசை.

61-70 செயிர் வழங்கு தீக்கதி - துன்பத்தினைத் தரும் தீய நெறிகள். திறந்து - திறக்கப்பெற்று. கல்லென்று - ஆரவாரம் மிக்கு. உயிர் வழங்கு பெருநெறி ஒருதிறம்பட்டது - உயிர்கள் வழங்கும் பெரி

ஆயிற்று. விழுங்கிய - மறைக்கப்பட்ட
மண்டிலம் - சந்திரன். உணர்தல் உணரப்படுதல். யாவதும் -
சிறிதும். காட்சி - பிரத்தியட்சம், சலாகை - மணிகளைத் துளை
யிடும் இரும்புக்கருவி. அகவையின் - உள்ளே. உலாம் - அலை
யும். ஆங்கு - அசைநிலை. உகும் - சொரியப்படும். எய்தலும் -
அறியப்படுதலும். என - என்று எண்ணிக்கொண்டு. சொல்
லலும் - அற உபதேசம் செய்தலும். தேற்றுநர் - தெளியார்.

71-75 மல்லல் - வளம். தொக்கு ஒருங்குஈண்டி - தொகுதியாக ஒன்ற
கூடி. துடித லோகம் - ஒரு தெய்வ லோகம். இருள் - அறி
யாமை. மலர்தலை - அகன்ற இடம்.

விரி கதிர்ச் செல்வன் தோன்றினன் என்ன,
ஈர்-எண்ணூற்ருேடு ஈர்-எட்டு ஆண்டில்
பேர்-அறிவாளன் தோன்றும்—அதன் பிற்பாடு,
பெருங் குள மருங்கில் சுருங்கைச் சிறு வழி
இரும் பெரு நீத்தம் புகுவது போல,
அளவாச் சிறு செவி, அளப்பு-அருநல் அறம்
உளம் மலி உவகையோடு உயிர் கொளப் புகூஉம்—
கதிரோன் தோன்றும் காலை, ஆங்கு-அவன்
அவிர் ஒளி காட்டும் மணியே போன்று,
மைத்து இருள் கூர்ந்த மன மாசு தீரப்
புத்த ஞாயிறு தோன்றும்காலை,
திங்களும் ஞாயிறும் தீங்கு உரு விளங்க,
தங்கா நாள்-மீன் தகைமையின் நடக்கும்;
வானம் பொய்யாது; மா நிலம் வளம்படும்;
ஊன் உடை உயிர்கள் உறு துயர் காணு;
வளி வலம் கொட்கும்; மாதிரம் வளம்படும்;
நளி இரு முந்நீர் நலம் பல தரூஉம் ;
கறவை கன்று ஆர்த்தி, கலம் நிறை பொழியும்;
பறவை பயன் துய்த்து, உறைபதி நீங்கா ;
விலங்கும் மக்களும் வெரூஉப் பகை நீங்கும் ;
கலங்கு அஞர், நரகரும் பேயும், கைவிடும்;
கூனும், குறளும், ஊமும், செவிடும்,
மாவும், மருளும், மன் உயிர் பெருஅ ;
அந் நாள் பிறந்து அவன் அருளறம் கேட்டோர்
இன்னுப் பிறவி இகந்தோர் ஆதலின்,

76–80 பேரறிவாளன் – புத்தன். அதன்பிற்பாடு – அதன்பிறகு. சுருங்கைச் சிறு வழி – (நீர் குளத்திற் புகுதற்குரிய) மூடுதலுள்ள சிறிய வழி. நீத்தம் – நீர்ப்பெருக்கு

81–90 அளவா - (அறத்தினைக்) கேட்டு அறியாத. உளம் மலி உவகை – மனம் நிறைந்த மகிழ்ச்சி. உயிர் - மக்கள். (செவியில் புகுஉம் என இயையும்). கதிரோன் - சூரியன். அவிர் ஒளி - விளங்கும் ஒளி. காட்டும் - வெளியிடும் மணி - சூரியகாந்தமணி. மைத்து. கறுத்து. கூர்ந்த - மிகுந்த. மாசு - அறியாமை. தீங்குறு – தீங்கின்றி – தீமைக்குரிய குறிகளின்றி தங்காநாள்மீன் – இயங்கும் தன்மை வாய்ந்த நட்சத்திரங்கள். தகைமையின் – நல்ல இயல்புடன். பொருந்தி – நல்நிமித்தத்துடன் பொருந்தி. பொய்யாது – தவறாது. ஊன் – உடல். உறு – மிகுதி.

91–100 வளி - காற்று கொட்கும் - சுழலும். மாதிரம் - மலை. நளி இருமுந்நீர் - நீர்செறிவுள்ள கடல். நலம் - பவளம், முத்து முதலிய பயன். கறவை - பாற்பசு. ஆர்த்தி – உண்பித்து. நிறை - நிறைய. பயன் - பழம். வெருஉப்பகை – அஞ்சுதற்குக் காரணமாகிய பகைமை. அஞர் - துயரம். கூன் - வளைந்த வடிவம். குறள் – குறுகிய வடிவம். மா - விலங்கு வடிவம். மருள் - அறிவற்ற பிறவி. மன்னுயிர் - மக்களுயிர். இகந்தோர் - கடந்தவர்.

78

போதி மூலம் பொருந்திய சிறப்பின்

நாதன் பாதம் நவை கெட ஏத்துதல்

பிறவி தோறும்
மறவேன், மடக்கொடி!—

மாதர்! நின்னால்
வருவன இவ் ஊர்
ஏது-நிகழ்ச்சி யாவும் பல உள;

ஆங்கு-அவை நிகழ்ந்த பின்னர் அல்லது,
பூங் கொடி மாதர்! பொருளுரை பொருந்தாய்:
ஆதி முதல்வன் அருந் துயர் கெடுக்கும்
பாதபங்கய மலை பரசினர் ஆதலின்
ஈங்கு-இவர் இருவரும், இளங்கொடி! நின்னோடு

ஓங்கு உயர் போதி உரவோன் திருந்து அடி
தொழுது வலம் கொண்டு, தொடர் வினை நீங்கி,
பழுது இல் நல் நெறிப் படர்குவர் காணாய்:
ஆர் உயிர் மருந்து ஆம் அமுதசுரபி எனும்
மா பெரும் பாத்திரம், மடக்கொடி! பெற்றனை;
மக்கள் தேவர் என இரு சார்க்கும்
ஒத்த முடிவின் ஓர் அறம் உரைக்கேன்,
பசிப் பிணி தீர்த்தல்' என்றே, அவரும்
தவப் பெரு நல் அறம் சாற்றினர்—ஆதலின்,
மடுத்த தீக் கொளிய மன் உயிர்ப் பசி கெட,
எடுத்தனள்

பாத்திரம், இளங்கொடி-தான்-என்.

101-110 போதி - அரசமரம். நவை - குற்றம். ஏது நிகழ்ச்சி - நல்லூழ் விளைவு. பொருளுரை - மெய்யறவுரை. பரசினர் - துதித்தனர்.

111-120 திருந்தடி - நற்றாள் தொடர்வினை - பலபிறவிகளிலும் தொடர்ந்து செல்லும் இருவினைகள். பழுதில் நன்னெறி - முத்திநெறி. இருசார்க்கும் - இருபகுதியினர்க்கும். முடிவின் ஓர் அறம் - முடிவான ஒப்பற்ற தருமத்தை. உரைக்கேன் - சொல்வேன். தவ - மிக, மடுத்த - மிகுந்த. தீக்கொளிய - தீயினை (வயிற்றில்) கொளுத்திய. தீயினைப் பொருத்தினாற் போன்ற எனினும் ஆம்.

13. ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை.

அறவண அடிகள் ஆபுத்திரன் வரலாற்றினை மணிமேகலைக்குக் கூறுவாராயினர்! "வாரணசிநகரில் அபஞ்சிகன் என்னும் மறையோன் வாழ்ந்தான். அவன் மனைவி சாலி என்பவள் கற்பு

நெறி வழுவிய குற்றத்தால் கடியப்பட்டனள். கருவுற்றிருந்த அவள் தன் பாவத்திற்குக் கழுவாய்நாடித் தென்குமரி நீராடப்

பலரொடு புறப்பட்டனள்.

செல்லும் வழியிடையில்

சூலுளைந்து

ஓர் ஆண் மகவினை ஈன்ருள். அக்குழந்தை தனது தீய ஒழுக் கத்திற்கு நினைப்பூட்டுமாதலால் ' தன்னைப் பலரும் இகழ்வரென் றெண்ணி, அதனை அங்குள்ள தோட்டத்தில் வைத்து நீங்கிருள். அங்குப் பசு ஒன்று வந்து அக்குழந்தைக்குப் பால் அளித்துக் காத்து நின்றது. பின் அந்நெறியில் பூதி என்னும் அந்தணன் ஒருவன் தன் மனைவியோடு செல்கின்றவன் அக்குழந்தையின் அழுகுரல் கேட்டு அதனை அணுகி மகிழ்ச்சியுடன் எடுத்துச் சென்று மகனுக வளர்த்தான்; அந்தணர்க்குரிய பல கலையும் நன்கு பயிற்றினன். இளம் பருவத்திலே பல நூலும் பயின்று முடித்த அம்மகன் ஒருநாள் வேள்வி புரிதலை மேற்கொண்ட ஓர் அந்தணன் வீட்டினுட்புக்கு, அங்கு வேள்வியிற் கொல்லப்பட இருந்த ஓர் ஆவினைக்கண்டு கருணைகொண்டு அதனைக் காக்கக் கருதி ஓர்புறம் மறைந்திருந்து, இரவில் யாருமறியாமல் அதனைக் கடத்திக் காடு நோக்கிச் சென்றனன். விழித்த மறையவர் வேள்விப் பசுவினைக் காணுமல், தேடிச் சென்று அவனைஆவுடன் அகப்படுத்தினர். அவனைப்பலரும் கோலால் அடித்து வருத்தினர். அப்பொழுது அப்பசு அவனை மிகவும் அடித்த வேள்வியாசிரிய னது குடலினைக் கொம்புகளால் கிழித்துப் புய்த்துக் காட்டினுள் கடுக ஓடிவிட்டது. அவனைப்பலரும் பசு மிக நன்மைபுரிவதால் அதனைக் கோறல் தீதென்று விளக்கினன். அவன்சொல் வேள்வியை இகழ்வதாக இருத்தலால், அவனை "இங்ஙனம் கூறும்நீ ஆவின்

மகன் என்று

சொல்லத்தக்கவனேயன்றி

மனிதன் என்று சொல்
லத்தக்கவன் அல்லே" என்று
சினந்துரைத்தனர். அதுகேட்ட
ஆபுத்திரன் "பல முனிவர்கள்
பல விலங்கின் வயிற்றுதித்தமை
யால் யான் ஆமகளுதலில்
இழுக்கென்னேயோ" என்று
ஏசினுன்.

அங்கிருந்த அந்தணருள்
ஒருவன், "இவனேத்
தீண்டன்மின்.

இவன் ஒழுக்கந்தவறியவள்
ஈன்ற மகன்.' சாலி எனபவள
குமரி யாடி மீண்டாள். அவளே

"நீ யார்" என்று யான்
வினவி னேன். அவள்தான்
கற்பிற் பிறழ்ந்து கணவனால்
கடியப்பெற்றுக்
குமரியாடி மீள்வதையும் ஒரு
ஆண்மகவினை ஈன்று
கொற்கையை அடுத்த
கோவலர்பாடியில் ஒரு
தோட்டத்தில் இட்டுவந்த
தையும் என்னிடம் சொல்லி
வருந்தினாள். அவள் கூறிய அவ்
விடத்திலே பூதி என்பவரால்
அவன் எடுத்துவரப்
பெற்றுள்ளமை

மையால் அவள் மகனே இவன். இவ்வுண்மையை அன்றே யான் கூறினால் இவனை யாவரும் வெறுப்பர் என்று எண்ணியே யான் கூறவில்லை." இவ்வுரை கேட்ட ஆபுத்திரன், "வசிட்டரும்

80

அகத்தியரும் தெய்வக் கணிகையாகிய திலோத்தமையி மக்களே, யான் சாலியின் மகனாதலில் இழுக்கென்னை?" என் ஏசினான். வளர்த்த பூதி அவனை இழுக்குடையவனென்றுகரு நீக்கினான். அவன் ஊர்தொறும் பிச்சையெடுப்புழி ஒருவரு பிச்சையிடாது கல்லை இட்டனர். பின் அவன் தென்மதுரை அடைந்து சிந்தா தேவியின் கோயிலின் முன்புள்ள அம்பலத்தி தங்கிப்பிச்சைஏற்று உணவினைக் குருடர் செவிடர்முதலியோர்க் அழைத்துஅளித்து எஞ்சியதனைத் தானுண்டு வாழ்ந்துவந்தான்.

'மா பெரும் பாத்திரம் மடக்கொடிக்கு அருளிய
ஆபுத்திரன் திறம், அணி-இழை! கேளாய்:
வாரணாசி ஓர் மறை ஓம்பாளன்,
ஆரண உவாத்தி, அபஞ்சிகன் என்போன்,
பார்ப்பனி சாலி காப்புக் கடைகழிந்து,
கொண்டோற் பிழைத்த தண்டம் அஞ்சி,
தென் திசைக் குமரி ஆடிய வருவோள்,
சூல் முதிர் பருவத்து, துஞ்சு இருள் இயவிடை
ஈன்ற குழவிக்கு இரங்காள் ஆகி,
தோன்றாத் துடவையின் இட்டனள் நீங்க—
தாய் இல் தூவாக் குழவித் துயர் கேட்டு, ஓர்
ஆ வந்து அணைந்து, ஆங்கு, அதன் துயர் தீர,
நாவான் நக்கி, நன் பால் ஊட்டி,
போகாது எழு-நாள் புறங்காத்து ஓம்ப—
வயனங்கோட்டில் ஓர் மறை ஓம்பாளன்,

1–10 பாத்திரம் - அமுதசுரபியை. மடக்கொடி – மணிமேகலை. அருளிய – கொடுத்த. திறம் – வரலாற்றினை. அணியிழை - மணிமேகலை. வாரணாசி – காசி. மறைஓம்பாளன் – வேதம் போற்றும் அந்தணன். ஆரண உவாத்தி - மறைஓதுவிப்பவன். பார்ப்பனி – (அந்தணனது) மனைவி. சாலி - பெயர். காப்புக் கடை கழிந்து - கற்பின் காவலாகிய நிறையின் எல்லையை நீங்கி - மனத்தினை யடக்கி நிறுத்தாமல். பிழைத்த - பிறழ்ந்து ஒழுகியதற்குரிய. தண்டம் - தண்டனைக்கு. குமரி ஆடிய - குமரித்துறையில் நீராடுதற்கு. சூல் - கருப்பம் துஞ்சிருள் - மிக்க இருட்டினை உடைய. இயவிடை - வழியிடையில். தோன்றாத் துடவையில் - உள்ளே உள்ளவை வெளியில் உள்ளோர்க்குப் புலப்படாத தோட்டத்தின்கண். இட்டனள் - வைத்துவிட்டு.

11–15 தூவாக்குழவி - உண்ணாத குழந்தையின். துயர் - பசித்துயரால் அழும் குரல். புறங்காத்து ஓம்ப – நன்கு பாதுகாத்து நிற்ப. வயனங்கோடு – ஓர் ஊர்.

இயவிடை வருவோன், இளம்பூதி என்போன்,
குழவி ஏங்கிய கூக் குரல் கேட்டு,
கழுமிய துன்பமொடு கண்ணீர் உகுத்து-ஆங்கு,
"ஆ மகன் அல்லன்; என் மகன்" என்றே,
காதலி-தன்னொடு கைதொழுது எடுத்து,
"நம்பி பிறந்தான்; பொலிக, நம் கிளை!" என,
தம் பதிப் பெயர்ந்து, தமரொடும் கூடி,
மார்பிடை முந்நூல் வனையா முன்னர்,
நாவிடை நல்-நூல் நன்கனம் நவிற்றி,
ஓத்து உடை அந்தணர்க்கு ஒப்பவை எல்லாம்,
நாத் தொலைவு இன்றி, நன்கனம் அறிந்த பின்—
அப் பதி-தன்னுள் ஓர் அந்தணன் மனைவயின்
புக்கோன்—ஆங்கு, புலை சூழ் வேள்வியில்,
குரூஉத் தொடை மாலை கோட்டிடைச் சுற்றி,
வெரூஉப் பகை அஞ்சி, வெய்து உயிர்த்துப் புலம்பி,
கொலை நவில் வேட்டுவர் கொடுமரம் அஞ்சி,
வலையிடைப் பட்ட மானே போன்று, ஆங்கு,
அஞ்சி நின்று அழைக்கும் ஆத் துயர் கண்டு—
நெஞ்சு நடுக்குற்று, நெடுங் கணீர் உகுத்து,
"கள்ள வினையின், கடுந் துயர் பாழ்பட,

நள் இருள் கொண்டு நடக்குவன்" என்னும்
உள்ளம் கரந்து, ஆங்கு, ஒரு புடை ஒதுங்கி,

16–20 இயவிடை – அவ்வழியில். ஏங்கிய - அழுத. கூஉக்குரல் – 'கூஉ' என்னும் ஒலி. (ஏங்கிய குழவிக்கூஉக்குரல் என இயையும்.) கழுமிய – பொருந்திய. உகுத்து – சொரிந்து. கைதொழுது -(தெய்வத்தைக்) கைகூப்பி வணங்கி.

21–30 நம்பி - விரும்புதற்குரியவன் - புதல்வன். பொலிக – மகிழ்க. பதிப்பெயர்ந்து - ஊர்க்குத் திரும்பிச் சென்று. முந்நூல் – பூணூல். வனையாமுன்னர் - அணிதற்கு முன்னே. நவிற்றி – ஓதுவிக்க : எச்சத்திரிபு. ஒத்து - வேதத்தை. ஒப்பவை – பொருந்திய கலைகள். தொலைவு - தோல்வி - ஆற்றலின்மை. இன்றி – இல்லாமல் : எச்சத்திரிபு. புக்கோன் - புகுந்தவன்- ஆபுத்திரன். புலை - புலால் உண்ணுதல். சூழ் - எண்ணுகின்ற. குரூஉ - நிறம் பொருந்திய. தொடை - தொடுத்தலையுடைய. கோட்டிடை - கொம்பினில், சுற்றி - சுற்றப்பட்டு. வெரூஉ - அஞ்சுதற்குரிய. வெய்து உயிர்த்து-வெம்மையாகப் பெருமூச்சு விட்டுக்கொண்டு. புலம்பி - வருந்தி.

31–37 நவில் - கற்ற. கொடுமரம் – வில். அழைக்கும் - கதறுகின்ற. உகுத்து - சொரிந்து. கள்ளவினையில் - களவுத் தொழிலால். நள்ளிருள் - செறிந்த இருட்டினை உடைய இரவினில். நடக்குவன் - செல்வேன் (கள்ளவினையில் கொண்டு நடக்குவன் என்க). உள்ளம் - எண்ணம்.

அல்லிடை ஆக் கொண்டு, அப் பதி அகன்றேன்,
கல் அதர் அத்தம் கடவா நின்றுழி—
அடர்க் குறு மாக்களொடு அந்தணர் எல்லாம்
கடத்திடை ஆவொடு கையகப்படுத்தி,
"ஆ கொண்டு இந்த ஆர் இடைக் கழிய,
நீச மகன் அல்லாய்? நிகழ்ந்ததை உரையாய்;
புலைச் சிறு மகனே! போக்கப்படுதி" என்று,
அலைக் கோல்-அதனால் அறைந்தனர் கேட்ப,
ஆட்டி நின்று அலைக்கும் அந்தணர் உவாத்தியைக்
கோட்டினில் குத்தி, குடர் புய்த்துறுத்து,
காட்டிடை நல் ஆக் கதழ்ந்து, கிளர்ந்து ஓட—
ஆபுத்திரன்-தான் ஆங்கு-அவர்க்கு உரைப்போன்,
"நோவன செய்யன்மின்; நொடிவன கேண்மின்;
விடு நில மருங்கில் படு புல் ஆர்ந்து,
நெடு நில மருங்கின் மக்கட்கு எல்லாம்,
பிறந்த நாள் தொட்டும், சிறந்த தன் தீம் பால்
அறம் தரு நெஞ்சோடு அருள் சுரந்து ஊட்டும்
இதனொடு வந்த செற்றம் என்னை ?
முது மறை அந்தணிர்! முன்னியது உரைமோ?"
"பொன் அணி நேமி வலம் கொள் சக்கரக் கை
மன் உயிர் முதல்வன் மகன் எமக்கு அருளிய
அரு மறை நல் நூல் அறியாது இகழ்ந்தனை;
தெருமரல் உள்ளத்துச் சிறியை நீ அவ்

38–40 அல் - இருள். கல்அதர் அத்தம் - பரற்கல்லினை உடைய சி[illegible] நெறிகளைக்கொண்ட அரிய நெறி. கடவா நின்றுழி - கடந்[illegible] செல்லும்போது. அடர்க்குறுமாக்களோடு — நெருக்கும் மா[illegible]

டாகவோடு.

41–50 கடத்திடை – அரிய நெறியினில். ஆரிடை – அரியநெறியினில். கழிய - செல்வதனால். அல்லாய்? - அல்லையோ? புலைச் சிறு மகனே - (ஆவின்) புலாலுண்ணுதலையுடைய இழிந்தவனே! (ஆவினைப் புலால்உண்டற்கே கவர்ந்தனை என்று வெகுண்டு கூறியவாறு). போக்கப்படுதி – ஒழிக்கப்படுவாய். அலைக் கோல் - அலைக்கும் தடி. ஆட்டி அலைக்கும் - மிக வருத்து கின்ற. உவாத்தி - ஆசிரியன். குடர்புய்த்து - குடலைக் கிழித்து எடுத்து. கதழ்ந்து - விரைவாக. நோவன - துன்பப் படுதற்குரிய செயல்களை. நொடிவன - (நான்) சொல்வன வற்றை.

51–60 விடுநிலம் - பயிர் செய்யாது விடப்பட நிலத்தில். படுபுல் - முளைத்துள்ள புற்களை. ஆர்ந்து - தின்று. தொட்டு - தொடங்கி. தீம்பால் - இனியபாலை. செற்றம்-பகைமை. முன்னியது - கருதியதனை. உரைமோ - உரையுமோ - உரை மின்: ; ஓ அசைநிலை. நேமி - சக்கரத்தின் சூட்டு. வலம் - வெற்றி. மகன் - பிரமன். இகழ்ந்தனை - (வேள்வியை) இகழ்ந்து கூறினாய். தெருமரல் - கலக்கம்.

ஆ மகன் ஆதற்கு ஒத்தனை; அறியா
நீ மகன் அல்லாய்; கேள்" என இகழ்தலும்—
"ஆன் மகன், அசலன்; மான் மகன், சிருங்கி;
புலி மகன், விரிஞ்சி; புரையோர் போற்றும்
நரி மகன் அல்லனோ, கேசகம்பளன்?
ஈங்கு-இவர் நும் குலத்து இருடி கணங்கள் என்று
ஓங்கு உயர் பெருஞ் சிறப்பு உரைத்தலும் உண்டால்;
ஆவொடு வந்த அழி குலம் உண்டோ,
நான்மறை மாக்காள்! நல்-நூல்அகத்து?" என—
ஆங்கு-அவர்-தம்முள் ஓர் அந்தணன் உரைக்கும்,
"ஈங்கு-இவன்-தன் பிறப்பு யான் அறிகுவன்" என:
"நடவை வருத்தமொடு நல்கூர் மேனியள்
வடமொழியாட்டி மறை முறை எய்தி,
குமரி பாதம் கொள்கையின் வணங்கி,
தமரின் தீர்ந்த சாலி என்போள்-தனை,
'யாது, நின் ஊர்? ஈங்கு என் வரவு?' என,
மா மறையாட்டி வரு திறம் உரைக்கும்:
'வாரணசி ஓர் மா மறை முதல்வன்,
ஆரண உவாத்தி, அரும் பெறல் மனைவி, யான்;
பார்ப்பார்க்கு ஒவ்வாப் பண்பின் ஒழுகி,
காப்புக் கடைகழிந்து, கணவனை இழந்தேன்;
எறி பயம் உடைமையின், இரியல் மாக்களொடு
தெற்கண் குமரி ஆடிய வருவேன்,
பொன் தேர்ச் செழியன் கொற்கை அம் பேர் ஊர்க்

61-70 அவ் ஆமகன் ஆதற்கு. (நீ பிறந்த அணிமைநாளில் உனக்குப் பால் சுரந்தளித்துப் பேணிய) அப் பசுவின் மகனாக இருத்தலுக்கு-விலங்காக இருத்தலுக்கு. மகன் - மனிதன். இருடி கணங்கள் - முனிவர் கூட்டத்தினர். ஆவொடுவந்த அழிகுலம் உண்டோ? - பசுவின் மகனாதல்பற்றிக் கூறத்தக்க இழிந்த குலமும் உளதோ? நன்றால் - இகழ்ச்சிக் குறிப்பு.

71-80 நடவை வருத்தமொடு - வழிநடந்த அயர்வோடு. நல்கூர் மேனியள் - மெலிந்த உடம்பினை உடையவளாய். மறைமுறை-வேதநெறி. குமரி - குமரித்தெய்வம். கொள்கையின் - கருத்தான்றி; விதிப்படி எனலும் ஆம். தமரில் தீர்ந்த - உறவினரைப் பிரிந்துவந்த. மாமறையாட்டி - பார்ப்பனி. ஆரணம்-வேதம். ஒவ்வாப்பண்பின் - பொருந்தாத திறத்தினால்.

81-84 காப்புக்கடை கழிந்து-கற்பின் காவலாகிய நிறையின்எல்லையை மீறி ஒழுகி. இழந்தேன் - நீங்கினவளாயினேன். நெறி பயம் உடைமையின் - மறுமைக்கதியில் எய்தும் துன்பம்பற்றிய அச்சம் உடைமையால்; எறிபயம் எனப் பிரித்து அடிப்பதில் உளதாம் பயம் எனினும் கொள்ளலாம். இரியல் மாக்கள் - ஒழுக்கம் கெட்டுப்போய மக்கள். தெற்கண் - தென்றிசையின் கண் உள்ள. செழியன் - பாண்டியன்.

காவதம் கடந்து, கோவலர் இருக்கையின்,
ஈன்ற குழவிக்கு இரங்கேன் ஆகி,
தோன்றாத் துடவையின் இட்டனன் போந்தேன்;
செல் கதி உண்டோ, தீவினையேற்கு?' என்று,
அல்லல் உற்று அழுத அவள் மகன், ஈங்கு-இவன்;
சொல்லுதல் தேற்றேன், சொல் பயம் இன்மையின்;
புல்லல் ஓம்பன்மின், புலை மகன் இவன்" என—
ஆபுத்திரன், பின்பு, அமர் நகை செய்து,
"மா மறை மாக்கள் வரும் குலம் கேண்மோ:
முது மறை முதல்வன் முன்னர்த் தோன்றிய
கடவுள்-கணிகை காதல் அம் சிறுவர்
அரு மறை முதல்வர் அந்தணர் இருவரும்;
புரி நூல் மார்பீர்! பொய்-உரை ஆமோ?
சாலிக்கு உண்டோ, தவறு?" என உரைத்து,
நான்மறை மாக்களை நகுவனன் நிற்ப—
"ஓதல் அந்தணர்க்கு ஒவ்வான்" என்றே
தாதை பூதியும் தன் மனை கடிதர—
"ஆ கவர் கள்வன்" என்று அந்தணர் உறைதரும்
கிராமம் எங்கணும் கடிஞையில் கல் இட—
மிக்க செல்வத்து விளங்கியோர் வாழும்
தக்கண மதுரை தான் சென்று எய்தி,
சிந்தா விளக்கின் செழுங் கலை நியமத்து

85-90 தோன்றாத்துடவை – உள்ளிருக்கும் பொருள் புறத்தார்க்கு
தோன்றாத (செறிந்த) தோட்டம். இட்டனன் போந்தே
இட்டுவந்துள்ளேன். சொல்லுதல் தேற்றேன் - முன்
இதனை நும்மிடம் சொல்லத் துணிந்திலேன். சொற்பயம் இ
மையின் - நான் சொல்வதனால் நன்மை இல்லையாகும்
லால் - ஆபுத்திரனுக்குத் தீங்குண்டாகும் ஆதலால். (
வர்க்குத் தீங்குபயக்கும் சொல் சொல்லலாகாது என்பது நு
றுணிபு: "வாய்மை எனப்படுவ தியாதெனில் யாதொன்
தீமை இலாத சொலல்.")

91-100 பல்லல் ஒம்பன்மின் -தீண்டன்மின். புலைமகன் - புலையன். அ

நகை - புன்முறுவல். மாமறை மாக்கள் - வேத இருடிக
மறை முதல்வன் - பிரமன். கடவுட்கணிகை - தெய்வப் ப
தையாகிய திலோத்தமையின். அந்தணர் இருவர் - பார்ப்ப
ஆகிய வசிட்டரும் அகத்தியரும். புரிநூல்மார்பீர் - பூணு
அணிந்த மார்பினை உடையீர்! நகுவனன் - நகைத்
ஒவ்வான் - பொருந்தாதவன்.

101–106 தாதை - ஆபுத்திரனை வளர்த்த தந்தை ஆகிய. மனைகடி த
வீட்டினிற்புகாது நீக்க. கடிஞையில் - பிச்சைப் பாத்திரத்தி
செல்வத்து - செல்வத்திறல். தக்கணமதுரை - தென் திசை
கண் உள்ள மதுரை - நான்மாடக் கூடல். சிந்தாவிளக்கின்
சிந்தாவிளக்கு என்னும் பெயருடைய கலைத்தெய்வத்தி
செழுங்கலை நியமத்து - வளஞ்சான்ற கலைக்கோயிலின

அந்தில் முன்றில் அம்பலப் பீடிகைத்
தங்கினன் வதிந்து, அத் தக்கணப் பேர் ஊர்,
ஐயக் கடிஞை கையின் ஏந்தி,
மை அறு சிறப்பின் மனைதொறும் மறுகி,
"காணார், கேளார், கால் முடப்பட்டோர்,
பேணுநர் இல்லோர், பிணி நடுக்குற்றோர்,
யாவரும் வருக" என்று இசைத்து, உடன் ஊட்டி,
உண்டு ஒழி மிச்சில் உண்டு, ஓடு தலை மடுத்து,
கண்படைகொள்ளும், காவலன்-தான்-என்.'

107–110 அந்தில் - அசைநிலை. முன்றில் - முன்னிடத்திலுள்ள. அம்பலப்பீடிகை - பீடிகைபோல் உயர்ந்த அம்பலத்தின்கண். (இலக்கணப் போலியாகக்கொண்டு, பீடிகையினது அம்பலம் எனக் கொள்ளினும் ஆம்: பீடிகையை உடைய அம்பலம் என்றவாறும்). வதிந்து - தங்கி. தக்கணப் பேரூர் - மதுரையின்கண். ஐயம் - பிச்சை. மை - குற்றம். மறுகி – சுழன்று திரிந்து.

111–115 காணார் - குருடர். கேளார்-செவிடர். பேணுநர்இல்லோர் - ஆதரிப்போர் அற்ற அகதிகள். இசைத்து - அழைத்து. உடன் ஊட்டி - ஒருங்கே உண்பித்து. மிச்சில் - எஞ்சியஉணவினை. ஓடு - பிச்சைப் பாத்திரம். தலை மடுத்து - தலைக்கு (அணையாக) வைத்துக்கொண்டு. கண்படை - உறக்கம். காவலன் - (உணவளித்துக்) காப்பவனாகிய ஆபுத்திரன்.

14. பாத்திர மரபு கூறிய காதை

ஆபுத்திரன் அவ்வாறு காலங்கழித்து வருகையில் ஒருநாள் இருள் செறிந்த நள்ளிரவில் மழையால் வருந்தி மிக்க பசியுடன் வந்த சிலர் அவ் அம்பலத்தை அடைந்து ஆபுத்திரனிடம் உணவிரந்தனர். வழக்கம்போல் அன்றும் அங்குள்ள குருடர் முதலியோர்க்கு உணவளித்தபின் எஞ்சியதைத் தானுண்டு பிச்சைப் பாத்திரத்தைக் கழுவித் தலையணையாக வைத்துறங்கிய அவன் அவர்கட்கு உதவ உணவின்மையால் வருந்தினன். அங்குள்ள சிந்தாதேவி அருள்கூர்ந்து அமுதசுரபி என்னும் தெய்வப் பாத்திரத்தை அவனுக்கு அளித்தது. அது உணவினை வற்றுமற் சுரக்கும் பெருமை வாய்ந்தது. அவன் அத்தெய்வத்தைப் போற்றி அப் பாத்திரத்தின் உதவியால் வந்தோர் பசி தீர்த்தான். அன்று முதல் நாள்தோறும் எவ்வுயிர்கட்கும் உண்பொருள் உதவி வருவானாயினன். அவ்வம்பலம் உண்ணும் சத்தம் மிக்கு விளங்

கிற்று. அவனது பேரறத்தினால் இந்திரனது பாண்டு கம்பளம் நடுங்கிற்று. எனவே தன்னிலும் பெரிய அறத்தகையாளன் ஒருவனால் தன் பதவிக்கு இடுக்கண் விளைதலைப் பொருத இந்திரன் அவனை இவ்வறஞ் செய்தலினின்றும் விலக்கக்கருதி, ஓர் முது மறையோன் வடிவினில் அணுகி நின்று "யான் இந்திரன்; உனக்கு வேண்டிய வரம் தருவேன்" என்றனன். அதுகேட்ட ஆபுத்திரன் "என் கையில் உள்ள தெய்வப் பாத்திரம் பலரது பசியும் போக்கி மகிழச் செய்கின்றது. இத்தகைய அறம் செய்தற்கு நின் நாட்டில் இடமின்று, நீ கொடுக்கும் வரத்தை யான் வேண்டேன்" என்றனன். இந்திரன் வெகுண்டு, ஆபுத்திரனது அறத்திற்கு இடனில்லாத வகையில் நாட்டினைச் செழிக்கச் செயதனன். ஒருவரும் அவனிடம் உணவருந்த வந்திலர். அவன் வருந்தி ஊர்தோறும் சென்று உணவினைப் பெறுவோரைத் தேடினான். அவன் போக்குப் பலர்க்கும் வியப்பளித்தது. அவன் ஏனென்று கேட்பாரும் இல்லாமல் அலைந்தான். அந்நிலையில் கப்பலில் வந்த சிலர் ஆபுத்திரனிடம் "உனது அறத்தினை நீ சாவக நாட்டில் நன்கு புரியலாம். அங்கு வற்கடம்மிகுந்து மன்னுயிர் மடிகின்றன" என்றனர். உடனே அவன் வங்கமேறிச் சாவகம் செல்லலாயினன். காற்றின் கடுமையால் கடல் கொந்தளித்தமையால் அக் கப்பல் மணிபல்லவத் தீவில் நிறுத்தப்பட்டது. பலரும் தீவில் இறங்கினமையால் அருடன் ஆபுத்திரனும் இறங்கினான். இறங்கிய பலரும் திரும்பிவந்து கலமேறினர், ஆபுத்திரன் வராமல் தாமதித்தனன். இருண்ட இரவில் யாவரும் வந்துவிட்டனரென்றெண்ணிக் கப்பல் செலுத்தப்பட்டது. பின் கப்பல் சென்றமையறிந்த ஆபுத்திரன் அங்கு மக்கள் இல்லாமையால், அறம் செய்ய வழியின்றி வருந்தினான். அது கப்பல் வழங்குதல் அற்ற தீவாதலால் வேற்றிடம் செல்லவும் இயலாத நிலையில், தன் அமுதசுரபியால் பிறர் பசியைத் தணித்தல் இன்றித் தான் உண்டு வாழ விரும்பாமல், அப்பாத்திரத்தினைக் கோமுகிப் பொய்கையில் விட்டனன்.

அப்பொழுது ஆண்டுதோறும் ஒருமுறை வெளிவருமாறும் அறம் சிறந்தோர்வரின் அவ்ர் கையிற் புகுமாறும் கூறினன். பின் தான் உண்ணுநோன்பினை மேற்கொண்டு உயிர்நீப்பான் ஆயினன். அங்குச் சென்ற யான் அவனுற்ற துன்பத்தை வினுவ அவன் உற்றதெல்லாங் கூறினன். பின் சாவகநாட்டினர் உயிர்களைக் காக்கும் எண்ணத்துடன் இறந்த அவன் சாவக நாட்டரசனருகில் மண்முக முனிவனது ஆவயிற்றில் தோன்றினன்.

87

'ஆங்கு-அவற்கு ஒரு நாள், அம்பலப் பீடிகை,
பூங் கொடி நல்லாய்! புகுந்தது கேளாய்:

மாரி நடு நாள், வல் இருள் மயக்கத்து,
ஆர் இடை உழந்தோர் அம்பலம் மரீஇ,
துயில்வோன்-தன்னைத் தொழுதனர் ஏத்தி,
“வயிறு காய் பெரும் பசி மலைக்கும்” என்றலும்,
ஏற்றூண் அல்லது, வேற்றூண் இல்லோன்,
ஆற்றுவது காணன், ஆர் அஞர் எய்த—

"கேள் இது-மாதோ; கெடுக, நின் தீது" என,
யாவரும் ஏத்தும் இருங் கலை நியமத்துத்
தேவி சிந்தாவிளக்குத் தோன்றி,
"ஏடா! அழியல்; எழுந்து, இது கொள்ளாய்;
நாடு வறம் கூரினும், இவ் ஓடு வறம் கூராது;
வாங்குநர் கைஅகம் வருந்துதல் அல்லது,
தான் தொலைவு இல்லாத் தகைமையது" என்றே,
தன் கைப் பாத்திரம் அவன் கைக் கொடுத்தலும் —
"சிந்தாதேவி! செழுங் கலை நியமித்து
நந்தா விளக்கே! நாமிசைப் பாவாய்!
வானோர் தலைவி!
மண்ணோர் முதல்வி!
ஏனோர் உற்ற இடர்
களைவாய்!" என,
தான் தொழுது ஏத்தி,
தலைவியை வணங்கி,
ஆங்கு-அவர் பசி தீர்த்து,
அந் நாள் தொட்டு

1–10

அம்பலப் பீடிகை – பீடிகைபோலுயர்ந்த மன்றத்தின்கண். புகுந்தது – எய்திய செய்தியை. நடுநாள் – நள்ளிரவில். ஆரிடை – அரியவழியில். உழந்தோர் – வருத்தமுற்றவர். மரீஇ – பொருந்தி. துயில்வோன் – ஆபுத்திரன். தொழுதனர் – தொழுது. மலைக்கும் – அடர்க்கும் – துன்புறுத்தும். ஏற்றாண் – பிச்சை ஏற்ற உணவு. ஆற்றுவது – உதவும் பொருள். ஆர் அஞர் – மிக்க வருத்தம். மாது, ஓ – அசைநிலைகள். நியமம் – கோயில்.

11–20 சிந்தாவிளக்கு – கலைத்தெய்வத்தின் பெயர்: ஏடா – முன்னிலைப் பெயர்: அழியல் – மனம் கலங்காதே, இது – இப்பாத்திரத்தினை. கொள்ளாய் – கொள். வறம்கூரினும் – வறட்சி மிகினும். வாங்குநர் கையகம் – உணவினை எடுப்பவரது அகங்கை. தான் – இப்பாத்திரம். தொலைவு – அழிவு – உணவற்றுப் போதல். தகைமையது – இயல்பினது. என்று – என்றுசொல்லி. தன் கைப் பாத்திரம் – தன் கையிலிருந்த அமுதசுரபியை. நந்தா – அவியாத. ஏனோர் – ஏனையோர். களைவாய் ! – நீக்குவோய் ! என – என்று கூறி.

21–22 ஏத்தி - துதித்து.
தொடங்கி.
தலைவி – இறைவி - சிந்தாதேவி. தொட்டு–

88

வாங்கு கை வருந்த மன் உயிர் ஓம்பலின்,
மக்களும், மாவும், மரம்
சேர் பறவையும்,
தொக்கு உடன் ஈண்டிச்
சூழ்ந்தன விடாஅ,
பழு மரத்து ஈண்டிய
பறவையின் எழூஉம்

இழுமென் சும்மை இடை இன்று ஒலிப்ப—
ஈண்டுநீர் ஞாலத்து இவன் செயல் இந்திரன்

பாண்டு கம்பளம்
துளக்கியது ஆதலின்,
தளர்ந்த நடையின்
தண்டு கால் ஊன்றி,
வளைந்த யாக்கை ஓர்
மறையோன் ஆகி,

மா இரு ஞாலத்து, மன் உயிர் ஓம்பும்
ஆர் உயிர் முதல்வன்-தன் முன் தோன்றி—

“இந்திரன் வந்தேன்;
யாது, நின் கருத்து ?
உன் பெரும் தானத்து
உறு பயன் கொள்க” என—

வெள்ளை மகன் போல்,
விலா இற நக்கு-ஈங்கு,

எள்ளினன், "போம்"
என்று எடுத்து உரை
செய்வோன்,
"ஈண்டுச் செய் வினை
ஆண்டு நுகர்ந்திருத்தல்
காண்தகு சிறப்பின் நும்
கடவுளர் அல்லது,
அறம் செய் மாக்கள்,
புறங்காத்து ஓம்புநர்,
நல் தவம் செய்வோர், பற்று அற
முயல்வோர்,
யாவரும் இல்லாத் தேவர்

23–30 வாங்குகை - உணவினை எடுக்கும் (தனது) கை. மாவும் – விலங்கும். ஒருங்கு தொக்கு ஈண்டி - ஒருமித்துக் கூடித் திரண்டு; ஒரு பொருட் பன்மொழி. பழுமரத்து - பழுத்த மரத்தின்கண். எழூஉம் - எழுப்புகின்ற. இழும் - ஒலிக்குறிப்பு. சும்மை - ஒலி. இடை இன்றி - இடைவிடுதல் இல்லாமல். ஈண்டு நீர் - நீர் செறிந்த கடல். ஞாலம் - மண் உலகத்தில். பாண்டு கம்பளம் - வெண்ணிறக் கம்பளமாகிய இந்திரனது ஆசனத்தை. துளக்கியது - நடுக்கியது. (இது இந்திரனது பதவிக்குத் துளக்கமுண்டாதற்கு அறிகுறியாம்.) நடையின் - நடையோடு. தண்டு - ஊன்றுகோல். கால் – கால் ஆக.

31–40 யாக்கை - உடம்பினை உடைய. மா இருஞாலத்து - உலகம் முழுவதிலும் உள்ள. மன்னுயிர் - உயிர்வருக்கம் - பிராணிகள். ஆருயிர் முதல்வன் - அரிய உயிர்களைக் காக்கும் தலைவன் - ஆபுத்திரன். உறு - மிக்க. வெள்ளைமகன் - அறிவற்ற மனிதன் - பயனில சொல்லிப் பொழுதுபோக்கும் வீண்மகன். விலா இற - விலாஎலும்பு வருந்த. நக்கு - சிரித்து, எள்ளினன் – இகழ்ந்து. போம் - செல்மின். எடுத்து - விளக்கி. காண்டகு – காணத்தக்க. புறம்காத்து ஓம்புநர் - (விருந்தினரைப்) போற்றிக் காப்பவர்.

41–42 நல்நாடு – நன்மையற்ற நாடு; எதிர்மறைக் குறிப்பு. விறல் – பெருஞ் சிறப்பற்ற; எதிர்மறைக் குறிப்பு.

பெரு

இறைவன் ஆகிய பெரு விறல் வேந்தே!
வருந்தி வந்தோர் அரும் பசி களைந்து, அவர்
திருந்து முகம் காட்டும், என் தெய்வக் கடிஞை;
உண்டிகொல்லோ, உடுப்பனகொல்லோ,
பெண்டிர்கொல்லோ, பேணுநர்கொல்லோ,
யாவை ஈங்கு அளிப்பன, தேவர்கோன்?" என்றலும்—
"புரப்போன் பாத்திரம் பொருந்து ஊண் சுரந்து-ஈங்கு,
இரப்போர்க் காணாது ஏமாந்திருப்ப,
நிரப்பு இன்று எய்திய, நீள் நிலம் அடங்கலும்,
பரப்பு நீரால் பல் வளம் சுரக்க!" என,
ஆங்கு-அவன் பொருட்டால், ஆயிரம்கண்ணோன்,
ஓங்கு உயர் பெருஞ் சிறப்பு உலகோர்க்கு அளித்தலும்—
பன்னீராண்டு, பாண்டி நல் நாடு,
மன் உயிர் மடிய, மழை வளம் இழந்தது,
வசித் தொழில் உதவ, மா நிலம் கொழுப்ப,
பசிப்பு உயிர் அறியாப் பான்மைத்துஆகலின்,
ஆர் உயிர் ஓம்புநன் அம்பலப் பீடிகை
ஊண் ஒலி அரவம் ஒடுங்கியது ஆகி;
விடரும், தூர்த்தரும், விட்டேற்றாளரும்,
நடவை மாக்களும், நகையொடு வைகி;

வட்டும், சூதும், வம்பக்

கோட்டியும்,

43-50 திருந்து முகம் - மலர்ந்த முகம். காட்டும் - காட்டுகின்றது. புரப்போன் - உயிர் காவலனாகிய ஆபுத்திரன். (ஊண் சுரந்து பொழிந்து என இயையும்.) பொழிந்து - பொழிய. ஏமாந்து - ஏங்கி.

51-60 நிரப்பு – வறுமை. இன்றி - இல்லாமல். எய்திய - ஆபுத்திரன் பொருந்தி வாழ்கின்ற. அடங்கலும் - முழுமையும். பரப்பு நீரால் - நீர்ப்பரப்பினால். அவன் பொருட்டால் - ஆபுத்திரன் அறம் செய்யாமல் இடையூறு செய்தற்பொருட்டு. (பன்னீராண்டு மன்னுயிர்மடிய மழைவளம் இழந்தது ஆகிய பாண்டிநன்னாடு என இயையும்). வசி தொழில் உதவ - மழை உழவு தொழிற்குத் தக்க பருவத்தே பெய்து உதவுதலால். (வசித்தொழில் என்புழி வல்லொற்று எதுகை நோக்கிவந்த விரித்தல் விகாரமாம்.) கொழுப்ப - செழித்தலால். பசிப்பு - பசி நோயை - வறுமையை. ஓம்புநன் - ஆபுத்திரன் தங்கியிருந்த.

ஊண் - உண்ணுதலால் உளதாகின்ற. ஒலியரவம் - மிக்கஒலி.

61-63 விடர் - காமவெறியர். தூர்த்தர் - பரத்தையர் மாட்டு

க்காமம்

நுகர்வோர்.
கூறுவோர்.

விட்டேற்ருளர் - பிறர்மேல் பழியை ஏறிட்டுக் கடவை மாக்கள் - நிலையின்றித் திரியும் வம்ப

ாக்கள், வைகி - தங்கப்பெற்று. வட்டு - உண்டை உருட்டி விளையாடுதல். சூது - சூதாடல். வம்பக்கோட்டி - பலரும் கூடியிருந்து வீண்பேச்சுப் பேசிக்களித்தல்.

முட்டா வாழ்க்கை முறைமையது ஆக—
ஆபுத்திரன்-தான் அம்பலம் நீங்கி,
ஊர்ஊர்தோறும் உண்போர் விஞஅய்,

“யார் இவன்?” என்றே யாவரும் இகழ்ந்து-ஆங்கு,
அருந்த ஏமாந்த ஆர் உயிர் முதல்வனே,
“இருந்தாய் நீயோ!” என்பார் இன்மையின்,
திருவின் செல்வம் பெருங் கடல் கொள்ள,
ஒரு தனி வரூஉம் பெருமகன் போல,
தானே தமியன் வருவோன்-தன் முன்,
மா நீர் வங்கம் வந்தோர் வணங்கி,
“சாவக நல் நாட்டு, தண் பெயல் மறுத்தலின்,
ஊன் உயிர் மடிந்தது, உரவோய்!” என்றலும்—
“அமரர் கோன் ஆணையின் அருந்துவோர்ப் பெறுது,
குமரி மூத்த என் பாத்திரம் ஏந்தி,
அங்கு அந் நாட்டுப் புகுவது என் கருத்து” என,
வங்க மாக்களொடு மகிழ்வுடன் ஏறி,
கால் விசை கடுகக் கடல் கலக்குறுதலின்,
மால் இதை மணிபல்லவத்திடை வீழ்த்துத்
தங்கியது ஒரு நாள், தான் ஆங்கு இழிந்தனன்;

64–70

முட்டாவாழ்க்கை முறைமையது ஆக - குன்றுதல் இல்லாத (மக்களின்)வாழ்க்கையினை அடிப்பட உடையதாயினமை யால். (அம்பலப் பீடிகை ஆகி வைகி முறைமையதாக என இயையும்.) உண்போர் வினஅய் - என்னிடம் உணவேற் றுண்போர் யாரேனும் உளரோஎன வினவியதனல். இகழ்ந்து- இகழப்பெற்று. அருந்த - அருத்த - உண்பிக்க; மெலித்தல் விகாரம். ஏமாந்த - ஏங்கியுள்ள. நீ இருந்தாயோ என்போர் - நீ சேமமாக உள்ளாயோ என்று கேட்போர் - மதிப்போர். திருவின் செல்வம் - திருவாகிய செல்வம் - மா பெரும் செல் வத்தினை.

71–80 ஒருதனி - உடன் வருவார் ஒருவரும் இன்றி. பெருமகன் - அரசன். தமியன் - தனிமையனுகி. தானே - தான் மட்டும். (ஒருதனி, தானே தமியன் என்பன தனிமைச் சிறப்புணர நின் றன.) பெயல் மறுத்தலின் - மழையின்மையால். ஊன் உயிர் - உடலோடுகூடிய உயிரினம் - பிராணி வருக்கம். உரவோய்! - அறத்தினில் வலியோய்! அருந்துவோர் - (ஏற்று) உண் போரை. குமரி மூத்த - மணம் பெறுமல் குமரிப்பருவம் கடந் துள்ள - பயன்படாமல் வீணே கழிந்த. வங்கம் - கப்பல். மாக்களோடு - கப்பலால் வந்து மீளும் வேற்று நாட்டு மக்க ளோடு; அன்றி, கப்பலில் செல்லும் வணிகர் முதலிய கடல் கடப்பாரோடு எனலுமாம். கால் - காற்று. விசை கடுக - வேகம் மிகுதலால். கலக்குறுதலில் - கலக்கமுறுதலால்.

81–82 மால் இதை - பெரிய பாயை, வீழ்த்து - இறக்கி, (வங்கம் மணி பல்லவத்திடை ஒருநாள் தங்கியது என்க.) தான் - ஆபுத்தி ரன். இழிந்தனன் - அத்தீவில் இறங்கினன்.

"இழிந்தோன் ஏறினன்" என்று இதை எடுத்து,
வழங்கு நீர் வங்கம் வல் இருள் போதலும்—
வங்கம் போய பின், வருந்து துயர் எய்தி,
அங்கு வாழ்வோர் யாவரும் இன்மையின்,
"மன் உயிர் ஓம்பும் இம் மா பெரும் பாத்திரம்
என் உயிர் ஓம்புதல் யானோ பொறேஎன்;
தவம் தீர் மருங்கின் தனித் துயர் உழந்தேன்;
சுமந்து என், பாத்திரம்?" என்றனன் தொழுது,
கோமுகி என்னும் கொழு நீர் இலஞ்சியின்,
"ஓர் யாண்டு, ஒரு நாள் தோன்று" என விடுவோன்,
அருள் அறம் பூண்டு-ஆங்கு, ஆர் உயிர் ஓம்புநர்
உளர்எனில், அவர் கைப் புகுவாய்" என்று, ஆங்கு,
உண்ணா நோன்போடு உயிர் பதிப் பெயர்ப்புழி,
அந் நாள் ஆங்கு-அவன்-தன்பால் சென்றேன்;
"என் உற்றனையோ?" என்று யான் கேட்ப,
தன் உற்றன பல தான் எடுத்து உரைத்தனன்—

குண திசைத் தோன்றி, கார் இருள்-சீத்து,
குட திசைச் சென்ற ஞாயிறு போல,
மணிபல்லவத்திடை மன் உடம்பு இட்டு,
தணியா மன் உயிர் தாங்கும் கருத்தோடு,
சாவகம் ஆளும் தலைத் தாள் வேந்தன்
ஆ வயிற்று உதித்தனன், ஆங்கு-அவன்-தான்-என்.

83–90 இழிந்தோன் - இறங்கிய ஆபுத்திரன். என்று - என எண்ணி.

இதை எடுத்து - பாயை உயர்த்துக் கட்டி. (நீர் வழங்கும் வங்கம் என்க.) வல்லிருள் - இருள்மிக்க இரவின்கண். வருந்து துயர் - மிக்க துன்பம்.

பாத்திரம்-பாத்திரத்தினால்.

பொறேன்- பொறுக்கமாட்டேன்.

தவந்தீர் மருங்கின்-அறத்தின் நீங்கிய பகுதியால் – தீவினைப் பகுதியால். என் - யாது பயன்? (பாத்திரம் சுமந்து என் என இயையும்)

91–100 கொழுநீர் - வளமாய நீரை உடைய - பெருகிய நீரை உடைய. என - என்று கூறி. அருள்அறம் - உயிர்களிடத்து அருள் ஆகிய அறம். புகுவாய் - புகுக. என்று – என்றுகூறி. உயிர் பதிப் பெயர்ப்புழி – உயிரை அதன் இடமாகிய உடலிலிருந்து நீக்கும் போது. என் உற்றனையோ? – எத்தகைய இடையூற்றினை எய்தினையோ? தன் உற்றன - தனக்கு நேர்ந்த துன்பத்தை. குணதிசை – கிழக்குத்திசை. சீத்து – நீக்கி. குடதிசை –

மேற்றிசை.

101-104 மன் உடம்பு- (அறம் புரியக் கிடைத்தமையால்) பெருமை வாய்ந்த உடம்பு. இட்டு-போகட்டு. தணியா-குறையாத. தலைத்தாள் - அண்மையிடத்தில்: "தலைத்தாள் நெடுமொழி தன் செவிக்கேளாள்" ."தாரணி வேந்தன் தலைத் தாள் நிகழ்ந்தது" என்புழிப்போல, (வேந்தன் தலைத்தாள், எனஇயையும்,) அன்றி, தலையாய முயற்சி எனல் சிறவாது.

15. பாத்திரம் கொண்டு பிச்சை புக்க காதை

அறவண அடிகள் மணிமேகலையை நோக்கி மேலும் கூறுகின்றார்: 'தாயால் தோட்டத்தில் இடப்பெற்ற ஆபுத்திரனுக்குப் பால் சுரந்தளித்த பசு புண்ணியப்பயனால் சாவக நாட்டில் மண்முக முனிவனிடம் அற்புதத் தன்மை வாய்ந்த பசுவாய்த் தோன்றி, ஈனும் முன்னர்ப் பால் சுரந்தளித்துப் பல்லுயிர் ஓம்பக்கண்ட முக்காலமுமுணர்ந்த அம் மண்முக முனிவன் அதன் வயிற்றினுள் தோன்றும் ஒரு பொன்முட்டையில் அறத்தகையாளன் ஒருவன் தோன்றுவான் என்று கூறினான். அங்ஙனமே அதன் வயிற்றில் ஒரு பொன் முட்டையில் தன்னைக் காத்த பசுவினை நினைத்துக்கொண்டு

மணிபல்லவத்தில் உயிர்விட்ட ஆபுத்திரன் தோன்றினான்.

அவன்

தோன்றிய வைசாக சுத்த பௌர்ணிமை நாளில்

நன்னிமித்தம் பல

தோன்றக்கண்ட

சக்கரவாளக்கோட்டத்து

முனிவர்கள் அதன்

காரணத்தை அறிய விரும்பிக் கந்திற்பாவைத் தெய்வத்தை வினவினர். அத்தெய்வம் "மணிபல்லவத்திடை மன்னுயிர்

நீத்த ஆபுத்திரன் சாவக

நாட்டில்

தோன்றியுள்ளானுதலில் இந்

நிமித்தங்கள் உளவாயின.

அவன் திறத்தினை அறவண

முனிவ

னிடம் கேண்மின்" என்று

கூறி அவர்களை என்கண்

அனுப்பிற்று.

மகப்பேறில்லாத.

அந்நாட்டரசன் பூமி சந்திரன்

மண்முகனை வணங்கி அம் மகவினைப் பெற்று வளர்த்து அரசும் நல்கினான். அவனே இப்போது நாகநாடாள்கின்றான். காவிரிநாட்டில் எக்காரணத்தாலோ மழை இன்றிப் பெரும் பஞ்சம் உளதாய் மக்கள் வருந்துகின்றனர். இந்நிலையில் நீ அமுதசுரபியைப் பயன்படுத்துதல் மிக இன்றியமையாததாகும், என்றனர். அவளும் அதற்கு ஒருப்பட்டுப் பிக்குணிக் கோலத்தோடு சென்று, பத்தினிப் பெண்டிர் கையால் பிச்சை ஏற்றலே தகுதி என்றெண்ணினளாக, அவளுடன் சென்ற காயசண்டிகை கற்பிற்

மணிமேகலைக்குக் காட்டினாள்.

சிறந்த ஆதிரை வீட்டினை

'இன்னும் கேளாய், இளங்கொடி மாதே!
அந் நாள் அவனை ஓம்பிய நல் ஆ—
தண்னென் சாவகத் தவள மால் வரை,
மண்முகன் என்னும் மா முனி இடவயின்—
பொன்னின் கோட்டது; பொன் குளம்பு உடையது;
தன் நலம் பிறர் தொழத் தான் சென்று எய்தி,
ஈனுமுன்னம், இன் உயிர்க்கு எல்லாம்,
தான் முலை சுரந்து, தன் பால் ஊட்டலும்—
மூன்று காலமும் தோன்ற நன்கு உணர்ந்த
ஆன்ற முனிவன், "அதன் வயிற்றுஅகத்து,
மழை வளம் சுரப்பவும், மன் உயிர் ஓம்பவும்,
உயிர்-காவலன் வந்து ஒருவன் தோன்றும்;
குடர்த் தொடர் மாலை பூண்பான் அல்லன்;
அடர்ப் பொன் முட்டை அகவையினன்" என—
பிணி நோய் இன்றியும் பிறந்து அறம் செய்ய,
மணிபல்லவத்திடை மன் உயிர் நீத்தோன்
தற்காத்து அளித்த தகை ஆ-அதனை
ஒல்கா உள்ளத்து ஒழியான் ஆதலின்,
ஆங்கு அவ் ஆ வயிற்று, அமரர் கணம் உவப்ப,
தீம் கனி நாவல் ஓங்கும் இத் தீவினுக்கு
ஒரு தான் ஆகி, உலகு தொழத் தோன்றினன்;
பெரியோன் பிறந்த பெற்றியைக் கேள், நீ;

1–10 அந்நாள் - சாலி விட்டுச் சென்ற நாளில். அவனை - ஆபுத்திரனை. தண்ணென் சாவகம் - குளிர்ந்த சாவ்காடு. தவளமால்வரை - ஒருமலை. இடவயின் - இடத்தில். பொன்னின் கோட்டது - பொன்னால் அமைந்த கொம்புகளை உடையதாய். உடையது - உடையதாய். தன் நலம் - தனது நல்லியல்பைக் கண்டு. ஈனு முன்னம் - ஈனுவதற்குள்ளே. ஊட்டலும் - உண்பித்தவுடன். தோன்ற - தெளிய, ஆன்ற - (அறிவொழுக்கங்களால்) நிறைந்த.

11–20 சுரப்பவும் - சுரப்பதற்கும். ஓம்பவும் - காத்தற்கும். குடர்த் தொடர்மாலை - குடரின் தொடர் ஆகிய மாலையை. பூண்பான் அல்லன் - சூடுவான் அல்லன். (கருப்பையைத் தீண்டாத உடலினன்) அடர்ப்பொன் - பொன்தகட்டினாலாய. முட்டையினுள் - முட்டையினுள் இருப்பான், பிணி இன்றியும் - நோய் இல்லாமலே பிறந்து - இங்குப் பிறப்பெய்தி. தன் - தன்னை. காத்து அளித்த - நன்கு பாதுகாத்த. தகை - பெருமையை உடைய. ஒற்கா - தளராதுநிலைக்கும், (ஒல்காஎனற்பாலது தொடைநோக்கி வலித்து நின்றது.) உள்ளத்து - மனத்தினை. அவ்ஆ - தன்னைப் பாதுகாத்த பசுவினது. தீவினுக்கு - தீவின் கண்.

21–22 ஒருதானாகி - ஒப்பாரிலாத பெரியோனாகி. உலகு - உயர்மக்கள்; (உலகிலுள்ளோர் எனலும் ஆம்.) பெரியோன் - ஆபுத்திரன். பெற்றியை - பெருக்கத்தை; முறைமையை, பேற்றினை எனலும் ஆம்.

இருது இளவேனிலில், எரி கதிர் இடபத்து,
ஒருபதின் மேலும் ஒருமூன்று சென்ற பின்,
மீனத்து இடைநிலை மீனத்து அகவையின்,
போதித் தலைவனொடு பொருந்திய போழ்தத்து,
மண்அகம் எல்லாம் மாரி இன்றியும்,
புண்ணிய நல் நீர் போதொடு சொரிந்தது;
"போதி மாதவன் பூமியில் தோன்றும்
காலம் அன்றியும், கண்டன சிறப்பு" என,
சக்கரவாளக் கோட்டம் வாழும்
மிக்க மாதவர் விரும்பினர் வியந்து,
"கந்து உடை நெடு நிலை, கடவுள் எழுதிய
அந்தில் பாவை அருளும் ஆயிடின்,
அறிகுவம்" என்றே, செறி இருள் சேறலும்,
"மணிபல்லவத்திடை மன் உயிர் நீத்தோன்,
தணியா உயிர் உய,

சாவகத்து உதித்தனன்;

ஆங்கு-அவன்-தன் திறம் அறவணன் அறியும்" என்று,
ஈங்கு என் நாவை வருத்தியது; இது கேள்:
மண் ஆள் வேந்தன் மண்முகன் என்னும்
புண்ணிய முதல்வன் திருந்து அடி வணங்கி,
"மக்களை இல்லேன் மாதவன் அருளால்

23–30 இருது – பெரும்பொழுது - பருவகாலம். இளவேனில் - சித்திரை வைகாசித் திங்கள் இரண்டும் கொண்ட பருவம். (இளவேனில் இருது என மாறிக் கூட்டுக.) எரிகதிர் – ஞாயிற்றினோடுகூடிய. இடபத்து - வைகாசித் திங்களில். ஒருபதின்மேலும் ஒருமூன்று - பதின்மூன்று நட்சத்திரங்கள். மீனத்து இடைநிலை மீனத்து அகவையின் - நட்சத்திரங்களில் நடுவே நிற்கும் நட்சத்திரமாகிய விசாக நட்சத்திரத்தில். பொருந்திய - ஒப்பத்தோன்றிய. புண்ணியம் - தூய்மை. போதொடு - மலரொடு. (மாரி இன்றியும் நன்னீர் சொரிந்தது என்க). அன்றியும் – அல்லாமல் இருப்பவும். கண்டன - காணப்பட்டன.

31–40 கோட்டம் - கோட்டத்தின்கண். விரும்பினர் - விரும்பி. நெடுநிலை உடைக் கந்து அந்தில் – நீண்டு நிற்றலை உடைய தூணாகிய அவ்விடத்தில். பாவை - தெய்வ மேறிநின்ற பதுமை - கந்திற்பாவை. அருளுமாயிடின் - அருளின். (மாதவர் அறிகுவம் என்றே சேறலும் என்க.) நீத்தோன் - நீக்கியவன் - ஆபுத்திரன். என்று – என்றுகூறி. நாவை வருத்தியது - நாவிற்கு அரிய பணியைத் தந்தது (வருத்தியது என்றது, ஆபுத்திரன் பெருமை சொல்லில் அடங்காதென்ற கருத்திற்று.) வேந்தன் – சாவக நாட்டரசனாகிய பூமி சந்திரன்.

41–42 புண்ணிய முதல்வன் – அறத்தின் தலைவன். திருந்தடி – நற்றுள்- பணிந்தவரை உய்விக்கும் தாள். இல்லேன் – அடையாத நான். (இல்லேன் பெற்றேன் எனக்கூட்டுக.)

பெற்றேன் புதல்வனை" என்று அவன் வளர்ப்ப,
அரைசு ஆள் செல்வம் அவன்பால் உண்மையின்,
நிரை தார் வேந்தன் ஆயினன், அவன்-தான்—
துறக்க வேந்தன் துய்ப்பிலன் கொல்லோ?
அறக்கோல் வேந்தன் அருளிலன்கொல்லோ?
சுரந்து காவிரி புரந்து நீர் பரக்கவும்,
நலத்தகை இன்றி, நல் உயிர்க்கு எல்லாம்,
அலத்தல்காலை ஆகியது, ஆய்-இழை!
வெண்-திரை தந்த அமுதை வானோர்
உண்டு, ஒழி மிச்சிலை ஒழித்து வைத்தாங்கு,
வறன் ஓடு உலகின் வான் துயர் கெடுக்கும்
அறன்-ஓடு ஒழித்தல், ஆய்-இழை! தகாது' என,

மாதவன் உரைத்தலும்—
மணிமேகலை-தான்
தாயர் தம்மொடு தாழ்ந்து,
பல ஏத்தி,
கைக்கொண்டு எடுத்த
கடவுள் கடிஞையொடு
பிக்குணிக் கோலத்துப் பெருந்
தெரு அடைதலும்—
ஒலித்து ஒருங்கு ஈண்டிய
ஊர்க் குறுமாக்களும்,
மெலித்து உகு நெஞ்சின்
விடரும் தூர்த்தரும்;
கொடிக் கோசம்பிக்
கோமகன் ஆகிய,
வடித் தேர்த் தானை,

வத்தவன் – தன்னை

43-50 அவன் பால் – பூமி சந்திரனிடத்தே. அவன் தான் – ஆபுத்திரன். துறக்க வேந்தன் - சுவர்க்கத்தை ஆளும் இந்திரன். துய்ப்பிலன் கொல்லோ - வேள்விக் கண் அவியாகிய நுகர்பொருளைப் பெற்றி லனோ ? வேந்தன் – சோழன். அருளிலன் கொல்லோ – கடுங் கோலனாயி னனோ?' புரந்து – பாதுகாத்து. (காவிரி நீர் சுரந்து புரந்துபரக்கவும் என இயையும்.) நலத்தகை – வளம் – சுபிட்சம். அலத்தற்காலை – வருந்தும் காலம் – வறுமைக்காலம். ஆயிழை !– மணிமேகலை!.

51-60 வெண்திரை – பாற்கடல். அமுதை - அமுதமாகிய. மிச்சில் – எஞ்சியது. (வானோர் அமுதை மிச்சிலை ஒழித்துவைத்தாங்கு என்க.) வறன் ஓடு உலகின் - பஞ்சம் பரவிய உலகத்தின். அறன் ஓடு ஒழித்தல் – அறத்தினைப் புரிதற்குரிய ஓடாகிய அமுத சுரபியைப் பயன்படுத்தாதிருத்தல். மாதவன் - அறவணன். தாயர் - மாதவியும் சுதமதியும். தாழ்ந்து - வணங்கி. பலஏத்தி- பலவாறு துதித்து. கடிஞை - பிச்சைப்பாத்திரம் பிக்குணிக் கோலத்து - துறவாட்டிக்கு உரிய வேடத்தோடு. குறுமாக்கள்– அறிவில்லாத கயவர்கள். மெலித்து - மெலிந்து; எதுகை நோக்கி வலித்து நின்றது. உகும் நெஞ்சின் – (காமத்தால்) சோர்கின்ற நெஞ்சினை உடைய. விடரும் – காமவெறியரும். தூர்த்தரும் – பரத்தரும்.

61-62 கோசம்பி – கௌசாம்பி நகரம். வாடி – திருந்திய. வத்தவன் தன்னை – உதயணனை.

வஞ்சம் செய்துழி, வான் தளை விடீஇய,
உஞ்சையில் தோன்றிய யூகி அந்தணன்
உருவுக்கு ஒவ்வா உறு நோய் கண்டு,
பரிவுறு மாக்களின் தாம் பரிவு எய்தி;
'உதயகுமரன் உளம் கொண்டு ஒளித்த
மதுமலர்க் குழலாள் வந்து தோன்றி,
பிச்சைப் பாத்திரம் கையின் ஏந்தியது
திப்பியம்' என்றே சிந்தை நோய் கூர—
மண மனை மறுகில், மாதவி ஈன்ற
அணி மலர்ப் பூங் கொம்பு, 'அகம் மலி உவகையின்,
பத்தினிப் பெண்டிர் பண்புடன் இடூஉம்
பிச்சை ஏற்றல் பெருந் தகவு உடைத்து' என—
'குளன் அணி தாமரைக் கொழு மலர் நாப்பண்
ஒரு தனி ஓங்கிய திருமலர் போன்று,
வான் தரு கற்பின் மனை உறை மகளிரின்
தான் தனி ஓங்கிய தகைமையள் அன்றோ,
ஆதிரை நல்லாள்? அவள் மனை இம் மனை;
நீ புகல்வேண்டும், நேர்-இழை!' என்றனள்—
வட திசை விஞ்சை மா நகர்த் தோன்றி,
தென் திசைப் பொதியில், ஓர் சிற்றியாற்று அடைகரை,

63–70 வஞ்சம் செய்துழி – பிரச்சோதன வேந்தன் வஞ்சனையால் சிறைப்படுத்திய ஞான்று. வான்தளை – அரிய சிறையினை. விடீஇய – விடுவித்தற்கு. உஞ்சை – உச்சயினிநகரம். யூகியந்தணன் – அந்தணனாகிய யூகி என்னும் உதயணன் மந்திரியினது. உருவுக்கு – வடிவழகிற்கு. உறுநோய் – மிக்க துயர்க்குரிய வேடம். பரிவு – மனவருத்தம். மாக்களின் – மாந்தரைப்போல். ஒளித்த – மறைத்துக்கொண்ட – [illegible]

மல் தன்னகத்தே அகப்படுத்திக்கொண்ட. குழலாள் — மணிமேகலை. திப்பியம் — வியப்பிற்குரியது. கூர — மிக.
(குறுமாக்களும் விடரும் தூர்த்தரும் பரிவுறுமாக்களின் பரிவெய்தி, குழலாள் பிச்சைப்பாத்திரம் ஏந்தியது திப்பியம் என்று நோய் கூர என்க.)

71–82 மறுகில் — தெருவின்கண். பூங்கொம்பு — பூங்கொம்புபோல்வாள் - மணிமேகலை. மலி — நிறைந்த. பண்புடன் — கொடைப் பண்புடன் — மனமுவந்து. பெருந்தகவு — பெருமை. நாப்பண் — நடுவினில். திருமலர் — அழகிய தாமரைமலர். வான் தருகற்பின் — மழையைப் பெய்வித்தற்குரிய கற்பினை உடைய. மனை — இல்லறம். தகைமையள் — தன்மையள். சேரிழை! — மணிமேகலை!.
விஞ்சை மா நகர் — வித்தியாதர நகரத்தில். தோன்றி — பிறந்து. அடைகரை — கரைச்சார்பினில்.

97

மாதவன்-தன்னால், வல் வினை உருப்ப,
சாவம் பட்டு, தனித் துயர் உறாஉம்

வீவு இல் வெம் பசி வேட்கையொடு திரிதரும்
காய சண்டிகை எனும் காரிகை-தான்-என்.

83-86 பொதியில் – ஒருமலை. சிற்றியாற்றடைகரை – சிறிய ஆற்றின் கரைச்சார்பினில். மாதவன் தன்னால் – விரிச்சிக முனிவனால். உருப்ப – சினப்ப. உறாஉம் – உற்றுள்ள. வீவில் வெம்பசி – தொலைதல் இல்லாத கொடிய பசி நோயினால் – யானைத் தீயாகிய நோயால். வேட்கை–உணவின்கண் விருப்பம். திரிதரும்–சுழன்று அலைகின்ற. காரிகை – மங்கை.

16. ஆதிரை பிச்சையிட்ட காதை

காயசண்டிகை மணிமேகலையை நோக்கி ஆதிரையின் பெருமையைக் கூறினள்: "இந்நல்லாளின் கணவன் சாதுவன் என்பான் ஒரு பரத்தையோடு ஒழுகித் தன் பொருள் எல்லாம் இழந்து வறியவனானான். அக்கணிகையும் வறிய சாதுவனை இகழ்ந்து நீக்க, அவன் மனம் உடைந்து திரைகடலோடித் திரவியம் தேடச் சென்றான். கடலிடையில் காரிருளில் கடுங்காற்றால் கலம் சிதைய மரத்துண்டினைப்பற்றி, திரை உய்க்க நாகர்மலைப் பக்கம் சேர்ந்தனன். சாதுவனோடு சென்ற சிலர் உயிர்பிழைத்துப் புகாரில்வந்து ஆதிரையிடம் சாதுவன் கப்பல் உடைந்து இறந்துவிட்டான் என்றனர். பின் ஆதிரையும் உயிர்விடத் துணிந்த போழ்து ஓர் அசரீரி சாதுவன் இறக்கவில்லையென்றும் விரைவினில் வந்து சேருவான் என்றும் அவளுக்கு அறிவித்தது. அதனைக் கேட்ட ஆதிரை தன் இல்லம் அடைந்து மகிழ்வுடன் நல்லறம் புரிந்து வருவாளாயினள். மலைப் பகுதியில் களைப்பின் மிகுதியால் துயின்ற சாதுவனைக் கண்ட நாகர் அவனைக் கொன்று தின்ன நினைந்து எழுப்பினராக, அவன் நாகர் மொழியில் அவருடன் பேச, அவரும் தம்மொழி பேசிய சாதுவனிடம் பற்றுடையவாய்த் தம் குருமகனிடம் அவனை அழைத்து ஏகினர். அக்குருமகனிடம் சென்ற சாதுவன் நாகர்மொழியால் உரையாடி அவனையும் வயப்படுத்தினான். பின் அக்குருமகன் நாகரிடம் பெண்ணையும், ஊனையும், கள்ளையும் தந்து சாதுவனை உபசரிக்கக்கூறினான். அது [illegible] இவை வேண்டேன்"

கேட்ட சாதுவன் "மெய்ம்மொழி விளம்பினை", இ...
என மொழிந்து, கட்குடி கோறல் முதலியன் நீக்கி நல்லறம்
புரியுமாறு அம்மகனுக்கு அறமொழி உரைத்தான்.

98

அவனும் கொல்லா நல்லறம் மேற்கொள இசைந்து, தன்னிடம் உள்ள செல்வங்களைச் சாதுவனுக்கு நல்க, அவற்றைப் பெற்றுச் சந்திரதத்தனது வணிகக் கப்பலில் ஏறி

ஆதிரையிடம் வந்து
வாழ்ந்துவருவான் ஆயினன்.
அத்தகைய ஆதிரையின் கையால்
பிச்சை பெறுக” என்று காயசண்டிகை கூறினள்.
அதுகேட்ட
மணிமேகலை ஆதிரை மனையிற் சென்று நின்றனளாக,
ஆதிரையும்
“பாரகமடங்கலும் பசிப்பிணி யறுக” எனக்கூறிப்
பிச்சையிட்டனள்.

'ஈங்கு, இவள் செய்தி
கேள்' என, விஞ்சையர்-
பூங்கொடி மாதர்க்குப்
புகுந்ததை உரைப்போள்:
'ஆதிரை கணவன்,
ஆய்-இழை! கேளாய்,
சாதுவன் என்போன்
தகவு இலன் ஆகி,

அணி-இழை-தன்னை அகன்றனன் போகி,
கணிகை ஒருத்தி கைத்தூண் நல்க,
வட்டினும் சூதினும் வான் பொருள் வழங்கி,
கெட்ட பொருளின் கிளை கேடுறுதலின்,
பேணிய கணிகையும், பிறர் நலங் காட்டி,

"காணம் இலி" என, கையுதிர்க்கோடலும்,
வங்கம் போகும் வாணிகர்-தம்முடன்,
தங்கா வேட்கையின், தானும் செல்வுழி—

---

1 - 12. இவள் - ஆதிரையினது. செய்தி - வரலாற்றினை. விஞ்சையர் பூங்கொடி-காயசண்டிகை. மாதர்க்குப் புகுந்ததை-ஆதிரைக்கு நேர்ந்த செய்தியை. உரைப்போள்-உரைப்பவளாகி, ஆயிழை!-மணிமேகலை!. தகவிலன் - நீதியற்றவனாய். அகன்றனன்-நீங்கி. கணிகை - பரத்தையாகிய. கைத்து-கைப்பொருள்: "கைத் துண்டாம் போழ்தே கரவாதறஞ் செய்க" என் புழிப்போல. அன்றி, கைத்து ஊண் என்பதற்குக் கையால் ஆக்கிய உணவு எனினும் அமையும். வட்டினும் - உண்டை உருட்டலாலும். சூதினும்-சூதாடலாலும். வான்பொருள்-பெருஞ்செல்வத்தை. வழங்கிய-வழங்கியமையால். கெட்ட பொருளின் - அழிவுற்ற செல்வத்தினால் - செல்வம் அழிவுற்றமையால் இனி கேடுறுதலின் - குடி கெட்டமையால். பிறர் நலங்காட்டி - பிறரை உபசரித்து - மகிழ்வித்து விளையாடி; அன்றி, பிறர்க்குத் தன் நலமாகிய அழகினை நல்கி எனினும் அமையும். காணம் இலி - காசில்லாதவன். கை உதிர்க்கோடலும்-கையை உதறியதும் - நீக்கிய உடனே: 'உம்' இடையீடின்மைப் பொருள் தந்து நின்றது வினையெச்சவிகுதி.

தங்கா வேட்கை - நிறுத்த நில்லாத அவா - ஓடும் அவா; தங்காமல் செல்லுதற்குக் காரணமாய அவா எனினும் அமையும். தான் சாதுவன்,

நளி இரு முந்நீர் வளி கலன் வௌவ,
ஓடி மரம் பற்றி, ஊர் திரை உதைப்ப,
நக்க சாரணர், நாகர் வாழ் மலைப்
பக்கம் சார்ந்து, அவர் பான்மையன் ஆயினன்.
நாவாய் கேடுற, நல் மரம் பற்றிப்
போயினன்-தன்னோடு உயிர் உயப் போந்தோர்,
"இடை இருள் யாமத்து, எறி திரைப் பெருங் கடல்,
உடை கலப் பட்டு, ஆங்கு, ஒழிந்தோர்-தம்முடன்
சாதுவன்-தானும் சாவுற்றான்" என—
ஆதிரை நல்லாள் ஆங்கு-அது-தான் கேட்டு,
"ஊரீரேயோ! ஒள் அழல் ஈமம்
தாரீரோ?" எனச் சாற்றினள் கழறி,
சுடலைக் கானில் தொடு குழிப்படுத்து,
முடலை விறகின் முளி எரி பொத்தி,
"மிக்க என் கணவன் வினைப் பயன் உய்ப்பப்
புக்குழிப் புகுவேன்" என்று, அவள் புகுதலும்—
படுத்து உடன் வைத்த பாயல்-பள்ளியும்,
உடுத்த கூறையும், ஒள் எரி உருஅது;

13-20 நளிஇருமுந்நீர் - மாபெருங் கடலில், நளி—செறிவுமாம். வளி - காற்று. கலன் - கப்பலை. வௌவ - கவர்தலால் - கவிழ்த்தமையால். ஒடி - ஒடிந்த. ஊர் - ஊர்கின்ற. உதைப்ப - உதைத்து உய்த்தலால். நக்கசாரணர் - ஆடையற்றவரும் நிலையின்றித் திரிந்து வாழ்பவருமாகிய. அவர் பான்மையன் - அந்நாகரின் வசப்பட்டவனாக-அவர் கருதியபடி நடக்கவேண்டியவனாக. நாவாய் - மரக்கலம். நன்மரம் - நன்மைபொருந்திய மரத்துண்டினை: சாதுவனது உயிர்காத்தமையின் 'நன்மரம்' எனப்பட்டது. போயினன் தன்னொடு-நாகர்மலைப் பகுதிக்குச் சென்ற சாதுவனோடு (ஒப்ப). உயிர் உய-உயிர்வாழப்பெற்று. போந்தோர் - வந்தவர். இடை இருள்யாமத்து - இடைப்பட்டதாகிய இருள்செறிந்த யாமத்தில். உடைகலப்பட்டு - கப்பல் சிதைந்த துன்பத்திற்குட்பட்டு. ஆங்கு - அக்கடலில். ஒழிந்தோர் - இறந்தவர்.

21-30 என - என்று சொல்ல. நல்லாள் - ஆதிரை. ஊரீரே! - ஊரில் உள்ளவர்களே! ஓ - இரங்கல் குறிப்பு. ஒள்அழல் ஈமம் - ஈமவிறகினில் மூட்டிய மிக்க நெருப்பினை. தாரீரோ - தாருங்கள். சாற்றினள் கழறி - வற்புறுத்திக் கூறி. சுடலைக்கான் - பிணம் சுடும் நெருப்பினை உடைய காடு - சுடுகாடு. தொடுகுழிப் படுத்து-தோண்டப்பட்ட குழியினை அமைத்து-குழிதோண்டி. முடலை விறகின் முளி - முறுக்குண்டு வளைந்த உலர்ந்த விறகு. பொத்தி—பொருத்தி. மிக்க - எனக்கு எப்பொருளினும் சிறந்த. வினைப் பயன் - ஊழ்வினை, உய்ப்ப - செலுத்துதலால். புக்குழி - புகுந்த இடத்தில் (பொத்திப் புகுதலும் என்க.) உடன் படுத்து வைத்த - ஒருங்கு விரித்துவைத்திருந்த பாயல் பள்ளி - பாயாகிய படுக்கை. கூறை - புடைவை. உறாஅது - பற்றாமல்.

ஆடிய சாந்தமும், அசைந்த கூந்தலில்
சூடிய மாலையும், தொல் நிறம் வழாது;
விரை மலர்த் தாமரை ஒரு தனி இருந்த
திருவின் செய்யோள் போன்று இனிது இருப்ப—
"தீயும் கொல்லாத் தீவினையாட்டியேன்
யாது செய்கேன்?" என்று, அவள் ஏங்கலும்—
"ஆதிரை! கேள்; உன் அரும் பெறல் கணவனை
ஊர் திரை கொண்டு, ஆங்கு உய்ப்பப் போகி,
நக்க சாரணர், நாகர் வாழ் மலைப்
பக்கம் சேர்ந்தனன்; பல் யாண்டு இராஅன்;
சந்திரதத்தன் எனும் ஓர் வாணிகன்
வங்கம்-தன்னொடும் வந்தனன் தோன்றும்;
நின் பெருந் துன்பம் ஒழிவாய் நீ" என,
அந்தரம் தோன்றி, அசரீரி அறைதலும்—
ஐ அரி உண்-கண் அழு துயர் நீங்கி,
பொய்கை புக்கு ஆடிப் போதுவாள் போன்று,
மனம் கவல்வு இன்றி, மனை அகம் புகுந்து, "என்
கண் மணி அனையான் கடிது ஈங்கு உறுக!" என,
புண்ணியம் முட்டாள், பொழி மழை தரூஉம்
அரும் பெறல் மரபின் பத்தினிப் பெண்டிரும்
விரும்பினர் தொழூஉம் வியப்பினள் ஆயினள்—
ஆங்கு-அவள் கணவனும், அலை நீர் அடைகரை,
ஓங்கு உயர் பிறங்கல் ஒரு மர நீழல்,
மஞ்சு உடை மால் கடல் உழந்த நோய் கூர்ந்து,
துஞ்சு துயில்கொள்ள—அச் சூர் மலை வாழும்

31-40 ஆடிய - பூசிய. விரை - மணம். திருவின் செய்யோள் - திருமகள். தீவினையாட்டியேன் - தீவினையை உடையவளாய நான். செய்கேன் - செய்வேன். அரும்பெறல் - பெறுதற்கரியவனாய. ஊர் திரை - ஊர்கின்ற அலை. உய்ப்ப-செலுத்த. நக்கசாரணர் - ஆடையற்றவராய் நிலையின்றித் திரிபவராகிய. யாண்டு - ஆண்டு.

41-50 வந்தனன் - வந்து. ஒழிவாய் - ஒழிக. அந்தரம் - வானம். அறைதலும் - சொன்னவு...

அரி உண்கண் - அரிகள் படர்ந்த மை எழுதிய கண்ணுள் - ஆதிரை. ஆடி - குளித்து. கவல்வு- கலங்குதல். முட்டாள் - குறையறச் செய்தனள். அரும் பெறல் மரபின் - பெறுதற்கரிய இயல்பினை உடைய.

51-55 தொழூஉம் வியப்பினள்-தொழுதற்குரிய அற்புத இயல்பினள். அலைநீர் - கடலின். அடைகரை - கரையோரத்தில். பிறங்கல் - மலை. மஞ்சு - மேகத்தினை. மால் - மயக்கத்தைத் தருகின்ற. உழந்த - வருந்திய. துஞ்சு துயில் - மிக்க துயில் சூர் - அச்சம் தருகின்ற.

நக்க சாரணர், நயமிலர், தோன்றி,
பக்கம் சேர்ந்து, "பரி புலம்பினன் இவன்;
தானே தமியன் வந்தனன்; அளியன்;
ஊன் உடை இவ் உடம்பு உணவு" என்று எழுப்பலும்—
மற்று-அவர் பாடை மயக்கு அறு மரபின்
கற்றனன் ஆதலின், கடுந் தொழில் மாக்கள்
சுற்று நீங்கித் தொழுது, உரையாடி,
ஆங்கு-அவர் உரைப்போர், "அருந்திறல்! கேளாய்:
ஈங்கு, எம் குருமகன் இருந்தோன்; அவன்பால்
போந்தருள் நீ" என, அவருடன் போகி—
கள் அடு குழிசியும், கழி முடை நாற்றமும்,
வெள் என்பு உணங்கலும், விரவிய இருக்கையில்,
எண்கு தன் பிணவோடு இருந்தது போல,
பெண்டுடன் இருந்த பெற்றி நோக்கி,
பாடையின் பிணித்து, அவன் பான்மையன் ஆகி,
கோடு உயர் மர நிழல் குளிர்ந்த பின்—அவன்,
"ஈங்கு நீ வந்த காரணம் என்?" என,
ஆங்கு-அவற்கு, அலை கடல் உற்றதை உரைத்தலும்—
"அருந்துதல் இன்றி, அலை கடல் உழந்தோன்,
வருந்தினன்; அளியன்; வம்மின், மாக்காள்!
நம்பிக்கு இளையள் ஓர் நங்கையைக் கொடுத்து,
வெங் களும் ஊனும் வேண்டுவ கொடும்" என—
அவ் உரை கேட்ட சாதுவன் அயர்ந்து,

"வெவ் உரை கேட்டேன்; வேண்டேன்" என்றலும்—
"பெண்டிரும் உண்டியும் இன்றுஎனின், மாக்கட்கு

56-60 நயம் - நன்மை. பரிபுலம்பினன் - தனிவருந்தியுள்ளான். தானே தமியன்: ஒரு பொருட் பன்மொழிகள். அளியன் - இரங்கத்தக்கவன். மற்று - அசைநிலை. அவர்பாடை - நாகரது மொழி. மயக்குஅறும் மரபில் - பிழையற்ற முறையினில்.

61-70 கடுந்தொழில் மாக்கள் - கொன்றுதின்னும் மக்கள் - நாகர். சுற்று - வளைத்துக்கொள்ளுதலை. அருந்திறல்! - மிக்க வலியுடையோய்! (ஈங்கு இருந்தோன் ஆகிய எம் குருமகனவன் பால் நீ போந்தருள் என்க.) கள்அடு குழிசி - கள்ளினைப் பக்குவம் செய்யும் தாழி. முடைநாற்றம் - தீயநாற்றம். என்புணங்கல் - உலர்ந்த எலும்பு. விரவிய - கலந்துள்ள. இருக்கை - இருப்பிடம். எண்கு - (ஆண்)கரடி. பிணவு - பெண் கரடி. பெண்டு - மனைவி. பிணித்து - வசப்படுத்தி. அவன் பான்மையன் - அவனது குறிப்பின்படி ஒழுகுபவன்.

71-80 கோடு - மரக்கிளைகள். அவன் - அக்குருமகன். உற்றதை - நேர்ந்த இடையூற்றினை. அருந்துதல்-உண்ணுதல். வம்மின் - வாரீர். நம்பிக்கு - அன்புக்குரிய இவனுக்கு. வெங்கள் - விரும்பத்தக்க கள். வேண்டுவ - வேண்டியவை. (வேண்டுவ ஆகிய வெங்களும் ஊனும் கொடும் என்க.) அயர்ந்து-மனம் சோர்ந்து. வெவ்வுரை - துன்பம் தரும் சொல்லை. மக்களுக்கு.

மாக்கட்கு-

உண்டோ, ஞாவத்து உறு பயன்? உண்டுஎனின்,
காண்குவம் யாங்களும்; காட்டுவாயாக" என,
தூண்டிய சினத்தினன், "சொல்" என, சொல்லும்:
"மயக்கும் கள்ளும், மன் உயிர் கோறலும்,
கயக்கு அறு மாக்கள் கடிந்தனர்; கேளாய்;
பிறந்தவர் சாதலும், இறந்தவர் பிறத்தலும்,
உறங்கலும், விழித்தலும், போன்றது உண்மையின்;
'நல் அறம் செய்வோர் நல் உலகு அடைதலும்,
அல்-அறம் செய்வோர் அரு நரகு அடைதலும்,
உண்டு' என உணர்தலின்; உரவோர் களைந்தனர்:
கண்டனை ஆக!" என—கடு நகை எய்தி,
"உடம்பு விட்டு ஓடும் உயிர் உருக் கொண்டு, ஓர்
இடம் புகும் என்றே எமக்கு ஈங்கு உரைத்தாய்;
அவ் உயிர் எவ்வணம் போய்ப் புகும்? அவ் வகை
செவ்வனம் உரை" என—சினவாது, "இது கேள்:
உற்றதை உணரும், உடல் உயிர் வாழ்வுழி;
மற்றைய உடம்பே மன் உயிர் நீங்கிடின்,
தடிந்து எரியூட்டினும் தான் உணராதுஎனின்,
உடம்பிடைப் போனது ஒன்று உண்டு என, உணர் நீ;
போனர் தமக்கு ஓர் புக்கில் உண்டு என்பது,
யானே அல்லேன், யாவரும் உணர்குவர்:
உடம்பு ஈண்டு ஒழிய, உயிர் பல காவதம்
கடந்து, சேண் சேறல் கனவினும் காண்குவை;
ஆங்கனம் போகி, அவ் உயிர் செய் வினை
பூண்ட யாக்கையின் புகுவது தெளி, நீ"

81-90 உறுபயன் - மிக்கபயன். காண்குவம் - அறிந்து கொள்ளுவோம். தூண்டிய சினத்தினன் - பொங்கிய வெகுளியனாய். கோறல் - கொல்லுதல். கயக்கு அறும் - அறிவு கலங்குதல் அற்ற. கடிந்தனர் - நீக்கினர். அல்அறம் - அறமல்லாதது - பாவம். உரவோர் - அறிவின் வலிமையுடை...

வையுடையோர்.

91–100 கண்டனை ஆக - தெளிந்தாய் ஆகுக. கடுநகை - வெடிச்சிரிப்பு. எவ்வணம் - எவ்வண்ணம். செவ்வனம் - செவ்வையாக. சினவாது - வெகுளாமல். (உடல் உயிர் வாழ்வுழி உற்றதை உணரும் என்க.) மன்னுயிர் – அழியாத உயிர். தடிந்து - வெட்டி. எரி ஊட்டினும் – எரித்தாலும். உடம்பிடை - உடம்பினின்று. ஒன்று–ஒரு பொருள். புக்கில்–புக்க இடம்.

101-105 சேண் – சேய்மைக் கண். சேறல் – செல்லுதலே. ஆங்கனம் - அப்படியே. போகி–(இறக்கும்போதும்) சென்று. செய்வினை- செய்த வினைப்பயனால். பூண்ட – பூணுதற்குரிய.

என்று அவன் உரைத்தலும்—எரி விழி நாகனும்,
நன்று அறி செட்டி நல் அடி வீழ்ந்து,
"கள்ளும் ஊனும் கைவிடின், இவ் உடம்பு
உள் உறை வாழ் உயிர் ஓம்புதல் ஆற்றேன்;
தமக்கு ஒழி மரபின் சாவுறுகாறும்,
எமக்கு ஆம் நல் அறம் எடுத்து உரை" என்றலும்—
"நன்று சொன்னாய்! நல் நெறிப் படர்குவை:
உன்-தனக்கு ஒல்லும் நெறி அறம் உரைக்கேன்;
உடை கல மாக்கள் உயிர் உய்ந்து ஈங்கு உறின்,
அடு தொழில் ஒழிந்து, அவர் ஆர் உயிர் ஓம்பி,
மூத்து விளி மா ஒழித்து, எவ் உயிர்மாட்டும்
தீத்திறம் ஒழிக!" என—சிறுமகன் உரைப்போன்,
"ஈங்கு, எமக்கு ஆகும் இவ் அறம் செய்கேம்;
ஆங்கு, உனக்கு ஆகும் அரும் பொருள் கொள்க" என,
"பண்டும் பண்டும் கலம் கவிழ் மாக்களை
உண்டேம்; அவர்-தம் உறு பொருள் ஈங்கு இவை:
விரை மரம், மென் துகில், விழு நிதிக் குப்பையோடு,
இவை இவை கொள்க" என—எடுத்தனன் கொணர்ந்து,
சந்திரதத்தன் என்னும் வாணிகன்

வங்கம் சேர்ந்ததில், வந்து, உடன் ஏறி,
இந்நகர் புகுந்து, ஈங்கு இவளொடு வாழ்ந்து,
தன் மனை நன் பல தானமும் செய்தனன்—
ஆங்கனம் ஆகிய ஆதிரை கையால்,
பூங் கொடி நல்லாய்! பிச்சை பெறுக!' என—
மனை அகம் புகுந்து, மணிமேகலை-தான்

106–110 எரிவிழி – தீப்பறக்கும் கண்களை உடைய. நன்று – அறத்தினை. தமக்கொழி மரபின் – அவரவர்களுக்குத் துணிந்த முறைமையினையுடைய. சாவு உறுகாறும் – யாம் இறப்பினை அடை

யுமவரை.

111-120 எமக்கு ஆம் – எங்களியல்பிற்கு ஏற்ற. (தமக்கொழி மரபின்–எமக்கு ஆம்–நல்லறம் என்க.) எடுத்து–விளக்கி. படர்குவை–செல்வாய். ஒல்லும் – ஆற்றுதற்குரிய. நெறி அறம் – அறநெறியை. உரைக்கேன் – சொல்லுவேன். உடைகலமாக்கள் – கப்பல் உடையப்பெற்ற மக்கள். உய்ந்து – பிழைத்து அடு தொழில் – கொல்லுதல். மூத்து விளி மா – முதுமையுற்று இறந்த விலங்கு. எவ்வுயிர் மாட்டும் – எத்தகைய உயிரினங்களிடத்தும். தீத்திறம் – கொலை. சிறுமகன் – நாகர் தலைவன். செய்கேம் – செய்வோம்.

121 130 உறு பொருள் – மிக்க செல்வம். ஈங்கிவை – இவை. விரை

மரம் – மணமுடைய மரங்கள். துகில் – பட்டு. விழுநிதிக் குப்பை – சீரிய பொற் குவியல்கள். எடுத்தனன் – எடுத்து. தன்மனை – தன் மனைவியோடு. ஆங்கனம், ஆகிய – அப்படிப் பட்ட. என – என்று காய சண்டிகை கூற. மனையகம் – ஆதிரை வீட்டினுள்.

104

புனையா ஓவியம் போல நிற்றலும்—
தொழுது வலம் கொண்டு, துயர் அறு கிளவியோடு,
அமுதசுரபியின் அகன் சுரை நிறைதர,
'பார் அகம் அடங்கலும் பசிப் பிணி அறுக' என,
ஆதிரை இட்டனள், ஆருயிர்மருந்து-என்.

131–135 புனையா ஓவியம் - அழகுறுத்தப் பெறாத சித்திரம். (மணிமேகலை அணிகலனின்றித் துறவுக் கோலத்துடன் வாய் பேசாது நிற்றலின் புனையா ஓவியம் உவமை கூறப்பட்டது.) துயரறு கிளவியொடு - துயரத்தைப் போக்குதற்குரிய முகமனுரை கூறுதலோடு. அகன் சுரை - அகன்ற உள்ளிடம். அடங்கலும் - முழுவதும். என - என்று சொல்லி. ஆருயிர் மருந்து - உணவு.

17. உலக அறவி புக்க காதை

அமுதசுரபியில் உணவு குன்றாமல் இருந்து வரும் அற்புதம் கண்ட காயசண்டிகை, மணிமேகலையிடம் தன் பசிநோய் தணிய உணவு அளிக்க வேண்டினள். மணிமேகலை அளித்த ஒருபிடி சோற்றை உண்டதும் காயசண்டிகை தன் பசிநோய் நீங்கப்பெற்று வியப்புற்றுக் கூறுவாளாயினள். 'காஞ்சனபுரத்திலிருந்து என் கணவனுடன் யானும் மலைவளம் காணப் பொதியத்தை அடைந்தோம். அங்கு விருச்சிக முனிவனுடைய அற்புத நாவற்கனியைச் செருக்கினால் நான்மிதித்துச்சிதைத்துவிட்டேன். நீராடிப் பசியுடன் மீண்ட அம்முனிவன் என்பிழைக்கு முனிந்து என்னை அந்தரம் இயங்கும் மந்திரம் இழந்து யானைத் தீயால் துயருறுமாறு சபித்தனன். பின் தாழ்ந்து வேண்டினேனாக, "பன்னீராண்டு கழித்த பின்னரே நான் பசிதீர்வேன்; அவ்வமயம் நீயும் நோய் தீர்ந்து நின் நிலை பெறுவாய்" என்றனன். பின் என் அரும்பசிக்குப் புகாரின்கண் அன்றிப் பிற ஊர்களில் புகல் இடம் இல்லை என்று எண்ணிய என் கணவன் சொற்படி இங்கு வந்து வாழ்ந்து வருவேன் ஆயினேன். இன்று நின் உணவு அருந்தி என் பசிதீர்ந்தேன். இவ்வூரில் முனிவர்கள் வாழும் உலக அறவி உள்ளது. அங்கு வறுமை மிக்க மக்கள் பல ஊர்களிலிருந்து வந்து ஈண்டியுள்ளனர். நீ அங்குச் செல்க. யான் என் ஊர் செல்வேன்' எனக் கூறிக் காயசண்டிகை சென்ற பின் மணிமேகலை உலக அறவியை அணுகிச், சம்பாபதியையும், கந்திற்பாவையையும் வலங்கொண்டு வணங்கி

அதனுட் புகுந்தனள். அங்குப் பலரையும் அழைத்து உணவு அளித்தாளாகப் பலரும் கூடி உண்டனர். அவ்விடம் உண்ணும் ஒலி மிக்கதாயிற்று.

பத்தினிப் பெண்டிர் பாத்தூண் ஏற்ற
பிச்சைப் பாத்திரப் பெருஞ் சோற்று அமலை,
அறத்தின் ஈட்டிய ஒண் பொருள் அறவோன்
திறத்து வழிப்படூஉம் செய்கை போல,
வாங்கு கை வருந்த மன் உயிர்க்கு அளித்துத்
தான் தொலைவு இல்லாத் தகைமை நோக்கி—
யானைத்தீ நோய் அகவயிற்று அடக்கிய
காயசண்டிகை எனும் காரிகை வணங்கி,
'நெடியோன் மயங்கி, நிலமிசைத் தோன்றி,
அடல் அரு முந்நீர் அடைத்த ஞான்று,
குரங்கு கொணர்ந்து எறிந்த நெடு மலை எல்லாம்
அணங்கு உடை அளக்கர் வயிறு புக்காங்கு,
இட்டது ஆற்றுக் கட்டு-அழல் கடும் பசிப்
பட்டேன், என்-தன் பழ வினைப் பயத்தால்!
அன்னை! கேள்: நீ ஆர் உயிர் மருத்துவி;
துன்னிய என் நோய் துடைப்பாய்!' என்றலும்—
எடுத்த பாத்திரத்து ஏந்திய அமுதம்
பிடித்து அவள் கையில் பேணினள் பெய்தலும்,
வயிறு காய் பெரும் பசி நீங்கி, மற்று-அவள்
துயரம் நீங்கித் தொழுதனள் உரைக்கும்:

1-10 பத்தினிப் பெண்டிர் - ஆதிரை நல்லாளது; பன்மை உயர்வு குறித்து நின்றது. பாத்தூண் - தென்புலத்தார் முதலாயினோர்க் குப் பகுத்தலை உடைய உணவு. பெரும்சோற்று அமலை - பெரிய சோற்றுத்திரளை. அறத்தின் - அறநெறியால். ஒண்பொருள் - புகழ்க்குரிய பொருள். அறவோன் திறத்து - அறம்புரிபவன் இடத்தில். வழிப்படூஉம் - சிதைவின்றி மேலும் வளர்கின்ற. வாங்கு கை - எடுக்கும் கை. தான் - அப்பாத்திரம். தொலைவு- உணவுதீர்தல். தகைமை - பெருமையை. அகவயிற்று - வயிற்றகத்துள். நெடியோன் - திருமால். மயங்கி-மயக்கமுற்று. தோன்றி - இராமனாக அவதாரம் செய்து. (நெடியோன் நில மிசைத் தோன்றி மயங்கி என்க.) அடல் - வலிமை.

11-20 அணங்கு உடை அளக்கர் - வருத்துதலை உடைய கடலினது. புக்காங்கு - புக்கமை போல, இட்டது - (வயிற்றினுள்) போகட்ட உணவெல்லாம். ஆற்றூ - பற்றாத. கட்டழல் - மிக்க நெருப்பைப் போன்ற. கடும்பசிப்பட்டேன் - மிக்க பசித்

துன்பம் உழந்தேன். பயத்தால் - பயனால். ஆர்உயிர் - யாவற் றினும் சிறந்த உயிர்களைக் (காக்கின்ற). துன்னிய - நெருங்கிய துடைப்பாய் - போக்குவாயாக. பேணினள் பெய்தலும்-பேணி இட்டவுடன். தொழுதனள்-தொழுது.

'மாசு இல் வால் ஒளி வட திசைச் சேடிக்
காசு இல் காஞ்சனபுரக் கடி நகர் உள்ளேன்;
விஞ்சையன்-தன்னொடு, என் வெவ் வினை உருப்ப,
தென் திசைப் பொதியில் காணிய வந்தேன்;

கடுவரல் அருவிக் கடும் புனல் கொழித்த
இடு மணல் கான் யாற்று இயைந்து ஒருங்கு இருந்தேன்;
புரி நூல் மார்பின், திரி புரி வார் சடை,
மரவுரி உடையன், விருச்சிகன் என்போன்,
பெருங் குலைப் பெண்ணைக் கருங் கனி அனையது ஓர்
இருங் கனி நாவல் பழம் ஒன்று ஏந்தி,
தேக்கு இலை வைத்து, சேண் நாறு பரப்பின்
பூக் கமழ் பொய்கை ஆடச் சென்றோன்—
தீவினை உருத்தலின், செருக்கொடு சென்றேன்;
காலால் அந்தக் கருங் கனி சிதைத்தேன்—
உண்டல் வேட்கையின் வரூஉம் விருச்சிகன்
கண்டனன், என்னைக் கருங் கனிச் சிதைவுடன்;

"சீர் திகழ் நாவலில் திப்பியம் ஆனது;
ஈர்-ஆறு ஆண்டில் ஒரு கனி தருவது;
அக் கனி உண்டோர் ஆறு-ஈர் ஆண்டு
மக்கள் யாக்கையின் வரும் பசி நீங்குவர்;

பன்னீராண்டில் ஒரு நாள் அல்லது,
உண்ணு நோன்பினேன்; உண் கனி சிதைத்தாய்!
அந்தரம் செல்லும் மந்திரம் இழந்து,
தந்தித் தீயால் தனித் துயர் உழந்து,
முந்-நால் ஆண்டில், முதிர் கனி நான் ஈங்கு

21–30 வால் ஒளி – வெண்மையாகிய ஒளியை உடைய. சேடி - வித்யாதர உலகத்தில் உள்ள. சையன் - காஞ்சனன். காசு - குற்றம். கடி - காவல். விஞ் வெவ்வினை - கொடுவினை. காணிய - காண. (விஞ்சையனோடு காணிய வந்தேன் என்க.) கடுவரல் - விரைய வருகை. கொழித்த - தெள்ளிய. கான்யாறு - காட்டாறு. கூடி. இயைந்து - மனம் பொருந்தி. ஒருங்கு - விஞ்சையனோடு திரிபுரி வார்சடை - திரித்து முறுங்கிய நீண்ட சடை. மரவுரி - வற்கலை.

பெண்ணை - பனையின். கருங்கனி - கரிய பழம். இருங்கனி - பெருங்கனி.

31–40 சேண்நாறு - நெடுந்தூரம் நாறுகின்ற. (சேண்நாறு பூக்கமழ் பரப்பிற் பொய்கை என்க.) உருத்தலின் - சினத்தலின். சென்றேன் - சென்று. கருங்கனிச் சிதைவுடன் - சிதைந்த கரிய நாவற்கனியினுடன். (என்னைக் கருங்கனிச் சிதைவுடன் கண்டனன் என்க.) சீர் - பெருமை. திப்பியம் - அற்புதம். ஆறீராண்டு- பன்னிரண்டு வருடம். வரும் - வளர்ந்துகொண்டிருக்கின்ற.

41–45 அல்லது - அன்றி. நோன்பினேன் - விரதத்தை உடையேனாகிய நான். அந்தரம் - ஆகாயம். தந்தித்தீ - யானைத்தீ என்னும் பசி நோய். தனித்துயர் - மிக்க துன்பம். முதிர்கனி - பழுத்த நாவற்கனி.

உண்ணும் நாள், உன் உறு பசி களைக!" என—
அந் நாள் ஆங்கு அவன் இட்ட சாபம்
இந் நாள் போலும், இளங்கொடி! கெடுத்தனை!—
வாடு பசி உழந்து மா முனி போய பின்,
பாடு இமிழ் அருவிப் பய மலை ஒழிந்து, என்
அலவலைச் செய்திக்கு அஞ்சினன் அகன்ற
இலகு ஒளி விஞ்சையன் விழுமமோடு எய்தி,
"ஆர் அணங்கு ஆகிய அருந் தவன்-தன்னால்
காரணம் இன்றியும் கடு நோய் உழந்தனை !
வானூடு எழுக" என—மந்திரம் மறந்தேன் !
ஊன் உயிர் நீங்கும் உருப்பொடு தோன்றி,
வயிறு காய் பெரும் பசி வருத்தும் என்றேற்கு,
தீம் கனி, கிழங்கு, செழுங் காய், நல்லன
ஆங்கு அவன் கொணரவும், ஆற்றேன் ஆக,
நீங்கல் ஆற்றான் நெடுந் துயர் எய்தி,
ஆங்கு-அவன் ஆங்கு, எனக்கு அருளொடும் உரைப்போன்,
"சம்புத் தீவினுள் தமிழக மருங்கில்,
கம்பம் இல்லாக் கழி பெருஞ் செல்வர்
ஆற்றா மாக்கட்கு ஆற்றும் துணை ஆகி,
நோற்றோர் உறைவது ஓர் நோன் நகர் உண்டால்;
பல நாள் ஆயினும், நிலனொடு போகி,
அப் பதிப் புகுக" என்று அவன் அருள்செய்ய,
இப் பதிப் புகுந்து, ஈங்கு, யான் உறைகின்றேன் :
இந்திர கோடணை விழவு அணி வரு நாள்,
வந்து தோன்றி, இம் மா நகர் மருங்கே,

46–50 உறுபசி - மிக்க பசிநோயை. போலும் - அசைநிலை. வாடுபசி - மெலிதற்குரிய பசி. பாடு இமிழ் - பெரிதும் ஒலிக்கின்ற; பாடு - பக்கமும் ஆம். பயமலை - வளம் பொருந்திய பொதியமலை.

61-60 அலவலைச் செய்திக்கு - அறிவற்ற செய்கைக்கு. அஞ்சினன் - அஞ்சி. விழுமமோடு - துன்பத்தோடு. ஆரணங்கு ஆகிய - மிக்க தெய்வத்தன்மை பொருந்தப்பெற்ற. வானூடு - ஆகாயத்தில். ஊன் - உடம்பிலிருந்து. நீங்கும் - நீங்குதற்குக் காரணமாகிய. உருப்பு - வெப்பம். காயும் - சுடுகின்றது. என்றேற்கு - என்று கூறிய எனக்கு. தீங்கனி - இனிய கனிகள். (நல்லனவாகிய தீங்கனி கிழங்கு செழுங்காய் என்க.) ஆற்றேன் — தரியேன்; நிரம்பேன் எனலும் ஆம். ஆற்ருன்—தரியான் - தாங்கான்.

61-70 உரைப்போன் — கூறுவோனுகி. தமிழகம் - தமிழ் நாடு. கம்பம் — அசைவு. கழி — மிகுதி. ஆற்ரு மாக்கள் — துய்க்கப் பெருத வறிஞர். ஆற்றும் — துய்ப்பனவற்றை உதவுகின்ற. நோன் நகர். (பொருள்) வலிமை வாய்ந்த ஊர் — காவிரிப்பூம் பட்டினம். நிலனெடு — தரைவழியே. அருள்செய்ய — கருணையாற் கூற. இப்பதி — காவிரிப்பூம் பட்டினத்தில். இந்திர கோடணைவிழவணி — இந்திரனுக்குரிய, முழக்கத்தை உடைய, அணிதலை உடைய விழா.

108

என் உறு பெரும் பசி கண்டனன் இரங்கி,
பின் வரும் யாண்டு அவன் எண்ணினன் கழியும்—
தணிவு இல் வெம் பசி தவிர்த்தனே; வணங்கினேன்;
மணிமேகலை! என் வான் பதிப் படர்கேன்;

துக்கம் துடைக்கும் துகள் அறு மாதவர் சக்கரவாளக் கோட்டம் உண்டு; ஆங்கு-அதில்

பலர் புகத் திறந்த பகு வாய் வாயில்
உலக அறவி ஒன்று உண்டு; அதனிடை
ஊர்ஊர் ஆங்கண் உறு பசி உழந்தோர்,
ஆரும் இன்மையின் அரும் பிணி உற்றோர்,
இடுவோர்த் தேர்ந்து, ஆங்கு இருப்போர் பலரால்;
வடு வாழ் கூந்தல்! அதன்பால் போக' என்று,
ஆங்கு அவள் போகிய பின்னர்—ஆய்-இழை,
ஓங்கிய வீதியின் ஒரு புடை ஒதுங்கி,
வல முறை மும் முறை வந்தனை செய்து, அவ்
உலக அறவியின் ஒரு தனி ஏறி,
பதியோர்-தம்மொடு பலர் தொழுது ஏத்தும்
முதியோள் கோட்டம் மும்மையின் வணங்கி,
கந்து உடை நெடு நிலைக் காரணம் காட்டிய
தம் துணைப் பாவையைத் தான் தொழுது ஏத்தி,
வெயில் சுட வெம்பிய வேய் கரி கானத்துக்

71-80 உறு பெரும் பசி – மாபெரும் பசிநோயை. கண்,டனன் – கண்டு. வரும்யாண்டு – (யான் சாபம் நீங்கி வருதற்குரிய ஆண்டுகளை. எண்ணினன் – எண்ணிக்கொண்டு. கழியும் – செல்வான்.

வான்பதி – சிறந்த நகர்க்கு – காஞ்சனபுரத்திற்கு. படர்கேன் – போவேன். துக்கம் – பிறவித் துயரத்தை. துகள் – முக் குற்றங்கள். புக – புகும் வண்ணம். பகுவாய் வாயில் – விரிந்த இடத்தை உடைய வாயிலினை உடைய. உலக அறவி – ஓர் அம்பலம். ஊர் ஊர் ஆங்கண் – ஒவ்வொரு ஊரிடத்திலும். உழந்தோர் – வருந்தியவரும். இன்மையின் – இல்லாமையாலே. உற்ருேர் – உற்றவரும்.

81-91 இடுவோர் – உணவளிப்போரை. தேர்ந்து – நாடி. வடு – வகிர். வடுவாழ் கூந்தல்! – மணிமேகலை! ஒதுங்கி – நடந்து. வலமுறை – வலமுறையாக. பதியோர் – ஊரிலுள்ளோர். முதியோள் கோட்டம் – சம்பாபதித் தெய்வத்தின் கோயிலை. மும்மையின் – மனமொழி மெய்களாய மூன்றினாலும். கந்துடை நெடுநிலை – நீண்டுநிற்றலை உடைய தூணின்கண் எழுதப்பட்ட. காரணம், காட்டிய – வருவதாகிய செய்தியை ஏதுக்களோடு காட்டுதற் குரிய. தம் துணைப் பாவையை – தமக்குத் துணையாதற்குரிய பாவையை – கந்திற் பாவையை. வெம்பிய – வெதும்பிய. வேய் கரி – மூங்கில் கரிந்த.

கருவி மா மழை தோன்றியதென்ன,
பசி தின வருந்திய பைதல் மாக்கட்கு
அமுதசுரபியோடு ஆய்-இழை தோன்றி;
'ஆபுத்திரன் கை அமுதசுரபி இஃது;
யாவரும் வருக, ஏற்போர்-தாம்!' என—
ஊண் ஒலி அரவத்து ஒலி எழுந்தன்றே,
யாணர்ப் பேர் ஊர் அம்பல மருங்கு-என்.

92-93 கருவி - தொகுதியாகிய. தின - வாட்ட. பைதல் மாக்கட்கு - துன்பத்தினை உடைய மக்களிடத்தே: வேற்றுமையக்கம் ஆயிழை-மணிமேகலை. என - என்று கூற. (ஏற்போர் தாம் யாவரும் வருக என என்க.) ஊண் ஒலி - உண்ணுதலின் ஒலியால். அரவத்து ஒலி - மிக்க முழக்கம். எழுந்தன்று - எழுந்தது. யாணர் - புது வருவாய்.

18.

உதயகுமரன் அம்பலம் புக்க காதை,

மணிமேகலை உலக அறவியில் பிக்குணிக் கோலத்துடனிருந்து அறம் புரிதல் மாதவியின் தாயாகிய சித்திராபதிக்குப் பெரிதும் மனக்கொதிப்பை உண்டாக்கிற்று. பல நாடக மடந்தையர் முன்னிலையில் "மணிமேகலையின் கையிலுள்ள

பிச்சைப் பாத்திரத்தை ஏனைய வறியோர் கைக்கு மாற்றி உதய குமரனது தேரின்மேல் அவளை ஏற்றி வருவேன். இது செய்திலனேல் என்னை நம் குடிக்குற்றம் உடையவருள் ஒருத்தியாகக் கருதுமின் ''என்று வஞ்சினம் சாற்றி உதயகுமனுழைச் சென்று வணங்கிநின்று "நினக்கேற்ற மணிமேகலை பிக்குணிக் கோலம் பூண்டு உலக அறவியில் இருக்கின்ருள்; அவளை நின்

வயமாக்கிக்
கோடல் நின் தகுதியாகும்"
எனக் கூறிநின்றனள். அவனும்
அங்ஙனமே புரிவேன்
என்று புறப்பட்டு உலக
அறவியில்
மணிமேகலையை யணுகி, "நீ
தவக்கோலம் பூண்ட காரணம்"
யாது? என்றனன். அவள்
பண்டைப் பிறப்பினில் கணவனு
யிருந்த அவனை வணங்கி,
யாக்கையின் பொல்லாங்கினை
உணர்ந்தமையால்

தவக்கோலம் பூண்டேன் என்று
கூறிச் சம்பாபதி
கோயிலுள் சென்று
காயசண்டிகை உருவாக
மாறினள். பின்
உதயகுமரன்சம்பாபதியை
வணங்கி, மணிமேகலை எங்கு
உளாள்
என்பதை நீ யறிவியாவிடின்
யான் பாடுகிடப்பேன் என்றான்.

ஆங்கு-அது கேட்டு-ஆங்கு, அரும் புண் அகவயின்
தீத் துறு செங் கோல் சென்று சுட்டாங்கு,
கொதித்த உள்ளமொடு குரம்பு கொண்டு ஏறி,
விதுப்புறு நெஞ்சினள், வெய்து உயிர்த்துக் கலங்கி,
'தீர்ப்பல், இவ் அறம்!' என, சித்திராபதி-தான்
கூத்து இயல் மடந்தையர்க்கு எல்லாம் கூறும்:
'கோவலன் இறந்த பின் கொடுந் துயர் எய்தி,
மாதவி மாதவர் பள்ளியுள் அடைந்தது,
நகுதக்கன்றே! நல் நெடும் பேர் ஊர்,
இது தக்கு என்போர்க்கு எள்-உரை ஆயது!
காதலன் வீய, கடுந் துயர் எய்தி,
போதல்செய்யா உயிரொடு புலந்து,
நளி இரும் பொய்கை ஆடுநர் போல,
முளி எரிப் புகூஉம் முது குடிப் பிறந்த
பத்தினிப் பெண்டிர் அல்லேம்; பலர்-தம்
கைத்தூண் வாழ்க்கை கடவியம் அன்றே?
பாண் மகன் பட்டுழிப் படூஉம் பான்மை இல்
யாழ் இனம் போலும் இயல்பினம்; அன்றியும்,
நறுந் தாது உண்டு, நயன் இல் காலை
வறும் பூத் துறக்கும் வண்டு போல்குவம்;

1-10 ஆங்கது – மணிமேகலை பிக்குணிக் கோலம் பூண்டு உலக அறவியை எய்தி ஏற்போர்க்கெல்லாம் உணவளித்தலை. அரும்புண் – மருமத்தில் பொருந்திய புண்ணில். தீத்துறு செங்கோல் – தீப் பற்றிய செந்நிறம் கொண்ட நாராசம். கொதித்த – வெதும்பிய. குரம்பு கொண்டு ஏறி – வரம்பினை மேற்கொண்டு எழுந்து – எல்லை கடந்து. விதுப்பு – விரைவு – ஆத்திரம். வெய்து – சூடாக. தீர்ப்பல் – ஒழிப்பேன். சித்திராபதி – மாதவியின் தாய். கூத்தியல் மடந்தையர்க்கு – நாடக மடந்தையர்க்கு. மாதவர் – பௌத்த சங்கத்து முனிவர். பள்ளி – தவச்சாலை. நகுதக்கன்று – சிரிக்கத்தக்கதாகும். பேரூர் – புகாரின் கண். இது – மாதவி தவப்பள்ளி புக்கமை. தக்கென்போர்க்கு – தக்கதென்று கூறுவோர்க்கு. எள்ளுரை

ஆயது–இகழ்ச்சியுரைக்குக் காரணமாக உள்ளது. (மாதவியின் செய்கையைத் தக்கதென்று கூறுபவர் எல்லோராலும் இகழப் படுகின்றனர் என்பதாம்.)

11-20 வீய – இறத்தலால். போதல் செய்யா – போகாத. புலந்து – வெறுத்து. நளி – குளிர்ச்சி. ஆடுநர் – மூழ்குவோர் முளி எரி – காய்ந்த கட்டைத்தீ முதுகுடி – பெருங்குலம். பலர்தம் கைத்து ஊண் வாழ்க்கை கடவியம் – பலரது கைப்பொருளால் உண்டு வாழ்தலை முறைமையாக உடையோம். பாண்மகன் பட்டுழி – பாணன் இறந்தால். படூஉம் பான்மை – அழியும் தன்மை. தாது – மகரந்தம். நயன் – விரும்பத்தக்க தேன். வறும் பூ – வெறும் பூவை.

111

வினை ஒழிகாலத் திருவின் செல்வி

அனையேம் ஆகி, ஆடவர்த் துறப்பேம்;
தாபதக் கோலம் தாங்கினம் என்பது
யாவரும் நகூஉம் இயல்பினது அன்றே?
மாதவி ஈன்ற மணிமேகலை வல்லி

போது அவிழ் செவ்வி பொருந்துதல் விரும்பிய
உதையகுமரன் ஆம் உலகு ஆள் வண்டின்
சிதையா உள்ளம் செவ்விதின் அருந்த,
கைக்கொண்டு ஆங்கு-அவள் ஏந்திய கடிஞையைப்
பிச்சை மாக்கள் பிறர் கைக் கர்ட்டி,
மற்று-அவன்-தன்னால் மணிமேகலை-தனைப்
பொன் தேர்க் கொண்டு போதேன் ஆகின்,
சுடுமண் ஏற்றி, அரங்கு சூழ் போகி,

வடுவொடு வாழும்
மடந்தையர்-தம்மோர்-
அனையேன் ஆகி, அரங்கக்
கூத்தியர்
மனை அகம் புகாஅ
மரபினன்' என்றே
வஞ்சினம் சாற்றி, நெஞ்சு

புகையுயிர்த்து—
வஞ்சக் கிளவி மாண்பொடு
தேர்ந்து,
செறி வளை நல்லார் சிலர்
புறம் சூழ, குறு வியர்
பொடித்த கோல வாள் முகத்தள்

21-30 வினை – நல்வினை. திருவின் செல்வி – திருமகள். அனையேம் – போல்வோம். தாபதக் கோலம் – முனிவர் வேடம். நகூஉம் – சிரிக்கும். மணிமேகலை வல்லி – மணிமேகலையாகிய கொடி. போது அவிழ் செவ்வி – பூ மலரும் சமயத்தை. சிதையா உள்ளம் – ஓர் இடத்தும் இதற்குமுன் நிறையழியாத மனம். கைக்கொண்டு – அகப்படுத்து. கடிஞையை – பிச்சைப் பாத்திரத்தை. கைக்காட்டி – கையில் சேர்த்து.

31-40 அவன் – உதயகுமரன். தேர் – தேரில். போதேன் ஆகில் – வாரேனேல். சுடுமண் ஏற்றி – செங்கல்லைத் தலைமேல் ஏற்றப் பெற்று. அரங்கு – நாடக மேடை. வடு – குற்றம். மடந்தையர் தம் ஓரனையேனாகி – மடந்தையர் தம்மோடு ஒரு தன்மையேனாய் (பரத்தையர் குடிக் குற்றப்பட்டால் அவர் தலையில் செங்கல்லை ஏற்றி

நாடக வரங்கினைச் சுற்றிவரச் செய்தல் பண்டைய மரபாகும். மேலும் அவர் நாடகக் கூத்தியரது மனையகத்தில் புகும் உரிமையற்றவராவர்.)
வஞ்சினம்—சபதம்.

நெஞ்சு புகை உயிர்த்து — மனம் கொதித்து வஞ்சக்கிளவி — வஞ்சமாய மொழி. மாண்பொடு — நன்ருக. தேர்ந்து — ஆராய்ந்து. நல்லார் — பரத்தையர். புறம் சூழ — சுற்றிவர. குறுவியர் பொடித்த — சிறு வியர்வு தோன்றிய. முகத்தள் — முகத்தையுடையவளாய்.

கடுந் தேர் வீதி காலில்
போகி,
இளங்கோ வேந்தன்
இருப்பிடம் குறுகி—
அரவ வண்டொடு தேன் இனம் ஆர்க்கும்
தரு மணல் ஞெமிரிய திரு நாறு ஒரு சிறை,
பவழத் தூணத்து, பசும் பொன் செஞ் சுவர்,
திகழ் ஒளி நித்திலச் சித்திர விதானத்து,
விளங்கு ஒளி பரந்த பளிங்கு செய் மண்டபத்து,
துளங்கும் மான் ஊர்தித் தூ மலர்ப் பள்ளி,
வெண் திரை விரிந்த வெண் நிறச் சாமரை
கொண்டு, இரு மருங்கும், கோதையர் வீச,
இருந்தோன் திருந்து அடி பொருந்தி நின்று, ஏத்தி—
திருந்து எயிறு இலங்கச் செவ்வியின் நக்கு, அவன்,
'மாதவி மணிமேகலையுடன் எய்திய
தாபதக் கோலம் தவறு இன்றோ?' என—
'அரிது பெறு சிறப்பின் குருகு கருவுயிர்ப்ப,
ஒரு தனி ஓங்கிய திரு மணிக் காஞ்சி,
பாடல்சால் சிறப்பின்
பரதத்து ஓங்கிய

நாடகம் விரும்ப நல்
நலம் கவினி,
காமர் செவ்விக் கடி மலர் அவிழ்ந்தது;
உதையகுமரன் எனும் ஒரு வண்டு உணீஇய,
விரைவொடு வந்தேன்; வியன் பெரு மூதூர்ப்
பாழ்ம்ம் பறந்தலை அம்பலத்து ஆயது;

---

41 50 கடுந்தேர் – விரையும் தேர். தருமணல் - இட்ட மணல் ஞெமிரிய – பரந்த. திரு நாறு – அழகு தோன்றும்; செல்வம் கமழும் எனினும் அமையும். ஒரு சிறை-ஒரு பக்கம். தூணம் – தூண். நித்திலம் – முத்து விதானம் – மேல்கட்டி. துளங்கும் மான் ஊர்தி – (ஒளி) அசைந்து செல்லும் சிங்கம் சுமந்த தவிசு - சிங்காசனம். தூ மலர் - தூய பூக்களால் அமைந்த. வெண் திரை – வெள்ளிய அலைகளைப்போல்.

51-60 இருந்தோன் – உதயகுமரனது. ஏத்தி – ஏத்த. எயிறு இலங்க – பற்கள் விளங்க செவ்வியின் நக்கு – முகமலர்ச்சியோடு சிரித்து. அவன் – உதயகுமரன். என - என்று கேட்க. அரிது பெறு சிறப்பின் குருகு - அரிதினிற் பெற்ற சிறப்பினை உடைய மாதவி; மாதவி', மாதவிக் கொடி எனவும் தோன்ற நின்றது. ஒரு தனி ஓங்கிய - ஒப்பற்று வளர்ந்த. திருமணிக் காஞ்சி - மணிமேகலை; அழகிய காஞ்சிமரம் என்றும் ஓர் பொருள் தோன்றி நின்றது. பரதத்து - நாடகத்தில்; பரத கண்டத்தினுள் எனவும் ஆம் நாடகம் - நாட்டகத்துள்ளோர்; நாடகக்கலையும் ஆம். நலம் கவினி - அழகு சிறந்து. காமர் - அழகு. உணீஇய - உண்ணும் பொருட்டு.

61-62 வியன் - அகலம். பாழ்ம்ம் பறந்தலை - பாழாகிய சுடுகாட்டில் உள்ள. ஆயது - உள்ளது.

வாழ்க, நின் கண்ணி! வாய் வாள் வேந்து!' என—
ஓங்கிய பௌவத்து உடைகலப் பட்டோன்
வான் புணை பெற்றென, மற்று அவட்கு உரைப்போன்,
"மேவிய பளிங்கின் விருந்தின் பாவை-இஃது
ஓவியச் செய்தி" என்று ஒழிவேன் முன்னர்,
காந்தள் அம் செங் கை தளை பிணி விடாஅ,
ஏந்து இள வன முலை இறை நெரித்ததூஉம்;
ஒத்து ஒளிர் பவளத்துள் ஒளி சிறந்த
முத்துக் கூர்த்தன்ன முள் எயிற்று அமுதம்
அருந்த ஏமாந்த ஆர் உயிர் தளிர்ப்ப,
விருந்தின் மூரல் அரும்பியதூஉம்;
மா இதழ்க் குவளை மலர் புறத்து ஓட்டிக்
காய் வேல் வென்ற கருங் கயல் நெடுங் கண்,
"அறிவு பிறிதாகியது ஆய்-இழை-தனக்கு" என,
செவிஅகம் புகூஉச் சென்ற செவ்வியும்;
பளிங்கு புறத்து எறிந்த பவளப் பாவை, "என்
உளம் கொண்டு ஒளித்தாள், உயிர்க் காப்பிட்டு" என்று,
இடை இருள் யாமத்து இருந்தேன் முன்னர்—
பொன் திகழ் மேனி ஒருத்தி தோன்றி,
செங்கோல் காட்டி, "செய் தவம் புரிந்த
அங்கு-அவள்-தன் திறம் அயர்ப்பாய்" என்றனள்;
தெய்வம்கொல்லோ? திப்பியம்கொல்லோ?

63–70 வாய்வாள் - வெற்றி வாய்த்தலை உடைய வாள். பௌவத்து - கடலில். உடைகலப்பட்டோன் - கப்பல் உடைந்த ஆபத்துக்குள்ளாயவன். வான் புணை - சிறந்த தெப்பம். பெற்றென - பெற்றாற்போல மகிழ்ந்து. அவட்கு - சித்திராபதிக்கு. விருந்தின் - புதுமையினை உடைய. (இஃது பளிங்கின் மேவிய ஓவியச் செய்கியாய விருந்தின்பாவை என்க.) என்று - என நினைந்து. ஒழிவேன் - நீங்கும் எனது. செங்கை-செம்மையாகிய கையால். தளை பிணி விடா - தளைத்த (= கட்டிய) பிணிப்பினை விடாமல். இறை - சிறிது. ஒளிர் பவளத்துள் - விளங்கும் பவளம் போன்ற வாயினுள்.

71-80 கூர்த்தன்ன - கூர்மை எய்தப்பெற்றாற்போன்ற. முள்எயிற்று அமுதம் - முட்போலும் பற்களில் ஊறும் நீர். அருந்தேமாந்த - அருந்துதற்கு ஏங்கிய. விருந்தின் மூரல் - புதுமையாகிய இளநகை. மா-கருமை. புறத்து ஓட்டி-வென்று. காய்-செறுகின்ற. பிறிதாகியது - வேறுபட்டது. ஆயிழை தனக்கு - இம் மணிமேகலைக்கு. என - என்று அறிவித்து. புகூஉச் சென்ற - புகுந்து மறித்துச் சென்ற. பளிங்குபுறத்து எறிந்த-பளிங்கின் கண்ணே தீட்டிய. பவளப்பாவை - மணிமேகலை. உயிர்க் காப்பு இட்டு - என் உயிரைக் காத்தல் செய்து. (மணிமேகலையைப் பெறும் வேட்கையால் உயிர் சாவாமல் நின்றதென்பது கருத்து.)

81-84 காட்டி - விளக்கி. அவள் - மணிமேகலை. அயர்ப்பாய் - மறக்க. திப்பியம் - அற்புதம்.

எய்யா மையலேன், யான்!' என்று அவன் சொல—
சித்திராபதி-தான் சிறு நகை எய்தி,
'அத் திறம் விடுவாய், அரசு இளங் குருசில்!
காமக் கள்ளாட்டிடை மயக்குற்றன
தேவர்க்கு ஆயினும், சிலவோ, செப்பின் ?
மாதவன் மடந்தைக்கு வருந்து துயர் எய்தி,
ஆயிரம் செங் கண், அமரர் கோன், பெற்றதும்;
மேருக் குன்றத்து,
ஊரும் நீர்ச் சரவணத்து,
அருந் திறல் முனிவர்க்கு ஆர் அணங்கு ஆகிய
பெரும் பெயர்ப் பெண்டிர் பின்பு உளம் போக்கிய
அங்கி மனையாள்
அவர்அவர் வடிவு ஆய்,
தங்கா வேட்கை-தனை
அவண் தணித்ததூஉம்;

கேட்டும் அறிதியோ,
வாள்-திறல் குருசில் ?
கன்னிக் காவலும்,
கடியின் காவலும்,

தன் உறு கணவன்
சாவுறின் காவலும்,

நிறையின் காத்து, பிறர்
பிறர்க் காணாது,
கொண்டோன் அல்லது
தெய்வமும் பேணாப்

பெண்டிர்-தம் குடியில்
பிறந்தாள் அல்லள் :

நாடவர் காண, நல் அரங்கு ஏறி,
ஆடலும் பாடலும் அழகும் காட்டி,
சுருப்பு நாண் கருப்பு வில் அருப்புக் கணை தூவ,
செருக் கயல் நெடுங் கண் சுருக்கு வலைப் படுத்து,
கண்டோர் நெஞ்சம் கொண்டு, அகம் புக்கு,

பண் தேர் மொழியின்

பயன் பல வாங்கி,

85–90 எய்யாமையலேன் - தெளியாத மயக்கமுடையேன். காமமாகிய கள்ளாட்டு; கள்ளாட்டு - கட்குடித்துக் களித்தல். மயக்குற்றன - மதி கலங்கிய நிகழ்ச்சிகள். மாதவன் மடந்தைக்கு - அகலியையின் பொருட்டு.

91-100 சரவணம் - ஒரு பொய்கை. முனிவர்க்கு - தெய்வ முனிவர் எழுவர்க்கு. ஆரணங்கு ஆகிய - மனக் கலக்கம் தருபவராகிய. பெரும் பெயர் - பெரும் புகழ். போக்கிய - செலுத்திய. அங்கி - அக்கினி தேவனது. ஆண் திறல் குரிசில்! - ஆண்மையும் வலிமையும் உடைய செம்மல்!. கன்னிக்காவல் - கன்னிப் பருவத்துச் சிறைகாவல். கடியில் - மணமான பின்பு. உறு - எய்திய. கணவன் சாவுறின் காவல் - கைம்மையின்கண் காவல். நிறையின் - மன வடக்கத்தினுல்.

101-108 பேணு - போற்றுத. சுரும்பு - வண்டு. (சுரும்பாகிய நாணினை உடைய கரும்பாகிய மன்மதனது வில் அரும்பாகிய 'கணைகளை ஆடவர்மேல் தூவ என்க.) செரு - போரிடுகின்ற. (நெடுங் கண்ணுகிய சுருக்கு வலையில் படுத்து.) பண்தேர் மொழி - இசையினை ஆராய்தற்குரிய மொழியினுல். பயன் - செல்வம்.

வண்டின் துறக்கும் கொண்டி மகளிரைப்
பான்மையின் பிணித்து, படிற்று-உரை அடக்குதல்
கோன்முறை அன்றோ, குமரற்கு?' என்றலும்—
உதையகுமரன் உள்ளம் பிறழ்ந்து,
விரை பரி நெடுந் தேர்மேல் சென்று ஏறி,
ஆய்-இழை இருந்த அம்பலம் எய்தி—
காடு அமர் செல்வி, கடிப் பசி களைய,
ஓடு கைக்கொண்டு நின்று ஊட்டுநள் போல,
தீப் பசி மாக்கட்குச் செழுஞ் சோறு ஈத்து,
பாத்திரம் ஏந்திய பாவையைக் காண்டலும்—
இடங்கழி காமமொடு அடங்கான் ஆகி,
'உடம்போடு என்-தன் உள்ளகம் புகுந்து, என்
நெஞ்சம் கவர்ந்த வஞ்சக் கள்வி
நோற்றூண் வாழ்க்கையின், நொசி தவம் தாங்கி,
ஏற்றூண் விரும்பிய காரணம் என்? என,
தானே தமியள் நின்றோள் முன்னர்
யானே கேட்டல் இயல்பு' எனச் சென்று,
'நல்லாய்! என்கொல், நல் தவம் புரிந்தது?
சொல்லாய்' என்று துணிந்துடன் கேட்ப—
'என் அமர் காதலன் இராகுலன்; ஈங்கு-இவன்-
தன் அடி தொழுதலும் தகவு!' என வணங்கி,
'அறைபோய் நெஞ்சம் அவன்பால் அணுகினும்,

109–110 வண்டின் - வண்டைப்போல. கொண்டி மகளிரை - செல்வத்தைக் கொள்ளும் பரத்தை மகளிரை. பான்மை - முறை. படிற்றுரை - வஞ்சமாய பேச்சு; என்றது, மணிமேகலா தெய்வம் உதயகுமரனிடம், "தவத்திறம் பூண்டோள் தன்பால் ... அவத்திறம் ஒழிக" என்ற மொழியினை.

111-120 ஆயிழை - மணிமேகலை. அம்பலம் - உலக அறவி. காடமர் செல்வி - கொற்றவை - காளி. கடி - பேய்களுடைய. ஈத்து - கொடுத்து. இடங்கழிகாமம் - வரம்புகடந்த காமம். அடங்கானாகி - மனம் நில்லாதவனாகி.

121-130 வஞ்சக்கள்வி - மாயம் வல்ல கள்வி - மணிமேகலை. நோற்று ஊண் வாழ்க்கை - பட்டினி நோன்பிருந்து உண்ணுதலை யுடைய வாழ்க்கை. நொசி தவம் - உடல் இளைத்தற்குரிய தவம். ஏற்றூண் - பிச்சை ஏற்று உண்ணுதல். தானே தமியள் - தன்னந்தனியளாய். நின்றோள் - மணிமேகலை. இயல்பு - முறைமை. என - என்று எண்ணி. சொல்லாய் - சொல்லுக. துணிந்து-ஐயம் நீங்கும்படி. உடன்-இப்பொழுதே. (துணிய உடன் சொல்லாய் என்க.) என் அமர் காதலன் - என் மீது மனம் அமர்ந்த அன்பினன். தகவு - தகுதி. என - என்று எண்ணி. அறைபோய் - நீங்கிச்சென்று. (நெஞ்சம் அறை போய் அவன் பால் அணுகினும் என்க)

116

இறை வளை முன்கை ஈங்கு-இவன் பற்றினும்,
தொன்று காதலன் சொல் எதிர் மறுத்தல்
நன்றி அன்று!' என, நடுங்கினள் மயங்கி—
'கேட்டது மொழிவேன், கேள்வியாளரின்
தோட்ட செவியை நீ ஆகுவை ஆம் எனின்.
பிறத்தலும், மூத்தலும், பிணிப்பட்டு இரங்கலும்,
இறத்தலும், உடையது; இடும்பைக் கொள்கலம்—

மக்கள் யாக்கை இது:

என உணர்ந்து,

மிக்க நல் அறம்

விரும்புதல் புரிந்தேன்;
மண்டு அமர் முருக்கும்
களிறு அனையார்க்கு,
பெண்டிர் கூறும் பேர்
அறிவு உண்டோ?
கேட்டனை ஆயின்,
வேட்டது செய்க!' என,

வாள்-திறல் குருசிலை மடக்கொடி நீங்கி,
முத்தை முதல்வி முதியாள் இருந்த
குச்சரக் குடிகை-தன் அகம் புக்கு-ஆங்கு,
'ஆடவர் செய்தி அறிகுநர் யார்?' என,
தோடு அலர் கோதையைத் தொழுதனள் ஏத்தி,
மாய விஞ்சை மந்திரம் ஓதி,
காயசண்டிகை எனும் காரிகை வடிவு ஆய்,
மணிமேகலை-தான் வந்து தோன்ற—
அணி மலர்த் தாரோன் அவள்பால் புக்கு—
குச்சரக் குடிகைக் குமரியை மரீஇ,
'பிச்சைப் பாத்திரம், பெரும் பசி உழந்த
காயசண்டிகை-தன் கையில் காட்டி,
மாயையின் ஒளித்த மணிமேகலை-தனை

131-140 இறை - மணிக்கட்டு. தொன்று காதலன் - பழம் பிறப்பில் கணவனாய் இருந்தவன். நன்றி - நன்மை. நடுங்கினள் - நடுங்கி. கேள்வியாளரின் - கேள்வியறிவை உடையோர்களால். தோட்ட - துளைத்த. செவியை - காதுடையாய். இரங்கல் - துன்புறல். இடும்பைக் கொள்கலம் - துன்பத்தின் வைப்பிடம். (மக்கள் யாக்கையாகிய இஃது, பிறத்தலும் ... இறத்தலும் உடையது. இடும்பைக் கொள் கலம் என்க.) மண்டமர் முருக்கும் - மூளும் போரினைச் சிதைக்கின்ற. களிறு அனையார்க்கு - போர் யானை போன்ற உனக்கு.

141-150 வேட்டது - விரும்பியதை. என - என்று சொல்லி. திறல் குரிசில் - வலிமையுடைய செம்மல் - உதயகுமரன். முத்தை முதல்வி முதியாள் - சம்பாபதி. குச்சரக் குடிகை - கூர்ச்சர நாட்டுத் தொழிலமைந்த குடிசை. அறிகுநர் - அறிவோர்! தோடு அலர் கோதை - சம்பாபதி. மாயவிஞ்சை - மாயம் புணர்க்கும் வித்தை. மந்திரம் - வேற்றுரு நல்கும் மந்திரத்தை.

151-155 தாரோன் - உதயகுமரன். மரீஇ - பொருந்தி. காட்டி - உளதாக்கி. ஒளித்த - மறைந்த.

ஈங்கு இம் மண்ணீட்டு யார் என உணர்கேன் ?
ஆங்கு-அவள் இவள் என்று அருளாய்ஆயிடின்,
பல் நாள் ஆயினும், பாடுகிடப்பேன் :
இன்னும் கேளாய், இமையோர் பாவாய்!
பவளச் செவ் வாய்த் தவள வாள் நகையும்,
அஞ்சனம் சேராச் செங் கயல் நெடுங் கணும்
முரிந்து கடை நெரிய வரிந்த சிலைப் புருவமும்
குவி முள் கருவியும், கோணமும், கூர் நுனைக்
கவை முள் கருவியும், ஆகிக் கடிகொள,
கல்விப் பாகரின் காப்பு வலை ஓட்டி;
வல் வாய் யாழின், மெல்லிதின் விளங்க,
முதுக்குறை முதுமொழி எடுத்துக் காட்டி;
புதுக் கோள் யானை வேட்டம் வாய்த்தென,
முதியாள்! உன்-தன் கோட்டம் புகுந்த
மதி வாள்-முகத்து மணிமேகலை-தனை
ஒழியப் போகேன்; உன் அடி தொட்டேன்;
இது குறை' என்றனன். இறைமகன்-தான்-என்.

156–160 மண்ணீட்டு - சுதை உருவங்களில். அருளாய் - கூறாய். பாடு கிடப்பேன் - வரங்கிடப்பேன். தவளவாள் நகை - வெள்ளிய

ஒளிவிடும் பல்.

161-172 அஞ்சனம் சேரா - மைதீட்டப் பெறாத. முரிந்து கடை நெரிய வரிந்த சிலை - வளைவுற்று இருகோடியும் நெரியுமாறு இழுத்து நாணேற்றிய வில். குவிமுள் கருவி - குவிந்த முள்ளை உடைய கருவி. கோணம் - தோட்டி. கவைமுள் கருவி - கவைத்த முள்ளை உடைய கருவி - பரிக்கோல். கடிகொள - காவல் கொள்ள. (நகையும் கண்ணும் புருவமும் முறையே குவிமுட் கருவியும் கோணமும் கவைமுள் கருவியுமாகிக் கடிகொள என்க.) கல்விப்பாகரின் - கல்வியாகிய பாகரது. வல்வாய் யாழின் - இசையில் வல்ல வாயாகிய யாழினால். மெல்லிதின் - மென்மையாக. விளங்க - மனங்கொள்ளுமாறு. முதுக்குறை முதுமொழி-அறிவுடைமைக்குரிய சிறந்த பொருளை: மொழி- ஆகுபெயர். புதுக்கோள் - புதிதாகக் கொள்ளுதலை உடைய. வேட்டம் வாய்த்தென - வேட்டையின் கண் பிடிபட்டதென எண்ணி. மணிமேகலையைப் பெற்றேனென எண்ணி. வாள் - ஒளி. ஒழிய - விட்டு. அடிதொட்டேன் - அடியைத் தொட்டுச் சூளுற்றேன். குறை - இன்றியமையாதது.

19. சிறைக் கோட்டம் அறக்கோட்டம் ஆக்கிய காதை

உதயகுமரன் சம்பாபதியை நோக்கி 'மணிமேகலையை நீ காட்டாயேல் நான் பாடுகிடப்பேன்' என்று சூளுற்றபோது, அங்கு ஒரு பாவையில் உள்ள தெய்வம் அவனை நோக்கி "நீ இங் ஙனம் சூளுறுதல் தீது" என்றது. அது கேட்ட அவன் "மணி

மேகலை கையிலுள்ள ஓடும், கந்திற்பாவையின் கூற்றும், இப் பாவைத் தெய்வத்தின் கூற்றும் இறும்பூது சான்றன. மணிமேகலை திறத்தை ஆராய்ந்தபின் இவை விளங்கும்" என்று எண்ணி மீண்டான். மணிமேகலை காயசண்டிகை உருவுடன் பசித்தோர்க்கெல்லாம் உணவளித்து வந்தாள். ஒருநாள சிறைக் கோட்டத்தில் புகுந்து அங்குப் பசியால் வருந்துவோர்க்கு உணவளித்தாள். அவள் ஒரே பாத்திரத்தைக் கொண்டிருத்தலையும் அது பலர்க்கும் உணவு சுரத்தலையும் கண்டு வியந்த சிறை காவலர் அச்செய்தியை வேந்தனுக்கு உணர்த்தினர். அவனும் வியந்து அவளை வருவித்து, "நீ யார்? இப்பாத்திரம் எய்தியதெங்ஙனம்?" என்று வினவினன் மணிமேகலை "நான் ஒரு விஞ்சை மகள்; இப்பாத்திரம் தெய்வந் தந்தது" என உண்மை திறம்பாது கூறினள். அரசனும் அவளைப் போற்றி யான் செய்யவேண்டியது யாது என, அவள் "சிறைக் கோட்டத்தை அறக்கோட்டமாக்குக" என்றனள். அரசனும் அவள் சொற்படியே சிறைத்தண்டம் பெற்றோரை விடுவித்து, அக்கோட்டத்தினை அறம்தழைக்கும் கோட்டமாக்கினன்.

முதியாள் திருந்து அடி மும்மையின் வணங்கி,
மது மலர்த் தாரோன் வஞ்சினம் கூற,
'ஏடு அவிழ் தாரோய்! எம் கோமகள் முன்,
நாடாது துணிந்து, நா நல்கூர்ந்தனை' என,
வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச்
சித்திரம் ஒன்று தெய்வம் கூறலும்—
உதயகுமரன் உள்ளம் கலங்கி,

பொது-அறைப் பட்டோர் போன்று மெய் வருந்தி,
"அங்கு-அவள்-தன் திறம் அயர்ப்பாய்" என்றே
செங்கோல் காட்டிய தெய்வமும் திப்பியம்;

1–10 முதியாள் - சம்பாபதி. மும்மையின் - முக்கரணங்களாலும் வஞ்சினம் - சபதம். ஏடு - இதழ். கோமகள் - சம்பாபதி. நாடாது - ஆராயாமல். துணிந்து - துணிவுடன் வஞ்சினம் கூறி. நாகல்கூர்ந்தனை - வீண்மொழி பகர்ந்தவனுயினை.' வித்தகர் - வல்லுநர். சித்திரம் ஒன்று - சித்திரத்தில் பொருந்திய. பொதியறை - நிலவறை. அங்கவள்தன் திறம் - மணிமேகலை திறத்தில் காமத்தினை. அயர்ப்பாய் - மறக்க. திப்பியம் - அற்புதம்.

119

பை அரவு-அல்குல் பலர் பசி களையக

கையில் ஏந்திய பாத்திரம் திப்பியம்;
"முத்தை முதல்வி அடி பிழைத்தாய்" எனச்
சித்திரம் உரைத்த இதூஉம் திப்பியம்;
இந் நிலை எல்லாம் இளங்கொடி செய்தியின்
பின் அறிவாம்' எனப் பெயர்வோன்-தன்னை—
அகல் வாய் ஞாலம் ஆர் இருள் உண்ண,
பகல் அரசு ஓட்டி, பணை எழுந்து ஆர்ப்ப;
மாலை நெற்றி, வான் பிறைக் கோட்டு,
நீல யானை மேலோர் இன்றி,
காமர் செங் கை நீட்டி, வண்டு படு

பூ நாறு கடாஅம் செருக்கி, கால் கிளர்ந்து,
நிறை அழி தோற்றமொடு தொடர— முறைமையின்,
நகர நம்பியர் வளையோர்-தம்முடன்,
மகர வீணையின் கிளை நரம்பு வடித்த
இளி புணர் இன் சீர் எஃகு உளம் கிழிப்ப,
பொருஅ நெஞ்சில் புகை எரி பொத்தி,
பருஅக் குருகின் உயிர்த்து, அவன் போய பின்—
உறையுள் குடிகை
உள்வரிக் கொண்ட
மறு இல் செய்கை
மணிமேகலை-தான்,

11–20 பை – படம். அடிபிழைத்தாய் - அடிகட்குத் தவறுசெய்தனை. இதூஉம் - இதுவும். இளங்கொடி செய்தியில் - மணிமேகலையின் வரலாற்றினில். அறிவாம் - அறிவோம். என - என்று எண்ணி. பெயர்வோன் - செல்பவன். அகல்வாய்ஞாலம் - அகன்ற இடத்தினை

உடைய உலகத்தை. பகல் அரசு - சூரியனாகிய அரசனை.
பணை - முரசு. மாலை நெற்றி - மாலை யாகிய நெற்றி;
மாலையை அணிந்த நெற்றி.
பிறைக்கோடு -
பிறையாகிய கோடு;
பிறைபோலும் கோடு.
கோடு—கொம்பு.
நீலயானை - இருட்டாகிய யானை; நீல நிறமுடைய யானை.
மேலோர் - மேலே ஏறிச் செலுத்துபவர்.

21-30 காமர் - அழகு. கடாஅம் செருக்கி - மதத்தால் களித்து கால்கிளர்ந்து - காற்றைப்போல எழுச்சியுற்று. நிறை அழி தோற்றமொடு - மனத்தினை அடக்கி நிறுத்தும் தன்மை அழிந்தமையை உணர்த்தும் தோற்றத்தோடு. நகரநம்பியர் - புகாரின்கண்ணுள்ள செல்வர். வளையோர் - தாம் காதலித்த பரத்தையர். மகரவீணை - ஒருவகை வீணை. கிளைநரம்பு - குரல், இளி, துத்தம், விளரி, கைக்கிளை என்னும் ஐவகை நரம்புகள். வடித்த - சுட்டுவிரலாலும் பெருவிரலாலும் வருடிய. இளிபுணர் இன்சீர் - இசையோடு கூடிய இனிய தாள அறுதியாகிய. பொறா - ஆற்றாத. நெஞ்சில் புகை எரி பொத்தி - மனத்தில் புகையைத் தரும் நெருப்பு மூளப்பெற்று - மனம் கொதித்து. பறாஅக்குருகின் - பறக்க இயலாத குருகுபோல - ஊதுலையின் மூக்கினைப்போல. உறையுள்குடிஞை - தங்கியுள்ள இடமாகிய சம்பாபதியின் கோட்டத்தில். உள்வரி - வேற்றுருவம். மறு - குற்றம்.

'மாதவி மகள் ஆய், மன்றம் திரிதரின்,
காவலன் மகனோ கைவிடலீ யான்!'
காய்பசியாட்டி காயசண்டிகை என,
ஊர் முழுது அறியும் உருவம் கொண்டே,
ஆற்றா மாக்கட்கு ஆற்றும் துணை ஆகி,
"ஏற்றலும் இடுதலும் இரப்போர் கடன்; அவர்
மேற்சென்று அளித்தல் விழுத்தகைத்து" என்றே
நூற்பொருள் உணர்ந்தோர் நுனித்தனர் ஆம்' என,
முதியாள் கோட்டத்து அகவயின் இருந்த
அமுதசுரபியை அங்கையின் வாங்கி,
பதிஅகம் திரிதரும் பைந் தொடி நங்கை,
அதிர் கழல் வேந்தன் அடி பிழைத்தாரை
ஒறுக்கும் தண்டத்து உறு சிறைக்கோட்டம்
விருப்பொடும் புகுந்து, வெய்து உயிர்த்துப் புலம்பி
ஆங்குப் பசியுறும் ஆர் உயிர் மாக்களை,
வாங்கு கைஅகம் வருந்த நின்று, ஊட்டலும்—
'ஊட்டிய பாத்திரம் ஒன்று' என வியந்து,
கோட்டம் காவலர், 'கோமகன்-தனக்கு, இப்
பாத்திர தானமும், பைந்தொடி செய்தியும்,
யாப்பு உடைத்தாக இசைத்தும்' என்று ஏகி—
நெடியோன் குறள் உரு ஆகி, நிமிர்ந்து, தன்
அடியில் படியை அடக்கிய, அந் நாள்,

31-40 மன்றம் - அம்பலத்தில். காவலன்மகன் - சோழன்மகன்—உதய குமரன். கைவிடலீயான் - கைவிடான். காய்பசியாட்டி - யானைத்தீ நோயுடையளாகிய. ஆற்ரு - உதவாத - உண்ணுதல் இன்றிப் பட்டினியாயுள்ள. ஆற்றும் - உதவும் - உணவளிக்கும். ஏற்றல் - பிச்சை எடுத்தல். இடுதல் — பிச்சைஅளித்தல். அவர் இரப்போர் - மேற்சென்று தாமே அணுகி. அளித்தல்- பிச்சையிடுதல். விழுத்தகைத்து - சிறந்தது. நுனித்தனன் — நுண்ணிதின் கண்டு கூறியுள்ளனர். முதியாள் - சம்பாபதி. கோட்டத்து - கோயிலின். அகவையின் - உள்ளே. அங்கை - உள்ளங்கையில். வாங்கி - எடுத்து.

41-50 பதி-புகார். அடிபிழைத்தாரை-பாதங்கட்குப் பிழைசெய்தவரை- அடங்காதாரை. ஒறுக்கும்-ஒடுக்குகின்ற. (உறுதண்டத்துச் சிறைக்கோட்டம் என்க.) சிறைக் கோட்டம் - சிறைச்சாலையில். வெய்து - வெம்மையாக. ஊட்டலும் - உண்பித்தவுடன். கோட்டங்காவலர் - சிறைச்சாலை காப்பவர். பாத்திர தானம் - பாத்திரத்தின் கொடைச்சிறப்பு. யாப்புடைத்தாக- தவறின்ருக. இசைத்தும் - கூறுவோம்.

51-52 நெடியோன் - திருமால். குறளுருவாகி - குறுகிய வடிவுடைய வாமனனய். நிமிர்ந்து - ஓங்கிவளர்ந்து. படியை — பூமியை.

நீரின் பெய்த, மூரி வார் சிலை,
மாவலி மருமான் சீர் கெழு திரு மகள்
சீர்த்தி என்னும் திருத் தகு தேவியொடு,
போது அவிழ் பூம்பொழில் புகுந்தனன் புக்கு;
கொம்பர்த் தும்பி குழல் இசை காட்ட,
பொங்கர் வண்டு இனம் நல் யாழ்செய்ய,
வரிக் குயில் பாட, மா மயில் ஆடும்
விரைப் பூம் பந்தர் கண்டு, உளம் சிறந்தும்;
புணர் துணை நீங்கிய பொய்கை அன்னமொடு,
மட மயில் பேடையும் தோகையும், கூடி,
இரு சிறை விரித்து, ஆங்கு, எழுந்து உடன் கொட்பன
ஒரு சிறைக் கண்டு-ஆங்கு, உள் மகிழ்வு எய்தி,
'மாமணி வண்ணனும், தம்முனும், பிஞ்ஞையும்,
ஆடிய குரவை இஃது ஆம்' என நோக்கியும்,
கோங்கு அலர் சேர்ந்த மாங்கனி-தன்னைப்
பாங்குற இருந்த பல் பொறி மஞ்ஞையை,
'செம் பொன் தட்டில் தீம் பால் ஏந்திப்
பைங் கிளி ஊட்டும் ஓர் பாவை ஆம்' என்றும்;
அணி மலர்ப் பூம்பொழில் அகவயின் இருந்த,
பிணவுக் குரங்கு ஏற்றி, பெரு மதர் மழைக் கண்
மடவோர்க்கு இயற்றிய மா மணி ஊசல்,
கடுவன் ஊக்குவது கண்டு, நகை எய்தியும்;
பாசிலை செறிந்த பசுங் கால் கழையொடு

53–60 நீரின்பெய்த – நீர்பெய்து கொடுத்த. மூரி வார்சிலை - பெரிய, நீண்ட வில்லை உடைய; மூரி - வலிமையும் ஆம். மருமான் - வழியில் தோன்றியவனது. கெழு-மிக்க. திருமகள் - சிறந்த புதல்வி. திருத்தகு தேவியொடு - மங்கலம் பொருந்திய மனைவியோடு. போதுஅவிழ் – பூ மலரப்பெற்ற. கொம்பர் - சிறு

கொப்புகளில் உள்ள.

பொங்கர் - மரச்செறிவுகளில். வரிக்குயில் - பாட்டிசைக்க வல்ல குயில்கள்.

61–70 துணை - பெடையன்னம். மடம் – அழகு. தோகை – ஆண் மயில். கொட்பன - சுழல்வனவற்றை, ஒரு சிறை – ஒரு பக்கத்தில். ஆங்கு - அசை. மா மணிவண்ணன் – கரிய மணியையொத்த நிறத்தினன் - கண்ணன். தம்முன் – கண்ணனுக்கு மூத்தவன் - பலராமன். பிஞ்ஞை - நப்பின்னை. குரவை - ஒரு கூத்து. கோங்கலர் – கோங்கின் பூவினை, மாங்கனிதன்னை - மாங்கனியினது: வேற்றுமைமயக்கம். பாங்குற - மருங்கினில். பொறி - புள்ளி.

71–75 அணி - அழகு. அகவயின் – உள்ளே. பிணவு - பெண். மதர் மழைக்கண் - மதர்த்த, மழைபோற் குளிர்ந்த கண். மடவோர்க்கு - மகளிர்க்கு. கடுவன் ஊக்குவது-ஆண்குரங்கு உந்துவதனை. (மடவோர்க்கியற்றிய மாமணி ஊசலில் பிணவுக்குரங்கேற்றிக் கடுவன் ஊக்குவது என்க.) கழை - மூங்கில்.

வால் வீ செறிந்த மராஅம் கண்டு,
'நெடியோன் முன்ஞெடு நின்றனன் ஆம்' என,
தொடி சேர் செங் கையின் தொழுது நின்று ஏத்தியும்;
ஆடல் கூத்திஞேடு அவிநயம் தெரிவோர்,
நாடகக் காப்பிய நல் நூல் நுனிப்போர்,
பண் யாழ் நரம்பில் பண்ணு முறை நிறுப்போர்,
தண்ணுமைக் கருவிக் கண் எறி தெரிவோர்,
குழலொடு கண்டம் கொளச் சீர் நிறுப்போர்,
பழுநிய பாடல் பலரொடு மகிழ்வோர்,
ஆரம் பரிந்த முத்தம் கோப்போர்,
ஈரம் புலர்ந்த சாந்தம் திமிர்வோர்,

குங்கும வருணம் கொங்கையின் இழைப்போர்,
அம் செங்கழுநீர் ஆய் இதழ் பிணைப்போர்,
நல் நெடுங் கூந்தல் நறு விரை குடைவோர்,
பொன்னின் ஆடியில் பொருந்துபு நிற்போர்,
ஆங்கு—அவர்-தம்மோடு, அகல் இரு வானத்து
வேந்தனின் சென்று, விளையாட்டு அயர்ந்து;
குருந்தும், தளவும், திருந்து மலர்ச் செருந்தியும்,
முருகு விரி முல்லையும், கருவிளம் பொங்கரும்,
பொருந்துபு நின்று, திருந்து நகை செய்து;
குறுங் கால் நகுலமும், நெடுஞ் செவி முயலும்,
பிறழ்ந்து பாய் மானும், இறும்பு அகலா வெறியும்,
'வம்' எனக் கூஉய், மகிழ் துணையொடு தன்

செம்மலர்ச் செங் கை
காட்டுபு நின்று;
மன்னவன்-தானும், மலர்க்
கணை மைந்தனும்,

76–80 வால்வீ - வெள்ளிய மலர்.மராஅம் - வெண்கடம்பு.. நெடியோன் - கண்ணன். முன் - முன்னோன். நுனிப்போர் - நுனுகி ஆராய்பவர்.

81–90 பண்ணு-பண்ணினை. நிறுப்போர்-நிறுத்துவோர்-இசைப்பவர். தண்ணுமைக் கருவி – மத்தள வாத்தியம். எறி தெரிவோர்– எறிதலை ஆராய்பவர் - கொட்டுவோர், குழல் – வேய்ங்குழல். கண்டம் – மிடற்றுப்பாட்டு. பழுநிய – முதிர்ந்த. பரிந்த – அற்று உதிர்ந்த. திமிர்வோர் – பூசுவோர். பிணைப்போர் – தொடுப்போர். விரை – வாசனைப் பொருளை. குடைவோர் – பூசுவோர்

91–100 வேந்தன் – இந்திரன். அயர்ந்து – மகிழ்ந்து மேற்கொண்டு. (குருந்து முதலியன மலர்ந்திருப்பவை நகை செய்வன போன்றன.) நகுலம் – கீரி. இறும்பு-சிறுகாடு. வெறி–ஆடு. வம் – வருக, கூஉய் – அழைத்து செம்மலர் – செந்தாமரை மலர். துணை – இராசமாதேவி. காட்டுபு – காட்டி. மலர்க் கணைமைந்தன் – மன்மதன்.

இன் இளவேனிலும், இளங்கால் செல்வனும்,
எந்திரக் கிணறும், இடும் கல் குன்றமும்,
வந்து வீழ் அருவியும், மலர்ப் பூம் பந்தரும்,
பரப்பு நீர்ப் பொய்கையும், கரப்பு நீர்க் கேணியும்,
ஒளித்து உறை இடங்களும், பளிக்கறைப் பள்ளியும்,
யாங்கணும், திரிந்து; தாழ்ந்து; விளையாடி :
மகத வினைஞரும், மராட்டக் கம்மரும்,
அவந்திக் கொல்லரும், யவனத் தச்சரும்,
தண் தமிழ் வினைஞர்-தம்மொடு கூடிக்
கொண்டு இனிது இயற்றிய, கண் கவர் செய்வினைப்
பவளத் திரள் கால், பல் மணிப் போதிகை,
தவள நித்திலத் தாமம் தாழ்ந்த
கோணச் சந்தி மாண் வினை விதானத்து,
தமனியம் வேய்ந்த வகை பெறு வனப்பின்,
பைஞ் சேறு மெழுகாப் பசும் பொன் மண்டபத்து.
இந்திர-திருவன் சென்று, இனிது ஏறலும்—
வாயிலுக்கு இசைத்து, மன்னவன் அருளால்,
சேய் நிலத்து அன்றியும் செவ்வியின் வணங்கி,
'எஞ்சா மண் நசைஇ, இகல் உளம் துரப்ப,
வஞ்சியின் இருந்து, வஞ்சி சூடி;
முறம் செவி யானையும், தேரும், மாவும்,

மறம் கெழு நெடு வாள்
வயவரும், மிடைந்த
தலைத் தார்ச் சேனையொடு;
மலைத்துத் தலைவந்தோர்,
சிலைக் கயல் நெடுங் கொடி,
செரு வேல் தடக் கை
ஆர் புனை தெரியல்
இளங்கோன்-தன்னால்,

101-110 இளங்காற் செல்வன் - தென்றல். எந்திரக் கிணறு - இயந்திரத்தால் நீர் துரக்கும் கிணறு. இடும் - செய்தியற்றிய. கரப்புநீர்க் கேணி - மூடு கிணறு. ஒளித்து - மறைந்து. கம்மர் – தொழில் புரிவோர். தமிழ் வினைஞர் - தமிழ் நாட்டுத் தொழிலாளர்.

111-120 பவளத் திரள் கால் – பவளத்தாலமைந்த திரண்ட தூண். போதிகை - தூணின்மேல் வைக்கப்படும் உறுப்பு. தவள நித்தலத்தாமம் - வெண் முத்துவடம். கோணச் சந்தி - நான்கு கோணங்களும் பொருந்துதலுடைய. விதானம் - மேற் பரப்பு. பைஞ்சேறு – பசுவின் சாணம். திருவன் - சோழன். வாயில் – வாயிலோன். செய்நிலம் - செய்மைக்கண். செவ்வியின் – சமயம் நோக்கி. எஞ்சாமண் – உலகம் முழுமையும். நசைஇ – விரும்பி. இகல்-மாறுபாடு. வஞ்சி-சேரரது மூதூர்; ஒருகொடி

121-125 முறம் செவி – முறம் போலும் காதினை உடைய. கெழு-மிக்க. மிடைந்த – நெருங்கிய. தலைத்தார் – தலையாய காலாட்படை. மலைத்துத் தலை வந்தோர் – பகைத்துப் பொர வந்தவர்களது. (வந்தோர் – சேரனும் பாண்டியனும்.) கொடி – கொடிகளை. ஆர் புனை தெரியல் – ஆத்தி மலரால் கை செய்த மாலை.

124

காரியாற்றுக்

கொண்ட காவல் வெண்குடை
வலி கெழு தடக் கை
மாவண் கிள்ளி!
ஒளியொடு வாழி,

ஊழிதோறு ஊழி!

வாழி, எம் கோ
மன்னவர் பெருந்தகை!
கேள் இது மன்னோ!
கெடுக, நின் பகைஞர்!

யானைத்தீ நோய்க்கு
அயர்ந்து மெய் வாடி, இம்
மா நகர்த் திரியும் ஓர்
வம்ப மாதர்
அருஞ்
சிறைக்கோட்டத்து அகவயின்
புகுந்து,

பெரும் பெயர் மன்ன! நின் பெயர் வாழ்த்தி,
ஐயப் பாத்திரம் ஒன்று கொண்டு, ஆங்கு,

மொய் கொள் மாக்கள்
மொசிக்க ஊண் சுரந்தனள்;
ஊழிதோறு ஊழி உலகம்
காத்து,
வாழி, எம் கோ
மன்னவ!' என்றலும்—

'வருக, வருக,
மடக்கொடி-தான்' என்று

அருள் புரி நெஞ்சமொடு

அரசன் கூறலின்,
வாயிலாளரின்
மடக்கொடி-தான் சென்று,
'ஆய் கழல் வேந்தன்
அருள் வாழிய!' என—

'தாங்கு-அருந் தன்மைத் தவத்தோய்! நீ யார்?
யாங்கு ஆகியது, இவ் ஏந்திய கடிஞை?' என்று
அரசன் கூறலும்—ஆய்-இழை உரைக்கும்:
'விரைத் தார் வேந்தே! நீ நீடு வாழி!

விஞ்சை மகள் யான்;
விழவு அணி மூதூர்
வஞ்சம் திரிந்தேன்;
வாழிய, பெருந்தகை!
வானம் வாய்க்க! மண்
வளம் பெருகுக!

150 தீது இன்றாக,
கோமகற்கு! ஈங்கு-ஈது

126-130 காரியாறு – ஓர் ஆறு. கொண்ட – கைப்பற்றிய. வண் கிள்ளி!– வள்ளன்மை உடைய கிள்ளி! ஒளி – நற்பெயர்.

131-140 அயர்ந்து – வருந்தி. வம்பமாதர் – நிலையின்றித்திரியும் மகள் – காயசண்டிகை. (மணிமேகலையைக் காயசண்டிகை என்று கருதிக் கூறியவாறு.) ஐயப் பாத்திரம் – பிச்சைப் பாத்திரம். மொய் – மொய்த்தல். மொசிக்க – வயிறார உண்ண. மடக்கொடி – அவள் (மணிமேகலை): சுட்டளவாய் நின்றது.

141-150 வாயிலாளரின் – வாயில் காப்போர் இசைவு பெற்று. வாழிய – வாழ்க. யாங்கு ஆகியது – எங்கிருந்து கிடைத்தது. கடிஞை – பிச்சைப் பாத்திரம். விஞ்சை மகள் – விஞ்சையர் மாது; விஞ்சைகள் வல்ல மடந்தை. மூதூர் – இப்புகாரில். வஞ்சம் திரிந்தேன் — வஞ்சமற்றவள்; மறைந்த வேடத்துடன் திரிகின்றேன்.

ஐயக் கடிஞை; அம்பல மருங்கு ஓர்
தெய்வம் தந்தது; திப்பியம் ஆயது;
யானைத்தீ நோய் அரும் பசி கெடுத்தது;
ஊன் உடை மாக்கட்கு உயிர் மருந்து இது' என—
'யான் செயற்பாலது என், இளங்கொடிக்கு?' என்று,
வேந்தன் கூற, மெல்-இயல் உரைக்கும்:
'சிறையோர் கோட்டம் சீத்து, அருள் நெஞ்சத்து
அறவோர்க்கு ஆக்குமது; வாழியர்!' என—
அருஞ் சிறை விட்டு, ஆங்கு ஆய்-இழை உரைத்த
பெருந் தவர்-தம்மால் பெரும் பொருள் எய்த,
கறையோர் இல்லாச் சிறையோர் கோட்டம்
அறவோர்க்கு ஆக்கினன், அரசு ஆள் வேந்து-என்.

151-162 திப்பியம் – அற்புதம். ஊன் – உடல். இளங்கொடிக்கு – நினக்கு: இடவழுவமைதி. சிறையோர் கோட்டம்-சிறைச்சாலை. சீத்து – நீக்கி. ஆக்குமது – உரியதாக்குதல். அருஞ்சிறை – கடும் சிறைத்தண்டம் உற்றவர்களை. ஆயிழை – மணிமேகலை. தவர்–முனிவர். பெரும்பொருள் - பெரும் பயனை. கறையோர் – குற்றமுடையோர்.

20. உதயகுமரனை

வாளால் எறிந்த காதை

காயசண்டிகை உருவினில் மறைந்த மணிமேகலை சிறைக கோட்டத்தை அறக்கோட்டமாக்குவித்துப் பசித்தோர் பலர்க்கும் பரிவுடன் உணவளித்து வருகின்றுழி, "மணிமேகலை அம்பலத் திற்கு வெளியே வரும்போது அவளை அகப்படுத்தி மகிழ்வேன்" என்றெண்ணியிருந்த உதயகுமரன் அவள் திறம் அறிய அம்பலத் தினுட் புகுந்தான். சாபத்தின் எல்லை கழிந்தும் காயசண்டிகை தன்பால் எய்தாமையால் காஞ்சனன் அவளை அவ்வூரில் யாங்கும் தேடியவண்ணம் அம்பலத்தினுள் புகுந்தான் புகுந்ததும் காய சண்டிகை உருவிலுள்ள மணிமேகலையைக் காயசண்டிகை

எனவே கருதிப் பழமைக்குரிய கட்டுரைகள் பல் பகர்ந்தான்.

அவற்றைக் கேளாது

அறிவுரை பகர்ந்தாள்.

உதயகுமரனை அணுகி அவனுக்கு விஞ்சையன் காயசண்டிகை கற்பிற் பிறழ்ந்தனள் என்றும், இவன்

அவளது கள்ளக் காதலன் என்றும் ஐயுற்று உண்மையைத் தெளிய மறைந்திருந்தான். உதயகுமர

னும் அவள்பால் பழைமை பாராட்டிய காஞ்சனனை அவளது கள்ளக்காதலனுகக்கருதி 'இன்றிரவினில் உண்மை தெளிவேன்'

என்றெண்ணி மீண்டான். அன்றிரவினில் பைய அம்பலத்தி னுள் அவன் நுழைய, மறைந்திருந்த விஞ்சையன், காயசண்டி கைபால் வந்த கள்வன் என்றே திரிய

உணர்ந்து அவனே வாளால் எறிந்து "காயசண்டிகையை எடுத்துச் செல்வேன" எனக்கருதி மணிமேகலையை அணுக முற்பட்டான். தெய்வப்பாவை உண் மையை உணர்த்திற்று. காயசண்டிகை விந்தாகடிகை வயிற்றி னுள் புக்கமையும், உதயகுமானே உணராமல் கொன்றமையும் தெய்வப்பாவை கூறத் தெளிந்த அவன் வருந்தி மீணடனன்.

அரசன் ஆணையின்,
ஆய்-இழை அருளால்,

நிரயக் கொடுஞ் சிறை நீக்கிய கோட்டம்,
தீப் பிறப்பு உழந்தோர் செய் வினைப் பயத்தான்
யாப்பு உடை நல் பிறப்பு எய்தினர் போல,
பொருள் புரி நெஞ்சின் புலவோன் கோயிலும்,
அருள் புரி நெஞ்சத்து
அறவோர் பள்ளியும்,
அட்டில் சாலையும்,
அருந்துநர் சாலையும்,

கட்டு உடைச் செல்வக் காப்பு உடைத்து ஆக—
ஆய்-இழை சென்றதூஉம், ஆங்கு அவள் தனக்கு
வீயா விழுச் சீர் வேந்தன் பணித்ததூஉம்,

1-10 அரசன் ஆணையின் – கிள்ளியினது ஆணையாலும். ஆயிழை அருளால் – மணிமேகலையின் கருணையாலும். நிரயம் – நரகம் போன்ற. தீப் பிறப்பு–தீமையின் பயனாய பிறப்பு. உழந்தோர்–வருந்தியவர். யாப்புடை நற்பிறப்பு – உறுதியாதலை உடைய நன்மையின் பயனாய பிறப்பு. பொருள்புரி புலவோன் – நால்வகை வாய்மையையும் விரும்பிய புத்தன்; மெய்யாய பொருளைத் தெளிந்த புத்தன் எனினும் ஆம். அருள்புரி – கருணையைச் செய்கின்ற. அறவோர் – பௌத்த தருமம் பூண்ட முனிவர். அட்டில் – மடைப்பள்ளி; அட்டிலாகிய சாலை: "இடைச்சொற் கிளவி" போல் நின்றது. அருந்தினர் – அருந்துவோர்: காலவழுவமைதி. கட்டுஉடைச் செல்வக்காப்பு உடைத்து ஆக – உறுதியுடைய, செல்வத்தைக் காத்தலை உடையதாக (என்றது, முன் சிறையோர் காப்பினையுடைத் தாயிருந்த கோட்டம் அறம் புரிதற்குரிய பொருள் வளம் செறிந்து காப்புடைத்தாயிற்று என்றவாறு.) ஆயிழை – மணிமேகலை. வீயா–அழியாத. பணித்ததூஉம்–கூறியதனையும்.

சிறையோர் கோட்டம் சீத்து, அருள் நெஞ்சத்து
அறவோர் கோட்டம் ஆக்கிய வண்ணமும்,
கேட்டனன் ஆகி, 'அத் தோட்டு-ஆர் குழலியை,
மதியோர் எள்ளினும், மன்னவன் காயினும்,
பொதியில் நீங்கிய பொழுதில் சென்று,
பற்றினன் கொண்டு, என் பொன்-தேர் ஏற்றி,
கற்று அறி விச்சையும் கேட்டு, அவள் உரைக்கும்
முதுக்குறை முதுமொழி கேட்குவன்' என்றே,
மதுக் கமழ் தாரோன் மனம் கொண்டு எழுந்து,
பலர் பசி களைய, பாவை தான் ஒதுங்கிய
உலக அறவியின் ஊடு சென்று ஏறலும்—
மழை சூழ் குடுமிப் பொதியில் குன்றத்து,
கழை வளர் கான் யாற்று, பழ வினைப் பயத்தான்,
மாதவன் மாதர்க்கு இட்ட சாபம்
ஈர்-ஆறு ஆண்டு வந்தது; வாராள்,
காயசண்டிகை!' எனக் கையறவு எய்தி,
காஞ்சனன் என்னும் அவள்-தன் கணவன்
ஓங்கிய மூதூர் உள் வந்து இழிந்து,
பூத சதுக்கமும், பூ மரச் சோலையும்,
மாதவர் இடங்களும், மன்றமும், பொதியிலும்,
தேர்ந்தனன் திரிவோன், ஏந்து இள வன-முலை
மாந்தர் பசி நோய் மாற்றக் கண்டு-ஆங்கு—
'இன்று நின் கையின் ஏந்திய பாத்திரம்
ஒன்றே ஆயினும், உண்போர் பலரால்
ஆனைத்தீ நோய் அரும் பசி களைய,

11-20 சீத்து – நீக்கி. நெஞ்சத்து – மனத்தினை உடைய. தோடு – இதழ்களை உடைய மலர்: ஆகுபெயர். தோடார் எனற்பாலது விரித்தல் விகாரமாய் நின்றது. காயினும் – வெகுளினும். பொதியில் – அம்பலத்திலிருந்து. பற்றினன் – அகப்படுத்தி. விச்சை – கல்வி. கேட்குவன் – கேட்டறிவேன். முதுக்குறை – முதுமொழி–அறிவுடைமையால் கூறும் அறவுரை. தாரோன்– உதயகுமரன். ஒதுங்கிய – எய்தியுள்ள.

21-30 குடுமி – சிகாம் கழை – மூங்கில். கான்யாறு – (காயங்கரை என்னும்) காட்டாறு. மாதவன் – விரிச்சிகன். மாதர் – காய சண்டிகை. சாபம் – சாபத்தின் துன்பத்தை உழத்தற்குரிய காலமாகிய. கையறவு – செயலற்ற வருத்தம். மூதூர் – புகார். இழிந்து – ஆகாயத்திலிருந்திறங்கி. பூதசதுக்கம் – பூதம் காத்து நிற்கும் நாற்சந்தி. மன்றம் – பலரும் கூடும் பொதுவிடம்; இது ஊர் நடுவினில் மரத்தினடியில் அமைந்திருக்கும். பொதியில் – பலரும் புகுதற்குப் பொதுவாயிருக்கும் அம்பலம்.

31-35 ஏந்திளவனமுலை – மணிமேகலை. களைய – போக்க,

128

வான வாழ்க்கையர்
அருளினர்கொல்?' என,
பழைமைக் கட்டுரை பல

பாராட்டவும்—
விழையா உள்ளமொடு
அவன்பால் நீங்கி,
உதயகுமரன்-தன்பால் சென்று,
நரை மூதாட்டி ஒருத்தியைக் காட்டி—
'தண் அறல் வண்ணம் திரிந்து வேறாகி,
வெண் மணல் ஆகிய கூந்தல் காணாய்;
பிறை நுதல் வண்ணம் காணாயோ நீ,
நரைமையின் திரை தோல் தகையின்று ஆயது;
விறல் வில் புருவம் இவையும் காணாய்,
இறவின் உணங்கல் போன்று வேறாயின;
கழுநீர்க் கண் காண், வழுநீர் சுமந்தன;
குமிழ் மூக்கு இவை காண், உமிழ் சீ ஒழுக்குவ;
நிரை முத்து அனைய
நகையும் காணாய்,
சுரை வித்து ஏய்ப்ப,
பிறழ்ந்து வேறாயின;
இலவு இதழ்ச் செவ்
வாய் காணாயோ நீ,
புலவுப் புண் போல், புலால் புறத்திடுவது;
வள்ளைத் தாள் போல், வடி காது இவை காண்,

உள் ஊன் வாடிய உணங்கல் போன்றன;
இறும்பூது சான்ற முலையும் காணாய்,
வெறும் பை போல, வீழ்ந்து வேறாயின;
தாழ்ந்து ஒசி தெங்கின் மடல் போல், திரங்கி
வீழ்ந்தன இள வேய்த் தோளும் காணாய்;
நரம்பொடு, விடு தோல், உகிர்த் தொடர் கழன்று,
திரங்கிய விரல்கள், இவையும் காணாய்;

36–40 பழமைக் கட்டுரை - கேண்மைக்குரிய வார்த்தைகள். பாராட்டவும் – விரும்பிக் கூறிக்கொண்டிருக்கவும். விழையா– விரும்பாத. அவன்பால் – காஞ்சனனிடத்திருந்து மூதாட்டி– மூதியவள்.

41–50 அறல் – கருமணல். திரிந்து வேறாகி – மிகவும் வேறுபட்டு. நுதல் - நெற்றி. நரைமையின் – வெண்ணிற முற்றமையோடு. திரைதோல் - சுருங்கல் பெற்ற தோலினை உடையதாய். தகை - பெருமை. விறல் - வலிமைக்குரிய. இறவின் உணங்கல் - இறால் மீனின் வற்றல். வேறு ஆயின - வேறு பட்டன. கழுநீர் - கழுநீர் மலர் போன்ற. வழுநீர் - பீளை யோடு கூடிய கண்ணீர். குமிழ் - குமிழம் பூவினைப் போன்ற. சீய் - சீழ் - சளி. நகை - பற்கள். சுரைவித்து - சுரையின் விதை. ஏய்ப்ப – போல.

51-60 புலவு - புலாலின் நாற்றம். புலால் - புலாலின் நாற்றம். வளைத்தாள் - வள்ளைக் கொடியின் தண்டு. வடி - நீண்ட. ஊன் உணங்கல் - புலாலின் வற்றல். இறும்பூது சான்ற - வியத்தற்கு அமைந்த. ஒசி - ஒடிந்துள்ள. திரங்கி - தோல் சுருக்கமுற்று வற்றி. வேய் - மூங்கில் போன்ற உகிர் - நகம். திரங்கிய - வற்றிய.

வாழைத் தண்டே போன்ற குறங்கு இணை
தாழைத் தண்டின் உணங்கல் காணாய்;
ஆவக் கணைக்கால் காணாயோ நீ,
மேவிய நரம்போடு என்பு புறம் காட்டுவ;
தளிர் அடி வண்ணம் காணாயே நீ,
முளி முதிர் தெங்கின் உதிர் காய் உணங்கல்;
பூவினும் சாந்தினும் புலால் மறைத்து யாத்து,
தூசினும் அணியினும் தொல்லோர் வகுத்த
வஞ்சம் தெரியாய், மன்னவன் மகன்!' என,
விஞ்சை மகளாய் மெல்-இயல் உரைத்தலும்—
'தற்பாராட்டும் என் சொல் பயன் கொள்ளாள்;
பிறன் பின் செல்லும்; பிறன் போல் நோக்கும்;
மதுக் கமழ் அலங்கல் மன்னவன் மகற்கு
முதுக்குறை முதுமொழி எடுத்துக் காட்டி,
பவளக் கடிகையில் தவள வாள் நகையும்,
குவளைச் செங் கணும் குறிப்பொடு வழாஅள்;
ஈங்கு-இவன் காதலன் ஆதலின், ஏந்து-இழை
ஈங்கு ஒழிந்தனள்' என, இகல் எரி பொத்தி,
மற்றவள் இருந்த மன்றப் பொதியிலுள்
புற்று அடங்கு அரவின் புக்கு, ஒளித்து, அடங்கினன்—
காஞ்சனன் என்னும் கதிர் வாள் விஞ்சையன்,
ஆங்கு-அவள் உரைத்த அரசு இளங் குமரனும்
களையா வேட்கை கையுதிர்க்கொள்ளான்;
'வளை சேர் செங் கை மணிமேகலையே
காயசண்டிகை ஆய், கடிஞை ஏந்தி,
மாய விஞ்சையின் மனம் மயக்குறுத்தனள்;

61-70 குறங்கிணை - இரு துடைகளும். தாழை - தாழை மரத்தினது. ஆவக்கணைக்கால் - அம்புத்தூணி போன்ற கணைக்கால்கள். முளி - காய்ந்த. உதிர்காய் உணங்கல் - உதிர்ந்த நெற்று. சாந்து - சந்தனம். புலால் - தீய நாற்றம். (தூசினும் மணியினும் யாத்து என்க) தூசு - பட்டாடை. யாத்து - கட்டி. வகுத்த - ஏற்படுத்திய. தெரியாய் - அறிவாயாக.

71-80 தன் பாராட்டும் - தன்னை விரும்புகின்ற. பயன் - பொருளை. பிறன் - உதயகுமரன். செல்லும் - செல்கிறாள். அலங்கல் - மாலை. முதுக்குறை முதுமொழி - அறிவினால் கூறும் அறவுரை. பவளக் கடிகையில் - பவளத்துண்டுபோற் சிவந்த வாயினில். தவளவாள் - வெள்ளிய ஒளியுடைய. குறிப்பொடு - காதல் குறிப்பிலிருந்து. வழாஅள் - தவறாமல் பொருந்தினாள். (நகையும் கண்ணும் குறிப்பொடு வழாஅள் என்க) ஒழிந்தனள் – தங்கிவிட்டனள். இகல்எரி - பகைமையாகிய தீ. பொத்தி – பற்றி. அடங்கினன் - மறைந்து ஒடுங்கி இருந்தனன்.

81-86 ஆங்கவள் உரைத்த - மணிமேகலையால் அறவுரை கூறப்பெற்ற. களையா - நீக்க இயலாத. கை உதிர்க் கொள்ளான் - நீக்கி ஒழியானாகி. மயக்கு - உறுத்தனள் - ஏமாற்றி விட்டனள்.

அம்பல மருங்கில் அயர்ந்து, அறிவுரைத்த இவ்
வம்பலன்-தன்னொடு இவ் வைகு இருள் ஒழியாள்;
இங்கு-இவள் செய்தி இடை இருள் யாமத்து
வந்து அறிகுவன்' என மனம் கொண்டு எழுந்து,
வான்தேர்ப் பாகனை, மீன் திகழ் கொடியனை,
கருப்பு வில்லியை, அருப்புக் கணை மைந்தனை,
உயாவுத் துணையாக, வயாவொடும் போகி—

ஊர் துஞ்சு யாமத்து, ஒரு தனி எழுந்து,
வேழம் வேட்டு எழும் வெம் புலி போல,
கோயில் கழிந்து, வாயில் நீங்கி,
ஆய்-இழை இருந்த அம்பலம் அணைந்து,
வேக வெந் தீ நாகம் கிடந்த
போகு உயர் புற்று அளை புகுவான் போல,
ஆகம் தோய்ந்த சாந்து அலர் உறுத்த
ஊழ் அடியிட்டு, அதன் உள்ளகம் புகுதலும்—
ஆங்கு, முன் இருந்த அலர் தார் விஞ்சையன்,
'ஈங்கு, இவன் வந்தனன், இவள்பால்' என்றே,
வெஞ் சின அரவம் நஞ்சு எயிறு அரும்பத்
தன் பெரு வெகுளியின் எழுந்து பை விரித்தென,
இருந்தோன் எழுந்து, பெரும் பின் சென்று, அவன்
சுரும்பு அறை மணித் தோள் துணிய வீசி,
'காயசண்டிகையைக் கைக்கொண்டு அந்தரம்
போகுவல்' என்றே அவள்பால் புகுதலும்—
நெடு நிலைக் கந்தின் இடவயின் விளங்கக்

87–90 அயர்ந்து - (தான் காயசண்டிகை உருவிலிருப்பதை) மறந்து. அறிவு - முன் பழகியமையை வெளிப்படுத்தும் மொழிகளை. வம்பலன் - புதியவன். வைகிருள் - இரவினில். ஒழியாள் - நீங்காமல் சேர்ந்துறைவாள்.

91-100 வான் தேர்ப்பாகனை - வானத்தில் இயங்கும் தென்றலாகிய தேரைச் செலுத்துவோனை - மன்மதனை. கருப்பு வில்லி - கரும்பாகிய வில்லை யுடையோன். அருப்புக்கணை - அரும்பாகிய அம்பு. மைந்தனை - வீரனை. உயாவு - உசாவுதல். வயா - வேட்கை மிகுதி. வேட்டு - விரும்பி. வாயில் - கோட்டை வாயில். வேகவெந்தீநாகம் – கொடிய விட வேகத்தை உடைய பாம்பு. போகு உயர் - நீண்டுயர்ந்த. புற்றளை - புற்றின் துவாரத்தினுள். ஆகம் - மார்பு. அலர் உறுத்த - பலர்க்கும் (உதயகுமரனது மறைந்த ஒழுக்கத்தைத்) தூற்றி உணர்த்த.

101-110 ஊழ் அடியிட்டு – முறையே அடிவைத்து – மெல்ல அடிமேலடியாக நடந்து. விரித்தென – விரித்தாற் போல. இருந்தோன் – இருந்தவன். சுரும்பு அறை மணித்தோள் துணிய வீசி – வண்டுகள் ஒலிக்கும் (மாலையணிந்த) அழகிய தோள்கள் துணியும்படி வாளோச்சி. அவள்பால் – மணிமேகலையிடம். கந்தின் இடவயின் – தூணின் இடத்தில்.

131

கடவுள் எழுதிய பாவை ஆங்கு உரைக்கும்:
'அணுகல், அணுகல்! விஞ்சைக் காஞ்சன!
மணிமேகலைஅவள்; மறைந்து உரு எய்தினள்:
காயசண்டிகை தன் கடும் பசி நீங்கி,
வானம் போவுழி, வந்தது கேளாய்:
அந்தரம்-செல்வோர் அந்தரி இருந்த
விந்த மால் வரை மீமிசைப் போகார்;
போவார் உளர்எனின், பொங்கிய சினத்தள்
சாயையின் வாங்கித் தன் வயிற்று இடூஉம்—
விந்தம் காக்கும் விந்தா-கடிகை:
அம் மலைமிசைப் போய், அவள் வயிற்று அடங்கினள்;
கைம்மை கொள்ளேல், காஞ்சன! இது கேள்:
ஊழ்வினை வந்து இங்கு உதயகுமரனை
ஆர் உயிர் உண்டதுஆயினும், அறியாய்,
வெவ் வினை செய்தாய், விஞ்சைக் காஞ்சன!
அவ் வினை நின்னையும் அகலாது; ஆங்கு உறும்'
என்று இவை தெய்வம் கூறலும்—எழுந்து,
கன்றிய நெஞ்சில் கடு வினை உருத்து எழ,
விஞ்சையன் போயினன், விலங்கு விண் படர்ந்து-என்.

111-120 அணுகல் – நெருங்காதே. மறைந்துரு – மாறுவேடம். விந்தமால்வரை – விந்திய மலையின். அந்தரி – துர்க்கை. சாயையின் – போவோரது நிழலால். வாங்கி – இழுத்து. (விந்தாகடிகை போவாருளரெனில், வாங்கி, வயிற்றிடும் என்க.)

121-129 அம்மலை – விந்தியம். அவள் – விந்தாகடிகையது. கைம்மை– வருத்தம். அறியாய் – அறியாமல். வெவ்வினை – கொடுவினை. அகலாது – நீங்காமல். கன்றிய – வெம்பிய. கடுவினை – பாவம். உருத்து எழ – சினந்து ஓங்க. விலங்கு – குறுக்காக. (விலங்கு விண்படர்ந்து போயினன் என்க.)

சம்பாபதியின் கோயிலில் இருந்த மணிமேகலை காஞ்சனன் வாளால் எறியுண்ட உதயகுமரன் இறந்தமையும், கந்திற்பாவை சொல்லால் உண்மை உணர்ந்து காஞ்சனன் சென்றமையும் அறிந் தாள். மனம் கலங்கித் தான் கொண்டிருந்த வேற்றுருவினை மாற்றி உதயகுமரனுடலினை அணுகிப் புலம்பினாள். "நின்னைத் தெளிவுறுத்தக் காயசண்டிகை வடிவாயினேன்; அதுவே நீ விஞ்

சையன் வாளால் மாளுதற்குக் காரணமாயிற்றே!" என்றேங்கி னாள். அவ்வுடலை அவள் மிக நெருங்க முற்பட்டபோது கந்திற் பாவை அவளைத் தடுத்துப் "பிறப்பற முயலும் நீ, பண்டைப் பிறப்பில் நின் காதலனாக இருந்த இவனது சாவிற்கு வருந்துதல் தகாது" என்றது. அவள், "அவன் வாளேறுபட்டு மாளக் காரணம் யாது" என்று வணங்கி வினவக், கந்திற்பாவை கூறிற்று: "முற்பிறப்பில் இலக்குமியாகிய நீயும் இராகுலனாகிய இவனும் சாதுசக்கரனுக்கு உணவளிக்க நேர்ந்தனிராக, கால் நடுக்குற்று மடைக்கலம் சிதைய விழுந்த மடையனை இராகுலன் வாளால் எறிந்தான். அதன் பயனாகவே அன்று திட்டிவிடத்தால் உயிர் வீய்ந்து இன்று காஞ்சனன் வாளால் எறியப்பெற்றிறந்தான்" என்றது. மேலும், அத்தெய்வம் தான் மயன்புனைந்த பாவையில் நிற்பதையும், பலர்க்கும் வருவதுரைத்தலையும் கூறி, மணிமேகலை

எய்தக்கடவ பெற்றிகளை விளக்கி, மேல் அவள் எய்தும் பிறவிகளையும் இறுதியில் முத்தி பெறுதலையும் கூறிற்று. அத்தெய்வக் கிளவி கேட்ட அவள் மனந் தெளிந்திருந்தனள்.

கடவுள் எழுதிய நெடு நிலைக் கந்தின்
குடவயின் அமைத்த நெடு நிலை வாயில்
முதியாள் கோட்டத்து அகவயின் கிடந்த
மது மலர்க் குழலி மயங்கினள் எழுந்து,
விஞ்சையன் செய்தியும், வென் வேல் வேந்தன்
மைந்தற்கு உற்றதும், மன்றப் பொதியில்
கந்து உடை நெடு நிலைக் கடவுள் பாவை
அங்கு அவற்கு உரைத்த அற்புதக் கிளவியும்,
கேட்டனள் எழுந்து, 'கெடுக இவ் உரு' என,
தோட்டு-அலர்க் குழலி உள்வரி நீங்கி—

1–10 கடவுள் எழுதிய - தெய்வவுருவம் எழுதப்பெற்ற. கந்தின் - தூணின். குடவயின் - மேற்றிசையில். முதியாள் கோட்டத்து - சம்பாபதி கோயிலின். அகவயின் - உள்ளிடத்தில். கிடந்த - படுத்திருந்த. குழலி-மணிமேகலை. வென்-வெற்றி. கந்துடை நெடுநிலைக் கடவுள் பாவை-நீண்ட நிலையினையுடைய தூணின்கண் அமைந்த தெய்வப்பாவை. இவ்வுரு - காயசண்டிகையின் வேடம். உள்வரி - மாறுவேடம்.

திட்டிவிடம் உண, நின் உயிர் போம் நாள்,
கட்டு அழல் ஈமத்து, என் உயிர் சுட்டேன்;
உவவன மருங்கில் நின்பால் உள்ளம்
தவிர்விலேன் ஆதலின், தலைமகள் தோன்றி,
மணிபல்லவத்திடை என்னை ஆங்கு உய்த்து,
பிணிப்பு அறு மர்தவன் பீடிகை காட்டி,
என் பிறப்பு உணர்ந்த என்முன் தோன்றி,
உன் பிறப்பு எல்லாம் ஒழிவு இன்று உரைத்தலின்,
பிறந்தோர் இறத்தலும், இறந்தோர் பிறத்தலும்,
அறம் தரு சால்பும், மறம் தரு துன்பமும்,
யான் நினக்கு உரைத்து, நின் இடர் வினை ஒழிக்கக்
காயசண்டிகை வடிவு ஆனேன், காதல!
வை வாள் விஞ்சையன் மயக்கு உறு வெகுளியின்,
வெவ் வினை உருப்ப, விளிந்தனையோ!' என,
விழுமக் கிளவியின் வெய்து உயிர்த்துப் புலம்பி,
அழுதனள் ஏங்கி, அயாஉயிர்த்து எழுதலும்—
'செல்லல், செல்லல்! சேயரி நெடுங்கண்!
அல்லி அம் தாரோன்-தன்பால் செல்லல்!
நினக்கு இவன் மகனாத் தோன்றியதூஉம்,
மனக்கு இனியாற்கு நீ மகள் ஆயதூஉம்,
பண்டும் பண்டும் பல் பிறப்பு உளவால்;
கண்ட பிறவியே அல்ல, காரிகை!

**தடுமாறு பிறவித் தாழ்தரு தோற்றம்
விடுமாறு முயல்வோய்! விழுமம் கொள்ளேல்!'**

11-20 கட்டமுல் - மிக்க தீயில். (ஈமத்துக் கட்டமுல் என்க.) ஈமம்-பிணம் சுடும் விறகு; மயானமும் ஆம். தவிர்விலேன் - நீங்கவில்லேன் - வைத்தேன். தலைமகள் - மணிமேகலா தெய்வம். பிணிப்பு-பற்று. மாதவன்-புத்தன். ஒழிவின்றி-முற்றிலும். (தலைமகள் தோன்றி, உய்த்து, காட்டி,தோன்றி,உரைத்தலின் என்க.) சால்பு – அமைதி - சாந்தி. மறம் - பாவம்.

21-30 இடர்வினை - துன்பந்தரும் தீவினையை. மயக்குறு - அறியாமை பொருந்திய. வெகுளியின் - சினத்தைக் காரணமாகக் கொண்டு. வெவ்வினை உருப்ப – நின் தீவினை சினந்தமையால். விளிந்தனை - இறந்தனை. விழுமக்கிளவி – சோகத்திற்குரிய சொற்கள். அயாவுயிர்த்து - பெருமூச்செறிந்து. எழுதலும்-உதயகுமரனுமைச் செல்லத் தொடங்கியவுடன். செல்லல் - போகேல். சேயரி - செவ்வரி. அல்லி-மலர்களின் உள்ளிதழ். தாரோன் - உதயகுமரன். மகன் - கணவன். மனக்கு - உன்மனதிற்கு. இனியாற்கு - இனியவனாக உள்ள உதயகுமரனுக்கு. மகள் ஆயதூஉம் - மனைவியாக இருந்தமையும்.

31-34 கண்டபிறவியே - நீ அறிந்துள்ள பழம் பிறப்பு ஒன்றில் மட்டுமல்ல. காரிகை!-மணிமேகலை! தடுமாறு பிறவி - மாறுபட்டு வரும் இயல்புடைய பிறவிகளில். தாழ்தரு தோற்றம்–தங்கும் பிறவியை; அழுந்திய பிறவியை எனலும் ஆம். (இப்பிறப்புஅறுதற் பொருட்டு முயல்வோம்.) விழுமம் - துன்பம்.

என்று இவை சொல்லி, இருந் தெய்வம் உரைத்தலும்—
பொன் திகழ் மேனிப் பூங்கொடி பொருந்தி,
'பொய்யா நாவொடு இப் பொதியிலில் பொருந்திய
தெய்வம் நீயோ! திருவடி தொழுதேன்:
விட்ட பிறப்பின் வெய்து உயிர்த்து, ஈங்கு-இவன்
திட்டிவிடம் உண, செல் உயிர் போயதும்,
நெஞ்சு நடுங்கி நெடுந்துயர் கூர யான்,
விஞ்சையன் வாளின் இவன் விளிந்ததூஉம்,
அறிதலும் அறிதியோ? அறிந்தனை ஆயின்,
பெறுவேன்-தில்ல, நின் பேர் அருள் ஈங்கு!' என—
'ஐ அரி நெடுங் கண் ஆய்-இழை! கேள்' என,
தெய்வக் கிளவியின் தெய்வம் கூறும்;
'காயங்கரை எனும் பேர் யாற்று அடைகரை,
மாயம் இல் மாதவன் வரு பொருள் உரைத்து,
மருள உடை மாககள மன மாசு கழூஉம
பிரமதருமனைப் பேணினிர்ஆகி,
"அடிசில் சிறப்பு யாம் அடிகளுக்கு ஆக்குதல்
விடியல் வேலை வேண்டினம்" என்றலும்'
மாலை நீங்க, மனம் மகிழ்வு எய்தி—
காலை தோன்ற, வேலையின் வரூஉ,
நடைத் திறத்து இழுக்கி, நல் அடி தளர்ந்து,
மடைக் கலம் சிதைய வீழ்ந்த மடையனை,
சீலம் நீங்காச் செய் தவத்தோர்க்கு
வேலை பிழைத்த வெகுளி தோன்ற,
தோளும் தலையும் துணிந்து வேறுக
வாளின் தப்பிய வல் வினை அன்றே,

35–40 இருந்தெய்வம் - கந்திற்பாவை. பூங்கொடி - மணிமேகலை. பொருந்தி-கந்திற்பாவையை அணுகி. பொய்யா - பொய் கூறாத. (விட்ட பிறப்பின் இட்டிவிடம் உளாஈங்கிவன் செல்லுயிர் வெய்துயிர்த்துப் போயது என்க.)

41–50 இவன் விளிந்ததூஉம் - உதயகுமரன் இறந்த காரணமும். அறிதலும் அறிதியோ – தெளிய அறிதியோ! இல்ல - விறைதல் குறிப்பதோர் இடைச் சொல். ஐஅரி - அழகிய செவ்வரிகளை உடைய. மாயம் - அறியாமை. மாதவன்–புத்தன். வருபொருள் - அவதரித்தலாகிய பொருளினை. மருள் - அறியாமை. கழூஉம் - கழுவும். பேணினிர் - உபசரித்தலை மேற்கொண்டீர்;

51-60 அடிசில்சிறப்பு - சிறந்த விருந்து. வேலை-வேளை. என்றலும்-என்று நீயும் கணவனும் கூற. காலை - ஞாயிறு தோன்றும் வேளை. வேலையின் வரூஉம் நடைத்திறத்து இழுக்கி - காலம் பிற்படாதபடி வருகின்ற விரைந்த நடை காரணமாகக் கால் சருக்கி. அடி தளர்ந்து - கால்கள் தளரப்பெற்று. மடைக்கலம் - உணவுப் பாத்திரம். மடையன் - உணவு சமைப்பவன். சீலம் - பஞ்சசீல ஒழுக்கம். செய்தவத்தோர்க்கு வேலை பிழைத்த - முனிவர்க்கு உணவளித்தற்கு நேர்ந்த வேளை தவறியமை காரணமாக.

விரா மலர்க் கூந்தல் மெல்-இயல்! நின்னோடு
இராகுலன்-தன்னை இட்டு அகலாதது:
"தலைவன் காக்கும், தம் பொருட்டு ஆகிய
அவல வெவ் வினை" என்போர் அறியார்;
அறம் செய் காதல் அன்பினின் ஆயினும்,
மறம் செய்துளது எனின், வல் வினை ஒழியாது;
ஆங்கு அவ் வினை வந்து அணுகும்காலைத்
தீங்கு உறும், உயிரே; செய் வினை மருங்கின்
மீண்டுவரு பிறப்பின் மீளினும் மீளும்;
ஆங்கு அவ் வினை காண் ஆய்-இழை கணவனை
ஈங்கு வந்து, இவ் இடர் செய்து ஒழிந்தது:
இன்னும் கேளாய், இளங் கொடி நல்லாய்!
மன்னவன் மகற்கு வருந்து துயர் எய்தி,
மாதவர் உணர்த்திய வாய்மொழி கேட்டு,
காவலன் நின்னையும் காவல்செய்து ஆங்கு இடும்:
ஈடு சிறை நீக்கி, இராசமாதேவி
கூட வைக்கும் கொட்பினள் ஆகி,
மாதவி மாதவன் மலர் அடி வணங்கித்
தீது கூற, அவள்-தன்னொடும் சேர்ந்து,
மாதவன் உரைத்த வாய்மொழி கேட்டு,
காதலி நின்னையும் காவல் நீக்குவள்:
அரைசு ஆள் செல்வத்து ஆபுத்திரன்பால்
புரையோர்ப் பேணிப் போகலும் போகுவை:
போனால், அவனொடும் பொருளுரை பொருந்தி,

61–70 விராமலர்-கலந்துள்ள மலர்களை உடைய. தலைவன்-கடவுள். காக்கும் - தடுத்தருள்வான். அவலவல்வினை - துன்பந்தரும் வலிய தீவினைகளை. (தலைவன் தன் பொருட்டாகிய அவலவல் வினை காக்கும் என்போர் அறியார் என்க.) அறம்செய் காதல் அன்பினின் ஆயினும் - அறம் செய்வதில் மிக்க விருப்பினால் (தீவினை செய்யப்பட்டது) ஆயினும் - அறத்தைச் செய்ய மிக விரும்பிய நிலையில் (தீவினை) செய்யப்படினும். மறம்-பாவம். செய்துளதெனில் - செய்யப்பட்டிருந்தால். செய்வினை மருங்கின் - செய்த வினையின் பகுதியால் - வினைக்கேற்றவாறு. காண்—அசை நிலை.

71–80 மகற்கு-மகன் இறந்தமைக்கு, வாய்மொழி - மெய்யுரை. காவலன் - சோழன், காவல் - சிறை. கூட - தன்னுடன். கொட்பினள் - சூழ்ச்சி யுடையவள். ஆகி - ஆக. மாதவன்—அறவணன். தீது - மணிமேகலையின் சிறை. மாதவன் - அவன்: சுட்டளவாய் நின்றது.

81–84 காதலி-இராசமாதேவி. அரைசு-அரசு. புரையோர்ப் பேணி - பெரியோரைப் பேணும் பான்மையில். பொருளுரை பொருந்தி - அற உபதேசம் கேட்டலை உட்கொண்டு – அறம் கேட்டற்கு.

85 மாநீர் வங்கத்து
அவனொடும், எழுந்து,
மாயம் இல் செய்தி
மணிபல்லவம் எனும்

தீவகத்து, இன்னும்
சேறலும் உண்டால்:
தீவதிலகையின், தன்
திறம் கேட்டு,
சாவக மன்னன் தன் நாடு
அடைந்த பின்,
ஆங்கு-அத் தீவம் விட்டு,
அருந் தவன் வடிவு ஆய்,
பூங்-கொடி! வஞ்சி மா நகர்
புகுவை:

ஆங்கு அந் நகரத்து அறி பொருள் வினவும்
ஓங்கிய கேள்வி உயர்ந்தோர் பலரால்:
"இறைவன் எம் கோன், எவ் உயிர் அனைத்தும்
முறைமையின் படைத்த முதல்வன்" என்போர்களும்,
"தன் உரு இல்லோன்; பிற உருப் படைப்போன்;
அன்னோன் இறைவன் ஆகும்" என்போர்களும்,
"துன்ப நோன்பு இத் தொடர்ப்பாடு அறுத்து, ஆங்கு
இன்ப உலகு உச்சி இருத்தும்" என்போர்களும்,

"பூத விகாரப் புணர்ப்பு" எனபோர்களும்,
பல் வேறு சமயப் படிற்று-உரை எல்லாம்,
அல்லி-அம்-கோதை! கேட்குறும் அந் நாள்—
"இறைவனும் இல்லை; இறந்தோர் பிறவார்;
அறனோடு என்னை?" என்று அறைந்தோன்-தன்னை,
பிறவியும் அறவியும் பெற்றியின் உணர்ந்த
நறு மலர்க் கோதை! எள்ளினை நகுதி:

85–90 மாநீர் – கடல். எழுந்து – புறப்பட்டு. மாயம் இல் செய்தி – அறியாமை நீங்குதலைச் செய்தல். தீவ திலகையின்–தீவ திலகையால். தன் திறம் - தன் வரலாறு. மன்னன் - ஆபுத்திரன்.

91-100 வஞ்சிமாநகர் - சேரரது தலைநகரம். அறிபொருள் — அறிய வேண்டிய தத்துவப் பொருள். கேள்வி – கேள்வியறிவினால். இறைவன் எங்கோன் – கடவுள் எமது பெருமான். எவ்வுயிர் அனைத்தும்-எல்லா உயிர்களையும். முறைமையின்-அடைவுபட. முதல்வன் - தலைவன். தன் உரு இல்லோன் - தனக்கு உருவம் இல்லாதவனும். அன்னோன் - அவன். துன்ப நோன்பு - துன்பத்தைப் பொறுக்கும் தவமே. இத்தொடர்ப்பாடு-இப் பிறவித் தொடர்ச்சியை. இன்ப உலகு உச்சி — பேரின்ப உலகின்மீது. இருத்தும் - வைக்கும். பூதவிகாரப் புணர்ப்பு- பஞ்சபூதங்களின் பரிணமத்தால் ஆகியது. இவ்வுலகு என்பது தொக்கு நின்றது. (இவ்வுலகம் பூதவிகாரப் புணர்ப்பென் போர் - பூதவாதியர்.)

101-106 படிற்றுரை - குற்றமுடைய வாதங்கள். அல்லி - மலரின் அகவிதழ். கேட்குறும் – கேட்கும். அறனோடு என்னை? – அறம்புரிவதால் யாதுபயன்? அறைந்தோன் தன்னை - கூறிய பூதவாதியை - நாத்திகனை. அறவி - அறத்தோடு பொருந்துவதின் பயன். பெற்றியின் - உள்ளபடியே; பாக்கியத்தால் எனலும் ஆம். எள்ளினை - இகழ்ந்து. நகுதி - சிரிப்பாய்.

137.

"எள்ளினை போலும், இவ் உரை கேட்டு! இங்கு,
ஒள்ளியது உரை!" என, உன் பிறப்பு உணர்த்துவை:
"ஆங்கு நிற்கொணர்ந்த அருந் தெய்வம் மயக்க,
காம்பு அன தோளி! கனா மயக்கு உற்றனை"
என்று அவன் உரைக்கும்: இளங் கொடி நல்லாய்!
"அன்று" என்று, அவன் முன் அயர்ந்து ஒழிவாயலை:
"தீவினை உறுதலும், செத்தோர் பிறத்தலும்,
வாயே" என்று மயக்கு ஒழி, மடவாய்!

வழு அறு மரனும், மண்ணும், கல்லும்,
எழுதிய பாவையும் பேசா என்பது
அறிதலும் அறிதியோ? அறியாய்கொல்லோ?
அறியாய்ஆயின், ஆங்கு-அது கேளாய்:
முடித்து வரு சிறப்பின் மூதூர் யாங்கணும்,
கொடித் தேர் வீதியும், தேவர் கோட்டமும்,
முது மர இடங்களும், முது நீர்த் துறைகளும்,
பொதியிலும், மன்றமும், பொருந்துபு நாடி,
காப்பு உடை மா நகர்க் காவலும் கண்ணி,
யாப்பு உடைத்தாக அறிந்தோர் வலித்து,
மண்ணினும், கல்லினும், மரத்தினும், சுவரினும்,
கண்ணிய தெய்வதம்-காட்டுநர் வகுக்க,
ஆங்கு அத் தெய்வதம் அவ் இடம் நீங்கா,

107–110 போலும் - அசைநிலை. (இவ்வுரை கேட்டு இங்கு எள்ளினை போலும் என்க.) ஒள்ளியது - (உனது) சிறந்த மொழியினை; என்றது இகழ்ச்சிக் குறிப்புணர நின்றது. ஆங்கு - மணிபல்லவத் தீவிற்கு. கிற்கொணர்ந்த - உன்னைக் கொண்டு சேர்த்த. தெய்வமயக்கு — தெய்வத்தால் உண்டாக்கப்பட்ட அறிவு மயக்கத்தால். காம்பு அன-மூங்கில் போன்ற. கனு மயக்கு - கனவு போன்ற அறிவின் கலக்கம்.

111-120 அன்று - நீ சொல்லும்படி அன்று. அயர்ந்து ஒழிவாய் அலை — சோர்வுபடாதொழிவாய். தீவினை உறுதலும் — தீவினைப் பயன் செய்தோரைத் தேடி அடைதலும். வாயே என்று மயக்கு ஒழி — உண்மையே என்று கூறி அவனது மயக்க அறிவினை நீக்குவாயாக. அறிதலும் அறிதியோ - தெளிய அறிவாயோ? கேளாய் - கேள். முடித்து வரு சிறப்பின் - முற்றுவிக்கப் பெறும் திருவிழாக்களை உடைய.

121-127 முதுமரம்-பழைய மரம்; ஆலமரமுமாம். முதுநீர்த்துறைகள் - பெரிய தூய நீர்த்துறைகள். பொருந்துபு - பொருந்தி நின்று. கண்ணி - கருதி. யாப்புடைத்தாக - உறுதியாயிருக்கும்படி. அறிந்தோர் - தெய்வ வுருவங்களை அமைக்கத் தெரிந்தவர்கள். வலித்து - கட்டி. (அறிந்தோர் மண்ணினும் கல்லினும் மரத்தினும் சுவரினும் வலித்துக் கண்ணிய தெய்வதம் என்க.) தெய்வம் காட்டுநர் - தெய்வத்தை நிறுவும் நெறியறிந்தவர், வகுக்க - நிறுவி அமைக்க.

138

ஊன் கணிஞர்கட்கு உற்றதை உரைக்கும்:
என் திறம் கேட்டியோ, இளங் கொடி நல்லாய்!
மன் பெருந் தெய்வ கணங்களின் உள்ளேன்,

துவதிகன் என்பேன், தொன்று முதிர் கந்தில்
மயன் எனக்கு ஒப்பா வகுத்த பாவையின்
நீங்கேன், யான்; என் நிலை-அது கேளாய்:

மாந்தர் அறிவது வானவர் அறியார்;
ஓவியச்சேனன் என் உறு துணைத் தோழன்
ஆவதை இந் நகர்க்கு ஆர் உரைத்தனரோ?.
அவனுடன் யான் சென்று ஆடு இடம் எல்லாம்,
உடன் உறைந்தார் போல், ஒழியாது எழுதி,
பூவும் புகையும் பொருந்துபு புணர்ந்து.
நா நனி வருந்த, என் நலம் பாராட்டலின்,

மணிமேகலை! யான் வரு
பொருள் எல்லாம்
துணிவுடன் உரைத்தேன்;
என் சொல் தேறு' என—
'தேறேன் அல்லேன்,

ஈறு கடைபோக எனக்கு அருள்!' என்றலும்—
துவதிகன் உரைக்கும்: 'சொல்லலும் சொல்லுவேன்;
வருவது கேளாய், மடக்
கொடி நல்லாய்!
மன் உயிர் நீங்க, மழை
வளம் கரந்து,
பொன் எயில் காஞ்சி நகர்
கவின் அழிய,
ஆங்கு-அது கேட்டே, ஆர் உயிர் மருந்தாய்
ஈங்கு இம் முதியாள் இடவயின் வைத்த

128–130 ஊன்கணினர் - முக்காலமும் உணரும் ஞானக்கண் அற்றவர்கள். உற்றதை - பொருந்திய செய்தியை. என் திறம் கேட்டி- எனது வரலாற்றைக் கேள். மன்பெருந் தெய்வ கணங்களின் உள்ளேன் - மிகப் பெரிய தெய்வக் கூட்டங்களில் ஒருவனுவேன்.

131-140 என்பேன் - எனப்படுவேன். தொன்று - பழைமை. ஒப்பா - ஒப்பாக. அது என் நிலை - அப் பாவை என் இருப்பிடமாக உள்ளது. (துவதிகன் தான் சித்திரசேனனுடன் ஆடிய செய்திகளைப் புகார் நகரினர் ஓவியப் படுத்தியமைபற்றி வியந்து 'மாந்தர் அறிவது வானவர் அறியார்' என்றான்.) ஓவியச்சேனன் - சித்திரசேனன். ஒழியாது - எஞ்சாமல். பொருந்துபு - ஏந்திச்சென்று. புணர்ந்து - கூடிநின்று. நலம் - பெருமையைக் கூறி. பாராட்டலின் - துதித்தலால்.

141-150 வருபொருள் - வரக்கடவ நிகழ்ச்சிகளை. துணிவுடன் - தெளிவாக. உரைத்தேன் - உரைத்து வந்துள்ளேன். தேறு - தெளிவாயாக. தெய்வக் கிளவிகள் - தெய்வத்தன்மையால் கூறும் மொழிகளை. ஈறுகடைபோக - ஆயுளின் இறுதி நாள், முடிவாக. சொல்லலும் சொல்லுவேன் - நன்கனம் சொல்லுவேன். வருவது - நிகழப்போவதை. கரந்து - மறைதலால்- இன்றுதலால். எயில்-கோட்டை. கவின் - அழகு. முதியாளிடவயின் - சம்பாபதியிடத்தில்.

139

தெய்வப் பாத்திரம் செவ்வியின் வாங்கி,
தையல்! நிற்பயந்தோர்-தம்மொடு போகி,
அறவண்ன்-தானும் ஆங்கு உளன்ஆதலின்,
செறி-தொடி! காஞ்சி மா நகர் சேர்குவை:

அறவணன் அருளால், ஆய்-தொடி! அவ் ஊர்ப்
பிற வணம் ஒழிந்து, நின் பெற்றியை ஆகி,
வறன் ஓடு உலகில் மழைவளம் தரூஉம்
அறன்-ஓடு ஏந்தி, ஆர் உயிர் ஓம்புவை.

ஆய்-தொடிக்கு அவ் ஊர் அறனொடு தோன்றும்
ஏது-நிகழ்ச்சி யாவும் பல உள:
பிற அறம் உரைத்தோர் பெற்றிமை எல்லாம்
அறவணன்-தனக்கு நீ
உரைத்த அந் நாள்;
தவமும், தருமமும், சார்பின்
தோற்றமும்,
பவம் அறு மார்க்கமும்,
பான்மையின் உரைத்து;
"மற இருள் இரிய, மன்

உயிர் ஏம் உற,
அற வெயில்
விரித்து-ஆங்கு, அளப்பு இல்
இருத்தியொடு
புத்த ஞாயிறு
தோன்றும்காறும்,
செத்தும் பிறந்தும்
செம்பொருள் காவா,
இத் தலம் நீங்கேன்,
இளங்கொடி! யானும்:
தாயரும் நீயும் தவறு
இன்றுஆக;
வாய்வதாக, நின்
மனப்பாட்டு அறம்!" என,

151-160 நின் பயந்தோர் - உன் தாயர்; மாதவியும் சுதமதியும்.

பிறவணம் - (பௌத்த நெறியல்லாத) ஏனைய மத நெறிகளை; அன்றி வேற்றுருவினை எனலும் ஆம். நின் பெற்றியை - நினது கோட்பாட்டை உடையவளாய்; அன்றி நின் உண்மை உருவினை உடையவளாய் எனினும் ஆம். வறன் ஓடு-வற்கடம் மிக்க. மழைவளம் - மழையால் உளதாகும் வளமாகிய உணவினை. ஆய்தொடிக்கு - உனக்கு: இடவழுவமைதி. அறனொடு தோன்றும் - பௌத்தருமம் அடைதற்கண் உளவாகின்ற. ஏது நிகழ்ச்சி - வினைவிளைவு.

161-171 பிறவறம் - ஏனைய சமய தருமங்களை. பெற்றிமை - கோட்பாடு. தவமும் தருமமும் - பௌத்தர் தவத்தையும் பௌத்தர் அறத்திறனையும். சார்பு - பிறவிக்குக் காரணமாய் இருப்பவை; அவை பன்னிரண்டாம். தோற்றம் - பிறவி. பவம் - பிறவி. பான்மையின் - தெளிவாக. இரிய - அகன்றோட. இருத்தி - யோகசித்தி; அவை எட்டென்றும் எண்பத்தொன்பதென்றும் கூறுப. செம்பொருள் - அறத்தினை. காவா - பிறருக்குக்கூறி யானும் கடைப்பிடித்து. தவறு இன்று ஆக - அறத்தினின்று தவறுதல் இல்லையாகுக.

வாய்வதாக - தப்பாதாகுக. மனப்பாட்டு அறம் - மனத்தின் கண் தோன்றியுள்ள பௌத்த தருமம். (நின் மனப்பாட்டறம் வாய்வதாக என்க.)

ஆங்கு-அவன் உரைத்தலும்—அவன் மொழி பிழையாய்,
பாங்கு இயல் நல் அறம் பலவும் செய்த பின்,
கச்சி முற்றத்து நின் உயிர் கடைகொள,
உத்தர-மகதத்து உறு பிறப்பு எல்லாம்
ஆண் பிறப்பு ஆகி, அருளறம் ஒழியாய்,
மாண்பொடு தோன்றி, மயக்கம் களைந்து,

பிறர்க்கு அறம் அருளும் பெரியோன்-தனக்குத்
தலைச்சாவகன் ஆய், சார்பு அறுத்து உய்தி.
இன்னும் கேட்டியோ, நல் நுதல் மடந்தை!

ஊங்கண் ஓங்கிய உரவோன்-தன்னை
வாங்கு திரை எடுத்த மணிமேகலா தெய்வம்,

சாதுசக்கரற்கு ஆர் அமுது ஈத்தோய்!
ஈது நின் பிறப்பு என்பது தெளிந்தே
உவவன மருங்கில் நின்பால் தோன்றி,

மணிபல்லவத்திடைக் கொணர்ந்தது, கேள்' என,

துவதிகன் உரைத்தலும்—துயர்க் கடல் நீங்கி,
அவதி அறிந்த அணி

இழை நல்லாள்,
வலை ஒழி மஞ்ஞையின்,
மன மயக்கு ஒழிதலும்,
உலகு துயில் எழுப்பினன்,
மலர் கதிரோன்-என்.

172-180 அவன் மொழி பிழையாய் - அறவணனது சொல்லை மீறுமல். பரங்கு - நன்மை. நல்லறம் - பௌத்த தருமங்கள். கடைகொள - முடிவடைய. உத்தரமகதம் - வடமகதம். ஆண் பிறப்பு - சிறிய ஆணுய பிறப்பு. ஆகி- ஆக. அருளறம் - கருணையாகிய அறம். தலைச்சாவகன் - முதன்மாணுக்கன். சார்பு - பிறப்பின் காரணங்கள்.

181-190 ஊங்கண் - மூதாதை; "தூங்கெயில் எறிந்த நின் ஊங்கணோர் நினைப்பின், அடுதல் நின்புகழும் அன்றே" புறம். அன்றிப் பழங்காலம் எனினும் ஆம். உரவோன் - அறவலியுடையோன். வாங்கு திரை - கடலினின்று. (கோவலனது மூதாதையருள் கோவலன் என்பான் கடலில் உடைகலப்பட்டுவருந்த, மணிமேகலா தெய்வம் அவன் முன் தோன்றி அவனை உய்வித்தது.) அவதி-தன் பிறவியின் எல்லையை. மஞ்ஞையின்- மயிலைப்போல.

22. சிறை செய் காதை

காலையில் சம்பாபதியையும் கந்திற் பாவையையும் வழிபட வந்தவர் உதயகுமரன் இறந்து கிடத்தலைச் சக்கரவாளக் கோட் டத்து முனிவர்க்குக் கூறினர். அம்முனிவர்கள் மணிமேகலையால் உண்மையுணர்ந்து அரசனுழைச் சென்று கூறுவாராயினர்:

"அரசே! வாழ்க. இன்றே அன்றிப் பண்டும் இவ்வூரில் கற்புடையோர்பால் காமங்கொண்டு அடாது புரிந்து இறந்தோர் பலர் உளர். பண்டொரு நாள் காந்த வேந்தன் பரசுராமற்கு அஞ்சிக் காமக்கிழத்தி மகனாகிய ககந்தனை அரசாக்கித் தான் மறைந்துறைந்தானாக, அக் ககந்தனது இளைய மகன் செருக்கினால் மருதி என்பாளைக் காமுற்று அழைத்தமையால் தன் தந்தையால் வெட்டுண்டிறந்தான். அவனது மூத்த மகனும் கற்பிற் சிறந்த விசாகையைக் காமுற்ற குற்றத்தால் தன் தந்தையால் எறியப்பட்டிறந்தான்" இங்ஙனம் முனிவர் கூறக் கேட்ட அரசன் இன்று இத்தகைய பிழை செய்தார் உளரோ? என்றனன். ஒரு முனிவன் "வேந்தே! கோவலன் கொலையுண்ட வருத்தத்தால் மாதவி

தவப்பள்ளி எய்தினள்; அவள் மகள் மணிமேகலை ஐயமேற்றுண்டலை மேற்கொண்டு தவ ஒழுக்கமுடையவளாய் அம்பலமடைந்தனள். அவள்பால் நின்மகன் காமங்கொண்டு நெருங்கினனாக, அவள் காயசண்டிகை

யுருவில் கரந்து நின்றனள். உதய குமரன் பின்னும் அவளை அணுகித் திரிந்தனன். தன் மனைவி யாகிய

காயசண்டிகையைத் தேடிவந்த

காஞ்சனன் அவளைத் தன் மனைவி என்றெண்ணி, அவள்பால் அணுகிய உதயகுமரன் மீது சீற்றங்கொண்டு வாளால் எறிந்தனன்" என்றான். அரசன், தன் ஏனாதியை நோக்கி யான் செய்யற்பால தண்டனையை விஞ்சையன் செய்தமை தவறாகும். இச் செய்தி ஏனைய வேந்தர் செவிப்புலம் புகாமுன் உதயகுமரனுடலை அடக்கம் செய்து கணிகை மகளையும் சிறையிடுக" என்றனன்.

கடவுள் மண்டிலம் கார் இருள் சீப்ப,
நெடு நிலைக் கந்தில் நின்ற பாவையொடு
முதியோள் கோட்டம், வழிபடல் புரிந்தோர்
உதயகுமரற்கு உற்றதை உரைப்ப,
சா துயர் கேட்டுச் சக்கரவாளத்து
மாதவர் எல்லாம் மணிமேகலை-தனை,
'இளங்கொடி! அறிவதும் உண்டோ, இது?' என—
துளங்காது ஆங்கு-அவள் உற்றதை உரைத்தலும்,
ஆங்கு-அவள்-தன்னை, ஆர் உயிர் நீங்கிய
வேந்தன் சிறுவனொடு, வேறு இடத்து ஒளித்து,

1–10 கடவுள் - தெய்வமாகிய. மண்டிலம் - பரிதி. பாவையொடு - பாவைத் தெய்வத்தையும். கோட்டம்-கோயிலையும். உற்றதை- நேர்ந்த துன்பத்தை. உரைப்ப - மாதவரிடம் கூற. சா துயர்- இறந்த துன்பத்தை. துளங்காது - நாத் தளராமல்-திறம்பட; நடுக்கமின்றி எனினும் ஆம்.

மா பெருங் கோயில் வாயிலுக்கு இசைத்து,
கோயில் மன்னனைக் குறுகினர் சென்று-ஈங்கு,
'உயர்ந்து ஓங்கு உச்சி உவா மதிபோல,
நிவந்து ஓங்கு வெண்குடை மண்ணகம் நிழல் செய!
வேலும் கோலும் அருட்கண் விழிக்க!
தீது இன்று உருள்க, நீ ஏந்திய திகிரி!
நினக்கு என வரைந்த ஆண்டுகள் எல்லாம்
மனக்கு இனிது ஆக வாழிய, வேந்தே!
இன்றே அல்ல; இப் பதி மருங்கில்
கன்றிய காமக் கள்ளாட்டு அயர்ந்து,
பத்தினிப் பெண்டிர்பால் சென்று அணுகியும்,
நல் தவப் பெண்டிர்பின் உளம் போக்கியும்,
தீவினை உருப்ப உயிர் ஈறுசெய்தோர்,
பார் ஆள் வேந்தே! பண்டும் பலரால்:
"மன் மருங்கு அறுத்த மழு வாள் நெடியோன்-
தன் முன் தோன்றல் தகாது; ஒழி, நீ" எனக்
கன்னி ஏவலின், காந்த மன்னவன்,

"இந் நகர் காப்போர் யார்?" என நினைஇ,
"நாவல்-அம் தண் பொழில் நண்ணார் நடுக்குற,
காவல்-கணிகை-தனக்கு ஆம் காதலன்,
இகழ்ந்தோர் காயினும் எஞ்சுதல் இல்லோன்,
ககந்தன் ஆம்" என, காதலின் கூஉய்,
"அரசு ஆள் உரிமை நின்பால் இன்மையின்,

11-20 வாயில் - வாயில்காப்போன். குறுகினர் - நெருங்கி. உவா - பௌர்ணமி. (உச்சி உயர்ந்து ஓங்கு உவா மதி என்க.) நிவந்து - உயர்ந்து. நிழல்-அளியாகிய நிழலை. வரைந்த - தெய்வம் வரையறுத்த. மனக்கு - மனத்துக்கு. இனிது - இனிமை - இன்பம். வாழிய - வாழ்க. கன்றிய - அடிப்பட்ட- நெடுநாட் பழகிய. காமக்கள்ளாட்டு - காமமாகிய கட்குடியினை. அயர்ந்து-விரும்பிச் செய்து.

21-30 உருப்ப - சினத்தலால். உயிரிறு - தம் உயிர்க்கு இறுதியினை மன்மருங்கு - அரசர் மரபினை. மழுவாள் - கண்டகோடரியாகிய வாளை உடைய. நெடியோன் தன்முன் - பரசுராமன் முன்னே. தோன்றல் - நிற்றல். ஒளி - மறைவாயாக. கன்னி-கொற்றவை. காந்தமன்னவன் - ஒரு சோழன். நினைஇ - நினைத்து. நாவலந்தண் பொழில் - சம்புத்தீவினுள். நண்ணார் - பகைவர். காவற்கணிகை - கற்பின் காவலில் பட்ட நாடக மடந்தை. ஆம் காதலன் - தோன்றிய மைந்தன்.

31-33 எஞ்சுதல் - தோல்வி. என - என்று எண்ணி. கூஉய் - அழைத்து. அரசாள் உரிமை - அரசன் மகனாய்ப் பிறந்தமை.

பரசுராமன் நின்பால் வந்து அணுகான்;
அமர முனிவன் அகத்தியன்-தனது
துயர் நீங்கு கிளவியின் யான் தோன்று அளவும்,
ககந்தன், காத்தல்! காகந்தி" என்றே
இயைந்த நாமம் இப் பதிக்கு இட்டு, ஈங்கு
உள்வரிக் கொண்டு, அவ் உரவோன் பெயர் நாள்—
தெள்ளு நீர்க் காவிரி ஆடினள் வரூஉம்
பார்ப்பனி மருதியை, பாங்கோர் இன்மையின்,
யாப்பறை என்றே எண்ணினன் ஆகி,
காவிரி வாயிலில் ககந்தன் சிறுவன்,

"நீ வா" என்ன; நேர்-இழை கலங்கி,
"மண் திணி ஞாலத்து மழை வளம் தரூஉம்
பெண்டிர்ஆயின், பிறர் நெஞ்சு புகாஅர்;
புக்கேன், பிறன் உளம்; புரி நூல் மார்பன்
முத் தீப் பேணும் முறை எனக்கு இல்" என,
மா துயர் எவ்வமொடு மனைஅகம் புகாஅள்,
பூத சதுக்கம் புக்கனள் மயங்கி,
"கொண்டோற் பிழைத்த குற்றம்-தான் இலேன்;
கண்டோன் நெஞ்சில் கரப்பு எளிதாயினேன்;
வான் தரு கற்பின்
மனையறம் பட்டேன்;
யான் செய் குற்றம் யான்
அறிகில்லேன்;
பொய்யினைகொல்லோ, பூத

சதுக்கத்துத்
தெய்வம் நீ?" என, சேயிழை
அரற்றலும்—

34–40

துயர் நீங்கு கிளவியின் - துன்பம் நீங்கியமையை அறிவிக்கும் மொழியினால். காத்தல் - காத்தலினால்; அன்றிக் காக்க வேண்டும் எனினும் ஆம். (ககந்தன் காத்தல் காரணமாக இப்பகுதிக்கு இயைந்த நாமம் காகந்தி என்றே இட்டு என்க.) உள்வரிக்கொண்டு - வேற்றுருக்கொண்டு. உரவோன் - வலியோன் - சோழன். பெயர்நாள் - நீங்கிய நாளில்.

41-50 பாங்கோர் - உழையோர். யாப்பறை - கட்டுப்பாடற்றவள். வாயிலில் - முன்னிடத்தில் - கரையில். சிறுவன் - மகன். நேரிழை - மருதி. பிறர்நெஞ்சு புகாஅர்-பிறரால் காதலிக்கப் பெறார். என்றது 'காதலிப்போர் உள்ளத்தைத் தம் கற்பாற் சுடும் மாண்பினர் என்றவாறு. புரிநூல் - பூணூல். மாதுயர் எவ்வம்-மிக்கதுயரம்: ஒருபொருட் பன்மொழிகள். புகாஅள்-புகாமல். பூதசதுக்கம் - பூதக்கோயில் பொருந்திய நாற்சந்தி. புக்கனள் - புக்கு.

51-56 கொண்டோற் பிழைத்த - கணவனைப் பிழைத்து ஒழுகிய - கற்புநெறி தவறிய. கண்டோன் - என்னைக் கண்ட பிறனது. கரப்பு - உட்புகுதற்கு. எளிது-எளிமை. வான் - மழையினை. கற்பின்-கற்பினோடு. பட்டேன்-பொருந்தினேன். பொய்யினை கொல்லோ - நீ இல்லையோ? (பூதசதுக்கத்துத் தெய்வம்! நீ பொய்யினை கொல்லோ? என்க.) அரற்றலும் - கதறியவுடன்.

மா பெரும் பூதம் தோன்றி, "மடக்கொடி!
நீ கேள்" என்றே நேர்இழைக்கு உரைக்கும்:
"தெய்வம் தொழாஅள், கொழுநன்-தொழுது எழுவாள்,
பெய் எனப் பெய்யும் பெரு மழை' என்ற அப்
பொய்யில்-புலவன் பொருளுரை தேருய்!
பிசியும் நொடியும் பிறர் வாய்க் கேட்டு,
விசி பிணி முழவின் விழாக் கோள் விரும்பி,
கடவுள் பேணல் கடவியை ஆகலின்,
மடவரல்! ஏவ, மழையும் பெய்யாது;
நிறை உடைப் பெண்டிர்-தம்மே போல,
பிறர் நெஞ்சு சுடூஉம் பெற்றியும் இல்லை;

ஆங்கு-அவை ஒழிகுவை ஆயின், ஆய்-இழை!
ஓங்கு இரு வானத்து மழையும் நின் மொழியது;
பெட்டாங்கு ஒழுகும் பெண்டிரைப் போல,
கட்டாது உன்னை, என் கடுந் தொழில் பாசம்:

மன் முறை எழு-நாள் வைத்து, அவன் வழூஉம்
பின்முறை அல்லது, என் முறை இல்லை:

75

ஈங்கு எழு-நாளில் இளங்கொடி நின்பால்
வாங்கா நெஞ்சின் மயரியை வாளா்ல்,

57–60 தெய்வம் - கணவனை ஒழிந்த தெய்வங்களை. தொழாஅள்- தொழாதவளாய். எழுவாள் - துயிலுணர்பவள்.

61–70 பொய்இல்புலவன் - தவறுதலற்ற அறிவினை உடையானது - திருவள்ளுவரது. பொருளுரை - மெய்யாய மொழியை - திருக்குறளை. (தொல்காப்பியனார் உண்மை சுட்டலைப் "பொருண்மைசுட்டல்" என்பர் ஆதலின், 'பொருளுரை' க்கு 'மெய்யுரை' என்று பொருள்கோடல் சாலும்.) அன்றிப் பொருளை உடைய உரை எனப் பொருள்கொள்ளினும் இக் கருத்தே படும். பிசி-பிதிர்; இது புதிர் என மருவி வழங்கும்; விடுகதை என்றும் கூறுப. நொடி-பொய்க்கதை. விசி பிணி- வாரினை வலித்துக் கட்டிய. விழாக்கோள் - விழாக் கொண்டாட்டத்தினை. கடவுட்பேணல் கடவியை-கடவுளைப் போற்றுதலைக் கடனாகக் கொண்டிருந்தனை. மடவல்! - மடத்தாய்! நிறை - தலையாய கற்பு. தம்மே - தம்மை, பெற்றி - தன்மை; பெருமையும்ஆம். அவை - பிசியும் நொடி யும் பிறர்வாய்க்கேட்டல், தெய்வம் பேணல் ஆகிய இரண்டி னையும். பெட்டாங்கு ஒழுகும் பெண்டிர் - மனம்விரும்பியபடி ஒழுகும் கற்பில்லாத மகளிர்.

71–75 மன் முறை அரசன் முறைசெய்தற்குரிய காலம்.வைத்து.விட்டி ருந்து. அவன் வழுஉம் பின்முறை அல்லது-அரசன் முறைசெய் யத்தவறிய பின்னாளில் அன்றி. வாங்கா-மீட்காத-நீங்காத. மயரி - மயக்கமுடையோன். (ககந்தன் கேட்டு ஏழுநாளில் மயரியை வாளால் கடிதலும் உண்டு என்க.)

ககந்தன் கேட்டு, கடிதலும்

உண்டு" என,

இகந்த பூதம் எடுத்து உரை செய்தது: அப்
பூதம் உரைத்த நாளால், ஆங்கு-அவன்,
தாதை வாளால், தடியவும் பட்டனன்.
இன்னும் கேளாய், இருங் கடல் உடுத்த
மண் ஆள் செல்வத்து மன்னவர் ஏறே!
தருமதத்தனும், தன் மாமன் மகள்
பெரு மதர் மழைக் கண் விசாகையும், பேணித்
தெய்வம் காட்டும் திப்பிய ஓவியக்
கைவினை கடந்த கண் கவர் வனப்பினர்;
“மைத்துனன் முறைமையால், யாழோர் மணவினைக்கு
ஒத்தனர்” என்றே ஊர் முழுது அலர் எழ—

புனையா ஓவியம் புறம் போந்தென்ன,
மனை அகம் நீங்கி, வாள் நுதல் விசாகை
உலக அறவியினூடு சென்று ஏறி,
"இலகு ஒளிக் கந்தின் எழுதிய பாவாய்!
உலகர் பெரும் பழி ஒழிப்பாய், நீ" என,
"மா நகருள்ளீர்! மழை தரும் இவள்" என,
நா உடைப் பாவை நங்கையை எடுத்தலும்—

“தெய்வம் காட்டித் தெளித்திலேன் ஆயின், மையல் ஊரோ மன மாசு ஒழியாது;

மைத்துனன் மனையாள் மறு பிறப்பு ஆகுவேன்;
இப் பிறப்பு இவனொடும் கூடேன்” என்றே,
நற்றாய்-தனக்கு நல்-திறம் சாற்றி,
மற்று-அவள் கன்னி மாடத்து அடைந்த பின்—

76–80 இகந்த - (நிலைமை) கடந்த. நாளால் - நாளில்.

81–90 தருமதத்தன்-ஒருவணிகன். பெருமதர்-பெரிதாய் மதத்த. தடிய-வெட்ட. மழை-மேகம்போற் குளிர்ந்த. தெய்வம் காட்டும் திப்பியக் கைவினை ஓவியம் - தெய்வத்தை நிறுவுதற்குரிய வேலைப்பாடமைந்த அற்புத ஓவியங்கள். வனப்பினர் - அழகுடையராய் இருந்தனர். மைத்துனன் - அத்தைமகன்; மாமன் மகனும் ஆம். யாழோர் மணவினைக்கு - களவுமுறைக் கூட்டத்திற்கு. ஒத்தனர் - (இருவரும்) இசைந்து விட்டனள். அலர்-பழிச்சொல். போந்தென - சென்றாற்போல.

வாள் - ஒளி.

91–100 இலகு – விளங்குகின்ற. உலகர். பெரும்பழி - உலகத்தோர் கூறும் பெரிய பழியை. மழைதரும்-மழையைப் பெய்விப்பாள். கற்புடையாள். எடுத்தலும் - புகழ்தலும். காட்டு - சான்று காட்டி. தெளித்திலேனாகில் - ஐயத்தைப் போக்காதிருப்பேனாகில். மயல் - உண்மையுணராமை. நல்திறம் - கொண்டுள்ள விரதத்தை.

தருமதத்தனும், தந்தையும், தாயரும்,
பெரு நகர்-தன்னைப் பிறகிட்டு ஏகி,

"தாழ்தரு துன்பம்

தலையெடுத்தாய்" என,

நா உடைப் பாவையை நலம் பல ஏத்தி,
மிக்கோர் உறையும், விழுப் பெருஞ் செல்வத்து,

தக்கண-மதுரை-தான்

சென்று அடைந்த பின்,

தருமதத்தனும், "தன்

மாமன் மகள்

விரி தரு பூங் குழல் விசாகையை அல்லது,
பெண்டிரைப் பேணேன்; இப் பிறப்பு ஒழிக!" எனக்
கொண்ட விரதம் தன்னுள் கூறி,
வாணிக மரபின் வரு பொருள் ஈட்டி,
நீள் நிதிச் செல்வன் ஆய், நீள் நில வேந்தனின்
எட்டிப் பூப் பெற்று, இரு-முப்பதிற்று யாண்டு
ஒட்டிய செல்வத்து உயர்ந்தோன் ஆயினன் :
அந்தணாளன் ஒருவன் சென்று, "ஈங்கு
என் செய்தனையோ, இரு நிதிச் செல்வ?
'பத்தினி இல்லோர் பல அறம் செய்யினும்,
புத்தேள் உலகம் புகாஅர்' என்பது
கேட்டும் அறிதியோ? கேட்டனைஆயின்,
நீட்டித்திராது, நின் நகர் அடைக!" என,
தக்கண-மதுரை-தான் வறிது ஆக,
இப் பதிப் புகுந்தனன், இரு நில வேந்தே!
மற்று-அவன் இவ் ஊர் வந்தமை கேட்டு,
பொன் தொடி விசாகையும், மனைப் புறம்போந்து,
நல்லாள் நாணாள், பல்லோர் நாப்பண்

101–110 பெருநகர் - புகாரை. பிறகிட்டு - பின்னிட்டு - கடந்து. தாழ்தரு - ஆழ்தற்குரிய. துன்பம் - துன்பத்தை. தலைஎடுத்தாய் - எடுத்தாய் - நீக்கினாய். பாவையை நலம்பல ஏத்தி - கந்திற்பாவையைத் துதித்து; நலம்பல ஏத்தி என்பது ஒரு சொல் நீர்மைத்தாய் நின்றது. தக்கணமதுரை-கூடல்நகரம். அல்லது—அன்றி. ஒழிக-மணவினை இன்றிக் கழிக. கொண்ட விரதம் தன்னுட்கூறி என்பது விரதத்தைத் தன்னுட் கூறிக் கொண்டு என்னும் பொருளது.

111–120 மரபின் - முறைமையால் – நெறியினால். வருபொருள் – பெருகும்பொருள். வேந்தனில்-பாண்டிய மன்னனால். எட்டிப் பூ - எட்டிப் பட்டத்திற்குரிய பொற்பூ. இது நெறியாற் பெரும்பொருள் ஈட்டிய வணிகர்க்கு அரசர்அளிக்கும் பெரும் பட்டத்திற்குரியது. இரு முப்பதிற்றி யாண்டு—அறுபது ஆண்டுகள். பத்தினி - கற்புடை மனைவி. புத்தேள் உலகம் - தெய்வ உலகம்.

121–125 வறிது ஆக - செல்வமற்றதாகும் வண்ணம். தொடி-வளை. மனைப்புறம்-கன்னிமாடத்திற்கு வெளியே. நல்லாள் - அவள். நாப்பண் - நடுவில்.

அல்லவை கடிந்த அவன்பால் சென்று,
"நம்முள் நாம் அறிந்திலம்; நம்மை முன் நாள்
மம்மர் செய்த வனப்பு யாங்கு ஒளித்தன?
ஆறு-ஐந்து-இரட்டி யாண்டு உனக்கு ஆயது; என்
நாறு ஐங் கூந்தலும் நரை விராவுற்றன;
இளமையும் காமமும் யாங்கு ஒளித்தனவோ?
உளன் இல்லாள! எனக்கு ஈங்கு உரையாய்:
இப் பிறப்புஆயின், யான் நின் அடி அடையேன்;
அப் பிறப்பு யான் நின் அடித்தொழில் கேட்குவன்:
இளமையும் நில்லாது; யாக்கையும் நில்லாது;
வளவிய வான் பெருஞ் செல்வமும் நில்லா;
புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்;
மிக்க அறமே விழுத் துணை ஆவது;
தானம் செய்" என—தருமதத்தனும்,
மாமன் மகள்பால் வான் பொருள் காட்டி,
ஆங்கு-அவன் அவளுடன் செய்த நல் அறம்
ஓங்கு இரு வானத்து மீனினும் பலவால்.
குமரி மூத்த அக் கொடுங் குழை நல்லாள்
அமரன் அருளால், அகல் நகர் இடூஉம்
படு பழி நீங்கி, பல்லோர் நாப்பண்,
கொடி மிடை வீதியில் வருவோள் குழல்மேல்,
மருதி பொருட்டால் மடிந்தோன் தம்முன்,
கருகிய நெஞ்சினன், காமம் காழ்கொள,
சுரி இரும் பித்தை சூழ்ந்து

புறந் தாழ்ந்த
விரி பூ மாலை விரும்பினன்
வாங்கி,

126-130 அல்லவை - தீய செயல்களை. கடிந்த-நீக்கிய. மம்மர்-மயக்கம். ஒளித்தன - மறைந்தன. ஆறைந்திரட்டியாண்டு - அறுபது வயது. நாறு ஐங்கூந்தல் – கமழும் ஐவகைக் கூந்தல். பெண்கள் கூந்தலை ஐவகையாகக் கை செய்தல் மரபு. வீராவுற்றன - பொருந்தப்பெற்றன.

131-140 உளனில்லாள்!-மனக்காதலனே! நின் அடி அடையேன்- நினக்கு வாழ்க்கைப்படேன். அப்பிறப்பு-இனிவரும் பிறவியில். அடித்தொழில் கேட்குவன்-மனைவியாவேன். புத்தேளுலகம்- தேவருலகத்தினை. மிக்க - யாவற்றினும் மேலான. விழுத்துணை - சிறந்த துணை. மாமன் மகள்பால் – விசாகையிடம்.

வான் - பெருமை.

141-150 மீன் - நட்சத்திரம். குமரி மூத்த - மணம் எய்தாமல் வீணே இளமை முதிரப்பெற்ற கொடுங்குழை – வளைவாய காதணி. அமரன் - கந்திற்பாவையினுள்ள துவதிகன். இடூஉம் - (தன் மேல்) ஏற்றிக்கூறும். படுபழி - பெரும்பழி. நாப்பண் - நடுவில். மடிந்தோன் - ககந்தன்மகன். தம்முன்-அண்ணன். காழ்கொள - முதிர்தலால். சுரிஇரும்பித்தை - சுருண்ட கரிய குடுமியில். புறம் - பின்புறத்தில். விரும்பினன்-விரும்பி.

"தொல்லோர் கூறிய மணம் ஈது ஆம்" என,
எல் அவிழ் தாரோன் இடுவான் வேண்டி,
மாலை வாங்க ஏறிய செங் கை
நீலக் குஞ்சி நீங்காது ஆகலின்,
"ஏறிய செங்கை இழிந்திலது, இந்தக்
காரிகை பொருட்டு" என, ககந்தன் கேட்டு,
கடுஞ் சினம் திருகி, மகன் துயர் நோக்கான்,
மைந்தன்-தன்னை வாளால் எறிந்தனன்:
ஊழிதோறு ஊழி உலகம் காத்து,
வாழிய, எம் கோ மன்னவ!' என்று,
மாதவர்-தம்முள் ஓர் மாதவன் கூறலும்—
வீயா விழுச் சீர் வேந்தன் கேட்டனன்,
"இன்றே அல்ல" என்று எடுத்து உரைத்து,
நன்று அறி மாதவிர்! நலம் பல காட்டினிர்;
இன்றும் உளதோ, இவ் வினை? உரைம்' என,
வென்றி நெடு வேல் வேந்தன் கேட்ப—
'தீது இன்று ஆக, செங்கோல் வேந்து!' என
மாதவர்-தம்முள் ஓர் மாதவன் உரைக்கும்:
'முடி பொருள் உணர்ந்தோர் முது நீர் உலகில்
கடியப் பட்டன ஐந்து உள: அவற்றில்,
கள்ளும், பொய்யும், களவும், கொலையும்,
தள்ளாது ஆகும், காமம்; "தம்பால்
ஆங்கு-அது கடிந்தோர் அல்லவை கடிந்தோர்" என,
நீங்கினர் அன்றே, நிறை தவ மாக்கள்:
நீங்கார் அன்றே, நீள் நில வேந்தே!
தாங்கா நரகம்-தன்னிடை உழப்போர்:
சேஅரி நெடுங் கண் சித்திராபதி மகள்,

காதலன் உற்ற கடுந்
துயர் பொருஅள்,
மாதவி மாதவர் பள்ளியுள்
அடைந்தனள்:

180 மற்று-அவள் பெற்ற
மணிமேகலை-தான்

151–160 தொல்லோர் - முன்னோர். எல்-ஒளி. அவிழ் - மலர்ந்த. இடுவான் - இடுவதற்கு. குஞ்சி-குடுமி. காரிகை பொருட்டு-காயசண்டிகை காரணமாக. திருகி - முறுகி. மகன் துயர் - மகன்எய்தும் துன்பம்;அன்றி மகன் இறத்தலால்தனக்கெய்தும் சோகமும் ஆம். வாழிய - வாழ்க.

161–170 வீயா - அழியாத. இன்றே அல்ல என்று-இன்றுமட்டுமல்ல என்று தொடங்கி. மாதவிர்! – முனிவரீர்! உரைம்-உரையும். முடிபொருள்உணர்ந்தோர் – மெய்ப்பொருள் உணர்ந்தோரால்.

171–180 கள் - கட்குடித்தல். பொய் -. பொய்கூறுதல். தள்ளாது ஆகும் - ஒழியாததாக உள்ள. அது –. அக்காமத்தை. அல்லவை—ஏனைய கட்குடி முதலிய குற்றங்களையும்.கடிந்தோர்-நீக்கியோர் ஆவர். உழப்போர்-வருந்துவோர். சேஅரி-செவ்வரி.

முற்றா முலையினள், முதிராக் கிளவியள்,
"செய்குவன், தவம்" என, சிற்றிலும் பேர் இலும்,
ஐயம் கொண்டு உண்டு, அம்பலம் அடைந்தனள்:
ஆங்கு-அவள் அவ் இயல்பினளே ஆயினும்,
நீங்கான் அவளை, நிழல் போல் யாங்கணும்;
காரிகை பொருட்டால் காமம் காழ்கொள,
ஆர் இருள் அஞ்சான், அம்பலம் அடைந்தனன்:
காயசண்டிகை வடிவு ஆயினள் காரிகை:

காயசண்டிகையும் ஆங்கு உளள் ஆதலின்,
காயசண்டிகை-தன் கணவன் ஆகிய
வாய் வாள் விஞ்சையன் ஒருவன் தோன்றி,
"ஈங்கு-இவள் பொருட்டால் வந்தனன் இவன்" என,
ஆங்கு-அவன் தீவினை உருத்தது ஆகலின்,
மதி மருள் வெண்குடை மன்ன! நின் மகன்
உதயகுமரன் ஒழியானாக,

ஆங்கு-அவள்-தன்னை அம்பலத்து ஏற்றி,
ஓங்கு இருள் யாமத்து இவனை ஆங்கு உய்த்து,
காயசண்டிகை-தன் கணவன் ஆகிய
வாய் வாள் விஞ்சையன்-தன்னையும் கூஉய்,
"விஞ்சை மகள்பால் இவன் வந்தனன்" என,
வஞ்ச விஞ்சையன் மனத்தையும் கலக்கி,

ஆங்கு-அவன்-தன் கை வாளால் அம்பலத்து,
ஈங்கு-இவன்-தன்னை எறிந்தது' என்று, ஏத்தி,
மாதவர்-தம்முள் ஓர் மாதவன் உரைத்தலும்—
சோழிக ஏனாதி-தன் முகம் நோக்கி,
'யான் செயற்பாலத்து இளங்கோன்-தன்னைத்
தான் செய்ததனால் தகவு இலன், விஞ்சையன்;
மாதவர் நோன்பும் மடவார் கற்பும்
காவலன் காவல் இன்றுஎனின், இன்றால்;
"மகனை முறைசெய்த மன்னவன் வழி ஓர்

181–190 கிளவி-மொழி. காரிகை பொருட்டால்-மணிமேகலை காரணமாக.
காம்கொள — முதிர.

191-200 வாய்வாள் — வெற்றியிற்றப்பாத வாளை உடைய. இவள் பொருட்டால் — காயசண்டிகையைக் கூடுதற்கு. ஆங்கவன் தன்வினை — உதயகுமரனது தீவினை. ஆங்கவன் தன்னை — மணிமேகலையை. இவனை — உதயகுமரனை உய்த்து — செல்லச் செய்து. கூஉய்-அழைத்து — வரச்செய்து. விஞ்சைமகள் — காயசண்டிகை.

201–210 கலக்கி — பிறழ உணரச்செய்து. (தீவினை ஏற்றி, உய்த்து, கூஉய், கலக்கி எறிந்தது என முடிக்க.) சோழிக ஏனாதி — சோழனது படைத்தலைவன். தகவிலன் - நீதியற்றவனாவான். முறை செய்த — தண்டம் செய்த. மன்னவன்வழி—மனுமரபு.

துயர் வினையாளன்
தோன்றினன்'' என்பது

வேந்தர்-தம் செவி உறுவதன் முன்னம்,
ஈங்கு-இவன்-தன்னையும் ஈமத்து ஏற்றி,
கணிகை மகளையும் காவல் செய்க' என்றனன்,
அணி கிளர் நெடு முடி அரசு ஆள் வேந்து-என்.

211–215

துயர்வினையாளன் – தீவினையுடையோன். ஈமத்து-சுடலையில். கணிகைமகள் – பரத்தைமகள் – மணிமேகலை. காவல்-சிறை.

23. சிறை விடு காதை

அரசனதாணையால் சோழிய ஏனாதி மணிமேகலையைச் சிறையிட்டனன். "உதயகுமரன்

இறத்தற்குக் காரணமாய கணிகையை

நான் எங்ஙனமேனும் நலிவேன்" என்றெண்ணிய சோழன் தேவி தன் எண்ணத்தைக் கரந்து "தவமகள்பாற் காதல் கொண்ட

உதயகுமரன் அரசாளும் உரிமை இலன். அவன் இறந்தமைக்கு இத்தவமகளைச் சிறைசெய்தல் தகாது" எனச்சோழனிடம் கூறிச்

சிறைவீடு பெற்று, அவளைத் தன்னுழை இருக்கச் செய்தனள்.

அவட்கு மயக்கும் மருந்தளித்து அவளது அறிவு பிறிதாகும் வண்ணம் செய்ய முயன்றனளாக மணிமேகலை பழம்பிறப்புணர்ந்த முதறிவுடையளாதலால் அறிவு திரியாதிருந்தனள். சோழன் தேவி

அவட்குப் பழியை ஆக்கக் கருதிக் கல்லாக் கயவன் ஒருவனை

வலிதினில் மணிமேகலையைப் புணர்ந்து செல்லுமாறு தூண்டினள்.

அவனும் அங்ஙனம் ஒருப்பட்டு அணுக, மணிமேகலை இவ்வஞ் சத்தை அறிந்து ஆணுருவெய்தினள். அதுகண்டு அக்கயவன்

அரசன்தேவிபால் ஐயரவுற்று நீங்கினன். பின் சினம்மிக்க அரசன்

தேவி அவளைக் கொல்லக் கருதி மணிமேகலைக்கு நோய் உற்றுள் ளதெனப் பிறர்க்குப் பொய்கூறிப் புழுக்கறையில் இட்டனளாக, மணிமேகலை ஊணொழி மந்திரத்தால் உயிர் உய்ந்தனள். இத் திறம் உணர்ந்த இராசமாதேவி அவள்பால் அச்சம் கொண்டு

வணங்கிப் பிழைபொறுக்க
வேண்ட மணிமேகலை அவளைப்
பேணிப்
பழம் பிறப்பினில் உதயகுமரன்
இராகுலனாயிருந்த நிலையில்தான்
இலக்குமியாய்
இருந்ததைக்கூறிய முகத்தால்
உயிர்கள் பல திறத் தோற்ற
மெய்துதலையும் அவட்கு
அறிவித்து அருளறம் மேற்
கொள்ளுமாறு பணித்து
அவளது துன்பத்தீயை

ஆற்றினள்; தேவி அவளை
வணங்கினளாக மணிமேகலை,
முற்பிறப்பினில் என்
கணவனுயிருந்த உதயகுமரனைப்
பெற்ற நீ என்னை வணங்குதல்
தகாதுகாண் எனக் கூறிப்
பணிந்தனள்.

151

மன்னவன் அருளால்,

வாசந்தவை எனும்

நல் நெடுங் கூந்தல் நரை மூதாட்டி—
அரசற்கு ஆயினும், குமரற்கு ஆயினும்,
திரு நிலக் கிழமைத் தேவியர்க்கு ஆயினும்,
கட்டுரை விரித்தும், கற்றவை பகர்ந்தும்,
பட்டவை துடைக்கும் பயம் கெழு மொழியினள்—

இலங்கு அரி நெடுங் கண் இராசமாதேவி
கலங்கு அஞர் ஒழியக் கடிது சென்று எய்தி,

அழுது அடி வீழாது,

ஆய்-இழை தன்னைத்

தொழுது, முன் நின்று, தோன்ற வாழ்த்தி,
'கொற்றம் கொண்டு, குடி புறங்காத்து,
செற்றத் தெவ்வர் தேஎம் தமது ஆக்கியும்;
தருப்பையில் கிடத்தி, வாளில் போழ்ந்து,
"செருப் புகல் மன்னர் செல்வுழிச் செல்க" என
மூத்து விளிதல் இக் குடிப் பிறந்தோர்க்கு,
நாப் புடைபெயராது, நாணுத் தகவுடைத்தே;
தன் மண் காத்தன்று; பிறர் மண் கொண்டன்று;
என் எனப் படுமோ, நின் மகன் மடிந்தது?
மன்பதை காக்கும் மன்னவன்-தன் முன்
துன்பம் கொள்ளேல்' என்று அவள் போய பின்—
கையாற்று உள்ளம் கரந்து, அகத்து அடக்கி,
பொய்யாற்று ஒழுக்கம் கொண்டு, புறம் மறைத்து,

1-10 மூதாட்டி - முதியோள். திருநிலக்கிழமை-உலகாளும் செல்வ உரிமை. காட்டுரை-பொருள் மிகுந்த மொழி-பொருளுரை. கற்றவை-கற்றநூற் பொருள்கள். பட்டவை-உளவாய துன்பங்களை. துடைக்கும் - இல்லாமற் செய்யும். பயங்கெழு-பயன்மிக்க. அனுர் - வருத்தம். அடி - இராசமா தேவியின் காலின்கீழ். தோன்ற-துலங்க - காணும்வண்ணம். (தொழுது தோன்ற முன் நின்று என்க.)

11-22 கொற்றம் - அரசாளுரிமை; வெற்றியும் ஆம். புறங்காத்து - பாதுகாத்து. செற்றத் தெவ்வர் - நீண்ட பகைமையினை உடைய பகைவரது. தேஎம் - நாடு. தருப்பை - ஒருவகைப் புல். போழ்ந்து - பிளந்து. செருப்புகல்-போரை விரும்பிய-போரில் இறந்த. மூத்து விளிதல்-(போரில் இறவாமல்) முதுமையால் இறத்தல். நாப்புடை பெயராது - நா அசையாதபடி-பிறரிடம் பேசவும் இயலாதபடி. நாணுத்தகவு உடைத்து - நாணும் தன்மையைத் தருவதாகும். காத்து அன்று - காத்தற்போரினுல் அன்று. கொண்டு அன்று - கொள்ளுதற் போரினுலும் அன்று. என் எனப்படுமோ - எவ்வகையால் மாண்புடைய சாவாகக் கூறப்படும்; மன்பதை - நற்குடிகள். கரந்து - கையாற்று உள்ளம் - மிக்க மனவருத்தத்தை. கரந்து - மறைத்து. பொய்யாற்றொழுக்கம் - பொய்யாகிய ஒழுக்கம். புறம்மறைத்து - வெளியே பொய்ம்மை தோன்ருமல் ஒளித்துக் கொண்டு.

‘வஞ்சம் செய்குவன்,
மணிமேகலையை’ என்று,
அம்-சில்-ஓதி, அரசனுக்கு ஒரு நாள்,
‘பிறர் பின் செல்லாப் பிக்குணிக் கோலத்து,
அறிவு திரிந்தோன்
அரசியல்-தான் இலன்;

கரும்பு உடைத் தடக் கைக்
காமன் கையற
அரும் பெறல் இளமை
பெரும்பிறிதாக்கும்,
அறிவு தலைப்பட்ட
ஆய்-இழை—தனக்குச்
சிறை தக்கன்று, செங்கோல்

வேந்து!' என—
'சிறப்பின் பாலார் மக்கள்;
அல்லார்
மறப்பின் பாலார்,
மன்னர்க்கு' என்பது
அறிந்தனை ஆயின், இவ்
ஆய்-இழை-தன்னைச்
செறிந்த சிறை நோய்
தீர்க்க' என்று இறை சொல—
'என்னோடு இருப்பினும்
இருக்க, இவ் இளங்கொடி;
தன் ஓடு எடுப்பினும்,
தகைக்குநர் இல்' என்று.
அங்கு அவள்-தனைக் கூஉய்,
அவள்-தன்னோடு
கொங்கு அவிழ் குழலாள்

கோயிலுள் புக்கு-ஆங்கு,
‘அறிவு திரித்து இவ் அகல்
நகர் எல்லாம்
எறிதரு கோலம் யான்
செய்குவல்’ என்றே
மயல்-பகை ஊட்ட, மறு
பிறப்பு உணர்ந்தாள்
அயர்ப்பது செய்யா
அறிவினள் ஆக—
கல்லா இளைஞன் ஒருவனைக்
கூஉய், ‘வல்லாங்குச் செய்து,
மணிமேகலை-தன்
இணை வளர் இள முலை
ஏந்து எழில் ஆகத்துப்

23-30 ஓதி - கூந்தலை உடையாள். பின்செல்லா - காதலால் வயப்படாத. கோலத்து-கோலத்தை உடையவளிடம். அரசியல்- அரசனுக்குரிய நீதி. பெரும் பிறிது ஆக்கும் – அழிக்கின்ற – வீணாக்குகின்ற. தலைப்பட்ட - எதிர்ப்பட்ட - எய்தியுள்ள. தக்கன்று – தக்கதன்று: விகாரம்.

31-40 பாலார் – பகுதியினர். (மன்னர்க்குச் சிறப்பின்பாலார் மக்கள்;அல்லார் மறப்பின் பாலார் என்க.) மறப்பின் பாலார்– மறக்கத்தக்க பகுதியினர்–மறக்கத்தக்கவர். இறை–அரசன். இளங்கொடி – மணிமேகலை. தகைக்குநர் – தடுப்பவர். அங்கவள் தனை – மணிமேகலையை. கூஉய் – அழைப்பித்து. கொங்கு – தேன். குழலாள் – சோழன்தேவி. திரித்து - வேறுபடுத்து. எறிதருகோலம் – கல்லாலும் கோலாலும் தாக்கும் நிலையை.

41-45 மயல் - மயக்கம்; மயற்பகை - அறிவின் கலக்கமாகிய பகையைத் தரும் மருந்தினை. அயர்ப்பது – தெளிவின்றிச் சோர்தல். வல்லாங்குச் செய்து – வலிதிற் புணர்ந்து. ஆகத்து–மார்பினில்.

புணர் குறி செய்து, "பொருந்தினள்" என்னும்
பான்மைக் கட்டுரை பலர்க்கு உரை' என்றே,
காணம் பலவும் கைந் நிறை கொடுப்ப,
ஆங்கு-அவன் சென்று, அவ் ஆய்-இழை இருந்த
பாங்கில் ஒரு சிறைப்பாடு சென்று அணைதலும்,
'தேவி வஞ்சம் இது' எனத் தெளிந்து,
நா இயல் மந்திரம் நடுங்காது ஓதி,
ஆண்மைக் கோலத்து ஆய்-இழை இருப்ப,
காணம் பெற்றோன் கடுந் துயர் எய்தி,
'அரசர் உரிமை-இல் ஆடவர் அணுகார்;
நிரயக் கொடு மகள் நினைப்பு அறியேன்' என்று,
அகநகர் கைவிட்டு, ஆங்கு-அவன் போயபின்—
'மகனை நோய் செய்தாளை வைப்பது என்?' என்று,
'உய்யா நோயின் ஊண் ஒழிந்தனள்' என,
பொய்ந் நோய் காட்டிப் புழுக்கறை அடைப்ப,
ஊண் ஒழி மந்திரம் உடைமையின், அந்த
வாள்-நுதல் மேனி வருந்தாது இருப்ப—
ஐயென விம்மி, ஆய்-இழை நடுங்கி,
'செய் தவத்தாட்டியைச் சிறுமை செய்தேன்,
என் மகற்கு உற்ற இடுக்கண் பொருது;
பொன் நேர் அனையாய்! பொறுக்க' என்று அவள் தொழ—
'நீலபதி-தன் வயிற்றில் தோன்றிய

ஏலம் கமழ் தார்

இராகுலன்-தன்னை

46-50 பொருந்தினள் – (என்னோடு) புணர்ந்தாள். பான்மைக் கட்டுரை–திறம்பட்ட பேச்சினை. காணம்–பொற்காசு. நிறை–நிறைய. பாங்கில் – மருங்கினில். ஒரு சிறைப்பாடு – ஒரு பகுதிக்கண்.

51-60 இது - கல்லா இளைஞன் வந்தமை. ஆண் அமை கோலத்து - ஆண்மை நிரம்பிய வடிவத்துடன். உரிமையில் - மனைவியர் இருக்கும் இடத்தில். நிரயக் கொடுமகள் - நரகம் எய்துதற்குரிய கொடுவினையவள் - சோமன் தேவி. அகநகர் - கோயிலின் உள்ளிடம். வைப்பது - உயிர்வாழ விடுதல். பொய்நோய் காட்டி - இல்லாத நோயை இருப்பதாகக் கூறி. புழுக்கறை - காற்றோடாத அறை. (சோமன் தேவி மணிமேகலையைப் புழுக்கறையிலடைத்துக் கொல்ல நினைந்தாளாதலின், அவட்குப் பொய்ந்நோய் கூறிப் புழுக்கறையில் புகுத்தினள்.)

61-63 ஒழி மந்திரம் - ஒழிதற்குரிய மந்திரம். ஐ என விம்மி - வியப்புற்றுப் பொருமி. செய்தவத்தாட்டியை - நின்னை: இடவழுவமைதி. சிறுமை - குற்றம். சிறுமை செய்தேன் என்பது ஒரு சொல் நீர்மைத்தாய் நின்றது. (இடுக்கண் பொருது சிறுமை செய்தேன் என்க.) பொன்நேர் அனையாய் - திருமகட்கு இணையாம் தன்மையுடையாய்!

அழற்கண்-நாகம் ஆர்
உயிர் உண்ண,
விழித்தல் ஆற்றேன் என்
உயிர் சுடு நாள்,
யாங்கு இருந்து அழுதனை,
இளங்கோன்-தனக்கு?

பூங்கொடி நல்லாய்! பொருந்தாது செய்தனை;
உடற்கு அழுதனையோ? உயிர்க்கு அழுதனையோ?

உடற்கு அழுதனையேல்,
உன்-மகன்-தன்னை
எடுத்துப் புறங்காட்டு இட்டனர்
யாரே?

உயிர்க்கு அமுதனையேல்,
உயிர் புகும் புக்கில்
செயப்பாட்டு வினையால்
தெரிந்து உணர்வு-அரியது;
அவ் உயிர்க்கு
அன்பினை ஆயின், ஆய்-தொடி!
எவ் உயிர்க்கு ஆயினும்
இரங்கல் வேண்டும்:
மற்று உன் மகனை,
மாபெருந்தேவி!
செற்ற கள்வன் செய்தது
கேளாய்:
மடைக் கலம் சிதைய
வீழ்ந்த மடையனை

உடல் துணிசெய்து-ஆங்கு
உருத்து எழும் வல் வினை
நஞ்சு விழி அரவின் நல்
உயிர் வாங்கி,
விஞ்சையன் வாளால்
வீட்டியது அன்றே:
"யாங்கு அறிந்தனையோ,
ஈங்கு-இது, நீ?" எனின்,
பூங் கொடி நல்லாய்!
புகுந்தது இது என,

மொய்ம் மலர்ப் பூம்பொழில்
புக்கது முதலா,
தெய்வக் கட்டுரை
தெளிந்ததை ஈறு,

90 உற்றதை எல்லாம் ஒழிவு
இன்று உரைத்து,

69-70 அழற்கண் நாகம்-கண்ணில் விடத்தைஉடைய பாம்பு - இட்டிவிடம். விழித்தல் ஆற்றேன் - (இராகுலன் இல்லாத உலகினைக்) கண் விழித்துப் பார்த்தலையும் பொறுதேன் ஆகி - உலக வாழ்வினை வெறுத்தேனாகி.

71 80 இளங்கோன் தனக்கு யாங்கு இருந்து அழுதனை-உதய குமரனுக்கு(இறந்த இராகுலனுக்கு) எங்கே அழுதாய்?-அழவில்லையே. புக்கில் - அடையுமிடம். செயப்பாட்டு வினையால் - செய்யப்படும் வினைவசத்தால். (செயப்பாட்டு வினையால் உயிர்புகும் புக்கில் தெரிந்து உணர்வரியது என்க.) (முன் நீலபதி மகனாய் இராகலன் என்னும் பெயருடன் வாழ்ந்திறந்தவன், இன்று உன் மகனாய் உதயகுமரன் என்னும் பெயர்பெற்று வாழ்ந்து இறந்தான். இனி அவன் எவ்வயிற் பிறந்தனனோ அறியோம். இத்தகைய நிலையாத தொடர் பினைத்தெரிந்துணராமல் வருந்துதல் தகாது என்றவாறு.)

81-90 செற்ற - பகைத்த. கள்வன் - விஞ்சையன். மடைக்கலம் - சமையற் பாத்திரம். செய்தாங்கு - செய்தமையால். உருத்து - சினந்து; தோன்றி. வல்வினை - ஒழியாத தீவினை வீட்டியது - பித்தது. யாங்கு - எங்ஙனம். பொழில் - உபவனம். தெய்வம் - துவதிகன். தெளிந்தனை - தெளிந்தமை: 'ஐ' சாரியை.

மற்றும் உரை செயும், மணிமேகலை-தான்:
'மயல்-பகை ஊட்டினை; மறு பிறப்பு உணர்ந்தேன்
அயர்ப்பதுசெய்யா அறிவினேன் ஆயினேன்;
கல்லாக் கயவன் கார் இருள்-தான் வர,
நல்லாய்! ஆண் உரு நான் கொண்டிருந்தேன்;
ஊண் ஒழி மந்திரம் உடைமையின் அன்றே,
மாண்-இழை செய்த வஞ்சம் பிழைத்தது?
அந்தரம் சேறலும், அயல் உருக் கோடலும்,
சிந்தையில் கொண்டிலேன்—சென்ற பிறவியில்
காதலற் பயந்தோய்! கடுந் துயர் களைந்து,
தீது உறு வெவ் வினை தீர்ப்பதுபொருட்டால்:
தையால்! உன்-தன் தடுமாற்று அவலத்து
எய்யா மையல் தீர்ந்து, இன் உரை கேளாய்:
ஆள்பவர் கலக்குற மயங்கிய நல் நாட்டுக்
காருக மடந்தை கணவனும் கைவிட,
ஈன்ற குழவியொடு தான் வேறாகி,
மான்று ஓர் திசை போய், வரையாள் வாழ்வுழி,
புதல்வன்-தன்னை ஓர் புரி நூல் மார்பன்
பதியோர் அறியாப் பான்மையின் வளர்க்க,
ஆங்கு-அப் புதல்வன் அவள் திறம் அறியான்,
தான் புணர்ந்து, அறிந்து, பின் தன் உயிர் நீத்ததும்;
நீர் நசை வேட்கையின் நெடுங் கடம் உழலும்
சூல் முதிர் மட மான் வயிறு கிழித்து ஓட,
கான வேட்டுவன் கடுங் கணை துரப்ப,
மான் மறி விழுந்தது கண்டு, மனம் மயங்கி,

91–100 மயல்பகை – அறிவைக் கலக்கும் மருந்து. அயர்ப்பது – (அறிவு) சோர்தல். கயவன்–கீழ்மகன். நள்ளிருள்–செறிந்த இருளை உடைய இரவில். மாணிழை – நீ; இடவமுவமைதி. சென்ற பிறவியில் காதலன் – உதயகுமரனை.

101–110 (வெவ்வினை தீர்ப்பது பொருட்டால் சேரலும் கோடலும் சிந்தையிற் கொண்டிலேன் என்க.) தடுமாற்றவலம் – பல பிறவியிலும் சென்று தடுமாறுதலுக்குரிய மனக்கலக்கம். எய்யாமையல் – அறியாமையோடு கூடிய மயக்கம். கலக்குற – கொடுங்கோல் செலுத்துதலால். காருகமடந்தை – இல்லறமடந்தை; நெசவாட்டி எனலும் ஆம். மான்று – மதிமயங்கி. ஈன்ற குழவியொடு தான் – ஈன்ற குழந்தையும் தானும். வேறு ஆகி – பிரிந்து. வரையாள் – கட்டுப்பாடின்றி. பதியோர் – ஊரிலுள்ளோர். அறியாப்பான்மையின் – அறியாத முறைமையால் – அறியாதபடி. அறியான் – அறியாதவனாகி.

111–115 நீத்ததும் – நீக்கியமையும். நசைவேட்கை – மிக்க விருப்பம். கடம் – காடு. சூல் – கருப்பம். மான்மறி – மான்குட்டி. வீழ்ந்தது – தாய்வயிற்றிலிருந்து வெளிப்போந்தது.

156

பயிர்க் குரல் கேட்டு, அதன் பான்மையன் ஆகி,

உயிர்ப்பொடு செங் கண் உகுத்த நீர் கண்டு, ஓட்டி எய்தோன் ஓர் உயிர்

துறந்ததும்;

கேட்டும் அறிதியோ,

வாள் தடங் கண்ணி?

கடாஅ யானைமுன், கள்-காமுற்றோர்
விடாஅது சென்று, அதன் வெண் கோட்டு வீழ்வது

உண்ட கள்ளின் உறு

செருக்கு ஆவது

கண்டும் அறிதியோ, காரிகை நல்லாய்?
பொய்யாற்று ஒழுக்கம் பொருள் எனக் கொண்டோர்
கையாற்று அவலம் கடந்ததும் உண்டோ?
'களவு ஏர் வாழ்க்கையர் உறூஉம் கடுந் துயர்

இள வேய்த் தோளாய்க்கு

இது' என வேண்டா:

மன் பேர் உலகத்து

வாழ்வோர்க்கு இங்கு-இவை

துன்பம் தருவன;

துறத்தல் வேண்டும்:

கற்ற கல்வி அன்றால்,
காரிகை!
செற்றம் செறுத்தோர்
முற்ற உணர்ந்தோர்;
மல்லல் மா ஞாலத்து
வாழ்வோர் என்போர்
அல்லல் மாக்கட்கு
இல்லது நிரப்புநர்;
திருந்து ஏர் எல்-வளை!
செல் உலகு அறிந்தோர்

வருந்தி வந்தோர் அரும் பசி களைந்தோர்;
துன்பம் அறுக்கும் துணி பொருள் உணர்ந்தோர்
மன்பதைக்கு எல்லாம் அன்பு ஒழியார்' என,
ஞான நல் நீர் நன்கனம் தெளித்து,

தேன் ஆர் ஓதி செவிமுதல் வார்த்து,
மகன் துயர் நெருப்பா, மனம் விறகு ஆக,

116–120 பயிர்க்குரல் - அழைக்கும் குரல். பான்மையன்-வசப்பட்டவன். செங்கண் உகுத்தநீர் - சிவந்த கண்ணிலிருந்து (தாய்மான்) சொரிந்த நீர். கடாஅ யானை - மதம்கொண்ட யானை.

121–130 உறு செருக்கு - மிக்க களிப்பு. கண்டும் அறிதியோ! - கண்டும் அறிவாயன்றோ!; 'ஓ' தெரிநிலைப்பொருட்டு. பொய் ஆறு - பொய்ந்நெறி. பொருள் - விரும்பப்படுவது. கையாற்று அவலம் - செயலறவைத் தரும் மனத்துயரத்தை. களவு ஏர் வாழ்க்கையர் - களவுத் தொழிலாகிய ஏரினைக்கொண்டு வாழ்பவர் - கள்வர். இங்கிவை - பொய்யாற்றொழுக்கமாகிய காமமும் களவும். அன்று - கல்வியன்று.

131–140 செற்றம் - பகைமையை. செறுத்தோர் - பகைத்து வென்றவர். மல்லல் மா ஞாலத்து - வளம்பொருந்திய பெரிய உலகத்தில். அல்லல்-துன்பம். நிரப்புநர் - கொடுத்துதவுவோர். எல் - ஒளி. செல்உலகு - மறுமை உலகம். துணிபொருள் - மெய்ந்நூற்பொருள். மன்பதை - நற்குடி. ஓதி - கூந்தல்; தேனார் ஓதி - இராசமாதேவி. செவிமுதல் - செவியிடத்தில். வார்த்து - ஒழுகவிட்டு.

அகம் சுடு வெந் தீ ஆய்-இழை அவிப்ப—
தேறு படு சில் நீர் போலத் தெளிந்து,
மாறு கொண்டு ஓரா மனத்தினள் ஆகி,
ஆங்கு-அவள் தொழுதலும், ஆய்-இழை பொருஅள்,
தான் தொழுது ஏத்தி, 'தகுதி செய்திலை,
காதலற் பயந்தோய்; அன்றியும் காவலன்
மாபெருந்தேவி' என்று, எதிர் வணங்கினள்-என்.

141–147 அகம் - உயிரினை; உள்ளிடத்தினை எனினும் ஆம். தேறு - தேற்றாங் கொட்டையின் தேய்வை. சின்னீர் - சிறிதாகிய (கலங்கிய) நீர். மாறுகொண்டு ஓரா - மாறுபட எண்ணாத. ஆங்கவள் - இராசமாதேவி. பொருஅள் - பொருதவளாய். காதலன் - பழம்பிறப்பிற் காதலனாய் இருந்த உதயகுமரனை. பயந்தோய் - ஈன்றாய்.

24. ஆபுத்திரன்

நாடு அடைந்த காதை

இங்ஙனம் நிகழாநிற்க, சித்திராபதி மணிமேகலை பால் மனம் வைத்த உதயகுமரன் மாண்டமையாலும் மணிமேகலை சிறைப் பட்டமையாலும் மனம் வருந்தி இராசமாதேவியை யடைந்து தன் வருத்தத்தைத் தோன்ற விளக்கிப் பின்வருமாறு கூறினள்: "இந்திர விழாக் கொண்டாடுதலை மறந்த நாளில் இந்நகரைக் கடல் கொள்ளுமாறு மணிமேகலாதெய்வம் இட்ட சாபமொன்றுண்டு. அன்றி இந்திரகோபமும் உளதாம். ஆகவே இந்திரவிழா நிகழா விடின் இந்நகர் கேடுறுமெனச் சாரண முனிவர் கூறியுள்ள தெய்வக்கிளவி ஒன்றுண்டு. யாவரும் அதுபற்றி அஞ்சியுள்ளனர். அம் மணிமேகலா தெய்வத்தின் பெயரைத் தாங்கிய இவளைச் சிறை வைப்பின் அதனால் அத்தெய்வம் சினத்தலும் கூடும் என நான் மிக அச்சமுறுவல். இவளை என் மனைக்கு யான் அழைத் தேகுமாறு அனுப்புக" என்றனள். இராசமாதேவி "கணிகையர் வாழ்க்கை கடையெனக் கருதி நீங்கி நற்றவம் பூண்ட இந்நங்கை நின்பால் வாராள்" என்று மறுத்துரைத்தனள். இந்நிலையில் மணிமேகலையை விடுவிக்கக் கருதிய அறவண அடிகள் மாதவி யோடும் சுதமதியோடும் அங்கு அணுக அரசியும் மணிமேகலை யும் வணங்கி நின்றனர். தேவிக்கு அவர், பிறப்பிற்குரிய காரணங் களாகிய பன்னிரு நிதானங்களையும் உபதேசித்து, மணிமேகலையை நோக்கி "நீ சமயக்கணக்கர் நூற்பொருள்களைக் கேட்டறிந்தபின் உனக்கு இவ்வறங்களைக் கூறுவேன்" என்று கூறி எழுந்தனர்.

மணிமேகலை எழுந்து அவரை வணங்கி, அரசியையும் பிறரையும் அவருரைத்த அறத்தின் வழி ஒழுகுமாறு வேண்டிக்கொண்டு, "நான் உதயகுமரன் கொலையுண்ட புகாரில் இருப்பின் யாவரும் என்னை ஏசுவர்; ஆதலால் நான் சாவகநாடு செல்வேன்" என்று கூறி விடைபெற்றுச்சென்று சம்பாபதியையும் கந்திற்பாவையையும்

வணங்கி வானூடெழுந்து சாவக நாட்டின் தலை நகரை எய்திப் புற நகரில் ஓர் சோலையில் இறங்கினள். அங்கிருந்த தரும சாவக முனிவனிடம் அந்நகரரசன் திறத்தினை உசாவியறிந்தனள்.

மன்ன குமரனை வஞ்சம் புணர்த்த
தொல் முது கணிகை, தன் சூழ்ச்சியில் போயவன்,

விஞ்சையன் வாளின்
விளிந்தோன் என்பது
நெஞ்சு நடுக்குறக் கேட்டு,
மெய் வருந்தி,
மாதவி மகள்-தனை
வான்சிறை நீக்க,
காவலன் தேவி கால்கீழ்
வீழ்ந்து-ஆங்கு,
'அரவு ஏர் அல்குல் அருந்
தவ மடவார்
உரவோற்கு அளித்த
ஒருபத்து-ஒருவரும்;
ஆயிரம்கண்ணோன்
அவிநயம் வழூஉக்கொள,

மா இரு ஞாலத்துத்
தோன்றிய ஐவரும்;
ஆங்கு-அவன்
புதல்வனோடு அருந் தவன்
முனிந்த
ஓங்கிய சிறப்பின்
ஒருநூற்று நால்வரும்;
திருக் கிளர் மணிமுடித்
தேவர் கோன்-தன் முன்
உருப்பசி முனிந்த என்
குலத்து ஒருத்தியும்—
ஒன்று கடை நின்ற
ஆறு-இருபதின்மர் இத்

1-10 மன்ன குமரனை - உதய குமரனை. வஞ்சம் புணர்த்த - வஞ்சித்த-தன் வஞ்சனையில் அகப்படுத்திய; புணர்த்தல் - சூழ்ந்து செய்தலும் ஆம். "வஞ்சம் புணர்த்த" ஒரு சொல் நீர்மைத்து. தொல்முது கணிகை - மிக்க முதுமையுற்ற சித்திராபதி; கணிகைத் தன்மையில் மிக முதிர்ந்தவள் எனினும் ஆம். போயவன்- உலக அறிவியினுட் புகுந்த உதயகுமரன். விளிந்தோன் - இறந்தான். ஏர் – அழகு. உரவோன் - இந்திரன். ஒருபத்தொருவர் - பதினொருவர். ஆயிரங்கண்ணோன் அவிநயம் - இந்திரனுக்கு நடித்த அவிநயம். வழூஉக்கொள - குற்றப்பட்டமையால். மா இரு ஞாலத்து - மா பெரு நிலவுலகினில்.

11-15 புதல்வன் - சயந்தன். திருக்கிளர் - பொலிவு மிகுகின்ற. உருப்பசி - ஒரு தெய்வக்கணிகை. ஒன்று கடை நின்ற ஆறு இருபதின்மர் - நூற்றிருபத் தொருவர்.

159

தொன்று படு மா நகர்த் தோன்றிய நாள் முதல்,
யான் உறு துன்பம் யாவரும் பட்டிலர்,
மாபெருந்தேவி! மாதர் யாரினும்.

பூவிலை ஈத்தவன் பொன்றினன் என்று,
மாதவி மாதவர் பள்ளியுள் அடைந்ததும்;
பரந்து படு மனைதொறும் பாத்திரம் ஏந்தி,
அரங்கக் கூத்தி சென்று, ஐயம் கொண்டதும்;
நகுதல் அல்லது, நாடகக் கணிகையர்
தகுதி என்னார், தன்மை அன்மையின்:
மன்னவன் மகனே
அன்றியும், மாதரால்

இந் நகர் உறூஉம் இடுக்கணும் உண்டால்!

உம்பளம் தழீஇய உயர் மணல் நெடுங் கோட்டு,
பொங்கு திரை உலாவும் புன்னை அம் கானல்,
கிளர் மணி நெடுமுடிக்கிள்ளி முன்னு;
இளவேனில் இறுப்ப, இறும்பூது சான்ற
பூ நாறு சோலை யாரும் இல் ஒரு சிறை,

தானே தமியள் ஒருத்தி தோன்ற; "இன்னள் ஆர்கொல், ஈங்கு இவள்?" என்று, மன்னவன் அறியான் மயக்கம் எய்தா;

16-20 தொன்றுபடு - பழைமை பொருந்திய. பட்டிலர் - அடைந்திலர். (மாதர் யார்ரினும் யானுறு துன்பம் யாவரும் பட்டிலர் என்க.) பூவிலை - புணர்தற்கு விலையாகிய பொன். ஈத்தவன்- கோவலன்; வலித்தல் விகாரம். பொன்றினன் என்று - இறந்தனன் என்று - இறந்தமைக்காக. அடைந்ததும் – அடைந்தமையும்.

21-30 பரந்துபடு – நெடுகிலும் உள்ள. அரங்கக் கூத்தி - அரங்கினில்

கூத்தாடுதற்குரியவள் - மணிமேகலை. நகுதல் அல்லது - சிரித்து எள்ளுதல் அன்றி. என்னார் - என்று கூறார். தன்மை - இயல்பு. (நாடகக் கணிகையர் தன்மை அன்மையின், அடைந்ததும் கொண்டதும் நகுதல் அல்லது தகுதி என்னார் எனக் கூட்டுக.) மாதரால் - மணிமேகலையால். உம்பளம் - உப்பளம்; மெலித்தல் விகாரம். தழீஇய - அணைந்த - பொருந்திய. நெடுங்கோட்டு - நீண்ட கரையில் உள்ள. கானல் - கடற்கரைச் சோலை. 'கானல்' ஈண்டுச் சோலை என்னும் பொருட்டாய் நின்றது. (நெடுங்கோட்டுக்கானல், பொங்குதிரை உலாவும் கானல் என இயைக்க.) கிளர் - ஒளியின் எழுச்சியை உடைய. கிள்ளி முன்னா - கிள்ளியின் முன்னாக. இறப்ப - தங்குதல் கொள்ள-முதிர்தலால். இறும்பூது சான்ற - வியத்தகு தன்மை நிரம்பிய

31-34 ஒரு சிறை - ஒரு பக்கத்தில். தானே - உடன் வந்தவர் இன்றித் தனித்தவளாகி. தமியள் ஒருத்தி - ஒப்பற்ற ஒரு காரிகை நீர்மையள். இன்னள் - இத்தன்மையள் ஆகிய. ஈங்கிவள் - இம்மங்கை. மயக்கம் - காமக்கலக்கம். எய்தா - அடைந்து.

கண்ட கண்ணினும், கேட்ட செவியினும்,
உண்ட வாயினும், உயிர்த்த மூக்கினும்,
உற்று உணர் உடம்பினும், வெற்றிச் சிலைக் காமன்
மயிலையும், செயலையும், மாவும், குவளையும்,
பயில் இதழ்க் கமலமும், பருவத்து அலர்ந்த
மலர் வாய் அம்பின் வாசம் கமழ;
பலர் புறங்கண்டோன் பணிந்து தொழில் கேட்ப;
ஒரு மதி எல்லை கழிப்பினும், உரையாள்,
பொரு அரு பூங்கொடி போயின அந் நாள்—
"யாங்கு ஒளித்தனள், அவ் இளங்கொடி?" என்றே
வேந்தரை அட்டோன் மேல்-இயல் தேர்வுழி—
நிலத்தில் குளித்து, நெடு விசும்பு ஏறி,
சலத்தில் திரியும் ஓர் சாரணர் தோன்ற—
மன்னவன் அவனை வணங்கி, முன் நின்று,
"என் உயிர் அனையாள் ஈங்கு ஒளித்தாள் உளள்;
அன்னாள் ஒருத்தியைக் கண்டிரோ, அடிகள்?
சொல்லுமின்" என்று தொழ, அவன் உரைப்பான்;
"கண்டிலேன்; ஆயினும், காரிகை-தன்னைப்
பண்டு அறிவுடையேன், பார்த்திப! கேளாய்;
நாக நாடு நடுக்கு இன்று ஆள்பவன்,
வாகை வேலோன், வளைவணன் தேவி
வாசமயிலை வயிற்றுள் தோன்றிய
பீலிவளை என்போள் பிறந்த அந் நாள்,
"இரவி குலத்து ஒருவன் இணை முலை தோய,
கருவொடு வரும்" எனக் கணி எடுத்து உரைத்தனன்;
ஆங்கு-அப் புதல்வன் வரூஉம் அல்லது,

35-40 உயிர்த்த - (அவள் நறுமணத்தை) மோந்த. உற்று - மெய்யுற்று - தழுவியணைந்து. மயிலை - ஒருவகை மல்லிகை. செயலை - அசோகு. பயில் - நெருங்கிய. மலர்வாய் அம்பின் - மலர்களாகிய வாய்த்தலை உடைய அம்புகளின் (வாய்த்தல் - பயன் தருதலில் தப்பாமை.)

41-50 கழிப்பினும் - (இள்ளியுடன் உறைந்து) கழித்தாளாயினும். உரையாள் - (தன்திறத்தினையும் தான் செல்லுதலையும்) கூருதவளாகி. ஒளித்தனள் - மறைந்தனள். அட்டோன் - கொன்றேன். தேர்வுழி - தேடியலைந்தபோழ்து — (வேந்தரை அட்டோனுயினும் அவளது மென்மைக்குத் தோற்றமை தோன்ற "வேந்தரை அட்டோன் மெல்லியற் றேர்வுழி" என்ருர். "ஒண்ணுதற்கோஒ உடைந்ததே ஞாட்பினுள், நண்ணாரும் உட்கும் என் பீடு" முப்பால்.) குளித்து - உட்புகுந்து திரியும் - நடந்தியங்கும். சாரணன் - திவ்வியசித்தி பெற்ற ஓர் முனிவன். அன்னுள் - அத்தன்மையள் - ஒப்பற்ற காரிகை நீர்மையாள். அடிகள்! — அண்மைவிளி.

51-60 காரிகைதன்னை - சுட்டளவாய் நின்றது. பார்த்திப!—அரசே! நடுக்கு - அச்சம். தோய—புணர்தலால். கரு - சூல். வரும்-வருவாள். கணி - சோதிடம் வல்லோன். எடுத்து - விளக்கி. அப்புதல்வன் — அவள் நினக்கீன்ற மகன்.

161

பூங்கொடி வாராள்; புலம்பல்! இது கேள்;
தீவகச் சாந்தி செய்யா நாள், உன்

காவல் மா நகர் கடல் வயிறு புகூஉம்,
மணிமேகலை-தன் வாய்மொழியால்; அது
தணியாது, இந்திர சாபம் உண்டு ஆகலின்:
ஆங்குப் பதி அழிதலும், ஈங்குப் பதி கெடுதலும்,
வேந்தரை அட்டோய்! மெய் எனக் கொண்டு, இக்
காசு இல் மா நகர் கடல் வயிறு புகாமல்
வாசவன் விழாக் கோள் மறவேல்" என்று,
மாதவன் போயின அந்நாட் டொட்டும், இக்
காவல் மா நகர் கலக்கு ஒழியாதால்:
தன் பெயர் மடந்தை துயருறும்ஆயின்,
மன் பெருந் தெய்வம் வருதலும் உண்டு என
அஞ்சினேன், அரசன் தேவி!' என்று ஏத்தி,
'நல் மனம் பிறந்த நாடகக் கணிகையை
என் மனைத் தருக என—இராசமாதேவி,
'கள்ளும், பொய்யும், காமமும், கொலையும்,
உள்ளக் களவும், என்று உரவோர் துறந்தவை
தலைமையாக் கொண்ட நின் தலைமை இல் வாழ்க்கை
புலைமை என்று அஞ்சிப் போந்த பூங்கொடி

61-70 புலம்பல் - வருந்தற்க. இது - யான் சொல்வதை. தீவகச் சாந்தி-இந்திரவிழா. கடல் வயிறு-கடலினுள். மணிமேகலை தன் - மணிமேகலா தெய்வத்தின். வாய்மொழி - தப்பாத மொழி. தணியாது - (அது) இல்லாமற் போகாது. இந்திர சாபமுண்டாதலின் - இந்திரனது சாபம் உளதாவதினால். (சாந்தி செய்யா நாள், மணிமேகலைதன் வாய்மொழி தன்னால் மாநகர் கடல்வயிறு புகூஉம்; மேலும் இந்திரசாபமும் உண்டாதலின் அது தணியாது ஆம் என முடிக்க.) ஆங்குப்பதி அழிதலும் - உம்பர்நாட்டு வேந்தன் மனம் புழுங்கினவுடன். ஈங்குப் பதி கெடுதலும் மெய் - இத்தலைநகரம் கேடுறுதல் தப்பாது; 'உம்' அசைநிலை. காசு - குற்றம். வாசவன் - இந்திரனது. விழாக்கோள்-விழாக் கொண்டாடுதலை. அந்நாட்டொட்டும் - அந்நாள் தொடங்கி. 'நாட்டொட்டு' என்புழி டகரஒற்று விரித்தல் விகாரம்; 'உம்' அசைநிலை.

71-80 தன்பெயர் மடந்தை - தனது பெயரை உடைய மங்கை - மணிமேகலை. மன்பெருந் தெய்வம் - மாபெருந் தெய்வம் - மணிமேகலா தெய்வம். உண்டு என - உளதாகும் எண்றெண்ணி.

கணிகையை -
மணிமேகலையை. மனை -
வீட்டின்கண். கள்-

கட்குடித்தல். உள்ளக்களவு - உள்ளத்தால் பிறன்பொருளைக் கவர நினைத்தல். உரவோர் - அறிவினில் வலியோர். துறந்தவை - கடிந்தவற்றை. தலைமையா - முதன்மையான ஒழுக்கமாக. தலைமை இல் வாழ்க்கை-கடையாய வாழ்க்கை. புலைமை- இழிந்ததன்மை; தூயதல்லாமை எனலும் ஆம்.

நின்னொடு போந்து, நின்
மனைப் புகுநாள்;
என்னொடு இருக்கும்' என்று,
ஈங்கு-இவை சொல்வுழி—
மணிமேகலை திறம் மாதவி
கேட்டு,
துணி கயம் துகள் படத்
துளங்கிய அதுபோல்,
தெளியாச் சிந்தையள் சுதமதிக்கு
உரைத்து,
வளி எறி கொம்பின் வருந்தி,
மெய்ந் நடுங்கி,
அறவணர் அடி வீழ்ந்து,
ஆங்கு-அவர்-தம்முடன்

மற வேல் மன்னவன்
தேவி-தன்பால் வர—
தேவியும், ஆயமும்,
சித்திராபதியும்,
மாதவி மகளும், மாதவர்க்
காண்டலும்,
எழுந்து,
எதிர்சென்று-ஆங்கு, இணை
வளைக் கையால்
தொழும்தகை மாதவன்
துணை அடி வணங்க—
'அறிவு உண்டாக' என்று
ஆங்கு-அவன் கூறலும்,

இணை வளை நல்லாள், இராசமாதேவி,
அருந் தவர்க்கு அமைந்த ஆசனம் காட்டி,
திருந்து அடி விளக்கிச் சிறப்புச் செய்த பின்,
'யாண்டு பல புக்க நும் இணை அடி வருந்த, என்
காண்தகு நல்வினை நும்மை ஈங்கு அழைத்தது;
நாத் தொலைவு இல்லைஆயினும், தளர்ந்து
மூத்த இவ் யாக்கை வாழ்க, பல்லாண்டு!' என—
'தேவி, கேளாய்! செய் தவ யாக்கையின்
மேவினேன்ஆயினும், வீழ் கதிர் போன்றேன்;
பிறந்தார்? மூத்தார், பிணி நோய் உற்றார்,
இறந்தார்" என்கை
இயல்பே: இது கேள்:

81–90 போந்து - வந்து. ('னின்' என்றது அவளது இழிதகவுணர நின்றது.) திறம் - வரலாற்றினை. துணிகயம் - நீர்தெளிந்த குளம். துகள்பட - தூசுபடுதலால். துளங்கிய அதுபோல் - கலக்கமுற்ற அத்தன்மைபோல. வளி எறி—காற்றினால் மோதப் பெற்ற. ஆயம் - உடனுறையும் மகளிர் குழாம்—தோழியரும் சிலதியரும் உள்ளிட்ட குழு.

91–100 யாண்டு பல புக்க-பலஆண்டுகள் கழிந்த; புக்க என்பது மங்கல வழக்கு. காண் தகு நல்வினை – செய்தற்குரிய அறவினை; மாபெரு நல்வினை. "காண்டகு" என்னும் அடை பெருமை யுணர நின்றது. தொலைவு–ஆற்றலழிவு. (சொல்வன்மை குன்றுமை பற்றி நாத் தொலைவில்லை என்றாள்.)

101-104 செய்தவயாக்கை-நற்றவத்தின் பயனுகக் கிட்டிய உடம்பினை. (தவம்புரிதற்குக் கிடைத்த இவ்வுடல் தவப்பயனுய்க் கிட்டிய தென்றவாறு; "தவமும் தவமுடையார்க்காகும்" முப்பால்.) வீழ்கதிர் – அடங்கும் பரிதியை. பிறந்தார் மூத்தார் பிணி நோயுற்ருர் இறந்தார் என்கை இயல்பே என்றது, பிறந் தோர்க்கு மூப்பும், மூத்தோர்க்குப் பிணி நோய்களும், நோயுற் ருேர்க்கு இறப்பும் தோன்றுதல் முக்காலத்தும் மாருத நிலை மையாம் என்றவாறு; எனவே நிலையாமை கூறிய வாரும்.

பேதைமை, செய்கை, உணர்வே, அருஉரு,
வாயில், ஊறே, நுகர்வே, வேட்கை,
பற்றே, பவமே, தோற்றம், வினைப் பயன்—
இற்று என வகுத்த இயல்பு ஈர்-ஆறும்
பிறந்தோர் அறியின், பெரும் பேறு அறிகுவர்;
அறியார்ஆயின், ஆழ் நரகு அறிகுவர்;
"பேதைமை என்பது யாது?" என வினவின்,
ஓதிய இவற்றை உணராது மயங்கி,
இயற்படு பொருளால் கண்டது மறந்து,
முயற்கோடு உண்டு எனக் கேட்டது தெளிதல்:
உலகம் மூன்றினும், உயிர் ஆம் உலகம்
அலகு இல; பல் உயிர் அறு-வகைத்து ஆகும்—
மக்களும், தேவரும், பிரமரும், நரகரும்,
தொக்க விலங்கும், பேயும், என்றே:
நல்வினை, தீவினை, என்று இருவகையான்,
சொல்லப்பட்ட கருவினுள் தோற்றி,
வினைப் பயன் விளையும்காலை, உயிர்கட்கு
மனப் பேர் இன்பமும் கவலையும் காட்டும்:
"தீவினை என்பது யாது?" என வினவின்,
ஆய் தொடி நல்லாய்! ஆங்கு-அது கேளாய்:
கொலையே, களவே, காமத் தீவிழைவு,

105-110 பேதைமை முதலாக வினைப்பயன் ஈறாகக் கூறப்பட்ட பன்னிரண்டும் பௌத்த நூலுள் துவாதசநிதானம் எனப்படும். (துவாதசநிதானங்கள் – பிறவிக்குரிய பன்னிரண்டு காரணங்கள்.) இற்று என வகுத்த இயல்பு ஈராறும் - இத்தன்மையது என்று இலக்கணம் கூறப்பட்டுள்ள பன்னிரு நிதானங்களையும். (இற்று என இயல்பு வகுத்த ஈராறும் என்க.) பெரும்பேறு அறிகுவர் - பெரிய ஊதியத்தினைக் காண்பர் - பிறவியற்ற நிலையை எய்துவர். நரகு அறிகுவர் - நரகத்தைக் காண்பர் - நரகத்தை எய்துவர்.

111-120 இயற்படு பொருளால் - தம் இயல்பொடு பொருந்திய பொருள்களில். கண்டதை - அறியப்படும் உண்மையை. மறந்து - தெளியாமல். கேட்டது - கேட்டுள்ள (பொருந்தாத) மொழியினை. தெளிதல் - துணிந்து கொள்ளுதல். (முயற்கோடு உண்டு எனக் கேட்டது என்றது, பொருந்தாக் கூற்றுக்கெல்லாம் உபலக்கணம்). உயிராம் உலகம்- (உடல்எய்திய) உயிரினங்கள். இருவகையான்-இருதிறத்திறைல்-இருவகைக் காரணங்களால். சொல்லப்பட்ட (அறுவகையாகக்) கூறப்பட்டுள்ள. தோற்றி-(உயிர்கள்) தோன்ற: எச்சத்திரிபு; 'தோற்றி' தன் வினையாய் நின்றது.

121-125 விளையும் காலே—பயன்தர நிற்கும் ஞான்று. காட்டும்—செய்யும் (உயிர் இருவகையான் கருவினுள் தோற்ற வினைப்பயன் காட்டும் என்க.) காமத்தீவிழைவு - காமத்தால் உளதாகும். தீய புணர்ச்சி ஆகுபெயர்.

164

உலையா உடம்பில்
தோன்றுவ மூன்றும்;

பொய்யே, குறளை, கடுஞ் சொல், பயன் இல்
சொல், எனச் சொல்லில் தோன்றுவ நான்கும்;
வெஃகல், வெகுளல்,
பொல்லாக் காட்சி, என்று,

உள்ளம்-தன்னின்
உருப்பன மூன்றும்—எனப்
பத்து வகையால். பயன்
தெரி புலவர்

இத் திறம் படரார்: படர்குவர்ஆயின்,
விலங்கும், பேயும், நரகரும், ஆகி;
கலங்கிய உள்ளக்
கவலையில் தோன்றுவர்.
"நல்வினை என்பது யாது?" என வினவின்,
சொல்லிய பத்தின் தொகுதியின் நீங்கி,
சீலம் தாங்கி, தானம்
தலைநின்று,
மேல் என வகுத்த ஒரு மூன்று திறத்து,
தேவரும், மக்களும், பிரமரும், ஆகி;
மேவிய மகிழ்ச்சி வினைப் பயன் உண்குவர்,
அரைசன் தேவியொடு, ஆய் இழை நல்லீர்!

புரை தீர் நல் அறம்
போற்றிக் கேண்மின்;
மறு பிறப்பு உணர்ந்த
மணிமேகலை! நீ
பிற அறம் கேட்ட பின்
நாள் வந்து, உனக்கு
இத் திறம் பலவும்,
இவற்றின் பகுதியும்,
முத்து ஏர் நகையாய்!
முன்னுறக் கூறுவல்'
என்று அவன்
எழுதலும்—இளங்கொடி
எழுந்து,

நன்று அறி மாதவன் நல் அடி வணங்கி,
'தேவியும், ஆயமும், சித்திராபதியும்,

மாதவர் நல்-மொழி மறவாது உய்ம்மின்;

126–130 உலையா - தளராத. தோன்றுவ - பிறப்பனவாக. பாவங்கள். குறளை-புறங்கூறுதல்; கோட்சொல்லுதலும் ஆம் வெஃகல் - பிறர் பொருளைப் பெற விரும்புதல். பொல்லா காட்சி - தீயன கருதுதல். உருப்பன - உருப்பெறுவன - தோ றுவன.

131-140 பத்து வகையால் - பத்து வகையாம்; 'ஆல்' அசை. பயன் தத்துவப் பொருள். திறம் - நெறியில். படரார் - செல்லா கவலையில் - கவலை தரும் பிறவியில்; ஆகுபெயர். சீலம் - பஞ் சீலம்; தவ ஒழுக்கமும் ஆம். தானம் - ஈகையின்கண். திறத்த தன்மையை உடைய. மேவிய - பொருந்திய.

141-150 புரை - குற்றம். போற்றி - பேணி - சோர்வின்றி. பிற அறம் பிற சமய நெறிகளை. முன்னுற - நீ குறிக்கொள்ளும் வண்ண முதன்மையாக எனினும் ஆம்.

இந் நகர் மருங்கின் யான் உறைவேன்ஆயின்,
"மன்னவன் மகற்கு இவள் வரும் கூற்று" என்குவர்;
ஆபுத்திரன்-நாடு அடைந்து, அதன் பின் நாள்
மாசு இல் மணிபல்லவம் தொழுது ஏத்தி,
வஞ்சியுள் புக்கு, மா பத்தினி-தனக்கு
எஞ்சா நல் அறம் யாங்கணும் செய்குவல்;
"எனக்கு இடர் உண்டு" என்று, இரங்கல் வேண்டா;
மனக்கு இனியீர்!' என்று அவரையும் வணங்கி—
வெந்துறு பொன் போல் வீழ் கதிர் மறைந்த
அந்தி மாலை, ஆய்-இழை போகி,
உலக அறவியும், முதியாள் குடிகையும்,
இலகு ஒளிக் கந்தமும், ஏத்தி; வலம் கொண்டு—
அந்தரம் ஆருப் பறந்து சென்று, ஆய்-இழை
இந்திரன் மருமான் இரும் பதிப் புறத்து, ஓர்
பூம்பொழில் அகவயின் இழிந்து, பொறையுயிர்த்து—
ஆங்கு வாழ் மாதவன் அடி இணை வணங்கி,
'இந் நகர்ப் பேர் யாது? இந் நகர் ஆளும்
மன்னவன் யார்?' என—மாதவன் கூறும்:
நாகபுரம் இது; நல் நகர் ஆள்வோன்
பூமிசந்திரன் மகன் புண்ணியராசன்;
ஈங்கு, இவன் பிறந்த அந் நாள் தொட்டும்,
ஓங்கு உயர் வானத்துப் பெயல் பிழைப்பு அறியாது;
மண்ணும், மரனும், வளம் பல தரூஉம்;
உள் நின்று உருக்கும் நோய் உயிர்க்கு இல்' என,
தகை மலர்த் தாரோன்-தன் திறம் கூறினன்—

அகை மலர்ப் பூம்பொழில், அருந் தவன் ...

151-160 வஞ்சியுள் - சேரர் மூதூரின் கண். மாபத்தினி தனக்கு - கண்ணகிக்கு உரிமையாக்கி. எஞ்சா - குறைவற்ற. நல்லறம் - உணவளித்தலாகிய அறத்தினை. யாங்கணும் - வஞ்சியில் எல்லாவிடத்திலும்.

161-170 அந்தரம் ஆறு ஆ - ஆகாயம் நெறியாக. இந்திரன் மருமான் - இந்திரனது மரபில் தோன்றியவன் - புண்ணியராசன். அக வயின் - உள்ளிடத்தில். பொறை உயிர்த்து - மூச்சுவிட்டுக் கொண்டு - களைப்பாறி. மாதவன் - தரும சாவகன் - தருமோப தேசம் செய்யும் முனிவன்

171-176 தொட்டு - தொடங்கி. வானத்துப் பெயல் - மேகத்தினது பெய்தற்றொழில். பிழைப்பு - தவறுதல். உள் நின்று உருக்கும் - உடம்பினுள் நீங்காமல் இருந்துகொண்டு மெலிவிக்கின்ற. தகை - பெருமையை உடைய. தாரோன் - புண்ணியராசன். திறம் - தன்மையை. நகை - மலர்ச்சி; ஒளியும் ஆம்.

25. ஆபுத்திரனோடு மணிபல்லவம் அடைந்த காதை

புண்ணியராசன் நல்லறம் கேட்கக் கருதித் தன் தேவியுட
அப்பொழிலை எய்தித் தருமசாவகமுனிவனை வணங்கினன். ச
முனிவன் அற உபதேசம் செய்தபின் அம்மன்னன், அருகி
பாத்திரமேந்திய கையளாய் இருந்த மணிமேகலையை அ
விரும்பி வினவினன். மணிமேகலை "மன்ன! நின்கையில் மு
பிறப்பில் இருந்த இப்பாத்திரம் என் கையில் எய்தியுள்ளது. மு
பிறப்பினை அறிந்திலை எனினும் ஆவயிற்றுதித்த இப்பிறப்பினை
நீ அறிந்திலை. மணிபல்லவத்தை எய்திப் புத்தபீடிகை
வணங்கி நீ நின் பண்டைப் பிறவியை அறிகுதி. மணிபல்லவ
திற்கு வருக" என்று கூறி மணிபல்லவத்திற்குத் தா
சென்றனள். அரசன் தன் தாயை வினவித் தான் ஆவயிற்றுதித்
செய்தி யறிந்து, தன் துறவுள்ளத்தினை அமைச்சர்க்கறிவித்த
னுகச் சனமித்திரன் என்னும் அமைச்சன் "அரசே! பல்லாண்
களாக வற்கடமுற்றிருந்த இந்நாடு நீ பிறந்தநாள் தொடங்கி
பல்வளம் சிறந்துள்ளது. நீ பிரியின் மன்னுயிர் யாவும் துன்புறு
மன்னுயிர் துன்புறுமாறு துறந்து தன் நலம் பேணல் செங்கோ
வேந்தனுய உனக்கு அடுப்பதன்று" என்று வணங்கித் தை
தனன். அரசன், "யான் ஒரு திங்கள் எல்லையில் மணிபல்லவ
கண்டு மீள்வேன், அது காறும் நாட்டினைக்காத்தல் நின் கடன்'
என்று அவ்வமைச்சற்குக் கூறி ஆற்றுவித்து வங்கம் ஏறி மா
பல்லவமெய்தினன். அரசன் கலம் வந்துற்றமையறிந்த மணிமேக

உவப்புடன் அரசனை அழைத்துச் சென்று

வலம்புரிவித்துப் புத்தபீடிகையை வணங்குவித்தனள். புத்தபீடிகை அரசற்குப் பழம்பிறப்பின் நிகழ்ச்சிகளைத் தெள்ளிதில் விளக்கிற்றாக, அவன் அமுத சுரபியைத் தனக்களித்த சிந்தா தேவியைத் துதித்தான். பின் அருகிலுள்ள ஓர் புன்னை மரத்தின் அடியில் இருவரும் அமர்ந்தனர். அவரெதிரே தீவ திலகை தோன்றி "ஆபுத்திரனாகிய அவன் அங்கு இறந்த பின் அவனைத் தேடிவந்து அங்கு உயிர் துறந்த வணிகர் ஒன்பதின்மர் உடலென்புகளையும், அவனது உடல் மணலால் மூடப்பெற்றுள்ள இடத்தினையும் அவனுக்குக் காட்டிற்று. பின் மணிமேகலையை நோக்கி, "நாககன்னியாகிய பீலிவளை என்பாள் கிள்ளிக்கு ஈன்ற தன் மகனுடன் வந்து இப் பீடிகையை வணங்கும்போது, கம்பளச் செட்டியின் கலம் வந்து இங்கு நின்றது. அவள் அம் மகனைச்

கிள்ளியிடம் சேர்க்குமாறு கூறி அச் செட்டியோடு அனுப்பினள். மரக்கலம் கரையணுகுதற்குள் கேடுற்றது. அம் மகனை இழந்த செட்டி அத்திறம் கூறக் கிள்ளி வருந்திக் கடற்கரையில் தேடி அலைந்த நிலையில், இந்திரவிழாக் கொண்டாடப்படவில்லை. ஆதலால் மணிமேகலா தெய்வத்தின் சாபத்தாலும் இந்திரன் கோபத்தாலும் கடல் எழுந்து காவிரிப்பூம்பட்டினத்தைக் கவர்ந்தது. அரசன் வேற்றிடம் சென்றனன். நின் தாயரும் அறவணரும் வஞ்சியை எய்தினர்" என்று கூறிச்சென்றனள். புண்ணியராசன் மணலைத் தோண்டித் தன் உடலென்பு கட்டுக்குலையாமல் இருத்தலைக் கண்டு மனம் கலங்கினான். அந்நிலையில், மணிமேகலை பிறப்பற முயலும் அறநெறியில் ஊன்றுதலன்றிக் கழிந்த யாக்கைக்கு இரங்குதல் தகாதெனத் தெருட்டி அவனை வங்கத்தில்

அனுப்பித் தான் வானூடெழுந்து சென்றனள்.

அரசன் உரிமையோடு அப் பொழில் புகுந்து,

<u>தருமசாவகன்</u>-தன் அடி வணங்கி,
அறனும், மறனும், அநித்தமும், நித்தத்
திறனும், துக்கமும், செல் உயிர்ப் புக்கிலும்,
சார்பின் தோற்றமும், சார்பு அறுத்து உய்தியும்,
ஆரியன் அமைதியும், அமைவுறக் கேட்டு—
'பெண் இணை இல்லாப் பெரு வனப்பு உற்றாள்
கண் இணை இயக்கமும் காமனோடு இயங்கா,
அங்கையில் பாத்திரம் கொண்டு அறம் கேட்கும்
இங்கு இணை இல்லாள் இவள் யார்?' என்ன—

1–10 அரசன் - புண்ணியராசன் உரிமை - மனைவி. அநித்தம் - நிலை யாத பொருள். நித்தத்திறன் - நிலைத்த பொருள் இயல்பு. செல்லுயிர்ப் புக்கில் - இறக்கும் உயிர் புகும் இடம். சார்பின் தோற்றம் - பன்னிரண்டு நிதானங்களால் உளதாகும் பிறப்பு; அன்றி, பிறப்பின் சார்பான பன்னிரண்டு நிதானங்களும் ஆம். இப்பொருட்கு முன்பின்னாகத் தொக்க தொகையாகக் கொள்ளப்படும். உய்தி - உய்தல் - வீடு பேறு. ஆரியன் - ஆசிரிய னது. அமைதி - இலக்கணம். அமைவுற - நிரம்ப - குறைவற. உற்றாள் - மணிமேகலையது. காமனோடு - காமனது பணி யோடு கூடி.

காவலன்-தொழுது கஞ்சுகன் உரைப்போன்,
'நாவல்-அம் தீவில் இந் தங்கையை ஒப்பார்
யாவரும் இல்லை; இவள் திறம் எல்லாம்—
கிள்ளிவளவனொடு கெழுதகை வேண்டிக்
கள் அவிழ் தாரோய்! கலத்தொடும் போகி,
காவிரிப் படப்பை நல் நகர் புக்கேன்;
மாதவன் அறவணன் இவள் பிறப்பு உணர்ந்தாங்கு,
ஓதினன் என்று—யான் அன்றே உரைத்தேன்;
ஆங்கு-அவள் இவள்; அவ் அகல் நகர் நீங்கி,
ஈங்கு வந்தனள்' என்றலும்—இளங்கொடி,
'நின் கைப் பாத்திரம் என் கைப் புகுந்தது;
மன் பெருஞ் செல்வத்து மயங்கினை, அறியாய்;
அப் பிறப்பு அறிந்திலைஆயினும், ஆ வயிற்று
இப் பிறப்பு அறிந்திலை; என் செய்தனையோ?
மணிப்பல்லவம் வலம் கொண்டால் அல்லது,
பிணிப்புறு பிறவியின் பெற்றியை அறியாய்;
ஆங்கு வருவாய், அரச! நீ' என்று அப்
பூங் கமழ் தாரோன்முன்னர்ப் புகன்று—
மை அறு விசும்பின்
மடக்கொடி எழுந்து,

வெய்யவன் குடபால் வீழாமுன்னர்,
வான் நின்று இழிந்து, மறி திரை உலாவும்
பூ நாறு அடைகரை எங்கணும் போகி,
மணிப்பல்லவம் வலம் கொண்டு—மடக்கொடி
பிணிப்பு அறு மாதவன் பீடிகை காண்டலும்,
தொழுது வலம் கொள்ள, அத் தூ மணிப்பீடிகைப்

....

11-20 கஞ்சுகன் - பிரதானி: கஞ்சுகம் அணிதலால் கஞ்சுகன் எனப்

படுவான்; கஞ்சுகம் - சட்டை. கெழுதகை - உரிமை கொள்ளும் நட்பு - மிக்க நட்பு. படப்பை - தோட்டம். படப்பையை உடைய காவிரி நன்னகர் என்க. காவிரி நன்னகர் - காவிரியால் பெயர் பெற்ற பேரூர் - காவிரிப்பூம்பட்டினம்.

21-30 மன்பெரும் செல்வம் - மிகப் பெரிய செல்வம். அப்பிறப்பு - பழம் பிறப்பு. பிணிப்பு உறும் - இருவினைக் கட்டினைப் பொருந்தும்; பற்றினால் எய்துகின்ற எனினும் ஆம். பெற்றி - தன்மை. பூங்கமழ்தாரோன் - மலர்களால் சமைந்த மணக்கும் மாலையையுடையோன் - புண்ணிய ராசன்; பூ - அழகும் ஆம். வெய்யவன் . சூரியன். சூடபால்

- மேற்குத்திசையில்

31-35

மறிதிரை - மடங்கும் அலைகள். அடைகரை எங்கணும் - கரையிடம் எங்கும். பிணிப்பு அறும் மாதவன் - வினைப்பிணிப்பு அற்ற புத்தனது. தூமணி - தூயபளிங்குமணியால் அமைந்த.

பழுது இல் காட்சி தன் பிறப்பு உணர்த்த—
'காயங்கரை எனும் பேர் யாற்று அடைகரை,
மாயம் இல் மாதவன்-தன் அடி பணிந்து,
தருமம் கேட்டு, தாள் தொழுது ஏத்தி,
பெருமகன்-தன்னொடும் பெயர்வோர்க்கு எல்லாம்,
"விலங்கும், நரகரும், பேய்களும், ஆக்கும்
கலங்கு அஞர்த் தீவினை கடிமின்; கடிந்தால்,
தேவரும், மக்களும், பிரமரும், ஆகுதிர்;
ஆகலின், நல்வினை அயராது ஓம்புமின்;
புலவன், முழுதும் பொய் இன்று உணர்ந்தோன்,
உலகு உயக் கோடற்கு, ஒருவன் தோன்றும்;
அந் நாள், அவன் அறம் கேட்டோர் அல்லது,
இன்னாப் பிறவி இழுக்குநர் இல்லை;
மாற்று-அருங் கூற்றம் வருவதன் முன்னம்,
போற்றுமின் அறம்" எனச் சாற்றிக் காட்டி,
நாக் கடிப்பு ஆக, வாய்ப் பறை அறைந்தீர்;
அவ் உரை கேட்டு,
நும் அடி தொழுது ஏத்த,
வெவ் உரை எங்கட்கு விளம்பினிர் ஆதலின்,
"பெரியவன் தோன்றுமுன்னர் இப் பீடிகை,
கரியவன் இட்ட

காரணம்-தானும்,

....

36-40 பழுதுஇல் பீடிகைக் காட்சி - குற்றம் இல்லையாதற்குக் காரணமாகிய பீடிகையைக் காண்டல். மாயம் இல் மாதவன் தன் - மயக்கமற்ற பிரம தருமனது. (மாதவன் என்னும் ஆண்பாற் பெயரும் மேல், அறைந்தீர் என்னும் முன்னிலைப் பன்மைவினையும் வழுவமைதியாய் நின்றன). பெருமகன் - அரசன் - அத்திபதி. பெயர்வோர்க்கு - நாடு பெயர்ந்து செல்வோர்க்கு.

41-50

கலங்கஞர் - அஞ்சுதற்குரிய துன்பத்துக்குக்காரணமாக உள்ள. அயராது ஓம்புமின் - சோர்வின்றிப் பேணிச்செய்மின். புலவன் - (உயிர்நிலை பற்றிய) மெய்யறிவுடையோன். (மேல் " முழுவதும் பொய்யின் றுணர்ந்தோன்" என்றலின் ஈண்டு "உயிர்நிலை பற்றிய" என்பது பெய்துரைக்கப்பாற்று.) பொய் இன்றி - திரிவில்லாமல். உலகு - உலகத்துயிர்களை. உயக் கோடற்கு - உய்விக்க. உயக்கோடற்கு என்பது ஒரு சொல் நீர்மைத்து. அவன் அறம் - அவனால் கூறப்படும் அறத்தினை. இன்னாப் பிறவி இழுக்குநர் இல்லை - துன்பமாய பிறவியின் உய்வோர் இல்லை. (இழுக்குதல் - தப்புதல் - உய்தல்.) மாற்றருங் கூற்றம் - தடுத்தற்கரிய கூற்றுவன். சாற்றிக்காட்டி - சொல்லிக்காட்டி - விளக்கிக்கூறி.

51-55 கடிப்பு - குணில் - பறையை அடிக்கும் கருவி. (வாய் ஆகிய பறையை நாவாகிய கடிப்பால் அறைந்தீர்.) வெவ்வுரை - சூடாய மொழியை. பெரியவன் - புத்தன். கரியவன் - இந்திரன்.

மன் பெரும் பீடிகை மாய்ந்து உயிர் நீங்கிய
என் பிறப்பு உணர்த்தலும், என்?" என்று யான் தொழ—
"முற்ற உணர்ந்த முதல்வனை அல்லது
மற்று அப் பீடிகை தன்மிசைப் பொறாஅது;
பீடிகை பொறுத்த பின்னர் அல்லது,
வானவன் வணங்கான்; மற்று அவ் வானவன்
பெருமகற்கு அமைத்து, 'பிறந்தார் பிறவியைத்
தரும பீடிகை சாற்றுக' என்றே
அருளினன் ஆதலின், ஆய்-இழை பிறவியும்
இருள் அறக் காட்டும்" என்று எடுத்து உரைத்தது
அன்றே போன்றது, அருந் தவர் வாய்மொழி,
இன்று, எனக்கு' என்றே ஏத்தி, வலம் கொண்டு,
ஈங்கு, இவள் இன்னணம் ஆக—இறைவனும்,
ஆங்கு அப் பொழில் விட்டு, அகநகர் புக்கு,
தந்தை முனியா, தாய் பசு ஆக,
வந்த பிறவியும்; மா முனி அருளால்
குடர்த் தொடர் மாலை சூழாது, ஆங்கு, ஓர்
அடர்ப் பொன் முட்டையுள் அடங்கிய வண்ணமும்;
மா முனி அருளால் மக்களை இல்லோன்
பூமிசந்திரன் கொடுபோந்த வண்ணமும்—
ஆய் தொடி அரிவை, அமரசுந்தரி எனும்
தாய் வாய்க் கேட்டு, தாழ் துயர் எய்தி,
இறந்த பிறவியின் யாய் செய்ததூஉம்,
பிறந்த பிறவியின் பெற்றியும், நினைந்து;
'செரு வேல் மன்னர் செவ்வி பார்த்து உணங்க

56-60 இட்ட - இயற்றிவைத்த. பொரூஅது - (தன்மிசை அமரத்) தாங்காது.

61-70 வானவன் - இந்திரன். பெருமகற்கு - புத்தனுக்கு. தரும பீடிகை - (புத்தன் அமர்ந்து) தருமம் சாற்றுதற்கு இடமாய பீடிகை. ஆயிழை பிறவி - நினது பிறவி; இடவழுவமைதி. இருள் - அறியாமை. அருந்தவர் - உமது : இடவழுவமைதி. வாய்மொழி - உண்மைமொழி. (எனக்கு இன்று, அருந்தவர் வாய்மொழி எடுத்துரைத்த அன்றே போன்றது என்க. இந் நாள் வாய்மொழி கூறிய அந் நாள் போலத் தோன்றுகின்றது என்றவாறு. இன்று அச் செய்திகள் இவளுக்குக் காட்சிப் பட்டமையால், இந் நாள் அந் நாளே போன்றது என்றாள்.) இன்னணம் - இவ் வண்ணம். தந்தை முனியா - மண்முக முனிவன் தந்தையாக - மண்முகன் அவளை எய்தியமையால் தந்தை எனப்பட்டான்,

71-80 குடர்த் தொடர்மாலை சூடாது - கருப்பையாகிய மாலையைச் சூடாமல். அடர்ப்பொன் முட்டையுள் - பொன் தகட்டாலாய முட்டையுள். அடங்கிய - இருந்த. கொடுபோந்த-பெற்றுக் கொண்டு வந்த. தாழ்துயர் - ஆழ்தற்குரிய துன்பம். இறந்த-கழிந்த. யாய் - தாய் - சாலி. பெற்றி - தன்மை. செவ்வி - காண்டற்குரிய காலம். உணங்க - வாடி நிற்க.

அரைசு வீற்றிருந்து, புரையோர்ப் பேணி,
நாடகம் கண்டு, பாடல் பான்மையின்
கேள்வி இன் இசை கேட்டு, தேவியர்
ஊடல் செவ்வி பார்த்து, நீடாது,
பாடகத் தாமரைச் சீறடி பணிந்து,
தே மரு கொங்கையில் குங்குமம் எழுதி,
அம் கையில் துறு மலர் சுரி குழல் சூட்டி,
நறு முகை அமிழ்து உறூஉம் திரு நகை அருந்தி,
மதி முகக் கருங் கண் செங் கடை கலக்க,
கருப்பு வில்லி அருப்புக் கணை தூவ,
தருக்கிய காமக் கள்ளாட்டு இகழ்ந்து,
தூ அறத் துறத்தல் நன்று' எனச் சாற்றி,
'தெளிந்த நாதன் என் செவிமுதல் இட்ட வித்து,
ஏதம் இன்றாய், இன்று விளைந்தது,
மணிமேகலை-தான் காரணம் ஆக' என்று
அணி மணி நீள் முடி அரசன் கூற—
'மனம் வேறு ஆயினன் மன்' என, மந்திரி
சனமித்திரன் அவன் தாள் தொழுது ஏத்தி,
'எம் கோ, வாழி! என் சொல் கேண்மதி;
நும் கோன் உன்னைப் பெறுவதன் முன் நாள்,
பன்னீராண்டு இப் பதி கெழு நல் நாடு,
மன் உயிர் மடிய, மழை வளம் கரந்து, ஈங்கு,
ஈன்றாள் குழவிக்கு இரங்காள் ஆகி,
தான் தனி தின்னும் தகைமையது ஆயது;
காய் வெங் கோடையில் கார் தோன்றியதென,

81–90 புரையோர் - பெரியோரை. ஊடற் செவ்வி பார்த்து - புலவி தீர்ந்து கூடுதற்குரிய குறிப்பினை நோக்கிக்கொண்டு நீடாது - காலம் நீட்டியாமல். பாடகம் - காலணி. தேமரு - இடம் பட்ட. அங்கையின் - அகங்கையால். துறு - செறிந்த. சுரிகுழல் - சுருண்ட கூந்தலில். நறுமுகை - நறுமணம் பொருந்திய முல்லையரும்பு போன்ற. அமிழ்து - எயிற்றில் ஊறிய நீர். திருநகை - அழகிய பற்களை; என்றது புன்முறு

வலை, அருந்தி - கண்டு நுகர்ந்து. செங்கடை - சிவந்த கடைக் கண் பார்வை.
கருப்புவில்லி - மாரன்.
அருப்புக்கணை - மொட்டாகிய அம்புகளை.

91–100 தருக்கிய - (காமம் நுகரப் பெற்றேம் என்று) செருக்குதற் குரிய. காமக் கள்ளாட்டு - காமமாகிய கள்ளை அருந்திக் களித்து ஆடுதலை. (நாடகங்கண்டு என்பது தொடங்கித் தருக்கிய என் பது காறும் காமக் கள்ளாட்டயருமாறு கூறப்பட்டது.) தூ அற - பற்று அறுமாறு துறத்தல் - நீங்குதல், தெளிந்த நாதன் - புத்தன். செவிமுதல் - காதிடத்தில். விதை - அறவுரையாகிய விதை. ஏதம் - தீங்கு. சனமித்திரன் - பெயர். கேண்மதி- மதி - அசை நிலை.

101-105 நும்கோன்-நும்தந்தை - பூமிசந்திரன். பதிகெழு - நல்லூர்களை உடைய. தகைமையது - தன்மையது. காய் - சுடுகின்ற. வெங்கோடை - கடிய கோடைக்காலத்தில்.

172

நீ தோன்றினையே,

நிரைத் தார் அண்ணல்!

தோன்றிய பின்னர்,
தோன்றிய உயிர்கட்கு
வானம் பொய்யாது; மண்
வளம் பிழையாது;
ஊன் உடை உயிர்கள்
உறு பசி அறியா;
நீ ஒழிகாலை, நின் நாடு
எல்லாம்,
தாய் ஒழி குழவி போலக்
கூஉம்;
துயர் நிலை உலகம்
காத்தல் இன்றி, நீ
உயர் நிலை உலகம்

வேட்டனை ஆயின்,

இறுதி உயிர்கள்
எய்தவும், இறைவ!

பெறுதி விரும்பினை
ஆகுவை அன்றே?

தன் உயிர்க்கு இரங்கான்,
பிற உயிர் ஓம்பும்
மன் உயிர் முதல்வன் அறமும் ஈது அன்றால்;
மதி மாறு ஓர்ந்தனை, மன்னவ!' என்றே

முதுமொழி
கூற—முதல்வன் கேட்டு,
'மணிபல்லவம் வலம்
கொள்வதற்கு எழுந்த

தணியா வேட்கை
தணித்தற்கு அரிதால்;
அரசும், உரிமையும்,
அகநகர்ச் சுற்றமும்,
ஒரு மதி எல்லை காத்தல்
நின் கடன்' என,
'கலம் செய் கம்மியர்
வருக' எனக் கூஉய்,
இலங்கு நீர்ப் புணரி எறி
கரை எய்தி,

வங்கம் ஏறினன்; மணிபல்லவத்திடை,

தங்காது அக் கலம் சென்று, சார்ந்து இறுத்தலும்—
புரை தீர் காட்சிப் பூங்கொடி பொருந்தி,
அரைசன் கலம் என்று, அகம் மகிழ்வு எய்தி,
காவலன்-தன்னெடும்
கடல் திரை உலாவும்

106–110 அண்ணல்! - பெரியோய்! பொய்யாது - தப்பாமல். யாது - தப்பாமல். உறுபசி - வறுமையை.

பிழை

111–120 கூஉம் - கூப்பாடு இடும் - வருந்தி அழும். துயர்கிலே - துயரின்கண் நிற்றலே உடைய. வேட்டனே - விரும்பினுய். இறுதி - அழிவை. (உயிர்கள் இறுதி எய்தவும் என்க.) பெறுதி - நற்பேற்றினே. இரங்கான் - வருந்தாமல். ஓம்பும் - காத்தற்குரிய. முதீல்வன் - அரசனுக்குரிய. மதிமாறு ஓர்ந்தனே - அறிவுடைமைக்கு மாருக எண்ணினே. முதுமொழி - நல்லுரை- உறுதிச்சொல். முதல்வன் - புண்ணியராசன்.

121–130 மதி எல்லே - மாதம்முடிய. கலம் செய் கம்மியர் - கப்பல் இயக்கும் வினேஞரை. கூஉய் - அழைத்து. புணரி - கடலின். இறுத்தலும் - தங்கியவுடன். புரை தீர்காட்சிப் பூங்கொடி - குற்றம் நீங்கிய அறிவினே உடைய மணிமேகலே. என்று-என அறிந்து.

தே மலர்ச் சோலைத் தீவகம் வலம் செய்து;
'பெருமகன்! காணாய், பிறப்பு உணர்விக்கும்
தரும பீடிகை-இது' எனக் காட்ட—
வலம் கொண்டு ஏத்தினன், மன்னவன்; மன்னவற்கு
உலந்த பிறவியை உயர் மணிப் பீடிகை,
கைஅகத்து எடுத்துக் காண்போர் முகத்தை
மை அறு மண்டிலம் போல, காட்ட,
'என் பிறப்பு அறிந்தேன்; என் இடர் தீர்ந்தேன்;
தென் தமிழ் மதுரைச் செழுங் கலைப் பாவாய்!
மாரி நடு நாள் வயிறு காய் பசியால்
ஆர் இருள் அஞ்சாது, அம்பலம் அணைந்து-ஆங்கு,
இரந்தூண் வாழ்க்கை என்பால் வந்தோர்க்கு
அருந்து ஊண் காணாது அழுங்குவேன் கையில்,
"நாடு வறம் கூரினும், இவ் ஓடு வறம் கூராது;
ஏடா! அழியல்; எழுந்து இது கொள்க" என,
அமுதசுரபி அங்கையில் தந்து, என்
பவம் அறுவித்த வானோர்
பாவாய்!
உணர்வில் தோன்றி, உரைப் பொருள் உணர்த்தும்,
மணி திகழ் அவிர் ஒளி மடந்தை! நின் அடி—

தேவர் ஆயினும், பிரமர் ஆயினும்,
நா மாசு கழூஉம் நலம் கிளர் திருந்து அடி—

பிறந்த பிறவிகள்
பேணுதல் அல்லது,
மறந்து வாழேன்
மடந்தை!' என்று ஏத்தி,
மன்னவன்
மணிமேகலையுடன் எழுந்து,
தென் மேற்காகச் சென்று,
திரை உலாம்

131–140 தேமலர் - தேனை உடைய

மலர். தீவகம் - தீவின் இடத்தை.
பெருமகன்! -
அண்மைவிளி. உலந்த பிறவி - கழிந்த பிறப்பின்
நிகழ்ச்சியை. மையறு
மண்டிலம் - மாசற்ற கண்ணாடி.

செழுங்கலைப்பாவாய்!-சிந்தாதேவி!.
உடைய நள்ளிரவினில்.
மாரி நடுநாள்-மழையினை

141–150 இரந்தூண் வாழ்க்கை-பிச்சை உணவால் வாழும் வாழ்க்கையை உடைய. காணாது - இல்லாமையால். அழுங்குவேன் - மனந் தளரும் எனது. ஏடா - முன்னிலையாக்கும் பெயர். அழியல் - வருந்தற்க. பவம் அறுவித்த - பிறப்பினை அறச்செய்த - வீடு பேறடைய வழி செய்த. (அறத்தினில் ஊன்றி நின்று உயர் கதி பெற்றுப் பின் வீடுபெறச் செய்ததைக் கருதிப் "பவமறுவித்த" என்றாள்) உணர்வில் – அறிவில். உரைப்பொருள் - சொற்பொருள்களை. மணி - பளிங்கு.

151–155

நா மாசு - சொற்குற்றத்தினை. கழூஉம் - நீக்கும். பிறந்த பிறவிகள் - பிறக்கும் பிறவிகளில். எழுந்து - புறப்பட்டு.

கோமுகி என்னும் பொய்கையின் கரை, ஓர்
தூ மலர்ப் புன்னைத் துறை நிழல், இருப்ப—
ஆபுத்திரனோடு ஆய்-இழை இருந்தது
காவல் தெய்வதம் கண்டு, உவந்து எய்தி,
'அருந்து உயிர் மருந்து முன் அங்கையில் கொண்டு
பெருந் துயர் தீர்த்த அப் பெரியோய்! வந்தனை;
அந் நாள் நின்னை அயர்த்துப் போயினர்
பின் நாள் வந்து, நின் பெற்றிமை நோக்கி,
நின் குறி இருந்து, தம் உயிர் நீத்தோர்
ஒன்பது செட்டிகள் உடல் என்பு இவை காண்;
ஆங்கு-அவர் இட உண்டு, அவருடன் வந்தோர்,
ஏங்கி மெய் வைத்தோர், என்பும் இவை காண்;
ஊர் திரை தொகுத்த உயர் மணல் புதைப்ப,
ஆய் மலர்ப் புன்னை அணி நிழல் கீழால்,
அன்பு உடை ஆர் உயிர் அரசற்கு அருளிய
என்பு உடை யாக்கை இருந்தது காணாய்;
நின் உயிர் கொன்றாய்; நின் உயிர்க்கு இரங்கிப்
பின் நாள் வந்த பிறர் உயிர் கொன்றாய்;
கொலைவன் அல்லையோ? கொற்றவன் ஆயினை!
பலர் தொழு பாத்திரம் கையின் ஏந்திய
மடவரல் நல்லாய்! நின்-தன் மா நகர்
கடல் வயிறு புக்கது; காரணம் கேளாய்:
நாக நல் நாடு ஆள்வோன்-தன் மகள்
பீலிவளை என்பாள், பெண்டிரின் மிக்கோள்,
பனிப் பகை வானவன் வழியில் தோன்றிய
புனிற்று-இளங் குழவியொடு பூங்கொடி பொருந்தி, இத்
தீவகம் வலம் செய்து, தேவர் கோன் இட்ட

மா பெரும் பீடிகை வலம [illegible]

156-160 கரை - கரையில். தூமலர் - தூய மலரைஉடைய. துறை நிழல் - நிழலைஉடைய துறையினில். காவல்தெய்வதம் - (புத்த பீடிகையைக்) காவல் புரியும் தெய்வம் - தீவதிலகை. உயிர் மருந்து - உணவு சுரக்கும் அமுதசுரபியை; ஆகுபெயர்.

161-170 அயர்த்துப்போயினர் - மறந்து நீங்கியவர்கள். பெற்றிமை - தன்மையை. நின்குறி - உனது இடத்தில் - நீ இறந்த இடத்திலே. இருந்து - உண்ணாமல் இருந்து. நீத்தோர் - நீக்கியோராகிய. ஆங்கவர் - அச்செட்டிகள். இட - உணவு அளித்தலால். உண்டு - உண்டு வாழ்ந்தமையால். மெய் வைத்தோர் - உடலினை விட்டவர்களது. ஊர்திரை - இயங்கும்அலைகள். தொகுத்த - குவித்த. ஆருயிர் - அரிய உயிர் - விஞ்ஞானஸ்கந்தம். அரசர்க்கு – உனக்கு; இடவழுவமைதி.

171-180 கொலைவன் - கொலைபுரிந்தவன். நகர் - காவிரிப்பூம்பட்டினம். கடல்வயிறு - கடலகத்துள். பனிப்பகைவானவன் - சூரியன். புனிற்று இளங்குழவி - ஈன்ற அணிமையை உடைய குழந்தை. பூங்கொடி - பீலிவளை.

கம்பளச் செட்டி கலம் வந்து இறுப்ப,
அங்கு-அவன்பால் சென்று, அவன் திறம் அறிந்து,
"கொற்றவன் மகன் இவன், கொள்க" எனக் கொடுத்தலும்,
பெற்ற உவகையன் பெரு மகிழ்வு எய்தி,
பழுது இல் காட்சிப் பைந்தொடி புதல்வனைத்
தொழுதனன் வாங்கி, துறை பிறக்கு ஒழிய,
கலம் கொண்டு பெயர்ந்த அன்றே, கார் இருள்,
இலங்கு நீர் அடைகரை, அக் கலம் கெட்டது;
கெடு கல மாக்கள் புதல்வனைக் கெடுத்தது
வடி வேல் கிள்ளி மன்னனுக்கு உரைப்ப,
மன்னவன் மகனுக்கு உற்றது பொறாஅன்,
நல் மணி இழந்த நாகம் போன்று,
கானலும் கடலும் கரையும் தேர்வுழி,
வானவன் விழாக் கோள் மா நகர் ஒழிந்தது;
மணிமேகலா தெய்வம் மற்று-அது பொறாஅள்,
"அணி நகர்-தன்னை அலை கடல் கொள்க" என,
இட்டனள் சாபம்; பட்டது இதுவால்:
கடவுள் மா நகர் கடல் கொள, பெயர்ந்த
வடி வேல் தடக் கை வானவன் போல,
விரிதிரை வந்து வியல் நகர் விழுங்க,
ஒரு தனி போயினன், உலக மன்னவன்:
அருந் தவன்-தன்னுடன், ஆய்-இழை தாயரும்,
வருந்தாது ஏகி, வஞ்சியுள் புக்கனர்;
பரப்பு நீர்ப் பௌவம், பலர் தொழ, காப்போள்
உரைத்தன: கேட்க உறுகுவைஆயின், நின்
மன் உயிர் முதல்வனை மணிமேகலா தெய்வம்
முன் நாள் எடுத்ததும், அந் நாள் ஆங்கு-அவன்

184–190 இறுப்ப–தங்க. அவன்திறம் அறிந்து-அவன் வரலாற்றினைக் கேட்டறிந்து. கொற்றவன் - நும் அரசனது - கிள்ளியினது. பிறக்கு ஒழிய - பின்புறத்தே நீங்க. பெயர்ந்த - சென்ற. காரிருள் - இரவினில்.

191–200 இலங்குநீர் அடைகரை - கடற்கரை அருகினில். கெடுத்தது - தொலைத்த செய்தியை. வடி - கூர்மை; வடித்த எனினும் அமையும். உற்றது - நேர்ந்த துன்பத்தை. கானல் - கடற்கரைச் சோலை. தேர்வுழி - தேடியமையால். வானவன் - இந்திரனது. விழாக்கோள் - விழாக்கொண்டாடுதலை. நகர் - காவிரிப்பூம் பட்டினம். பட்டது - நிகழ்ந்தது.

201–210 கடவுள் மாநகர் - அமராவதி நகரினை. வடிவேல் - கூரியவச்சிரத்தை ஏந்திய. வியன் - அகலம். அருந்தவன் - அறவணன். ஆயிழை தாயர்–நின்தாயர்: வழுவமைதி. பௌவம் கடலை. உரைத்தன - சொன்ன சொற்களை.கேட்க உறுகுவை ஆயின் – கேட்டற்கு விரும்புவையேல்.நின் மன் உயிர் முதல்வனை-உனது குலத்தின் முந்தையோன் ஒருவனை. எடுத்ததும்–கடலினின்று எடுத்துக் கரைசேர்த்த செய்தியும்.

அற அரசு ஆண்டதும், அறவணன் தன்பால்
மறு பிறப்பாட்டி வஞ்சியுள் கேட்பை என்று,
அந்தரத் தீவகத்து அருந் தெய்வம் போய பின்—
மன்னவன் இரங்கி, மணிமேகலையுடன்,
துன்னிய தூ மணல் அகழ, தோன்றி,
ஊன் பிணி அவிழவும் உடல் என்பு ஒடுங்கித்
தான் பிணி அவிழாத் தகைமையது ஆகி,
வெண் சுதை வேய்ந்து. அவண் இருக்கையின் இருந்த
பண்பு கொள் யாக்கையின் படிவம் நோக்கி,
மன்னவன் மயங்க மணிமேகலை எழுந்து,
'என் உற்றனையோ, இலங்கு இதழ்த் தாரோய்?
நின் நாடு அடைந்து, யான் நின்னை ஈங்கு அழைத்தது,
மன்ன! நின்-தன் மறு பிறப்பு உணர்த்தி,
அந்தரத் தீவினும், அகன் பெருந் தீவினும்,
நின் பெயர் நிறுத்த: நீள் நிலம் ஆளும்
அரசர்-தாமே அருளறம் பூண்டால்
பொருளும் உண்டோ, பிற புரை தீர்த்தற்கு?
"அறம் எனப்படுவது யாது?" எனக் கேட்பின்,
மறவாது இது கேள்: மன் உயிர்க்கு எல்லாம்
உண்டியும், உடையும், உறையுளும், அல்லது
கண்டது இல்' என, காவலன் உரைக்கும்;
'என் நாட்டு ஆயினும், பிறர் நாட்டு ஆயினும்,
நல்-நுதல்! உரைத்த நல் அறம் செய்கேன்;
என் பிறப்பு உணர்த்தி, என்னை நீ படைத்தனை;
நின் திறம் நீங்கல் ஆற்றேன் யான்.' என—
'புன்கண் கொள்ளல்; நீ போந்ததற்கு இரங்கி, நின்
மன் பெரு நல் நாடு வாய் எடுத்து அழைக்கும்;
வங்கத்து ஏகுதி; வஞ்சியுள் செல்வன்' என்று,
அந்தரத்து எழுந்தனள், அணி-இழை-தான்-என்.

211-220 அறஅரசு ஆண்டதும்-அறத்தின் வேந்தனாய் அறம்புரந்ததும். மறுபிறப்பாட்டி - பழம்பிறப்பினை யறிந்தோய்!. அந்தரத்

தீவகம் - ஒரு தீவு. தெய்வம் - தீவதிலகை, தூ - தூய்மை. அகழ - தோண்டிப்பார்க்க, ஊன்பிணி - தசைக்கட்டு. அவிழ- நீங்கப் பெறுதலால். தான் - உடலின்ன் படிவம். பின் அவிழா - கட்டு நீங்காத - என்பின் கட்டுக்கோப்பு நீங்காத என்றவாறு. சுதைவேய்ந்து அவண் இருக்கையின்—சுண்ணும் பினுல் புனையப்பெற்று அங்கு இருத்தல் போல் பண்பு கொள் யாக்கையின் - அசுபத் தன்மையாகிய தன் இயல்பைக் கொண்டுள்ள உடலின். படிவம் - வடிவம்.

221–230 அருள் அறம் - உயிர்கண்மாட்டு அருள் உடைமையாகிய அறத் தினை. புரை தீர்த்தற்கு - குற்றங்கடிதற்கு. (அரசரே அறம் பூணின் யாவரும் அறம் பூண்பர்; உலகில் குற்றம் கடிந்து திருத்துதற்கு உரியவராக ஒருவரும் எஞ்சார் என்பதாம்)

231–239 நன்னுதல்! - மணிமேகலை!. நின் திறம் - நின்னிடத்தினின்று ஆற்றேன் - பொறேன். புன்கண் - வருத்தம். கொள்ளல் - கொள்ளற்க. போந்தமைக்கு - வந்தமைக்கு. வாய் எடுத்து சொல் எடுத்து. அணியிழை - மணிமேகலை.

177

26. வஞ்சி மாநகர் புக்ககாதை.

மணிமேகலை மணிபல்லவத்தினின்று எழுந்து வஞ்சியின் புறநகர்ப் பகுதியை எய்தி அங்குச் செங்குட்டுவனால் எடுக்கப் பெற்றுள்ள கோட்டத்தினுள் கண்ணகியும் கோவலனும் தெய்வப் படிமத்தினில் வீற்றிருத்தலைக் கண்டு வணங்கித் துதித்துப் பத்தினித் தெய்வத்தை நோக்கி "நீர் மதுரையை எரித்த மறத்திறத்தினை யான் அறிய உணர்த்தல்வேண்டும்" என்று வேண்டினள். பத்தினித் தெய்வம் அத்திறம் விளக்கினள்: கணவற்குற்ற கடுந்துயர் பொருமற் சினந்து கூடற்கோநகர் எரிமடுத்தேன். அப்போது மதுராபதித் தெய்வம் என்முன் தோன்றி, "கோவலன் முற்பிறப்பில் சங்கமன் என்னும் வணிகனைக் குற்றம் ஏற்றிக் கொல்வித்த தீவினையும், சங்கமன்மனைவி வரைஏறிப் பாய்ந்து வீயுங்கால் இட்டசாபமும் வந்து உருத்தமையால் அவன் கொலையுண்டான்" என்று எனக்கு எடுத்துரைத்தது. யாம் முன் செய்த அறப்பயனால் தெய்வயாக்கையை எய்திஞேம். இனி இத்தீவினைப்பயனையும் எய்தப் பிறப்பெய்துவோம். நின்தந்தையோடு யான் காவிரிப்பூம் பட்டினத்தில் இந்திர விகாரத்தை வழிபட்ட அறப்பயனால் புத்தனது நல்லறத்தில் மனங்கொண்டொழுகிக் கபிலையம்பதியில் புத்த பகவன் தோன்றிய நாள் அவனுபதேசம் பெற்றுப் பிறப்பு வீடு எய்துவோம். நீ இந்நகரில் வேற்றுருவெய்திப் பல சமயக் கணக்கரை அடுத்து அவர்பால் நூற்பொருள் கேட்குவை. அவை யாவும் பொருந்தாமை உணர்ந்து புத்தனது நல்லறத்தினையே மேற்கொண்டொழுகுவை என்று கூறினள். மணிமேகலை

பத்தினித் தெய்வத்தை வணங்கி மந்திரத்தை ஓதி வேற்றுருவுற்று வஞ்சியில் சமயக்கணக்கரை அணுகலாயினள்.

அணி-இழை அந்தரம்

ஆரு எழுந்து,
தணியாக் காதல் தாய்
கண்ணகியையும்,
கொடை கெழு தாதை
கோவலன்-தன்னையும்,
கடவுள் எழுதிய படிமம் காணிய,
வேட்கை துரப்ப,
கோட்டம் புகுந்து,

வணங்கி நின்று, குணம்
பல ஏத்தி,
'அற்புக் கடன் நில்லாது,
நல் தவம் படராது,

கற்புக் கடன் பூண்டு,
நும் கடன் முடித்தது
அருளல் வேண்டும்'
என்று, அழுது முன் நிற்ப—
ஒரு பெரும் பத்தினிக்
கடவுள் ஆங்கு உரைப்போள்:
'எம் இறைக்கு உற்ற
இடுக்கண் பொருது,
வெம்மையின் மதுரை
வெவ் அழல் படு நாள்,

<u>மதுராபதி எனும் மா பெருந் தெய்வம்,</u>
"இது நீர் முன் செய் வினையின் பயனால்;
காசு இல் பூம்பொழில் கலிங்க நல் நாட்டுத்
தாய மன்னவர் வசுவும், குமரனும்—

சிங்கபுரமும், செழு நீர்க்
கபிலையும்,

அங்கு-ஆள்கின்றோர்—அடல்
செரு உறு நாள்,
மூ-இரு காவதம்
முன்னுநர் இன்றி,

யாவரும் வழங்கா
இடத்தில், பொருள் வேட்டுப்

1–10 அந்தரம் ஆறு - வானம் நெறியாக. தணியா - குன்றாத. கொடை கெழு - ஈகை மிக்க. கடவுள் எழுதிய - தெய்வமாகக் கொண்டு வழிபடுதற்கு எழுதியுள்ள. படிமம்—திரு உருவத்தை. காணிய-காண்பதற்கு. துரப்ப-உந்திச் செலுத்த. கோட்டம் - கண்ணகியின் கோயில். அற்புக்கடன் - அன்புடையார்க்குரிய அறத்தில்; அவை உடன் உயிர் விதலும், தீப்பாய்தலும் ஆம். நல்தவம் - கைம்மை நோன்பு: துய்ப்பன கடிந்து உடம்பினை வருத்தும் விரதநெறி. கற்புக்கடம் - கற்பாய அறம். நும்கடன் - பத்தினியாகிய நுமது கடமையை - இருவர்மாட்டும் தகைசான்ற சொற்காத்தலை மேற்கொண்டு மதுரையை எரியூட்டிய பெற்றியை, (என்றது காய்கதிர்ச் செல்வனைச் சான்றாக்கிக் கோவலன் கள்வன் அல்லன் என்று உலகினரைத் தேற்றியும், மதுரையை எரியூட்டியும், தன் கற்பொழுக்கத்தினை மெய்ப்பித்த பெற்றியைக் கூறியவாறு). அருளல் வேண்டும்-கூறியருள்க. பத்தினிக் கடவுள் - கண்ணகி. உரைப்போள் - கூறுவாளாகி.

11-20 இறைக்கு - கோவலற்கு. வெம்மையின் - வெகுளியால். வெவ் வழல் படுநாள் - கொடிய தீயின்கண் படுத்திய நாளில். படுநாள் என்புழிப் பிறவினை விகுதி குன்றி நின்றது. இது - கோவலன் கொலையுண்டமை. காசு - மாசு. தாயமன்னவர் - ஒரு குடியில் தோன்றிய மன்னர். வசு, குமரன் பெயர்கள். கபிலை-கபிலபுரம். அடல் செரு - கொலைத் தொழில் நிகழும் போர். மூன்னூர் - செல்வோர். வழங்கா - இயங்காத. பொருள் வேட்டு - வாணிகத்தால் பொருள் தேட விரும்பி.

பல் கலன் கொண்டு, பலர் அறியாமல்,
எல் வளையாளோடு அரிபுரம் எய்தி,
பண்டக் கலம் பகர் சங்கமன்-தன்னைக்
கண்டனர் கூற, தையல்! நின் கணவன்,
பார்த்திபன் தொழில் செய்யும் பரதன் என்னும்
தீத் தொழிலாளன், தெற்றெனப் பற்றி,
ஒற்றன் இவன் என உரைத்து மன்னற்கு,
குற்றம் இலோனைக் கொலைபுரிந்திட்டனன்;
ஆங்கு-அவன் மனைவி அழுதனள் அரற்றி,
ஏங்கி மெய்பெயர்ப்போள், இறு வரை ஏறி,
இட்ட சாபம் கட்டியது ஆகும்;
உம்மை வினை வந்து உருத்தல் ஒழியாது" எனும்
மெய்மைக் கிளவி விளம்பிய பின்னும்,
சீற்றம் கொண்டு, செழு நகர் சிதைத்தேன்;
மேற் செய் நல் வினையின், விண்ணவர்ச் சென்றேம்;
அவ் வினை இறுதியின், அடு சினப் பாவம்
எவ் வகையானும் எய்துதல் ஒழியாது;
உம்பர் இல் வழி, இம்பரில் பல் பிறப்பு,
யாங்கணும் இரு வினை உய்த்து, உமைப் போல,
நீங்கு-அரும் பிறவிக் கடலிடை நீந்தி,

21-30 கலன் - அணிகலன்களை. எல்வளையாளோடு - மனைவியோடு. அரிபுரம் - சிங்கபுரத்தை. பண்டக் கலம் பகர் - அணிவகைகளாகிய பண்டங்களை விற்கின்ற. சங்கமன்-ஒரு வணிகன். கண்டனர்- பார்த்தோர். தையல்! - கண்ணகி! பார்த்திபன் தொழில் - அரச காரியம். பரதன் - பெயர். தீத்தொழிலாளன் - தீவினை செய்யும் இயல்பு உடையவன். தெற்றென - ஆராயாது குற்றம் உடையோனெனத் துணிந்து: 'தெற்றென' என்பது தெளிதற் பொருட்டாதல். "தெற்றென்க மன்னவன் கண்" என்புழியும் காண்க. விரைவினில் என்றும் உரைப்பர். கொலைபுரிந்திட்டனன் - கொல்லுவித்தனன். அழுதனள் அரற்றி - அழுது கதறி. மெய் பெயர்ப்போள் - உடம்பினை நீக்குகின்றவள். இறுவரை - மலையுச்சியில்; அன்றிப் பெரிய மலையின்கண் எனலும் ஆம். (இறுவரை யேறி மெய் பெயர்ப்போள் என்க.)

31-40 கட்டியது - பிணித்தது உம்மை வினை - முற்பிறப்பினில் புரிந்த வினை. உருத்தல் - சினத்தல்; தோன்றுதல் எனலும் ஆம். மேல் செய் நல்வினையின் - முன் செய்துள்ள நல் வினையினால். விண்ணவர் - விண்ணவராக. அவ்வினையிறுதியின் - அந்த நல்வினை முடியுங்கால். அடுசினப் பாவம் - மதுரையூரை அட்ட வெகுளியினாலாய பாவம். உம்பர் இல்வழி - வானுலக வாழ்க்கை இல்லாமல் போய இடத்து. இப்பரில் - இவ்வுலகில். உய்த்து - செலுத்தப்பெற்று.

உழல்வோம்: பின்னர்,

"மறந்தும் மழை மரு மகத நல் நாட்டுக்கு
ஒரு பெருந் திலகம்" என்று உரவோர் உரைக்கும்
கரவு-அரும் பெருமைக் கபிலை அம் பதியின்,
அளப்பு-அரும் பாரமிதை அளவு இன்று நிறைத்து,
துளக்கம் இல் புத்த ஞாயிறு தோன்றி,
போதி மூலம் பொருந்தி வந்தருளி,
தீது அறு நால் வகை வாய்மையும் தெரிந்து,
பன்னிரு சார்பின் பகுதித் தோற்றமும்,

அந் நிலை எல்லாம் அழிவுறு வகையும்,
இற்று என இயம்பி, குற்ற வீடு எய்தி,

எண்-அருஞ் சக்கரவாளம்
எங்கணும்

அண்ணல் அறக் கதிர்
விரிக்குங்காலை,

பைந்தொடி! தந்தையுடனே பகவன்
இந்திர விகாரம் ஏழும் ஏத்துதலின்,
துன்பக் கதியில் தோற்றரவு இன்றி,

அன்பு உறு மனத்தோடு அவன் அறம் கேட்டு,
துறவி உள்ளம் தோன்றி, தொடரும்
பிறவி நீத்த பெற்றியம் ஆகுவம்:

அத் திறம் ஆயினும்,
அநேக காலம்

41-50 உழல்வோம்-வருந்துவோம். மறு-பெய்தலை ஒழியாத. உரவோர்-அறிவினில் திண்ணியோர். கரவு - ஒளித்தல். பாரமிதை - தவத்தின் ஒழுகலாற்று வகை; அவை தான பாரமிதை முதலிய பத்தென்பர். அளவின்று - அளவின்றி. புத்த ஞாயிறு - புத்த ஞாகிய சூரியன். தோன்றி - பிறந்து, ஞாயிறு என்றதற் கேற்பத் 'தோன்றி' என்றார். போதிமூலம் - அரச மரத்தின் கீழ். நால்வகை வாய்மை-நான்கு வகையாகிய சத்தியங்கள்: தெரிந்து-

ஆராய்ந்து. சார்பின்
பகுதித் தோற்றம் - சார்பின்
தோற்றம்.
51-60

இற்று - இத்தன்மைத்து என்று தெளிவுற. குற்ற வீடு - குற்றங்களினின்று விடுபடுதல்: குற்றங்கள் - காமம் முதலியன. சக்கர வாளம் எங்கணும் - சக்கரவாளமலை சூழ்ந்த உலக முழுமையினும். அண்ணல் - பெரியோன் - புத்தன். அறக் கதிர் - அறமாகிய கிரணங்களை. (புத்தனை ஞாயிறாக உருவகித்தமைக்கேற்ப அறத்தைக் கதிர் என்றவாறு.) பைங்தொடி தந்தை-நின் தந்தை-கோவலன். 'பைங்தொடி' முன்னிலைக்கண் வழுவமைதியாய் வந்தது. பகவன் - புத்தனது. இந்திர விகாரம் ஏழும் - இந்திரனால் அமைக்கப்பெற்ற ஏழு அரங்குகளையும்; விகாரம் - பௌத்த முனிவர் உபதேசிக்கும் அரங்கு. ஏத்துதலின் - துதித்தமையின். துன்பக் கதியில் - நரகரும், விலங்கும், பேயும் முதலிய கதிகளில். தோற்றரவு - பிறத்தல். துறவி - துறவு. தோன்றி - தோன்றலால். பெற்றியம் - பிறவியற்ற நிலையாகிய இயற்கை நிலையை உடையோம்: இதனைப் பௌத்தர் நிருவாண நிலை என்பர். அத்திறம் - அப்படி.

எத்திறத்தார்க்கும் இருத்தியும் செய்குவம்:
நறை கமழ் கூந்தல் நங்கை! நீயும்
முறைமையின் இந்த மூதூர் அகத்தே
அவ்வவர் சமயத்து, அறி பொருள் கேட்டு,
மெய் வகை இன்மை நினக்கே விளங்கிய
பின்னர், பெரியோன் பிடக நெறி கடவாய்;
இன்னது இவ் இயல்பு' என, தாய் எடுத்து உரைத்தலும்—
"இளையள் வளையோள் என்று உனக்கு யாவரும்
விளை பொருள் உரையார்; வேற்று உருக் கொள்க" என,
மை அறு சிறப்பின் தெய்வதம் தந்த
மந்திரம் ஓதி, ஓர் மாதவன் வடிவு ஆய்;
தேவ குலமும், தெற்றியும், பள்ளியும்,
பூ மலர்ப் பொழிலும், பொய்கையும் மிடைந்து,
நல் தவ முனிவரும், கற்று அடங்கினரும்,
நல் நெறி காணிய தொல் நூல் புலவரும்,
எங்கணும் விளங்கிய எயில் புற இருக்கையில்—
செங்குட்டுவன் எனும் செங்கோல் வேந்தன்
பூத்த வஞ்சி, பூவா வஞ்சியில்,
போர்த் தொழில் தானை குஞ்சியில் புனைய,
நில நாடு எல்லை தன் மலை நாடென்ன,

61-70 இருத்தி - சித்திகளை. நறை - நறுமணம். பெரியோன் - புத்தனது. பிடகநெறி - பிடகம் என்னும் ஆகமத்தின் நெறியினை. பிடகம் - பௌத்த ஆகமம்: இது புத்தனால் அருளிச்செய்யப்பட்டது. கடவாய் - நீங்காய். இன்னது இவ்வியல்பு என - இது இப்படி என்று. விளை பொருள் - துணி பொருள்களை. மையறு சிறப்பின் தெய்வதம் - மணிமேகலா தெய்வம். தந்த - உபதேசித்த.

71-80 தேவகுலம் - கோயில். தெற்றி - மேடை - வேதிகை. பள்ளி - தவச்சாலை. அடங்கினர் - மனம்பொறி வழிச்செல்லாது அடங்கப்பெற்றவர். நன்னெறி காணிய - அறநெறி ஒழுகுதற்கு: காண்டல் - இயற்றுதல் – ஒழுகுதல். எயில்புற இருக்கை- மதிலின் வெளிப் பக்கத்தின்கண் உளதாய இருப்பிடம். (தேவ குலமும் பிறவும் மிடைந்து முனிவரும், அடங்கினரும், புலவரும் நன்னெறி காணிய எங்கணும் விளங்கிய எயிற்புற இருக்கை என்க.) பூத்தவஞ்சி - பூத்தலை உடைய வஞ்சியின் மலரை.

பூவாவஞ்சி - வஞ்சிமாநகரில். தானை - படைவீரர். குஞ்சியில் - குடுமியில். (பூவாவஞ்சியில்தானை பூத்தவஞ்சி குஞ்சியில் புனைய என்க). நிலம் நாடு எல்லை-பூமியின்கண் உள்ள நாட்டின் இடங்கள். எல்லை - இடம். நாட்டெல்லை எனற்பாலது நாடெல்லை என நின்றது: தொகுத்தல் விகாரம். அன்றி நிலநாடு எல்லை என்பதற்கு நிலத்தின் சூழலாகிய இடம் எனலும் ஆம்; பூமி முழுவதும் என்றவாறு. மலை நாடு என்ன - மலைநாடே என்று கண்டோர் கருதுமாறு.

கைம்மலைக் களிற்று இனம் தம்முள் மயங்க,

தேரும், மாவும், செறி
கழல்,மறவரும்,
கார் மயங்கு கடலின் கலி
கொளக் கடைஇ,
கங்கை அம் பேர் யாற்று
அடைகரைத் தங்கி,
வங்க நாவியின் அதன் வடக்கு
இழிந்து,
கனக-விசயர் முதல் பல
வேந்தர்
அனைவரை வென்று, அவர்
அம் பொன் முடி மிசை,

சிமையம் ஓங்கிய இமைய மால் வரைத்
தெய்வக் கல்லும், தன் திரு முடிமிசைச்
செய் பொன் வாகையும், சேர்த்திய சேரன்—
வில் திறல் வெய்யோன்-தன் புகழ் விளங்க,
பொன் கொடிப் பெயர்ப் படூஉம் பொன் நகர்ப் பொலிந்தனள்—

திருந்து நல் ஏது முதிர்ந்துளது ஆதலின், பொருந்து நால் வாய்மையும் புலப்படுத்தற்கு-என்.

81-90 கைம்மலைக்களிற்றினம் - கையையுடைய மலைபோலும் களிற்றின்

கூட்டம். (இல்பொருள் உவமை.) செறிகழல் - மறப்புகழ் எழுதிய வரிகள் செறிந்த கழல். மயங்க - நெருங்க. கார்மயங்கு கடலின் - மேகங்கள் செறிந்த கடலைப் போல. கலி கொள - ஒலித்தலைப் பெற. கடைஇ - செலுத்தி. வங்கநாவி - ஒருவகை மரக்கலம்; நாவியாகிய வங்கம்: இருபெயரொட்டு. கனகவிசயர் - கனகனும் விசயனும் ஆகிய ஆரிய நாட்டரசர். அனைவரை - எல்லோரையும்: உம்மை தொக்குநின்றது. சிமையம் - சிகரம். மால்வரை - பெரிய மலையின். தெய்வக்கல் - தெய்வப்படிமம் வகுத்தற்குரிய கல். செய்பொன்வாகை - பொன்னால் செய்த வாகைப் பூவினை.

91-94 வில்திறல் வெய்யோன் - வில் வலிமையை விரும்பியவன் - செங்குட்டுவனது. பொற்கொடி - அழகிய கொடியின் - வஞ்சியின். பொன் நகர்-பொலிவு மிக்க நகரில்; செல்வமிக்க நகரில் எனலும் ஆம். திருந்து நல் ஏது முதிர்ந்துளது ஆதலின்-குற்றமற்ற நல்ல ஊழ்வினை பயன்தரநின்றமையால். நால் வாய்மையும் - நால் வகைச் சத்தியங்களையும். (ஏது முதிர்ந்துளதாதலின் நால்வகை வாய்மையும் புலப்படுத்தற்குப் பொன்நகர்ப் பொலிந்தனள் என்க.)

27. சமயக் கணக்கர் தம் திறம் கேட்டகாதை

முனிவன் வடிவினில் மறைந்துருக்கொண்ட மணிமேகலை கச்சிமா நகருள் தம்தம் நூற்றுரை தேர்ந்த பலதிறச் சமயக் கணக்கர்களையும் முறையே அணுகி அவரவர் சமய நுண் பொருள்களைக் கேட்டறியலாயினள். முதற்கண் வைதிக நெறிப்பாற்பட்ட பல்வகை நெறிகளைக் கேட்டறியலுற்று அளவைவாதம் சைவவாதம் பிரமவாதம் வைணவவாதம் வேதவாதம் என்பவற்றைக் கேட்டறிந்தனள். பின் வேத நெறிக்குப் புறம்பாய நெறிகளாகிய ஆசீவகவாதம் நிகண்டவாதம் சாங்கியவாதம் வைசேடிகவாதம் பூதவாதம் என்பவற்றையும் அந்நெறி வல்லாரை அடுத்துக் கேட்டறிந்தனள்.

'நவை அறு நன் பொருள் உரைமினோ' என,
சமயக் கணக்கர்-தம் திறம் சார்ந்து,
வைதிக மார்க்கத்து அளவை வாதியை
எய்தினள்: எய்தி, 'நின் கடைப்பிடி இயம்பு' என—
'வேத வியாதனும், கிருதகோடியும்,
ஏதம் இல் சைமினி, எனும் இவ் ஆசிரியர்
பத்தும் எட்டும், ஆறும், பண்புறத்
தம்-தம் வகையால், தாம் பகர்ந்திட்டனர்;
காண்டல், கருதல், உவமம், ஆகமம்,
ஆண்டைய அருத்தாபத்தியோடு, இயல்பு,
ஐதிகம், அபாவம், மீட்சி ஒழிவறிவு,
எய்தி உண்டாம் நெறி, என்று இவை-தம்மால்
பொருளின் உண்மை புலங்கொளல் வேண்டும்.

1-10 நவை - குற்றம். நன்பொருள் - நூற்பொருள்கள்: அவை அளவைகளும் தத்துவங்களும் ஆம். சமயக்கணக்கர் தம்திறம்- சமய நூல் வல்லோர் பக்கத்தை; திறம் - நெறியும் ஆம். சார்ந்து-மேவி. வைதிக மார்க்கத்து-வேதத்தில் ஓதிய நெறியின் கண்பட்ட. அளவைவாதி - பிரமாண வாதியை. கடைப்பிடி - நூல் துணிவு. வேதவியாதர் அளவைகளைப் பத்தென்றார்; இருதகோடி அவற்றை எட்டு என்றார்; சைமினி அவற்றை ஆறு என்றார். காண்டல் - காட்சியளவை. கருத்து - அனுமானம். உவமம் - உவமான அளவை. ஆகமம் - சத்தப் பிரமாணம். ஆண்டைய-அவற்றினுள்பட்ட. அருத்தாபத்தி- பொருட்பேறு. இயல்பு - பொருட்பெற்றி.

11-13 ஐதிகம் - உலகோர் மொழி. அபாவம் - இன்மை. மீட்சியொழிவு அறிவு - எஞ்சிநிற்றலறிகை - பாரிசேடம். எய்தி உண்டாம் நெறி - உற்ற பெற்றி கோடல் - சம்பவம். புலங்கொளல் - அறிதல்.

மருள் இல் காட்சி ஐ-வகை ஆகும்:
கண்ணால் வண்ணமும், செவியால் ஓசையும்,
நண்ணிய மூக்கால் நாற்றமும், நாவால்
சுவையும், மெய்யால் ஊறும், எனச் சொன்ன
இவை இவை; கண்டு, கேட்டு, உயிர்த்து, உண்டு, உற்று;
துக்கமும் சுகமும் எனத் துயக்கு அற அறிந்து;
உயிரும் வாயிலும், மனமும், ஊறு இன்றி,
பயில் ஒளியொடு, பொருள், இடம், பழுது இன்றி,
சுட்டல், திரிதல், கவர்கோடல், தோன்றாது,
கிட்டிய தேசம், நாமம், சாதி,
குணம், கிரியையின் அறிவது ஆகும்.
கருத்து அளவு ஆவது
குறிக்கொள் அனுமானத்து, அனுமேயத்
தகைமை உணரும் தன்மையது ஆகும்;
மூ-வகை உற்று, அதுபொது, எச்சம், முதல், ஆம்;
பொது எனப்படுவது—சாதன சாத்தியம்
இவை அந்நுவயம் இன்றாய் இருந்தும்,
கடம் திகழ் யானைக் கான ஒலி கேட்டோன்,
உடங்கு, "எழில் யானை அங்கு உண்டு" என உணர்தல்:
எச்சம் என்பது—வெள்ள ஏதுவினால்,
நிச்சயித்து, அத் தலை மழை நிகழ்வு உரைத்தல்:
முதல் என மொழிவது—கருக் கொள் முகில் கண்டு,
"இது மழை பெய்யும்" என இயம்பிடுதல்:
என்னும் ஏதுவின், ஒன்று முக் காலம்-
தன்னில், ஒன்றில் சார்ந்து உளதாகி,

14-20 மருள்இல்காட்சி - குற்றமற்ற காட்சியளவை. வண்ணம் - நிறம். ஊறு - பரிசம் (ஐவகைக் காட்சிகளாவன ஐம்பொறிகளால் ஆகும் ஐவகைக் காட்சிகளாம்.) துயக்கு - தடை; கசடும் ஆம். வாயில் - ஐம்பொறிகள். ஊறு - தீங்கு.

21-30 பயில்-செறிந்த. பொருள்-காட்சியால் அளக்கப்படும் பொருள். சுட்டல், திரிதல், கவர்கோடல் - இவை காட்சி யளவைக்கண் ஆகாத குற்றங்கள். கிட்டிய - அடுத்துள்ள. கிட்டிய - அடுத்துள்ள. தேசம் - இடம். கிரியை - தொழில். குறிக்கொள் அனுமானத்து - ஆராய்ந்த ஏதுவினைக் கொண்டு. அனுமேயத்தகைமை - துணிபொருள் உண்மையை. (கருத்தளவாவது, அனுமானத்தால் அனுமேயத்தை உணரும் தன்மையது.) பொது, எச்சம், முதல் என்பன அனுமானத்தின் வகைகள். பொது எனப்படுவது - பொது அனுமானமாவது. சாதன சாத்தியம் இவை - ஏதுவும் துணி பொருளும் ஆகிய இவை. அந்நுவயம் - உடன் நிகழ்தல் - ஏதுஉள்ள இடத்தில் துணி பொருளும் உளதாதல்.

31-40 கடம் திகழ்-மதம்மிக்க யானைக். கான ஒலி - யானைக் காட்டில் ஒலியை. உடங்கு - உடனே. எச்சம் - எச்சவனுமானம். அத்தலே-அவ்விடத்தில். மழை நிகழ்வு-மழை பெய்திருத்தலை. (மழை நிகழ்வு நிச்சயித்து உரைத்தல் என்க) முதல் - காரண அனுமானம். சார்ந்துளதாகி - பொருந்தியுள்ளதாக.

மாண்ட உயிர் முதல், மாசு இன்ருகி,
காண்டல் பொருளால், கண்டிலது உணர்தல்.
உவமம் ஆவது ஒப்புமை அளவை;
"கவய மா ஆப் போலும்" எனக் கருதல்.
ஆகம அளவை அறிவன் நூலால்,
"போக புவனம் உண்டு" எனப் புலங்கொளல்.
அருத்தாபத்தி, "ஆய்க்குடி கங்கை
இருக்கும்" என்ருல், கரையில் என்று எண்ணல்.
இயல்பு யானைமேல் இருந்தோன் தோட்டிக்கு,
அயல் ஒன்று ஈயாது, அதுவே கொடுத்தல்.
ஐதிகம் என்பது உலகு உரை; "இம் மரத்து
எய்தியது ஓர் பேய் உண்டு" எனத் தெளிதல்.
அபாவம் என்பது இன்மை; "ஓர் பொருளைத்
தவாது அவ் இடத்துத் தான் இலை" என்றல்.
மீட்சி என்பது, "இராமன் வென்ருன்" என,
மாட்சி இல் இராவணன் தோற்றமை மதித்தல்.
உள்ள நெறி என்பது, "நாராசத் திரிவில்
கொள்ளத் தகுவது காந்தம்" எனக் கூறல்.
எட்டு உள, பிரமாண-ஆபாசங்கள்—
சுட்டுணர்வொடு, திரியக் கோடல், ஐயம்,
தேராது தெளிதல், கண்டு உணராமை,
எய்தும் இல் வழக்கு, உணர்ந்ததை உணர்தல்,
நினைப்பு, என நிகழ்வ. சுட்டுணர்வு எனப்படுவது,
எனைப் பொருள் உண்மை மாத்திரை காண்டல்:

மாண்ட - மாட்சிமைப்பட்ட உயிர்முதல் - உயிர், பொறி, மனம் என்னும் மூன்றும், காண்டல் பொருளால் - காணப் பட்ட பொருள் ஏதுவாக.

41-50 கவயமா — சவயம்
என்னும் விலங்கு - ஆமா. ஆகம

சத்தப் பிரமாணம்.

அறிவன்-இறைவன்-மெய்யுணர்ந்தோன்.

போக புவனம் - இன்ப உலகம் - வானுலகம். எண்ணல் இயல்பு - எண்ணல் என்னும் அளவையின் இலக்கணம் யானை மேல் இருந்தோன் "ஒன்றுதா என்று கேட்டால்" என வருவித்து இயைத்துரைக்க. அதுவே - தோட்டியையே; தோட்டி - அங்குசம்.

51-60 தவாது - தவறுமல் - நிச்சயமாக. மீட்சி - பாரிசேடம் - எஞ்சுதல் என்னும் அளவை. உள்ளநெறி - சம்பவ அளவை - உள்ள பெற்றி கொள்ளுதல். நாராசத்திரிவின் - இருப்புச் சலாகையின் புடைபெயர்ச்சியைக் கொண்டு. பிரமாணு பாசங்கள்-அளவைப் போலிகள். சுட்டுணர்வு, திரியக்கோடல், ஐயம், தேராது தெளிதல், கண்டுணராமை, இல்வழக்கு, உணர்ந்ததை உணர்தல், நினைப்பு; என்பன எட்டும் அளவைப் போலிகள்.

61-62 எனைப்பொருள் - எல்லாப் பொருள்களிலும். உண்மை மாத்திரை - உண்மைத் தன்மையை மட்டும். காண்டல் - அறிதல் (பொருள் என்ற துணையாய் அறிதல் சுட்டுணர்வாம்.)

திரியக் கோடல் ஒன்றை ஒன்று என்றல்;
விரி கதிர் இப்பியை வெள்ளி என்று உணர்தல்:
ஐயம் என்பது ஒன்றை நிச்சயியா
மையல்; தறியோ? மகனோ? என்றல்:
தேராது தெளிதல் செண்டு வெளியில்,
ஓராது, தறியை மகன் என உணர்தல்:
கண்டு உணராமை கடு மாப் புலி ஒன்று
அண்டலை முதலிய கண்டும் அறியாமை:
இல் வழக்கு என்பது முயற்கோடு ஒப்பன;
சொல்லின் மாத்திரத்தால் கருத்தில் தோன்றல்:
உணர்ந்ததை உணர்தல் உறு பனிக்குத் தீப்
புணர்ந்திடல் மருந்து எனப் புலம் கொள நினைத்தல்:
நினைப்பு எனப்படுவது, காரணம் நிகழாது,
நினக்கு இவர் தாயும் தந்தையும் என்று
பிறர் சொல, கருதல்: இப் பெற்றிய, அளவைகள்.
பாங்குறும் உலோகாயதமே, பௌத்தம்,
சாங்கியம், நையாயிகம், வைசேடிகம்,
மீமாஞ்சகம், ஆம் சமய ஆசிரியர்-
தாம் பிருகற்பதி, சினனே, கபிலன்,
அக்கபாதன், கணாதன் சைமினி:
மெய்ப்பிரத்தியம், அனுமானம், சத்தம்,
உவமானம், அருத்தாபத்தி, அபாவம்,
இவையே இப்போது இயன்று உள அளவைகள்'
என்றவன்-தன்னை விட்டு, 'இறைவன் ஈசன்' என

63–70

ஒன்றை ஒன்று எனல் - ஒன்றினை வேறொன்று என்றல். இப்பி - முத்துச்சிப்பி. நிச்சயியா—நிச்சயிக்காமல் - மயக்கத்தால்.

செண்டுவெளி - ஒருவகை

வெற்றிடம். ஓராது -

ஆராயாமல். கடுமா - கொடிய விலங்காகிய. அண்டலை முதலிய - அணுகுதல் முதலியவற்றை.-

71-80 இல்வழக்கு - இல்லாததைக் கூறுதல். உறுபனிக்கு - மிக்க பனிக்கு. தீப்புணர்ந்திடல் - தீயைச் சார்தல். காரணம் விகழாது - காரணம் இல்லாமல். உலோகாயதம் - உயிர் உடலோடு இறந்து அழிவதென்றும் புண்ணிய பாவம் இல்லை என்றும் கூறும் நாத்திக மதம்.

81-90 உலோகாயதம் பிருகஸ்பதியாலும் பௌத்தம் சினனாலும் சாங்கியம் கபிலனாலும் நையாயிகம் அக்கபாதனாலும் வைசேடிகம் கணாதனாலும் மீமாம்சகம் சைமினியாலும் தோற்றுவிக்கப் பட்டனவாம். பிரத்தியக்கம், அனுமானம், சத்தம், உவமானம், அருத்தாபத்தி, அபாவம் ஆகிய ஆறுமே இப்போது கொள்ளப்பட்டிருக்கும் அளவைகளாம். சாத்தம் என்னும் பாடம் பிழையாம். என்றவன் தன்னை-என்றுகூறியஅளவை வாதியை. இறைவனவன் - கடவுளாவான். ஈசன் - சிவன் (ஈசன் இறைவன் என்க.) பரசும் - துதிக்கப்படும். இருசுடர் - திங்களும் சூரியனும். இயமானன் - வேள்வி புரிவோன்.

நின்ற சைவ வாதி நேர்படுதலும்,
'பரசும் நின் தெய்வம் எப்படித்து?' என்ன—
'இரு சுடரோடு, இயமானன், ஐம் பூதம், என்று
எட்டு வகையும், உயிரும் யாக்கையுமாய்க்
கட்டி நிற்போனும், கலை உருவினோனும்,
படைத்து விளையாடும் பண்பினோனும்,
துடைத்துத் துயர் தீர் தோற்றத்தோனும்,
தன்னில் வேறு-தான் ஒன்று இலோனும்,
அன்னோன்—இறைவன் ஆகும்' என்று உரைத்தனன்,
'பேர் உலகு எல்லாம்' பிரம வாதி, 'ஓர்
தேவன் இட்ட முட்டை' என்றனன்.
காதல் கொண்டு, கடல்வணன் புராணம்
ஓதினன், 'நாரணன் காப்பு' என்று உரைத்தனன்.
கற்பம் கை, சந்தம் கால், எண் கண்,
தெற்றென் நிருத்தம் செவி, சிக்கை மூக்கு,
உற்ற வியாகரணம் முகம், பெற்று,
சார்பின் தோன்று ஆரண வேதக்கு
ஆதி அந்தம் இல்லை; அது நெறி' எனும்
வேதியன் உரையின் விதியும் கேட்டு—
'மெய்த்திறம், வழக்கு, என விளம்புகின்ற
எத்திறத்தினும் இசையாது, இவர் உரை' என,
ஆசீவக நூல் அறிந்த புராணனை,
'பேசும் நின் இறை யார்? நூற்பொருள் யாது?' என—
'எல்லை இல் பொருள்களில், எங்கும், எப்பொழுதும்,

91-100 கட்டி நிற்போன் - பிணைத்து நிற்பவன். கலை - சிற்பம் முதலியன. துடைத்து - அழித்து. துயர் - உயிர்களின் துன்பத்தை. அன்னோன் - அத்தகையோன். (பிரமவாதி பேருலகெல்லாம் ஓர் தேவன் இட்டமுட்டைஎன்றனன் என்க.) தேவன் - பிரமதேவன். பிரமவாதி - பிரமனே இறைவன் என்னும் கொள்கையினன் - பிரமதேவன். காதல்—பக்தி. கடல் வண்ணன் - நாரணன். காப்பு - காப்போன். கற்பம்கை - கற்பம் என்னும் நூல் கையாக. சந்தம் - சந்த நூல். எண் - கணிதமும் தருக்கமும் ஆம்.

101-110 தெற்றென் - தெளிவுறுத்துகின்ற. சார்பில் தோன்றா - ஒருவர் காரணமாகத் தோன்றாத. வேதக்கு - வேதத்திற்கு. ஆரண வேதக்கு - அணுகுதற்கரிய வேதத்துக்கு. அது நெறி - வேத நெறியே நன்னெறியாகும்; வேதமே நன்னெறி காட்டுவதாகும் எனலும் ஆம். உரையின் விதி - மொழியின் முறைமையே. மெய்த்திறம் - தத்துவ நிலை. வழக்கு - அவற்றைக் காண்டற்குரிய நெறி முறை - யுக்தி முறை. (மெய்த்திறம் - மெய் நூல் வகைகள் என்றும், வழக்கு - உலக வழக்கு என்றும் கூறுப.) ஆசீவக நூல் - சமண சமயத்தின் பாற்பட்ட நூல்களை. புராணனை-முதியோனை. நூற்பொருள்-நூலில் கூறப்படும் பொருள். எல்லை இல் பொருள்களில் - எண்ணிறந்த பொருள்களில்.

புல்லிக் கிடந்து புலப்படுகின்ற
வரம்பு இல் அறிவன் இறை; நூற்பொருள்கள் ஐந்து—
உரம் தரும் உயிரோடு, ஒரு நால் வகை அணு:
அவ் அணு உற்றும், கண்டும் உணர்ந்திட,
பெய் வகை கூடிப் பிரிவதும் செய்யும்;
நிலம், நீர், தீ, காற்று, என நால் வகையின
மலை, மரம், உடம்பு, எனத் திரள்வதும் செய்யும்;
வெவ்வேறு ஆகி, விரிவதும் செய்யும்;
அவ் வகை அறிவது உயிர் எனப்படுமே.
வற்பம் ஆகி உறும் நிலம்; தாழ்ந்து,
சொற்படு சீதத்தொடு, சுவை உடைத்தாய்,
இழினென நிலம் சேர்ந்து, ஆழ்வது நீர்; தீத்
தெறுதலும், மேல் சேர் இயல்பும் உடைத்து ஆம்;
காற்று விலங்கி அசைத்தல் கடன்: இவை,
வேற்று-இயல்பு எய்தும் விபரீதத்தால்,
ஆதி இல்லாப் பரமாணுக்கள்,
தீதுற்று, யாவதும் சிதைவது செய்யா;

111-120 புல்லிக்கிடந்து - பொருந்தியிருந்து. வரம்பு இல் அறிவன் - எல்லையற்ற அறிவுடையோன் - மற்கலி தேவன். உரம் - வலிமை. உயிரோடு - உயிரும்.. நால் வகை அணு - நான்கு வகை அணுவும் ஆம். அவ்வணு - அந்நால்வகை அணுக்களும் (அவ்வுயிராய அணு என்றும் உரைப்பர்). பெய்வகை - தாம் கூடும் முறையால். (நால்வகை அணுக்களாவன, நிலம், நீர், தீ, காற்று என நால்வகையினவாம்.) திரள்வதும் செய்யும் - உருப்பெற்று நிற்கவும் செய்யும். வெவ்வேறாகி விரிவதும் செய்யும் - திரண்டு நின்ற அணுக்கள் தனித்தனியே பிரிந்தும் போவனவாம். விரிவது - பிரிவது. அவ்வகை அறிவது உயிர் எனப்படும் - அந்நால்வகை அணுவாலாய பொருள்களையும் அறிந்து நிற்பது உயிராம். இது உயிரின் இலக்கணம். வற்பம்- வன்மையாகிய ஊற்றுப் பண்புடையது. உறும் - பொருந்தும் (நிலம் வற்பமாகி உறும் என்க.) தாழ்ந்து - கீழ்நோக்கும் தன்மையதாய்.

121-130 சீதம் - குளிர். சுவை - இனிமைச் சுவையினை. இழின் என - மென்மைத் தன்மையுற்று. நிலம் சேர்ந்து ஆழ்வது - மண்ணில் கலந்து கீழ்நோக்கி இறங்குவது. தெறுதலும் - சுடுதலும். மேல்சேர் இயல்பும் - மேல் நோக்கிச் செல்லும் தன்மையும். விலங்கி - குறுக்காக இயங்கி. அசைத்தல் - பொருள்களை அசைவித்தல். கடன் - அதன் இயல்பு. இவை - நால்வகை அணுத்திரளின் காரியமாகிய பொருள்களும். விபரீதத்தால் - மாறுதலால் - அணுக்கள் பிரிதலால். வேற்றியல்பு - வேறுபட்ட - அணு உருவினை. (இவை விபரீதத்தால் வேற்றியல்பு எய்தும் என்க.) ஆதி - காரணம். யாவதும் - சிறிதும். புதிதாய்ப் பிறந்து - புதியனவாகத் தோற்றமுற்று.

ஒன்று ஒன்றில் புகுதா-ஒரு அணு பிறிதொரு அணுவில் புகா.

புதிதாய்ப் பிறந்து, ஒன்று ஒன்றில் புகுதா;
முது நீர் அணு நில அணுவாய்த் திரியா;
ஒன்று இரண்டாகிப் பிளப்பதும் செய்யா;
அன்றியும், அவல்போல், பரப்பதும் செய்யா;
உலாவும், தாழும், உயர்வதும் செய்யும்;
குலாம் மலை பிறவாக் கூடும்; பலவும்
பின்னையும் பிரிந்து, தம் தன்மைய ஆகும்;
மன்னிய வயிரமாய்ச் செறிந்து, வற்பமும் ஆம்;
வேய் ஆய்த் துளைபடும்; பொருளா முளைக்கும்;
தேயா மதி போல், செழு நில வரைப்பு ஆம்;
நிறைந்த இவ் அணுக்கள் பூதமாய் நிகழின்,
குறைந்தும், ஒத்தும், கூடா, வரிசையின்;
ஒன்று, முக்கால், அரை, கால், ஆய் உறும்;
துன்று மிக்கதனால் பெயர் சொலப்படுமே;
இக் குணத்து அடைந்தால் அல்லது, நிலன் ஆய்ச்
சிக்கென்பதுவும், நீராய் இழிவதும்,
தீயாய்ச் சுடுவதும், காற்றாய் வீசலும்,
ஆய தொழிலை அடைந்திடமாட்டா:
ஓர் அணுத் தெய்வக் கண்ணோர் உணர்குவர்;
தேரார், பூதத் திரட்சியுள், ஏனோர்:
மாலைப் போதில் ஒரு மயிர் அறியார்,
சாலத் திரள் மயிர் தோற்றுதல் சாலும்;
கரும்ம் பிறப்பும், கரு நீலப் பிறப்பும்,

ஒன்று - ஒரு அணு.(அணு இரண்டாகப் பிளப்பதும்செய்யா.)

131-140 அவை அவல் போன்று அகலவும் செய்யா. குலாம் - அழகிய.

மலையும் பிறவுமாக என "உம்" விரிக்க. கூடும் - (அணுக்கள்) திரளும். தம் தன்மைய-தம் அணுவியல்புடையவை. வயிரம்- இரத்தன வகை. வற்பமும் ஆம் - வன்மையாகிய ஊற்றினை உடையவும் ஆம். வேயாய்த் துளைபடும் - மூங்கிலாய் நின்று அத்துணைவன்மை யூறின்றித் துளைபடவும் செய்யும். தேயாமதி-முழுமதி. வரைப்பு-எல்லை-இடம். நிறைந்த-எங்கும் நிறைந்த - எல்லையற்ற. பூதமாய் - நிலம் முதலிய நான்குமாக. நால்வகைப் பூதமும் - முறையே ஒன்று, முக்கால், அரை, கால் என்னும் அளவில் அணுக்கள் கூடித் தோன்றும். இவ்வரிசை யில் குறைந்தும், ஒத்தும் கூடா என்க. ஒத்து - ஒத்த அளவாக.

141-150 துன்று மிக்கதனால் - மிகுந்து செறிந்த அணுவினால் அப்பூதம் பெயர் வழங்கப்பெறும் என்க. இக்குணத்து - இத்தன் மையை. அடைந்தால் அல்லது - (அணுக்கள்) அடையினன்றி. சிக்கென்பது - செறிவாய் இருத்தல். ஓரணு - தனித்திருக்கும் அணுவினை. ஏனோர் - பூதத் திரட்சியிலுள்ள மற்றையோர். தேரார் - பூதத் திரட்சியாகிய கண்ணால் அதனைக் காணமாட் டார். (தேர்தல் - ஈண்டுக் காண்டலை உணர்த்தி நின்றது.) ஒரு மயிர் - ஒரு உரோமத்தை. திரள் மயிர் - தொகுதியாகிய உரோமங்கள்.

பசும்ம் பிறப்பும்,

செம்ம் பிறப்பும்,

பொன்ன் பிறப்பும், வெண்ண் பிறப்பும்,
என்று இவ் ஆறு பிறப்பினும் மேவி,
பண்புறு வரிசையின்
பாற்பட்டுப் பிறந்தோர்
கழி வெண்
பிறப்பில் கலந்து, வீடு
அணைகுவர்;
அழியல் வேண்டார், அது
உறற்பாலார்;
இது செம்போக்கின்
இயல்பு: இது தப்பு-
மது மண்டலம் என்று
அறியல் வேண்டும்:
பெறுதலும், இழத்தலும்,
இடையூறு உறுதலும்,
உறும் இடத்து எய்தலும், துக்க சுகம் உறுதலும்
பெரிதீ அவை நீங்கலும், பிறத்தலும், சாதலும்,

கருவில் பட்ட பொழுதே
கலக்கும்:
இன்பமும் துன்பமும்
இவையும் அணு எனத் தகும்;
முன் உள ஊழே பின்னும்
உறுவிப்பது;
மற்கலி நூலின் வகை இது'
என்ன— '
சொல் தடுமாற்றத்
தொடர்ச்சியை விட்டு,
நிகண்ட வாதியை, 'நீ
உரை; நின்னூல்
புகழும் தலைவன் யார்?
நூற்பொருள் யாவை?
அப் பொருள் நிகழ்வும்,

கட்டும், வீடும்,
170 மெய்ப்பட விளம்பு'
என—விளம்பல் உறுவோன்

151-160 மேவி - பிறந்து. பண்புறு வரிசையின் பாற்பட்டு - ஒன்றற்கொன்று பண்புயர்ந்த அவ்வரிசையில் பகுதிப்பட்டு. கழிவெண் பிறப்பில் கலந்து - மிக்க வெள்ளிய பிறவியில் பிறந்து. அது உறற் பாலார் - கழிவெண் பிறப்பினை உறும் பான்மையினோர். அழியல் வேண்டார் - அழிதற்குரிய செயல்கள் செய்ய வேண்டார். இது செம்போக்கின் இயல்பு - அடைவே பிறந்து கழிவெண் பிறப்பில் வீடு எய்துதலாகிய இது செம்போக்கின் பெற்றியாகும். தப்புமது மண்டலம் எனப்படும் - அடைவே மேற்பிறப் பெய்தாமல் தீவினை செய்து தவறிக் கீழ்ப் பிறப்பு எய்துதல் மண்டலம் எனப்படும். பெறுதல் - ஒரு பொருளை எய்துதல்.

161-170 கருவிற்பட்டபொழுதே - தோன்றும் ஞான்றே. கலக்கும் - அவ்வுயிரைப் பொருந்தியுள்ளன. இவையும் - இன்ப துன்பங்கள். முன்னுள ஊழ் - பிறக்கும் முன்பே அமைந்து நின்ற ஊழ்வினையே. பின் - பிற்காலத்தில். உறுவிப்பது - வினைப் பயனை ஊட்டுவது. மற்கலி நூலின் வகை - மற்கலி தேவனது நூலில் கூறிய முறை. மற்கலி நூல் - ஒன்பது கதிர் என்னும் நூல். சொற்றடுமாற்றத் தொடர்ச்சி - முன்னுக்குப் பின் சொல் தடுமாறிப் பேசும் வாதம்; என்றது ஆசீவகவாதம். நிகண்டவாதி - சமணரில் ஒரு பிரிவினர். நிகழ்வு - உண்மை நிலை - தத்துவ நிலை கட்டு - வீடுபெறாமல் இருத்தற்குரிய பிணிப்பு. மெய்ப்பட - புலப்பட - தெளிவுற.

'இந்திரர் தொழப்படும் இறைவன் எம் இறைவன்;
தந்த நூற்பொருள்—தன்மாத்திகாயமும்,
அதன்மாத்திகாயமும், காலா காயமும்,
தீது இல் சீவனும், பரமாணுக்களும்,
நல்வினையும், தீவினையும், அவ் வினையால்
செய்வுறு பந்தமும், வீடும், இத் திறத்த:
ஆன்ற பொருள் தன் தன்மையது ஆயும்,'
தோன்று சார்வு ஒன்றின் தன்மையது ஆயும்,
அநித்தமும் நித்தமும் ஆகி நின்று,
நுனித்த குணத்து, ஓர் கணத்தின்கண்ணே,
தோற்றமும், நிலையும், கேடும், என்னும்
மாற்று-அரு மூன்றும் ஆக்கலும் உரித்தாம்:
நிம்பம் முளைத்து நிகழ்தல் நித்தியம்;
நிம்பத்து அப் பொருள் அன்மை அநித்தியம்;
பயற்றுத் தன்மை கெடாது, கும்மாயம்
இயற்றி, அப் பயறு அழிதலும்: ஏதுத்
தருமாத்திகாயம், தான் எங்கும் உளதாய்,
பொருள்களை நடத்தும், பொருந்த; நித்தியமா
அப்படித்தாகி, அதன்மாத்திகாயமும்
எப் பொருள்களையும் நிறுத்தல் இயற்றும்;
காலம், கணிகம் எனும் குறு நிகழ்ச்சியும்,
ஏலும் கற்பத்தின் நெடு நிகழ்ச்சியும்,
ஆக்கும்; ஆகாயம் எல்லாப் பொருட்கும்
பூக்கும் இடம் கொடுக்கும் புரிவிற்று ஆகும்;
சீவன் உடம்போடு ஒத்துக் கூடி,

171-180 இந்திரர் - சுரேந்திரர்கள். (நூல்கள், அங்காகமம், பூர்வாகமம். பகுசுருதி ஆகமம் என்பன. நூற் பொருள்கள் தன்மாத்தி காயம் முதலாக வீடு ஈறாக இத்திறத்த.) ஆன்றபொருள்— நிறைந்த பொருள்கள் - பொருள்கள் எல்லாம். தோன்று சார்வு ஒன்றின் - தான்தோன்றும் பற்றுக்கோட்டின் தன்மையை உடைத்தாயும். அநித்தம் - அழியும் இயல்பினது. நித்தம் - அழியாவியல்பினது. நுனித்த - கருதிய.

181-190 மாற்றரும் - தடுத்தற்கரிய. நிம்பம் - வேப்பம் விதை. நிகழ்தல்- நிகழ்தலால். அப்பொருள் - அம்மரமாய பொருள். இன்மை - இன்மையால். கும்மாயம் இயற்றி - சுண்டலாக்கி. பயறு அழிதல் - பயறு (ஒரு வகையால்) அழிதலால். ஏது - சான்றாகும் - திட்டாந்தமாகும். (தருமாத்திகாயம் தான் எங்கும் உளதாய்ப் பொருள்களை நித்தியமாகப் பொருந்த நடத்தும். அதன் மாத்திகாயம் பொருள்களை நிலைபெறச் செய்யும் என்க.)

191-195 கணிகம் - கணப்பொழுது. (காலம், கணிகம் என்னும் குறிய நிகழ்ச்சியையும் கற்பத்தின் நீண்ட நிகழ்ச்சியையும் ஆக்கும்.) பூக்கும் - தோன்றுதற்கு. புரிவிற்று - செயலை உடையது.

தா இல் சுவை முதலிய புலன்களை நுகரும்;
ஓர் அணு புற்கலம், புற உரு ஆகும்;
சீர்சால் நல்வினை, தீவினை-அவை செயும்;
வரு வழி இரண்டையும் மாற்றி, முன் செய்
அரு வினைப் பயன் அனுபவித்து, அறுத்திடுதல்-
அது வீடு ஆகும்' என்றனன். அவன் பின்
'இது சாங்கிய மதம்' என்று எடுத்து உரைப்போன்,
'தனை அறிவு-அரிதாய், தான் முக் குணமாய்,
மன நிகழ்வு இன்றி, மாண்பு அமை பொதுவாய்,
எல்லாப் பொருளும் தோன்றுதற்கு இடம் எனச்
சொல்லுதல் மூலப் பகுதி: சித்தத்து
மான் என்று உரைத்த புத்தி வெளிப்பட்டு
அதன்கண் ஆகாயம் வெளிப்பட்டு, அதன்கண்
வாயு வெளிப்பட்டு, அதன்கண் அங்கி-
ஆனது வெளிப்பட்டு, அதன்கண் அப்பின்
தன்மை வெளிப்பட்டு, அதில் மண் வெளிப்பட்டு,
அவற்றின் கூட்டத்தில் மனம் வெளிப்பட்டு—
ஆர்ப்புறு மனத்து ஆங்கார விகாரமும்,
ஆகாயத்தில் செவி ஒலி விகாரமும்,
வாயுவில் தொக்கும் ஊறு எனும் விகாரமும்,
அங்கியில் கண்ணும் ஒளியும் ஆம் விகாரமும்,
தங்கிய அப்பில் வாய் சுவை எனும் விகாரமும்,
நிலக்கண் மூக்கு நாற்ற விகாரமும்,
சொலப்பட்ட இவற்றில் தொக்கு விகாரமாய்,

புலன்களை - ஐம்பொறிகளின் அறி பொருள்களை. நுகரும் - துய்க்கும். ஓர் அணு - பரமாணுவே. புற்கலம் - உடம்பு. புற வுரு - தூல உருவம். அவை - அவற்றை - நல் வினையையும் தீ வினையையும், வருவழி - நல்வினைப் பயிற்சியால் நல்வினையும் தீவினைப் பயிற்சியால் தீவினையும் செய்யத் தோன்றிய ஞான்று. மாற்றி - நீக்கி. முன் - முந்திய காலத்தில். அறுத்திடுதலது - தொலைத்தலாகிய அதுவே.

201–210 தனை - மூலப் பகுதியை. முக்குணம் - சத்துவம், இரசம், தமம். மன நிகழ்வு இன்றி - மனத்தின் இயக்கத்திற்கு இலக்காகாமல். பொதுவாய் - பலவகைப் பொருள்களுக்கும் பொதுக் காரணமாக நின்று. இடம்–காரணம். சொல்லுதல்–சொல்லப்படுவது. சித்தத்து–சித்தம் என்னும் தத்துவத்தில். மான் என்ற புத்தி - மான் என்று கூறப்படும் புத்தி. அங்கி - தீ - அப்பின் தன்மை - தன்மையுடைய நீர்.

211–220 அவற்றின் கூட்டத்து - பஞ்ச பூதங்களின் கூட்டுறவிலே. ஆங்கார விகாரம் - ஆங்கார தத்துவமாகிய விகாரம். ஆகாயம் - ஆகாசம். செவியொலி - செவியும் ஒலியும். தொக்கும் ஊறு எனும் விகாரமும்-மெய்யென்னும் பொறியும் ஊறு என்னும் பரிசவிகாரமும். அப்பில் - நீரில். நிலக்கண்- மண்ணில். சொலப்பட்ட - சொல்லப்பட்டன.

வாக்கு, பாணி, பாதம், பாயுரு, உபத்தம், என
ஆக்கிய இவை வெளிப்பட்டு—இங்கு அறைந்த
பூத விகாரத்தால், மலை, மரம் முதல்
ஓதிய வெளிப்பட்டு, உலகாய் நிகழ்ந்து,
வந்த வழியே இவை சென்று அடங்கி,
அந்தம் இல் பிரளயம் ஆய், இறும் அளவும்,
ஒன்றாய், எங்கும் பரந்து, நித்தியம் ஆம்.
அறிதற்கு எளிதாய், முக் குணம் அன்றி,
பொறி உணர்விக்கும் பொதுவும் அன்றி,
எப் பொருளும் தோன்றுதற்கு இடம் அன்றி,
அப் பொருள் எல்லாம் அறிந்திடற்கு உணர்வாய்,
ஒன்றாய், எங்கும் பரந்து, நித்தியமாய்
நின்று, உள உணர்வாய் நிகழ்தரும் புருடன்.
புலம் ஆர் பொருள்கள் இருபத்தைந்து உள:
நிலம், நீர், தீ, வளி ஆகாயம்மே;
மெய், வாய், கண், மூக்கு, செவி-தாமே;
உறு சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்மே;
வாக்கு, பாணி, பாதம், பாயுரு, உபத்தம்;
ஆக்கும் மனோ, புத்தி, ஆங்கார, சித்தம்;
உயிர் எனும் ஆன்மா ஒன்றொடும் ஆம்' எனச்
செயிர் அறச் செப்பிய திறமும் கேட்டு—
'வைசேடிக! நின் வழக்கு உரை' என்ன—
'பொய் தீர் பொருளும், குணமும், கருமமும்,
சாமானியமும், விசேடமும், கூட்டமும்,
ஆம் ஆறு கூறு ஆம்: அதில் பொருள் என்பது

20-230 வாக்கு-பேசுதற்குரிய பொறி. பாணி-கையாகிய பொறி. பாதம்-காலாகிய பொறி. பாயுரு-மலங்கழிக்கும் பொறி. உபத்தம்-சிறுநீர் கழிக்கும் பொறி. (இக்கன் மேந்திரியங்கள் ஐந்தும் தொக்கு என்னும் ஞானேந்திரியத்தின் விகாரமாம்.)

ஓதிய - சொல்லப்பட்டவை. வந்த வழியே - தோன்றிய நெறியில் - தோன்றிய அடைவினில். அடங்கி - ஒடுங்கி. அந்தமில் பிரளயம் - பேரூழியிறுதி. எங்கும் பரந்து-எங்கும்

வியாபித்து. (மூலப்பகுதி நித்தியமாம் என்க புருடன் மூலப் பகுதிக்கு மறுதலை இயல்பிற்று என்பது). பொறியுணர் விக்கும் பொதுவுமன்றி - இந்திரியங்களால் அறிவித்தற்குரிய பொதுமையல்லாததாய். பொதுமை-சாதி. எப்பொருளும்- ஒரு பொருளும், அப்பொருள் எல்லாம் - தன்கண் பிறவாத பிற பொருள்களை யெல்லாம்.

231-240 உணர்வாய் - அறிவுறுவாய். புருடன் நிகழ்தரும் - புருட தத்துவம் இருக்கின்றது. புருடன் - உயிர். புலம் ஆம் - புலப்படுதற்குரிய. வளி - காற்று. மெய் - தொக்கிந்திரியம். உபத்தம் - சனன இந்திரியம். மனோபுத்தி ஆங்கார சித்தம் - மனமும் புத்தியும் ஆங்காரமும் சித்தமும். செயிர் - குற்றம் - ஐயமும் திரிபும். திறமும் - (மீமாம்சகனது) நெறியை,

241 244 வழக்கு - நூல் நெறியை-சமய நெறியினை. பொருள்-திரவியம். குணம் - பண்பு. கருமம் - வினை. சாமானியம் - பொதுமை. விசேடம் - சிறப்பு. கூட்டம் - சமவாயம். கூறு - பகுதி.

குணமும் தொழிலும் உடைத்தாய், எத் தொகைப்
பொருளுக்கும் ஏது ஆம்; அப் பொருள் ஒன்பான்—
ஞாலம், நீர், தீ, வளி, ஆகாயம், திசை,
காலம், ஆன்மா, மனம்: இவற்றுள் நிலம்
ஒலி, ஊறு, நிறம், சுவை, நாற்றமொடு, ஐந்தும்,
பயில் குணம் உடைத்து; நின்ற நான்கும்
சுவை முதல் ஒரோ குணம்-அவை குறைவு உடைய:
ஓசை, ஊறு, நிறம், நாற்றம், சுவை;
மாசு இல் பெருமை, சிறுமை, வன்மை,
மென்மை, சீர்மை, நொய்ம்மை, வடிவம்,
என்னும் நீர்மை; பக்கம் முதல் அநேகம்;
கண்ணிய பொருளின் குணங்கள் ஆகும்:
பொருளும் குணமும் கருமம் இயற்றற்கு
உரிய; உண்மை தரும், முதல் பொதுத்தான்;
போதலும் நிற்றலும் பொதுக் குணம் ஆதலின்,
சாதலும் நிகழ்தலும் அப் பொருள்-தன்மை;
ஒன்று அணு; கூட்டம், குணமும் குணியும்' என்று
ஒன்றிய வாதியும் உரைத்தனன் உடனே

245-250 *எத்தொகைப் பொருட்கும் ஏதுவாம் - எல்லாத் தொகுதிப் பட்ட பொருள்களுக்கும் காரணம் ஆம். ஒன்பான் - ஒன்பதாகும். ஞாலம் – நிலம். வளி – காற்று, பயில்குணம் – தன்கண் பொருந்திய பண்புகளாக. நின்ற நான்கும் – எஞ்சி நின்ற நீர், தீ, காற்று, ஆகாயம் என்பவை.*

251-260 *சுவைமுதல் ஒரோகுணமவைகுறைவுடைய – ஒலி, ஊறு, நிறம், சுவை என்னும் நான்கினுள் சுவை முதலாக ஓர் ஒரு குணம் ஒரொன்று குறைதலை உடையன. எனவே நீர் இந் நான்கு பண்பினையும் உடைத்தாம்; தீ ஒலி, ஊறு, நிறம்*

என்னும் முக்குணம் உடைத்தாம்; காற்று ஒலியும், ஊறும் உடைத்தாம்; ஆகாயம் ஒலி ஒன்றுமே உடைத்தாம் என்ற வாறும். வன்மை – வல்லென்ற பரிசம். மென்மை – மெல் லென்ற பரிசம். சீர்மை – கனம்; நொய்மைக்கு மறுதலைப் பண்பு. நொய்மை – கனமற்ற தன்மை. வடிவம் என்னும் நீர்மை - வடிவப் பண்பு. கண்ணிய – கருதப்பட்ட. பொருளும் குணமும் கருமம் இயற்றுதற்குரிய என்றது கருமம் அவ் விரண்டினைப்பற்றி நிற்கும் என்றவாறு. உண்மை - பொருண் மை - பொருள் தன்மை, குணத் தன்மை, தொழில் தன்மை என்னும் மூன்றும் தனித்தனியே உண்மையெனப்படும். "பொருண்மை சுட்டல்" என்பதனாலும் அறிக. இவை அபர சாமானியமாம். முதற்பொது - பரசாமானியம். போதலும் நிற்றலும் அழிவும் நிகழ்வும் பொதுக் குணம் – பொருள், குணம், தொழில் ஆகிய மூன்றிற்கும் உரிய பொதுவாயகுணம். சாதலும் நிற்றலும் - அழிவும் நிகழ்ச்சியும், அப்பொருள் - அம்மூன்று பொருள்.

261-262 ஒன்று - விசேடம். அணு - பரமாணுக்களில் உள்ளது. கூட்டம் - சமவாயம். குணமும் குணியும் - குணம், குண முடைய பொருள் இவற்றிடையே உளதாம். ஒன்றியவாதி - விசேடவாதி - வைசேடிகன்.

'பூத வாதியைப் புகல் நீ' என்ன—
'தாதகிப் பூவும் கட்டியும் இட்டு,
மற்றும் கூட்ட, மதுக் களி பிறந்தாங்கு,
உற்றிடும் பூதத்து, உணர்வு தோன்றிடும்;
அவ் வுணர்வு அவ் அப் பூதத்து அழிவுகளின்
வெவ் வேறு பிரியும், பறை ஓசையின் கெடும்:
உயிரொடும் கூட்டிய உணர்வு உடைப் பூதமும்,
உயிர் இல்லாத உணர்வு இல் பூதமும்,
அவ் வப் பூத வழி, அவை, பிறக்கும்;
மெய் வகை இதுவே; வேறு உரை விகற்பமும்,
உண்மைப் பொருளும், உலோகாயதன் உணர்வே;
கண்கூடு அல்லது, கருத்து அளவு அழியும்;
இம்மையும், இம்மைப் பயனும், இப் பிறப்பே;
பொய்ம்மை, மறுமை உண்டாய், வினை துய்த்தல்'
என்றலும்—எல்லா மார்க்கமும் கேட்டு,
'நன்று அல ஆயினும், நான் மாறு உரைக்கிலேன்;
பிறந்த முன் பிறப்பை எய்தப் பெறுதலின்
அறிந்தோர் உண்டோ?' என்று நக்கிடுதலும்—
'தெய்வ மயக்கினும், கனா உறு திறத்தினும்,
மையல் உறுவார் மனம் வேறு ஆம் வகை;
ஐயம் அன்றி, இல்லை, என்றலும்—'நின்
தந்தை தாயரை அனுமானத்தால் அலது,
இந்த ஞாலத்து, எவ் வகை அறிவாய்?
மெய்யுணர்வு இன்றி, மெய்ப் பொருள் உணர்வு-அரிய;
ஐயம் அல்லது, இது சொல்லப் பெறாய்' என—
உள்வரிக் கோலமொடு உன்னிய பொருள் உரைத்து,
ஐ-வகைச் சமயமும் அறிந்தனன்-ஆங்கு-என்.

263 270 புகல்-(உன் சமய நெறியைக்)கூறு. தாதகி-ஆத்தி. கட்டி-கருப்புக்கட்டி. இட்டு-சேர்த்து. மற்று - வேறு சில பொருள்களும். கூட்ட-சேர்ப்பதால். மதுக்களி பிறந்தாங்கு - கள்ளின் களிப்புத் தோன்றுவதுபோல. உற்றிடும் பூதத்து - கலக்கின்ற பூதங்களிடமாக. (அவ்வுணர்வு அவ்வப் பூதத்து அழிவுகளில் உறுப்புக்கள் தனித்தனி பிரிக்கப்படும் பறையில் அமைந்திருந்த ஓசை கெடுமாறு போலக் கெடும்.)

271-299 அவ்வப்பூதவழி - அவ்வப் பூதங்களின் இடமாக. மெய் வகை - பொருள் திறம் - தத்துவ நிலை. வேறு - வேறாக உள்ள.

உரை விகற்பமும் - சொல்லவேண்டிய வகைகளும். (வேறு உரை விகற்பமும் வேறு உண்மைப் பொருளும் எனக்கூட்டுக.

28. கச்சி மாநகர்புக்க காதை

மணிமேகலை வஞ்சியின் புறநகரத்திலிருந்து அகநகருட் புக்குத் தன்தாயரையும் அறவணரையும் நாடிப் பௌத்தப் பள்ளிக் குட் புகுந்தாள். அங்குத் தவம்புரிந்திருந்த கோவலன் தாதை மாசாத்துவானைக் கண்டு வணங்கித் தான் மணிமேகலா தெய்வத் தால் மணிபல்லவமடைந்து அங்குப் புத்தபீடிகையால் பழம்பிறப் புணர்ந்து அமுதசுரபியும் மந்திரம் மூன்றும் எய்திய திறத்தினைச்

சாற்றினள். மேலும்
கூறுவாளாய், "ஆபுத்திரன்
அறப்பயனுல்

சாவகநாட்டின் வேந்தனுயினன். அவன் பீடிகைகண்டு பிறப்புணர்ந்து மீண்டான்.

மணிபல்லவமடைந்து
தீவதிலகை மொழி
யால், காவிரிப்பூம்பட்டினம்
கடல்கொள்ளப்பட்ட செய்தியும்
என்
தாயரும் அறவணரும்

வஞ்சிமாநகர் எய்திய செய்தியும் நான்

அறிந்தேன்" என்றனள். மாசாத்துவான் மிக மகிழ்ந்து "நற்றவ நங்காய்! நான் நின்னைக் கண்டது என் நற்றவப் பயனேயாகும்'

என்று பாராட்டித் தன்திறத்தை அவளுக்குக் கூறினான்: "நின் தந்தையும் கண்ணகியும் எய்திய துன்பங் கேட்ட நான் செல்வம் முழுமையும் தானமாக வழங்கிப் பௌத்தமதம் தழுவித் துறவினை மேற்கொண்டேன். நின் தாதையின் ஒன்பது வழிமுறை முந்திய கோவலன் என்னும் பெரியோன்

இமயவரம்பனுக்கு உற்ற நண்பனு
தலால் இங்கு
இமயவரம்பனுடன் இருந்து,
இந்நகர்ப் பொழி
லில் சாரணர் கூறிய
அறவுரைகளைக் கேட்டுத்
துறவுளம் சிறந்து
செல்வமெல்லாம்
அறத்திறத்தில் வழங்கித்
துறவுபூண்டொழுகி (னன்.
அந்நாளில் அவன் எடுத்த புத்த
சைத்தியம் இங்கு உள்ள
மையால் இதனைக்கண்டு
வணங்க யான் இந்நகர்க்கு

வந்தேன்.

காவிரிப்பூம்பட்டினம்
கடல்கோட்படும் என்று
முனிவர் கூறினரா
தலின் ஈண்டே தங்கினேன்.
நின் தந்தையும் கண்ணகியும்
அறப்
பயனால் தெய்வயாக்கை
எய்தினராயினும் தம் தீவினையை
நுதர்தற்

குத் தோற்றம் எய்துவர். பின் கபிலையம்பதியினில் புத்தபகவனது உபதேசம் கேட்டுப் பிறப்பொழிவர். யானும் அக்காலத்தில் அவ

னருளறம் கேட்பேன். கந்திற்பாவை நினக்கு வருவதுரைத்ததும் கேட்டறிந்தேன். நீ புத்தன் நெறியில் புகுதற்குரிய ஏது நிகழ்ச்சி கச்சியின் கண்ணே உள்ளதாதலால் அறவணர் நின்தாயரோடு ஆண்டுச் சென்றுள்ளனர். அந்நகரில் வற்கடம் மிகுந்து ஐயமிடு வாரற்றமையால் முனிவர்கள் ஈண்டுவந்துள்ளனர். நீ அங்குச் சென்று நின்பாத்திறத்தினால் பல்லுயிரும் ஓம்புக" என்றனன்.

மணிமேகலைமாசாத்துவானை வணங்கிவானூடெழுந்துசென்று கட்சியின்புறத்தே தருமதவனத்தே இறங்கினள். காவலர் அரசற்கு அத்திறம்கூற அரசனும் அமைச்சர் முதலோரும் சென்று வணங் கிப் போற்றினர். அரசன் ஓர் தெய்வம் என்முன் தோன்றி "அறத்தகையாட்டி ஒருத்தி திப்பியப் பாத்திரம் ஏந்திவந்து பஞ்சந் தவிர்ப்பாள்; நீ வருந்தற்க; மணிபல்லவமும் கோமுகியும்போலநின் நகரில் செய்தமைத்திடுக. என்றுகூறி மறைந்தது" என்றுகூறி அங் ஙனம் அமைத்திருத்தலை அவட்குக் காட்டினன். கண்டுமகிழ்ந்த மணிமேகலை புத்தபீடிகையை அமைத்து மணிமேகலா தெய்வத் திற்கும் தீவதிலகைக்கும் அரசனைக்கொண்டு கோயிலும் கட்டு வித்துப் பூசையும்சிறப்பும் போற்றுமாறு செய்தனள். அவள் பல்லு யிரையும் அழைத்து உணவளித்து வருகையில் அறவணரும்தாய ரும் அவளுழைச் சென்றனராக அவர் வணங்கி வழிபட்டனள்.

ஆங்கு, தாயரோடு அறவணர்த் தேர்ந்து,
வாங்கு வில் தானை வானவன் வஞ்சியின்,
வேற்று மன்னரும் உழிஞை வெம் படையும்
போல், புறம் சுற்றிய புறக்குடி கடந்து—
சுருங்கைத் தூம்பின், மனை வளர் தோகையர்
கருங் குழல் கழீஇய கலவை நீரும்
எந்திர வாவியில் இளைஞரும் மகளிரும்
தம் தமில் ஆடிய சாந்து கழி நீரும்,
புவி காவலன்-தன் புண்ணிய நல்-நாள்
சிவிறியும் கொம்பும் சிதறு விரை நீரும்,
மேலை மாதவர் பாதம் விளக்கும்
சீல உபாசகர் செங் கை நறு நீரும்,
அறம் செய் மாக்கள் அகில் முதல் புகைத்து

1–10 அறவணர் - அறவணரை. தேர்ந்து - தேடி. வாங்குவில் தானை - வளைந்த வில்லை உடைய சேனை. வானவன் வஞ்சி - சேரனது வஞ்சியூர். உழிஞை வெம்படை - (வேற்று வேந்தரது) உழிஞை சூடி முற்றியுள்ள படை. புறம்-மதிலின் வெளியில். புறக்குடி - புறநகரத்துள்ள குடிகள். சுருங்கைத் தூம்பின் - கரந்து படுத்த நீர்ஓடும் வழியினால். கழீஇய - கழுவிய. கலவை - விரைப்பொருள் கலத்தலைஉடைய நானப்பொருள். எந்திரவாவி - நீர்வருதற்கும் செல்லுதற்கும் பொறியமைக்கப்பெற்ற பொய்கை. இளைஞர் - இளம்பருவத்தாடவர். தம்தமில் - தம்தம்வீட்டில். ஆடிய - பூசிய. சாந்து கழிநீர் - சந்தனத்தை கழுவிக் கழித்தநீர். புவிகாவலன் - சேரன். புண்ணிய நன்னாள்-பிறந்தநாளில். சிவிறி-நீர்தூவும் துருத்தி. கொம்பு - பீச்சாங்குழல்.

11–13 மேலை - மேன்மைபொருந்திய. சீல உபாசகர் - சீலங்களை உடைய பௌத்த உபாசகர்கள்; உபாசகர் - பௌத்தரில் விரதயங்காக்கும் இல்லறத்தோர். நறுநீர் - பூமுதலிய கலந்த நறிய நீர். முதல் - முதலியவற்றை.

நிறைந்த பந்தல் தசும்பு வார் நீரும்,
உறுப்பு முரண் உருமல் கந்த உத்தியினால்
செறித்து அரைப்போர்-தம் செழு மனை நீரும்,
என்று இந் நீரே எங்கும் பாய்தலின்,
கன்றிய கராமும், இடங்கரும், மீன்களும்,
ஒன்றிய புலவு ஒழி உடம்பின ஆகி,
தாமரை, குவளை, கழுநீர், ஆம்பல்,
பூமிசைப் பரந்து, பொறி வண்டு ஆர்ப்ப,
இந்திர தனு என, இலங்கு அகழ் உடுத்து—
வந்து எறி பொறிகள் வகை மாண்பு உடைய
கடி மதில் ஓங்கிய இடைநிலை வரைப்பில்,
பசு மிளை பரந்து, பல் தொழில் நிறைந்த,
வெள்ளிக் குன்றம் உள் கிழிந்து அன்ன,
நெடு நிலைதோறும் நிலாச் சுதை மலரும்,
கொடி மிடை வாயில் குறுகினள் புக்கு—
கடை காப்பு அமைந்த காவலாளர்
மிடைகொண்டு இயங்கும் வியன் மலி மறுகும்;
பல் மீன் விலைஞர், வெள் உப்புப் பகருநர்,
கள் நொடையாட்டியர், காழியர், கூவியர்,
மைந் நிண விலைஞர், பாசவர், வாசவர்,

14–20 பந்தல் - தண்ணீர்ப் பந்தர். தசும்பு—தண்ணீர்ச்சாலினின்று. வார்-வடிகின்ற. எங்கும் - அகழின் எவ்விடத்தும். கன்றிய - பொருதலில் அடிப்பட்ட. கராம், இடங்கர் என்பன முதலையின் வகையாம். ஒன்றிய - தமக்கு இயல்பாக அமைந்துள்ள. புலவு - நாற்றம், ஆகி - ஆகப்பெற்று.

21–30 பரந்து - பரவியிருத்தலால். ஆர்ப்ப - ஒலிக்குமாறு. (ஆர்ப்ப பரந்து என மாறுக.) இந்திரதனு - வானவில். பன்னிற மலர்களும் நிரை நிரையாகப் பூத்திருத்தலினாலும் வளைந்துள்ள மையாலும் ஆழ்ந்த நீரின் நீலநிறத் தோற்றத்தாலும் அகழி இந்திரவில் போன்றதென்றார். (ஆகி பரந்து இலங்கு அகழ் என்க.) வந்து எறி பொறிகள் - பகைவரைச் சென்று தாக்கும் இயந்திரங்கள். 'வந்து' இடவழுவமைதி. வகைமாண்பு உடைய - வகுத்தல் மாட்சியை உடைய. கடிமதில் - காப்பு மிக்கபுறமதில். இடைநிலை வரைப்பு - இடையே உள்ள இடம். மிளை - காவற்காடு. பஃறொழில் - பலதொழில்கள். நிலாச் சுதை மலரும் - சுண்ணும்பின் ஒளி விரிகின்ற. மிடை - நெருங்கிய. வாயில் - (அகமதிலின்) வாயிலை. (பஃறொழில் நிறைந்த உள்கிழித்தன்ன வாயில் என்க.) குறுகினள் புக்கு - அடைந்து உள்ளே புகுந்து. காப்பு அமைந்த - காத்தற்கு அமைதியுள்ள - காத்தலில்திறம்பட்ட. மிடைகொண்டு - மிடைதல்கொண்டு - நெருங்கி. வியன்மலி - அகலம்மிக்க.

31–33 விலைஞர் - விற்போர். பகருநர்–விற்போர். நொடையாட்டியர் - விற்கும் மகளிர்; நொடை-விலை. காழியர்–பிட்டு வாணிகர். கூவியர்-அப்பவாணிகர். மைந்நிணம்-ஆட்டின் ஊன். பாசவர்-இலையமுதிடுவோர்;

என்னுநர் மறுகும்; இருங் கோவேட்களும்,
செம்பு செய்ஞ்ஞரும், கஞ்சகாரரும்,
பைம்பொன் செய்ஞ்ஞரும், பொன் செய் கொல்லரும்,
மரம் கொல் தச்சரும், மண்ணீட்டாளரும்,
வரம் வர எழுதிய ஓவிய மாக்களும்,
தோலின் துன்னரும், துன்ன வினைஞரும்,
மாலைக்காரரும், காலக் கணிதரும்,
நலம் தரு பண்ணும் திறனும் வாய்ப்ப,
நிலம், கலம், கண்டம், நிகழக் காட்டும்
பாணர், என்று இவர் பல் வகை மறுகும்;
விலங்கரம் பொரூஉம் வெள் வளை போழ்நரோடு,
இலங்கு மணி வினைஞர் இரீஇய மறுகும்;
வேத்தியல், பொது இயல், என்று இவ் இரண்டின்
கூத்து இயல்பு அறிந்த கூத்தியர் மறுகும்;
பால் வேறு ஆக எண் வகைப் பட்ட
கூலம் குவைஇய கூல மறுகும்;
மாகதர், சூதர், வேதாளிகர், மறுகும்;
போகம் புரக்கும் பொதுவர் பொலி மறுகும்;
கண் நுழைகல்லா நுண் நூல் கைவினை

34-40 கயிறுதிரித்து விற்போர் எனலும் ஆம். என்னுநர்-என்போர்களது. இருங்கோவேட்கள்-மட்கலம்செய்வோர்கள்-குயவர்கள் செம்பு-செப்புப்பாத்திரங்களை. கஞ்சகாரர்-வெண்கலம் செய்யும் கன்னர். பைம்பொன் செய்ஞ்ஞர்-பொற்பணி செய்வோர். பொன்செய் கொல்லர் - உருக்குத்தட்டார். மரம்கொல் - மரத்தினைச் செதுக்கி இழைக்கின்ற. மண்ணீட்டாளர் - சுதையால் உருவங்கள் சமைக்கும் சிற்பிகள்; கட்டடக்கலைவல்ல சிற்பாசாரிகள் எனலும் ஆம். வரந்தர-வரந்தருமாறு. ஓவியம் எழுதிய மாக்களும்-தெய்வ ஓவியம்எழுதவல்ல ஓவியக்காரரும். தோலின் துன்னர்-தோல் தைக்கும் வினைஞர்-தோல் உறை முதலியன தைப்போர். துன்னகாரர்-துணிமுதலியன தைப்போர். காலக்கணிதர் - காலத்தைக் கணித்துரைக்கும் சோதிடர்.

41–50 திறன் - பண்ணின் இனம். வாய்ப்ப - தப்பாமல் பொருந்த. நிலம் கலம் கண்டம் நிகழ - மூவகைத் தானமும் யாழ் முதலிய இசைக்கலமும் மிடற்றுக் குரலும் இணங்கி நடக்குமாறு. தானம் மூன்றுவன: ஓசையில் எடுப்பும் படுப்பும் இடைமையும் ஆய மூவகை நிலைகளாம்; எழுத்து அசை, சீர் என்றும் கூறுப. விலங்கு - குறுக்காக. பொருஉம் - உடைக்கின்ற. போழ்நர் - பிளப்பவர். இரீஇய - தங்கிய. வேத்தியல் பொதுவியல் என்பன இருவேறு கூத்துக்கள். கூத்தியல்பு - கூத்தின் இலக்கணம். பால்வேறு ஆக - தனித்தனிக் கூறாக. குவைஇய - குவித்துள்ள. எண்வகைக் கூலமாவன:- நெல், புல், வரகு, தினை சாமை, இறுங்கு, தோரை, கழைநெல் என்பன. கூல மறுகு - தனியக்கடைத்தெரு. மாகதர் சூதர் வேதாளிகர் என்போர் அரசரை இசையோடு புகழ்ந்து பாடும் பகுதியினர்.

51–52 போகம் புரக்கும் பொதுவர் - இன்பத்தை ஓம்பிப்பேணும் பொதுமகளிர். நுழைகல்லா - நுழைதல் ஆகாத.

வண்ண அறுவையர் வளம் திகழ் மறுகும்;
பொன் உரை காண்போர் நல் மனை மறுகும்;
பல் மணி பகர்வோர் மன்னிய மருகும்;
மறையோர் அருந் தொழில் குறையா மறுகும்;
அரைசு இயல் மறுகும்; அமைச்சு இயல் மறுகும்;
எனைப் பெருந் தொழில் செய் ஏனோர் மறுகும்;
மன்றமும், பொதியிலும், சந்தியும், சதுக்கமும்,
புதுக் கோள் யானையும் பொன் தார்ப் புரவியும்
கதிக்கு உற வடிப்போர் கவின் பெறு வீதியும்—
சேண் ஓங்கு அருவி தாழ்ந்த செய்குன்றமும்;
வேனல் வீற்றிருக்கும் விரை மரக் காவும்;
விண்ணவர் தங்கள் விசும்பு-இடம் மறந்து,
நண்ணுதற்கு ஒத்த நல் நீர்-இடங்களும்,
சாலையும், கூடமும்; தமனியப் பொதியிலும்;
கோலம் குயின்ற கொள்கை-இடங்களும்;
கண்டு மகிழ்வுற்று—கொண்ட வேடமோடு
அந்தர சாரிகள் அமர்ந்து இனிது உறையும்
இந்திர விகாரம் என எழில் பெற்று,
நவை அறு நாதன் நல்-அறம் பகர்வோர்
உறையும் பள்ளி புக்கு—இறை வளை நல்லாள்,
கோவலன் தாதை, மா தவம் புரிந்தோன்,

53–60 வண்ண அறுவை-நிறங்களை உடைய ஆடைகள். பொன் உரை காண்போர்-பொன்னை உரைத்து மாற்றறியும் வணிகர்; இவர் பொற்கலங்களை விலைதந்து வாங்குவோர். பகர்வோர்-விற்போர். மன்னிய - பொருந்திவாழும். அரசியல் மறுகு - அரசர் பெருந்தெரு. அமைச்சியல் மறுகு - அமைச்சர் தெரு. எனை - ஏனைய: விகாரம். மன்றம், பொதியில் என்பன பலரும் தங்குதற்பொருட்டு அமைக்கப்பெற்ற பொது நிலையங்கள். அன்றி, மன்றம் மரத்தடியில் அமைந்த மேடை எனவும் பொதியில் பலர்க்கும் புகுதற்குரித்தாய் அமைந்த தவச்சாலை எனவும் கூறலும் ஆம். சந்தி - முச்சந்தி. சதுக்கம் - நாற்சந்தி. புதுக்கோள்யானை-புதிதாகப் பிடிக்கப் பெற்ற யானை.

61-70 கதிக்கு உற - நடையில் வன்மையுறுமாறு. வடிப்போர் - சமைப்போர்-பயிற்றுவோர். வேண் அவா - மிக்க ஆசையை. விரைமரம் - சந்தனமரம் முதலியன. ஒத்த - பொருந்திய - தகுதியுள்ள. சாலை - அறச்சாலை. கூடம் - மண்டபம். தமனியப்பொதியில் - தங்கத்தால் அழகுறுத்தப்பட்ட அம்பலம். கோலம் குயின்ற - அழகாகச் செய்து அமைக்கப்பெற்ற. கொள்கைஇடங்கள் - மெய்ந்நூற் கொள்கையை ஒழுக்குதற்குரிய இடங்கள். அந்தரசாரிகள் - ஆகாயசாரிகள் - சாரண முனிவர். இந்திரவிகாரம் - இந்திரனால் அமைக்கப்பெற்ற

புத்த விகாரம்.

71-73

நாதன் - புத்தனது. பள்ளி - பௌத்தப்பள்ளி. இறை - மணிக்கட்டினில் அமைந்துள்ள. நல்லாள் - மணிமேகலை.

தாதை - தந்தை.

பாதம் பணிந்து, தன் பாத்திர தானமும்;
தானப் பயத்தால், சாவக மன்னவன்,
ஊனம் ஒன்று இன்றி, உலகு ஆள் செல்வமும்;
செல்வற் கொணர்ந்து, அத் தீவகப் பீடிகை
ஒல்காது காட்ட, பிறப்பினை உணர்ந்ததும்;
உணர்ந்தோன் முன்னர், உயர் தெய்வம் தோன்றி,
மனம் கவல் கெடுத்ததும்; மா நகர் கடல் கொள,
அறவண அடிகளும் தாயரும் ஆங்கு விட்டு,
இறவாது இப் பதிப் புகுந்தது கேட்டதும்;
சாவக மன்னன் தன் நாடு எய்த,
தீவகம் விட்டு இத் திரு நகர் புகுந்ததும்;
புக்க பின், அந்தப் பொய்-உருவுடனே
தக்க சமயிகள்-தம் திறம் கேட்டதும்;
அவ்வவர் சமயத்து அறி பொருள் எல்லாம்
செவ்விது அன்மையின் சிந்தை வையாததும்;
நாதன் நல்-அறம் கேட்டலை விரும்பி,
மாதவன்-தேர்ந்து வந்த வண்ணமும்;
சொல்லினள் ஆதலின் 'தூயோய்! நின்னை என்
நல்வினைப் பயன்கொல், நான் கண்டது?' என,
'தையல்! கேள்: நின் தாதையும் தாயும்
செய்த தீவினையின் செழு நகர் கேடுற,
துன்புற விளிந்தமை கேட்டு, சுகதன்
அன்பு கொள் அறத்திற்கு அருகனேன்ஆதலின்,
மனைத்திறவாழ்க்கையை மாயம் என்று உணர்ந்து,
தினைத்தனை ஆயினும், செல்வமும், யாக்கையும்,
நிலையா என்றே நிலைபெற உணர்ந்தே,
மலையா அறத்தின் மா தவம் புரிந்தேன்—
புரிந்த யான் இப் பூங் கொடிப் பெயர்ப் படூஉம்
திருந்திய நல் நகர் சேர்ந்தது கேளாய்:

74–80 செல்வன் - புண்ணியராசனை கவல் - கவலையை.

81–90 மாநகர் - காவிரிப்பூம்பட்டினம். தீவகம் - மணிபல்லவம். அந்தப் பொய்யுறு - மந்திரத்தால் எய்திய ஆறுருவம். தக்க சமயிகள் - திறமிக்க சமயவாதிகள். திறம் - நெறிகளை. அறிபொருள் - நூற்பொருள்கள். செவ்விது அன்மையின் - பொருந்துவன அல்லாமையால்: 'செவ்விது' பால்வழுவமைதி. நாதன் - புத்தனது. மாதவன் - அறவணரை.

91–102 செய்த - முற்பிறப்பிற் செய்த. தீவினை - சங்கமனைக் கொல்வித்த பாவம். செழுநகர் - வளங்கெழுகூடல். விளிந்தமை - இறந்தமையை. சுகதன் - புத்தனால் கூறப்பட்ட. அன்பு கொள்வாழ்க்கை - எவ்வுயிரிடத்தும் அன்பினைக் கொண்டு வாழும் அருள்வாழ்க்கை. அருகனேன் - தகுதியுடையேன். மனைத்திற வாழ்க்கை - இல்லற வாழ்க்கை. மாயம் - வஞ்சம் பொருந்தியது. மலையா அறத்தின் - முரண்பாடில்லாத புத்த தருமத்தினைப் பொருந்திய. பூங்கொடிப் பெயர் – வஞ்சி என்னும் பெயர்.

குடக் கோச் சேரலன், குட்டுவர் பெருந்தகை,
விடர்ச் சிலை பொறித்த வேந்தன், முன் நாள்,
துப்பு-அடு செவ் வாய்த் துடி இடையாரொடும்,
இப் பொழில் புகுந்து ஆங்கு, இருந்த எல்லையுள்—
இலங்கா தீவத்துச் சமனொளி என்னும்
சிலம்பினை எய்தி, வலம் கொண்டு, மீளும்
தரும சாரணர், தங்கிய குணத்தோர்,
கரு முகில் படலத்துக் ககனத்து இயங்குவோர்,
அரைசற்கு ஏது அவ்வழி நிகழ்தலின்,
புரையோர்-தாமும் இப் பூம்பொழில் இழிந்து,
கல்-தலத்து இருந்துழி—காவலன் விரும்பி,
முன் தவம் உடைமையின், முனிகளை ஏத்தி,
பங்கயச் சேவடி விளக்கி, பான்மையின்,
அங்கு-அவர்க்கு அறு சுவை, நால் வகை, அமிழ்தம்
பாத்திரத்து அளித்து, பலபல சிறப்பொடு,
வேத்தவையாரொடும், ஏத்தினன் இறைஞ்சலின்,
பிறப்பின் துன்பமும், பிறவா இன்பமும்,
அறத்தகை முதல்வன் அருளிய வாய்மை,
இன்ப ஆர் அமுது இறைவன் செவிமுதல்,
துன்பம் நீங்கச் சொரியும் அந் நாள்—
நின் பெருந் தாதைக்கு ஒன்பது வழி முறை
முன்னோன் கோவலன், மன்னவன்-தனக்கு
நீங்காக் காதல் பாங்கன் ஆதலின்,
தாங்கா நல்-அறம் தானும் கேட்டு,
முன்னோர் முறைமையின் படைத்ததை அன்றி,

103-110 குடக்கோ - மேலைநாட்டின் (சேரநாட்டின்) அரசன் ஆகிய. சேரலன் - சேரன். குட்டுவர் பெருந்தகை-குட்டநாட்டாருக்கு வேந்தன் ஆகிய. விடர் - இமயத்தின் விடரின்கண். வேந்தன்- இமயவரம்பன். துப்பு - பவளத்தை. துடி - ஓர் இசைக்கருவி. சிலம்பினை - மலையை. தங்கிய - நிலைத்த. படலத்து - தொகுதியை உடைய. ககனத்து - ஆகாயத்தில்.

111-120 அரைசற்கு - இமயவரம்பற்கு. அவ்வழி - அவ்விடத்தில். ஏது நிகழ்தலின் - புத்ததருமம் பெறுதற்குரிய நல்லூழ்முதிர்தலால். புரையோர் - பெரியோர் - சாரணர். கற்றலம் - சாரணர் அமர்ந்திருந்து தருமம்கூறுதற்கு அமைந்த திருந்திய கற்பலகை. பான்மையின் - முறைப்படி. அறுசுவைகள்:- கைப்பு, கார்ப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, தித்திப்பு. நால்வகை அமிழ்தாவன;- உண்பன, தின்பன, நக்குவன, பருகுவன. இறைஞ்சலின் - வணங்கியமையால். முதல்வன் - புத்தன். வாய்மை - நால்வகைச் சத்தியங்கள்.

121-127 செவிமுதல் - செவியிடத்தில். வழிமுறை - தலைமுறை. மன்னவன் - இமயவரம்பன். காதற்பாங்கன் - அன்புடைய நண்பன். தாங்கா - அறத்தினை மேற்கொண்டு. (தானும் நல்லறம் கேட்டுத் தாங்கா என்க.) முறைமையில் - நெறியால். படைத்ததை - தேடிய செல்வத்தை.

தன்னான் இயன்ற தனம் பல கோடி,
எழு-நாள் எல்லையுள், இரவலர்க்கு ஈத்து,
தொழு தவம் புரிந்தோன் சுகதற்கு இயற்றிய,
வான் ஓங்கு சிமையத்து வால் ஒளிச் சயித்தம்
ஈனோர்க்கு எல்லாம் இடர் கெட இயன்றது;
கண்டு, தொழுது ஏத்தும் காதலின் வந்து, இத்
தண்டாக் காட்சித் தவத்தோர் அருளி,
"காவிரிப் பட்டினம் கடல் கொளும்" என்ற அத்
தூ உரை கேட்டு, துணிந்து இவண் இருந்தது;
இன்னும் கேளாய், தல் நெறி மாதே!
"தீவினை உருப்பச் சென்ற நின் தாதையும்
தேவரில் தோற்றி, முன் செய் தவப் பயத்தால்;
ஆங்கு, அத் தீவினை இன்னும் துய்த்து,
பூங்கொடி! முன்னவன் போதியில் நல்-அறம்
தாங்கிய தவத்தால், தான் தவம் தாங்கி,
காதலி-தன்னொடு கபிலை அம் பதியில்,
நாதன் நல் அறம் கேட்டு, வீடு எய்தும்" என்று,
அற்புதக் கிளவி அறிந்தோர் கூற,
சொல்-பயன் உணர்ந்தேன்; தோகை! யானும்
அந் நாள் ஆங்கு-அவன் அற நெறி கேட்குவன்:
நின்னது தன்மை, அந் நெடு நிலைக் கத்தில் துன்னிய
துவதிகன் உரையின், துணிந்தனை அன்றோ?
தவ நெறி அறவணன் சாற்றக் கேட்டனன்:
ஆங்கு-அவன்-தானும் நின் அறத்திற்கு ஏது,
பூங்கொடி! கச்சி மா நகர் ஆதலின்,
மற்று அம் மா நகர் மாதவன் பெயர் நாள்,
பொன்-தொடி! தாயரும் அப் பதிப் படர்ந்தனர்:
அன்னதை அன்றியும், அணி-இழை! கேளாய்:
பொன் எயில் காஞ்சி நாடு கவின் அழிந்து,

128–130 தன்னுன் இயன்ற -தன்னுல் ஆக்கப்பட்ட. தொமுதவம் - பிறர் தொழத்தக்க தவத்தை. சுகதற்கு - புத்தனுக்கு.
131–140 சிமையத்து - உச்சியை உடைய. வால் - வெண்மை. சயித்தம் - புத்தவிகாரம். ஈனேர் - இவ்வுலகினர். தூவுரை - மெய்யுரை. துணிந்து - முனிவர் சொல்லைத் தேறி; ஒருமிலையாய் எனினும் ஆம். சென்ற - இறந்த. தோற்றி - தோன்றி. (செய்தவப் பயத்தால் தேவரிற்ரேூற்றி என்க.)
141–150 முன்னவன் - புத்தன். (போதியின் முன்னவன் நல்லறம் தாங்கிய தவத்தால் என்க.) கிளவி - சொல்லை. சொற்பயன் உணர்ந்தேன் - சொற்பொருளைத் தெளிந்தேன். கேட்குவன் - கேட்பேன். அறவணன் சாற்றக் கேட்டனன் - துவதிகனுல் நீ வருவதுணர்ந்தமையை அறவணர் கூறயான் அறிந்தேன்.
151–156 ஆங்கவன் - அறவணன். ஏது – நிகழ்ச்சிக்குரிய பற்றுக்கோடு. (பூங்கொடி! நின்னறத்திற்கு ஏது. ஆங்கவன் தானும் கச்சிமாநகரும் ஆதலின் எனக்கூட்டுக.) மாதவன் பெயர் நாள் - அறவணன் சென்ற நாளில். படர்ந்தனர் - சென்றனர். எயில் - மதில்.

மன் உயிர் மடிய, மழை வளம் கரத்தலின்,
அந்நகர் மாதவர்க்கு ஐயம் இடுவோர்
இன்மையின், இந்நகர் எய்தினர் காணய்:
ஆர் உயிர் மருந்தே! அந் நாட்டு அகவயின்,
கார் எனத் தோன்றிக் காத்தல் நின் கடன்' என,
அருந் தவன் அருள ஆய்-இழை வணங்கி,
திருந்திய பாத்திரம் செங் கையின் ஏந்தி,
கொடி மதில் மூதூர்க் குடக்கண் நின்று ஓங்கி,
வட திசை மருங்கின் வானத்து இயங்கி,
தேவர் கோமான் காவல் மா நகர்
மண் மிசைக் கிடந்தென, வளம் தலைமயங்கிய
பொன் நகர் வறிதாப் புல்லென்று ஆயது
கண்டு, உளம் கசிந்த ஒண் தொடி நங்கை,
பொன் கொடி மூதூர்ப் புரிசை வலம் கொண்டு,
நடு நகர் எல்லை நண்ணினள், இழிந்து—
தொடு கழல் கிள்ளி துணை இளங் கிள்ளி,
செம் பொன் மாச் சினைத் திருமணிப் பாசடைப்
பைம் பூம் போதிப் பகவற்கு இயற்றிய
சேதியம் தொழுது, தென்மேற்கு ஆக,
தாது அணி பூம்பொழில்-தான் சென்று எய்தலும்—
வையம் காவலன்-தன்-பால் சென்று,
கைதொழுது இறைஞ்சி, கஞ்சுகன் உரைப்போன்,
'கோவலன் மடந்தை குணவதம் புரிந்தோள்,
நாவல்-அம் தீவில் தான் நனி மிக்கோள்,
அங்கையின் ஏந்திய அமுதசுரபியொடு,
தங்காது, இப் பதித் தருமதவனத்தே,
வந்து தோன்றினள், மா மழை போல்' என—

157–170 கார் என - மேகம்போல. மூதூர் - வஞ்சி. குடக்கண் நின்று- மேற்கிடத்திலிருந்து. வானத்து வடதிசை மருங்கின் இயங்கி- வானவழியால் வடதிசைப்பக்கமாகச் சென்று. மாநகர் - அமராவதிநகர். கிடந்தென - கிடந்தாற்போல. வளம்தலை மயங்கிய - எல்லாவளமும் தன்னிடத்தே விரவிக் கிடக்கப் பெற்ற. வறிதா - பொருளற்றதாக. புல் என்று ஆயது.- பொலிவற்றதாயிற்று. உளம்கசிந்த - மனம் உருகிய. புரிசை-

கோட்டை மதில்.

171–180 எல்லை - இடம். நண்ணினள் - குறுகினளாய். இழிந்து - இறங்கி. தொடுகழல் - கட்டிய வீரக்கழலை உடைய. கிள்ளி யின் துணை (தம்பி) ஆகிய இளங்கிள்ளி. மாச்சினை - பெரிய கிளைகள். திருமணி - நீலமணிபோன்ற. பாசடை - பசுமை யாகிய இலைகளை உடைய. பகவன் - புத்தன். சேதியம் - சைத்தியம் - விகாரம். தென்மேற்காக (உள்ள) தாதணி பூம் பொழில். தாது - மகரந்தம். வையங்காவலன் - துணையிளங் கிள்ளி. இறைஞ்சி - வணங்கி. கஞ்சுகன் - பிரதானி; கஞ்சுகம் - சட்டை. குணவதம் - சீலம் தாங்கிய விரதம்.

181–188 தருமதவனம் - கச்சிநகரில் ஒரு பொழில். மாமழை - கரு முகில்.

மந்திரச் சுற்றமொடு மன்னனும் விரும்பி,
'கந்திற்பாவை கட்டுரை எல்லாம்
வாய் ஆகின்று' என வந்தித்து ஏத்தி,
ஆய் வளை நலலாள்-தன்னுழைச் சென்று,
'செங்கோல் கோடியோ, செய் தவம் பிழைத்தோ,
கொங்கு அவிழ் குழலார் கற்புக் குறைபட்டோ,
நலத்தகை நல்லாய்! நல் நாடு எல்லாம்
அலத்தற்காலை ஆகியது அறியேன்:
மயங்குவேன் முன்னர், ஓர் மா தெய்வம் தோன்றி,
"உயங்காதொழி, நின் உயர் தவத்தால், ஓர்
காரிகை தோன்றும்; அவள் பெருங் கடிஞையின்
ஆருயிர்மருந்தால், அகல் நிலம் உய்யும்;
ஆங்கு-அவள் அருளால், அமரர் கோன் ஏவலின்,
தாங்கா மாரியும்-தான் நனி பொழியும்;
அன்னாள் இந்த அகல் நகர் புகுந்த
பின் நாள், நிகழும் பேர் அறம் பலவால்;
கார் வறம் கூறினும், நீர் வறம் கூராது;
பார்-அகம் வீதியின், பண்டையோர் இழைத்த
கோமுகி என்னும் கொழு நீர் இலஞ்சியொடு,
மா மணிபல்லவம் வந்தது ஈங்கு என,
பொய்கையும் பொழிலும் புனைமின்" என்று அறைந்து, அத்
தெய்வதம் போய பின், செய்து யாம் அமைத்தது
இவ் இடம்' என்றே, அவ் இடம் காட்ட—
அத் தீவகம் போன்று கா அகம் பொருந்தி,
கண்டு, உளம் சிறந்த காரிகை நல்லாள்,
'பண்டை எம் பிறப்பினைப் பான்மையின் காட்டிய,
அங்கு அப் பீடிகை இது என' அறவோன்

184-190 மந்திரச் சுற்றம் – சூழ்ச்சித்துணைவர் - அமைச்சர்கள். கந்திற்பாவை - தூணின்கண்ணுள்ள பாவையில் உறையும் தெய்வம். கச்சிநகரிலும் புகாரில்போல இத்தெய்வம் வருவதுரைத்ததுபோலும். கட்டுரை - பொருள் பொதிந்த மொழி. வாய்ஆகின்று - தவறாதது ஆகின்றது. நல்லாள் - மணிமேகலை, உழை-இடத்தில். கோடி-வளைந்து. பிழைத்து-தவறி. கொங்கு

அவிழ் குழலார் - பூக்கள் மலர்ந்து தங்கிய கூந்தலை உடையவர். இல்லுறை மடந்தையர். நலத்தகை - அறத்தின் மாட்சியை உடைய.

191–200 அலத்தற்காலை - வருந்தும்காலம் - பஞ்சகாலம். அறியேன் - காரணத்தினை அறிந்திலேன். மயங்குவேன்மூன்னர் - கலங்கிய என்முன்னே. உயங்காதொழி - வருந்தற்க. கடிஞை - பிச்சைப்பாத்திரம். ஆருயிர் மருந்து - உணவு. உய்யும் - வாழ்வெய்தும். தாங்காமாரி - மிக்க மழை. வறம்கூரினும் - வறட்சிமிகினும்.

201–210 பாரக வீதியில் - பூமியின்மருங்கில். இலஞ்சியொடு - பொய்கையையும். பொழில் - சோலை. தீவகம் - தீவு. காவகம் - சோலையின் இடம். உளம் - மகிழ்ச்சி. (எப்பண்டைப் பிறவியை என்க.) எம் - எமது.

பங்கயப் பீடிகை பான்மையின் வகுத்து,
தீவதிலகையும், திரு மணிமேகலா
மா பெருந் தெய்வமும், வந்தித்து ஏத்துதற்கு,
ஒத்த கோயிலுள் அத்தகப் புனைந்து,
விழவும் சிறப்பும் வேந்தன் இயற்ற,
தொழுதகை மாதர் தொழுதனள் ஏத்தி—
பங்கயப் பீடிகை, பசிப் பிணி மருந்து எனும்,
அங்கையின் ஏந்திய அமுதசுரபியை
வைத்து நின்று, 'எல்லா உயிரும் வருக' என
பைத்து அரவு அல்குல் பாவை-தன் கிளவியின்,
மொய்த்த மூ-அறு பாடை மாக்களில்,
காணார், கேளார், கால் முடம் ஆனோர்,
பேணா மாக்கள், பேசார், பிணித்தோர்,
படிவ நோன்பியர், பசி நோய் உற்றோர்,
மடி நல்கூர்ந்த மாக்கள், யாவரும்;
பல் நூறாயிரம் விலங்கின் தொகுதியும்;
மன் உயிர் அடங்கலும்; வந்து, ஒருங்கு ஈண்டி—
அருந்தியோர்க்கு எல்லாம் ஆர் உயிர் மருந்து ஆய்,
பெருந் தவர் கைப் பெய் பிச்சையின் பயனும்;
நீரும், நிலமும், காலமும், கருவியும்,
சீர் பெற வித்திய வித்தின் விளைவும்;
பெருகியதென்ன, பெரு வளம் சுரப்ப,
வசித் தொழில் உதவி வளம் தந்தது என,
பசிப் பிணி தீர்த்த பாவையை ஏத்திச்
செல்லும்காலை தாயர்-தம்முடன்,
அல்லவை கடிந்த அறவண அடிகளும்,
மல்லல் மூதூர் மன் உயிர் முதல்வி
நல் அறச்சாலை நண்ணினர் சேறலும்—

211-220 பங்கயம் - பாதம்: ஆகுபெயர். பான்மையின் - இயல்புற. (தீவதிலகை. தெய்வம், என்புழி இரண்டாவது விரிக்க.) உளத்தக - அழகாக. தொழுதகை - தொழத்தக்க பெருமை. பீடிகை - பீடிகையில். பைத்து - படம் எடுத்த.

21-230 பேணா - பாதுகாக்கப்படாத. பேசார் - ஊமைகள். பிணித்தோர் - நோயுடையோர். படிவநோன்பியர் - தவவேடம் பூண்டு நோன்பியற்றுவோர். மடிநல் கூர்ந்த - சோம்பலால்

வறுமையுற்ற. அடங்கலும் - முழுவதும். ஈண்டி - ஈண்ட - குழும. ஆருயிர் மருந்து ஆய் - உணவு சுரக்க; ஆய் - ஆக. கைப்பெய் பிச்சை - கையின்கண் இட்ட பிச்சை.

231-233 சீர்பெற - சிறப்பாய் அமைய. வித்திய - விதைத்த. என்ன போல: உவம உருபு. பெருவளம் சுரப்ப - பெரியவளம் மேன்மேல் பொங்க. வசி - மழை. தொழில் - உழவிற்கு; 'வசித்தொழில்' விரித்தல் விகாரம். தந்தது என - தந்தமையால். செல்லுங்காலை - செல்லாநிற்க: 'ஐ' சாரியை. தாயர் - மணிமேகலையின் தாயர். அல்லவை - தீவினைகள். மல்லல் - வளம். மூதூர் - பேரூரில் - கச்சியில். மன்னுயிர் முதல்வி - மணிமேகலை. நண்ணினர் சேறலும் - சென்றடைந்தவுடன்.

சென்று அவர்-தம்மைத் திருவடி வணங்கி,
'நன்று' என விரும்பி, நல் அடி கழுவி,
ஆசனத்து ஏற்றி, அறு சுவை நால் வகைப்
போனகம் ஏந்தி, பொழுதினில் கொண்டபின்,
பாசிலைத் திரையலும் பளிதமும் படைத்து,
'வாய்வது ஆக, என் மனப்பாட்டு அறம்' என,
மாயை விட்டு இறைஞ்சினள், மணிமேகலை-என்.

239-240 நன்று என - அறத்தின்பயன் என்று சொல்லி.

241-245 போனகம் - உணவு. ஏந்தி - எடுத்தளிக்க. (பொழுதோடு ஏந்தி என்க.) கொண்டபின் - உட்கொண்டபின். பாசிலைத் திரையல் - பசிய வெற்றிலை. பளிதம் - பச்சைக் கருப்பூரம். படைத்து - கொடுத்து. வாய்வதாக - தவறுததாக. மனப்பாட்டறம் - மனத்தின்கண் தோன்றிய அறம். (மனப்பாட்டறம் வாய்வதாக என்க.) மாயைவிட்டு - பொய்மை நீங்கி.

29. தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதை

வணங்கி நின்ற மணிமேகலையை வாழ்த்தி அவளை நோக்கி அறவண அடிகள் "அரசன் பீலிவளையின் மகனைக் கடல் கொண்டமையால் அவனைத் தேடி அலைந்த நிலையில் இந்திர விழா நிகழ்த்துதலை மறந்தானாக அதனால் வெகுண்ட மணிமேகலா தெய்வத்தின் சாபத்தாலும் இந்திரன் எய்திய கோபத்தாலும் காவிரிப்பூம்பட்டினம் கடல் கோட்பட்டது. நின் தாயாருடன் நினக்கு அறங்கூறுதற் பொருட்டு இங்கு வந்தெய்தினேன்" என்றனர். மணிமேகலை அவரைப் பணிந்து "யான் புண்ணிய ராசனுடன் மணிபல்லவம் சென்ற ஞான்று தீவ திலகையின் மொழியால் காவிரிப்பூம்பட்டினம் கடல் கோட்பட்டமையும்

அரசன் வேறற்றம் சென்றமையும் நீவிர் மூவிரும் வஞ்சியுட் சென்றதும் அறிந்தேன். வஞ்சியுட் சென்று வேற்றுருவெய்தி பல சமயவாதியரை அடுத்து அவர்தம் நூற்றிறம் கேட்டு அவை யாவும் முரண்பட்ட கருத்துடையன என்பது தெரிந்து மதியாது விட்டேன். நீவிர் எனக்கு அறங்கூறற்கு இங்கெய்தியுள்ளமையை மாசாத்துவனார் கூற உணர்ந்து இங்கு வந்தேன். ஆதலால் அடிகள்! நீர் எனக்கு மெய்ப்பொருளைக் கூறியருள்க'' என்றனளாக, அறவணர் குற்றமற்ற பிரத்தியக்கம் அனுமானம் ஆகிய இரண்டினையும் விளக்கி, அளவையின்கட்படும் குற்றங்களையும் புலங்கொளக்கூறிக் குற்றமற்ற அளவைகளைக்கொண்டு பொருள்களின் பொய்மையும் மெய்மையும் ஐயமின்றித் தெளிக'' என்று அருளினர்.

இறைஞ்சிய இளங்கொடி-தன்னை வாழ்த்தி,
அறம் திகழ் நாவின் அறவணன் உரைப்போன்,
'வென் வேல் கிள்ளிக்கு, நாகநாடு ஆள்வோன்-
தன் மகள் பீலிவளை-தான் பயந்த
புனிற்று-இளங் குழவியைத் தீவகம் பொருந்தி,
தனிக் கலக் கம்பளச் செட்டி கைத் தரலும்,
வணங்கி, கொண்டு, அவன் வங்கம் ஏற்றிக்
கொணர்ந்திடும் அந் நாள், கூர் இருள் யாமத்து,
அடைகரைக்கு அணித்தா அம்பி கெடுதலும்,
மரக்கலம் கெடுத்தோன் மைந்தனைக் காணாது,
அறைசற்கு உணர்த்தலும், அவன் அயர்வுற்று,
விரைவனன் தேடி, விழாக்கோள் மறப்ப,
தன் விழாத் தவிர்தலின், வானவர் தலைவன்—
நின் உயிர்த் தந்தை நெடுங் குலத்து உதித்த
மன் உயிர் முதல்வன் மகர வேலையுள்
முன்னிய வங்கம் முங்கிக் கேடுற,
பொன்னின் ஊசி பசுங் கம்பளத்துத்—
துன்னியதென்னத் தொடு கடல் உழந்துழி,
எழு-நாள் எல்லை, இடுக்கண் வந்து எய்தா,
வழுவாச் சீலம் வாய்மையின் கொண்ட
பான்மையின், தனது பாண்டு கம்பளம்-
தான் நடுக்குற்ற தன்மை நோக்கி,
"ஆதி முதல்வன், போதி மூலத்து
நாதன் ஆவோன், நளி நீர்ப் பர...

1-10 வென்-வெற்றி. பீலிவளை-பெயர். ப... - ஈன்றுதந்த. புனிற்றிளங்குழவி - ஈன்ற அணிமைக் காலத்தை ... குழந்தை; 'புனிற்றிளங்குழவி', 'பச்சிளங் குழவி' போ... தீவகம்- மணிபல்லவத் தீவின் இடத்தில். த... -ஒற்றைக் கப்பல். கூர் இருள் - மிக்க இருட்டு. அடைகரை - கரைச் சார்பாய இடம்; கரையும் ஆம். அணித்தா - அணிமையாக - அருகில். அம்பி - கலம்.

11-20 அயர்வு - மனச்சோர்வு. விரைவனன் - விரைய. விழாக்கோள்- விழாக் கொண்டாடுதலை, தவிர்தலின்-ஒழிதலால். மன்னுயிர் ... கோவலன்

முதலவன - உயர்களான தலைவன் - [illegible]

முதாதையாகிய கோவலன் என்னும் வணிகன். மகரவேலை - சுறாமீன்களை உடைய கடல். முன்னிய - சென்ற. துன்னியது என்ன - தைத்துக்கொண்டிருந்தாற் போல. தொடுகடல் - கீழ்கடல் : சகரரால் தோண்டப்பட்ட கடல். உழந்துழி - வருந்தியபோழ்து. எய்தா - அடையாமைக்குக் காரணமாகிய. வழுவாச் சீலம் - தவறாத பஞ்சசீலத்தினை. வாய்மையின் - நால் வகை வாய்மையோடு.

21-24 பான்மையின் - தன்மையால். பாண்டு - வெண்மையான. நடுக்கு - நடுங்குதல். போதிமூலத்து நாதன் ஆவோன் - புத்தபெருமானாகத் தோற்றம் எடுப்போன். நளி நீர்ப் பரப்பில் - கடற் பரப்பில். நளி - செறிவு; மிகுதியும் ஆம்.

எவ்வம் உற்ருன் - தனது எவ்வம் தீர்" என,
பவ்வத்து எடுத்து, "பாரமிதை முற்றவும்,
அற அரசு ஆளவும், அற ஆழி உருட்டவும்,
பிறவிதோறு உதவும் பெற்றியள்" என்றே
சாரணர் அறிந்தோர் காரணம் கூற,
அந்த உதவிக்கு, ஆங்கு - அவள் பெயரைத்
தந்தை இட்டனன், நினே ; தையல் நின் துறவியும்
அன்றே கனவில் நனவென அறைந்த
மென் பூ மேனி மணிமேகலா தெய்வம்
என்பவட்கு ஒப்ப — அவன் இடு சாபத்து
நகர் கடல் கொள்ள, நின் தாயரும் யானும்,
பகரும் நின் பொருட்டால், இப் பதிப் படர்ந்தனம்'
என்றலும் — அறவணன் தாள் இணை இறைஞ்சி,
'பொன் திகழ் புத்த பீடிகை போற்றும்
தீவதிலகையும் இத் திறம் செப்பினள்
ஆதலின், அன்ன அணி நகர் மருங்கே,
வேற்றுருக் கொண்டு, வெவ் வேறு உரைக்கும்
நூல் துறைச் சமய நுண் பொருள் கேட்டே,
அவ் உரு என்ன ஐ - வகைச் [illegible]யமும்
செவ்விது அன்மையின், சிந்தையின் வைத்திலேன் ;
அடிகள் ! மெய்ப்பொருள் அருளுக' என்ன—
'நொடிகுவென், நங்காய்! நுண்ணிதின் கேள், நீ :
ஆதி சினேந்திரன் அளவை இரண்டே —
ஏதம் இல் [illegible]யம், கருத்து அளவு என்ன :
சுட்டுணர்வ[illegible]யக்கம் ஐயச் சொலி,
விட்டனர் [illegible]ம், கிரியைகள்;

பவ்[illegible] - கடலிலிருந்து. பாரமிதை - பத்து வகைப் பார மிதை[illegible]. முற்றவும் - முழுமையும் பெறவும். அறம் - புத்த தருமம். அறவாழி - தருமசக்கரம். பிறவிதோறும்-புத்தனது எல்லாப் பிறவியிலும். உதவும் பெற்றியள்-உதவும் தன்மையள்.

31-40 ஆங்கவள் - மணிமேகலா தெய்வத்தினது. நின்னை - நினக்கு: வேற்றுமை மயக்கம். துறவி - துறவினை. அன்றே - நினக்குப் பெயரிட்ட அந்நாளிலே. நனவு என - விழிப்பின் கண் [illegible] அறைந்த - கூறிய. மணிமேகலா

தெய்வம் என்பவட்கு ஒப்ப - மணிமேகலா தெய்வம் சாப மிட்டது போல. அவன் - இந்திரன். சாபத்து - சாபத்தால். நகர் - காவிரிப்பூம் பட்டினம். படர்ந்தனம் - எய்தினோம். பொன் திகழ் - ஞாயிறு போல் விளங்குகின்ற அன்ன - அந்த.

41-50 நூற்றுறை-நூல் நெறியை உடைய. ஐவகைச் சமயம்-வைதிகச் சமயம், சாங்கியம், வைசேடிகம், சமணம், உலகாயதம் என்பன. செவ்விது அன்மையின்-நேரியவை அல்லாமையால், 'செவ்விது' பால்வழுவமைதி; செவ்விது - நேர்மையும் ஆம். அடிகள்! - அண்மைவிளி. நொடிகுவென் - கூறுவேன். ஆதி சினேந்திரன் - புத்தனால் கூறப்பட்ட. ஏதம் - வழு. பிரத்தியம்-காண்டலளவை. கருத்தளவு-அனுமான அளவை. சுட்டுணர்வை - கண்டுணரும் உணர்வை. (நாமசாதி குணக் கிரியைகள் சுட்டுணர்வைப் பிரத்தியக்கமெனச் சொல்லிவிட்டனர் எனக் கூட்டுக.)

மற்று - அவை அனுமானத்தும் அடையும் என்க:
காரண, காரிய, சாமானியக் கருத்து;
ஓரின், பிழைக்கையும் உண்டு; பிழையாதது
கனலில் புகைபோல் காரியக் கருத்தே;
ஏனை அளவைகள் எல்லாம் கருத்தினில்
ஆன முறைமையின் அனுமானம் ஆம் - பிற:
பக்கம், ஏது, திட்டாந்தம், உபநயம்,
நிகமனம், என்ன ஐந்து உள: அவற்றில்,
பக்கம், "இம் மலை நெருப்புடைத்து" என்றல்;
"புகையுடைத்து ஆதலால்" எனல், பொருந்து ஏது;
"வகை அமை அடுக்களை போல்" திட்டாந்தம்;
உபநயம், "மலையும் புகையுடைத்து" என்றல்;
நிகமனம், "புகையுடைத்தே நெருப்புடைத்து" எனல்:
"நெருப்புடைத்து அல்லாது யாதொன்று, அது புகைப்
பொருத்தம் இன்று, புனல் போல்" என்றல்
மேயவி பக்கத்து மீட்சி மொழி ஆய்,
வைதன்மிய திட்டாத்தம் ஆகும்:
தூய காரிய ஏதுச் சுபாவம்
ஆயின், "சத்தம் அநித்தம்" என்றல்
பக்கம்; "பண்ணப்படுதலால்" எனல்,

51-60 மற்று - அசை நிலை. அவை - நாம சாதி குணக் கிரியைகள். (அனுமானத்தாலும் நாமசாதி குணக் கிரியைகள் அறியப்பெறும் என்றவாறு) காரண காரிய சா[illegible]கருத்து-காரணானுமானம் காரியானுமானம் பொ[illegible]ஆகிய அனுமான அளவை. பிழைக்கையும் உ[illegible]ண்டு. பிறழ்ச்சியற்ற காரியானுமானமே பிழையாத[illegible] என்[illegible]ர், "கனலிற் புகைபோல் காரியக் கருத்தே பிழையாதது" [illegible]றார். ஏனை அளவைகள் - பிற சமயத்[illegible] கூறும் [illegible]னம் சத்தம் முதலிய அளவைகள். கருத்[illegible]ல் [illegible] முறைமையின் - ஆராய்ச்சியாற் றோன்றும் நெறியினால். அனுமானம் [illegible]ம் - அனுமான அளவையு[illegible] அடங்குவன. பக்கம், ஏது, திட்டாந்தம், உபநயம், நிகம[illegible]ம் என்பன அவை பற்றிக் கூறப்படும் வாக்கியங்களைக் குறி[illegible] நின்றன. இவை பிறர் பொருட்டாய அனுமானத்தின் ஐவகை உறுப்புக்களாம். எனல் - என்னும் வாக்கியம். என்றல் என்று கூறும் வாக்கியம். எனல், என்றல் என்பன தொழிலாகு பெயராய் நின்றன.

61-70 விபக்கம் - துணிபொருளின்மை தெளியப்பட்ட இடம். 'மேயவிபக்கத்து மீட்சிமொழியாய்'' என்றே பாடம் கொள்க, மீட்சி மொழி - துணிபொருளில்லாத இடத்தில் ஏதுவும் இல்லாமல் மீளுதலை உணர்த்தும் வாக்கியம். வைதன்மிய திட்டாந்தம் - துணிபொருளின்மையோடு உளதாய ஏது வின்மையின் நிலைக்களனாய திட்டாந்தம் காட்டும் வாக்கியம். தூய காரிய ஏதுச் சுபாவம் ஆயின் - குற்றமற்ற காரியானு மானத்தின் தன்மையை ஆராயின். (காரியானுமானம் உதா ரண முகத்தால் விளக்கப்படுகிறது.) அநித்தம் - அழியும் தன்மைத்து.

பக்க தன்ம வசனம் ஆகும்:
"யாதொன்று யாதொன்று பண்ணப்படுவது,
அநித்தம், கடம் போல்" என்றல் சபக்கத்
தொடர்ச்சி: "யாதொன்று அநித்தம் அல்லாதது,
பண்ணப் படாதது, ஆகாசம் போல்" எனல்
விபக்கத் தொடர்ச்சி, மீட்சி மொழி என்க:
அநன்னுவயத்தில் பிரமாணம் ஆவது,
"இவ் வெள்ளிடைக்கண் குடம் இலை" என்றல்
செவ்விய பக்கம்; "தோன்ருமையில்" எனல்
பக்க தன்ம வசனம் ஆகும்;
"இன்மையின் கண்டிலம் முயற்கோடு" என்றல்
அந் நெறிச் சபக்கம்; "யாதொன்று உண்டு, அது
தோற்றரவு அடுக்கும், கைந் நெல்லிபோல்" எனல்
ஏறற விபக்கத்து உரை எனல் ஆகும்:
இவ்வகை, ஏதுப் பொருள் சாதிப்பன;
"என்னை, காரியம் புகை சாதித்தது?" என்னின்,
"புகை உள இடத்து நெருப்பு உண்டு" என்னும்
அன்னுவயத்தாலும், "நெருப்பு இலா இடத்துப்
புகை இல்லை" என்னும் வெதிரேகத்தாலும்,
புகைஇ நெருப்பைச் சாதித்தது: என்னின்,
நேரிய புகையில் நிகழ்ந்து உண்டான
ஊர்த்தச் சாமம், கௌடிலச் சாமம்,

71-80 பக்கதன் [illegible] னம் - ஏது வாக்கியம். கடம் - குடம். சபக்கத் தொடர் [illegible] ய திட்டாந்த வாக்கியம். பண்ணப்படாது என்பு [illegible] ந சொல் வருவித்தீ. அது பண்ணப் படா [illegible] பக்கத் தொடர்ச்சி மீட்சிமொழி-வைதன்மிய திட் [illegible] யம்; விபக்கத்தில் துணிபொருளும் ஏதுவும் இ [illegible] ந்தலைக் கூறும் வாக்கியம் என்றவாறு. அந [illegible] மை என்னும் பொருளை அறிதற்கண். பிரமாண [illegible] பது - அனுமானம் அளவையாவது (எங்ஙனம் எனில்). செவ்விய - குற்றமற்ற. பக்கத்தன்ம வசனம் - ஏது வாக்கியம்.

இன்மையிற் கண்டிலம் முயற்கோடு என்றல் - யாது இல்லாத

81-90 [illegible] முயற்கோடுபோல [illegible]
தோ அது காணப்படாது முயற்கோடுபோல இன்மையைத் துணியும்
வாக்கியம். அந்நெறிச் சபக்கம் - இன்மையைத் துணியும்
துறையின் சபக்க வசனமாம். தோற்றரவு அடுக்கும் -
தோன்றுதலை உறும். ஏற்ற - அநன்னுவயத்தை நாட்டும்
நெறிக்கேற்ற. காரியம் புகை சாதித்தது என்னை என்னில் -
காரியமாகிய புகை காரணமாகிய நெருப்பினை நாட்டுவதெவ்
வகையில் எனில். இனி, 86 முதல் 108 வரையுள்ள அடிகளால்
அன்னுவயமும் வெதிரேகமும் காட்டிய அத்துணையால் துணி
பொருளை நாட்டலாகாது. குற்றமில்லாப் பக்கமும் ஏதவும்
திட்டாந்தமும் காட்டப்பட்டாலே துணிபொருள் நாட்டப்
பட்டதாகும் என்பது விளக்கப்படுகின்றது.
தோன்றியுள்ள. ஊர்த்ச் சாமம் -
91-100 நிகழ்ந்து உண்டான - தோன்றியுள்ள. ஊர்த்ச் சாமம் - வளைவாய
மேனோக்கிய கருமை வடிவம், கௌடிலச் சாமம் - வளைவாய
கருமை வடிவம்.

வாய்த்த நெருப்பின் வரு காரியம் ஆதலின்,
மேல் நோக்கிக் கறுத்திருப்ப, பகைத்திருப்ப,
தாமே நெருப்பைச்-சாதிக்க வேண்டும்:
அன்னுவயம் சாதிக்கின், "முன்னும்,
கழுதையையும், கணிகையையும்
தம்மில், ஒருகாலத்து, ஓர் இடத்தே,
அன்னுவயம் கண்டான், பிற்காலத்து,
கழுதையைக் கண்ட இடத்தே கணிகையை
அனுமிக்க வேண்டும்; அது கூடா."
"நெருப்பு இயா இடத்துப் புகை இலை எனல் நேர் அத்
திருத்தகு வெதிரேகம் சாதிக்கும்" என்னின்,
"நாய் வால் இல்லாக் கழுதையின் பிடரில்
நரி வாலும் இலையாக், காணப்பட்ட
அதனையே கொண்டு, பிறிதோர் இடத்து,
நரி வாலினால் நாய் வாலை னுமித்தல்
அரிதாம்" அதனால் அதுவும் ஆகாது.
ஒட்டிய உபநயம், நிகமனம் இரண்டும்
திட்டாந்தத்திலே சென்று அடங்கும்.
பக்கம், ஏது, திட்டாந்தங்கள்,
ஒக்க நல்லவும் தீயவும் உள: அதில்
வெளிப்பட்டுள்ள தன்மியினையும்,
வெளிப்பட்டுள சாத்திய தன்மத்திறம்
பிறிதின் வேறு ஆம் வேறுபாட்டினையும்,
தன்கண் சார்த்திய நயம் தருதல் உ

கறுத்திருப்ப - கருப்பாக ... திருப்ப-வனேத் திருப்பவை. சாதிக்கவேண்டும்-காட் ... (காரியும் காரணத்தைச் சாதிப்பதன்று; எக் ... ர்த்தச் சாமம் முதலியன தீயின் காரி ... ந்தச் சாமம் தீயை அனுமித்தல் கூடுமோ? கூடா ... வே காரியம் காரணத்தைச் சாதியாது என்றவாறு.) ... வயம் - ஏது வுள்ள இடத்தில் துணிபொருளும் ... தொடர்ந்து கூட்டும் வாக்கியம். கணிகை-பரத்தை. ... கண்டான்-ஒரு நிலைக்களத்திருத்தலைக் கண்டான்.

101-110 அனுமிக்க வேண்டும் - அனுமான ... டிய நிலைவரும் அது கூடா - அங்ஙனம் அனுமித்... பொருந்தாது: கடைக் குறை. வெதிரேகம் — துணிபொருளின்மையோடு ஏதுவின் மை யும் நியதியாக உடனிகழ்தலைக் கூறும் வாக்கியம். அனுமித்தல் அரிதாம் — அனுமானம் செய்தல் இயலாது. ஒட்டிய — ஏதுவையும் துணிபொருளையும் பக்கத்தோடுபொருத்திப் பேசும் தன்மை வாய்ந்த. திட்டாந்தத்தில்-திட்டாந்த வாக்கியத்தில்.

111-120 வெளிப்பட்டுள்ள தன்மியினையும் - கேட்போனுக்கு விளங்கி யுள்ள ப்க்கத்தினையும். வெளிப்பட்டுள சாத்திய தன்மத்திறம் பிறிதின் வேறும் வேறுபாட்டினையும்-கேட்போனுக்கு விளங்கி யுள்ள துணிபொருளின் பெற்றியானது; ஏதுவில்லா நிலைக் களத்திலிருந்து பிரிந்து நிற்கும் வேறுபாட்டினையும். தன்கண்சார்த்திய நயம் தருதலுடையது-தன்னேடு பொருத் திக் கூறப்படும் நல்லியல்பை உறுவதாக உள்ளதே.

நன்கு என் பக்கம் என நாட்டுக; அது-தான்,
"சத்தம் அநித்தம், நித்தம்" என்று ஒன்றைப்
பற்றி நாட்டப்படுவது; தன்மி
சத்தம்; சாத்திய தன்மம் ஆவது
நித்த-அநித்தம். நிகழும் நல் ஏது
மூன்றாய்த் தோன்றும்—மொழிந்த பக்கத்து
ஊன்றி நிற்றலும், சபக்கத்து உண்டாதலும்,
விபக்கத்து இன்றியே விடுதலும்; சபக்கம்
சாதிக்கின், பொருள்-தன்னால் பக்கத்து
ஓதிய பொது வகை ஒன்றி இருத்தல்;
சத்த அநித்தம் சாத்தியம் ஆயின்,
"ஒத்த அநித்தம் கட-ஆதி போல்" எனல்;
விபக்கம் விளம்பில், "யாதொன்று யாதொன்று
அநித்தம் அல்லாதது, பண்ணப் படாதது,
ஆஅகாசம் போல்" என்று ஆகும்;
பண்ணப்படுதலும், செயலிடைத் தோன்றலும்,
நண்ணிய பக்கம் சபக்கத்திலும் ஆய்,
விபக்கத்து இன்றி, அநித்தத்தினுக்கு
மிகத் தகும் ஏதுவாய் விளங்கிற்று என்க.
ஏதம் இல் திட்டாந்தம் இரு வகைய—
சாதன்மியம், வைதன்மியம், என:
சாதன்மியம் எனப்படுவது-தானே,
"அநித்தம் க... -ஆதி அன்னுவயத்து" என்கை;
வைதன்மி[illegible] ...ந்தம், "சாத்தியம்
எய்தா இ[illegible] ... இன்மை"—

த[illegible] ...த்திய தன்மம் - துணிபொருள்.

121-130 நல்[illegible] ஏதுவின் இலக்கணம். மூன்றாய்த் தோன்று[illegible] மூன்று பிரிவாய் உள்ளது. பக்கத்து ஊன்றி நிற்றல் - பக்கத்தின்கண் நிலைத்து நிற்றல். சபக்கத்து - தெளியப்பட்ட துணிபொருளை உடைய இடத்தில். விபக்கத்து - துணிபொருளின்மை தெளியப்பட்ட இடத்தில். சபக்கம்

சா துவவல - சபக்கத்தைக் கூறுமிடத்துல. பொருள் தன்னுல் ஓதிய பொது வகை - பக்கப்பொருளின் கண் கூறப்பட்ட ஏ து வு ம் துணிபொருளும். ஒன்றியிருத்தல் - பொருந்தியிருத்தலை உடையதேயாகும். கடாதி - குடம் முதலியன.

131-141 ஏதம் - குற்றம். சாதன்மிய திட்டாந்தமாவது - துணிபொருளையும் ஏதுவையும் உடைய அன்னுவய திட்டாந்தம். வை தன்மிய திட்டாந்தமாவது - துணிபொருளின்மையும் ஏதுவின்மையும் ஒருங்குடைய வெதிரேக திட்டாந்தம். அன்னுவயத்து கடாதி அநித்தம் என்கை - அன்னுவய வியாத்தியோடு கூட்டி, கட ாதி அநித்தம் என்று கூறுதல்.

சாத்தியம் எய்தாவிடத்து ஏதுவும் இன்மை - சாத்தியத்தின் இன்மையோடுகூடிய ஏதுவின்மைக்கு இடமாகிய பொருள்: இது வைதன்மிய திட்டாந்தம் என்பதன் இலக்கண வாக்கியமாதலால் இங்ஙனமே கருத்துக் கொள்ளத்தகும்.

இத்திறம் நல்ல சாதனத்து ஒத்தன.
தீய பக்கமும், தீய ஏதுவும்,
தீய எடுத்துக்காட்டும் ஆவன—
பக்கப் போலியும், ஏதுப் போலியும்,
திட்டாந்தப் போலியும் ஆஅம். இவற்றுள்
பக்கப்போலி ஒன்பது வகைப்படும்—
பிரத்தியக்க விருத்தம், அனுமான
விருத்தம், சுவசன விருத்தம், உலோக
விருத்தம், ஆகம விருத்தம், அப்பிர-
சித்த விசேடணம், அப்பிரசித்த
விசேடியம், அப்பிரசித்த உபயம்,
அப்பிரசித்தா சம்பந்தம், என,
எண்ணிய இவற்றுள், பிரத்தியக்க விருத்தம்
கண்ணிய காட்சி மாறுகொளல் ஆகும்;
"சத்தம் செவிக்குப் புலன் அன்று" என்றல்.
மற்று அனுமான விருத்தம் ஆவது
கருத்து அளவையை மாறுகக் கூறல்;
"அநித்தியக் கடத்தை நித்தியம்" என்றல்.
சுவசன விருத்தம் தன் சொல் மாறி இயம்பல்;
"என் தாய் மலடி" என்றே இயம்பல்.
உலக விருத்தம் உலகின் மாறும் உரை;
"இலகு மதி சந்திரன் அல்ல" என்றல்.
ஆகம விருத்தம் தன் நூல் மாறு அ[illegible]
அநித்த வாதியா உள்ள வைப[illegible]
"அநித்தியத்தை நித்தியம்"[illegible]
அப்பிரசித்த விசேடணம் ஆவது [illegible]

142-150 நல்லசாதனத்து–நல்ல ஏதுவி[illegible]ப்போலி–பக்க வசனம் போல் தோன்றி, ஆராயுங்கால் [illegible]ாருய் ஒழிவது. ஏதுப்போலி – ஏது வசனம் போல் தோன்றி ஆராய்வுழி [illegible]ன்ருய் ஒழிவது. திட்டந்தப் போலி – திட்டாந்த வசனம் போல் தோன்றி, அராய்வுழி அன்ருய் ஒழிவது.

151-160 பிரத்தியக்க விருத்தம் - காட்சியளவைக்கு மாறுபடத் துணிபொருள் நாட்டப்படும் பக்கம். கருத்தளவையை மாறாகக் கூறல் - அனுமான அளவைக்கு மாறுபடத் துணிபொருள் நாட்டப்படும் பக்கம்; அளவையை—அளவைக்கு:வேற்றுமை மயக்கம். சுவசனம் - தனது கூற்று தன் சொல் மாறி - தன் கூற்றுக்கு மாறாக.

161-167 இலகு - விளங்குகின்ற. ஆகமம் - நூல், மாறு - மாறாக, அநித்தவாதியாய் உள்ள வைபாடிகன் என்று பாடம் கோடலே பொருந்தும் : என்னை? வைபாடிகன் அநித்தவாதியாதலின்; வைசேடிகன் அநித்தவாதியன்மையால், "அநித்தவாதியாய் உள்ள வைசேடிகன்" என்று பாடம் கோடல் பொருந்தாது. நுவறல் - சொல்லுதல். அப்பிரசித்த விசேடணம் - எதிரிக்குத் தெரியாத சாத்தியத்தை நாட்டுதற்கு இடமாய பக்கம்.

தத்தம் எதிரிக்குச் சாத்தியம் தெரியாமை;
பௌத்தன் மாறாய் நின்ற சாங்கியனைக்
குறித்து, "சத்தம் விநாசி" என்றால்,
அவன் அவிநாசவாதி ஆதலின்,
சாத்திய விநாசம் அப்பிரசித்தம் ஆகும்.
அப்பிரசித்த விசேடியம் ஆவது
எதிரிக்குத் தன்மி பிரசித்தம் இன்றி
இருத்தல்; சாங்கியன், மாறாய் நின்ற
பௌத்தனைக் குறித்து, "ஆன்மாச் சைதனியவான்"
என்றால், அவன் அநான்ம வாதி-
ஆதலின், தன்மி அப்பிரசித்தம்.
அப்பிரசித்த-உபயம் ஆவது
மாறு ஆனோர்க்குத் தன்மி சாத்தியம்
ஏறாது, அப்பிரசித்தமாய் இருத்தல்;
பகர் வைசேடிகன் பௌத்தனைக் குறித்து,
"சுகம் முதலிய தொகைப் பொருட்குக் காரணம்
ஆன்மா" என்றால், சுகமும் ஆன்மாவும்
தாம் இசையாமையில் அப்பிரசித்த-உபயம்.
அப்பிரசித்தா சம்பந்தம் ஆவது
எதிரிக்கு இசைந்த பொருள் சாதித்தல்;
மாறு ஆம் பௌத்தற்கு, "சத்த அநித்தம்"
கூறில், அவன் கொள்கை அஃது ஆகலில்,
வேறு சாதிக்க வேண்டாது ஆகும்.
ஏதுப் பே[illegible]ன், மூன்று ஆகும்—
அசித்த[illegible]ம், விருத்தம், என.
உபய-[illegible]ள[illegible]யதர-அசித்தம்,

[illegible]னாசி – அழியும் தன்மையது.
171-180 அ[illegible]தியவாதி, சாத்திய விநாசம் - சாத்தியமாய அழிவு. [illegible]பி[illegible]சித்தம் - எதிரிக்கு உடன்பாடற்றது. அப்பிரசித்த விசேடியம் – எதிரிக்குத் தெரியாத பக்கம். தன்மி–பக்கம். பிரசித்தம்–அறியப்பட்டது. சைதனியவான்–[illegible] அநான்மவாதி–ஆன்மாவை உடன்படா

அறிவை உடையது. [illegible]
தவன். அப்பிரசித்த உபயம் – பக்கமும் துணிபொருளும் எதிரிக்கு அறியப்படாதனவாகக் கூறுதல். மாறுஆனோர் – எதிரிகள்.

181-190 ஏது – அறியப்படாமல். தாம் – பௌத்தர். உபயம் – இரண்டும் – துணிபொருளும் ஆன்மாவும். "அப்பிரசித்த சம்பந்தம்" என்னும் பாடம் பொருத்தமற்றது; "அப்பிரசித்தா சம்பந்தம்" எனவே கொள்ளத்தகும். அஃதாவது, தன் கண் எதிரி இசைந்துள்ள துணிபொருளை நாட்டப்படும் பக்கம்; இங்ஙனம் நாட்டுதல் மிகையாதலால் இது பக்கப் போலியாம். சாதித்தல் – சாதித்தலை உடைய

பக்கம்.

191-193 உபயாசித்தம்–வாதியர் இருவர்க்கும் ஏது அறியப்படாததல். சாதன ஏது – துணிபொருளை நாட்டுதற்குக் கருவியாகக் கொள்ளப்பட்ட ஏது. அன்னியதராசித்தம் – எதிரிக்கு அறியப்படாதத ய ஏது:

சித்த-அசித்தம், ஆசிரய-அசித்தம்,
என நான்கு அசித்தம். உபய-அசித்தம்
சாதன ஏது இருவர்க்கும் இன்றி,
"சத்தம் அநித்தம், கண்-புலத்து" என்றல்.
அன்னியதர-அசித்தம் மாறு ஆய் நின்றற்கு
உன்னிய ஏது அன்ருய் ஒழிதல்;
"சத்தம் செயலுறல் அநித்தம்" என்னின்,
சத்த வெளிப்பாடு அல்லது, செயலுறல்,
உய்த்த சாங்கியனுக்கு, அசித்தம் ஆகும்.
சித்த-அசித்தம் ஆவது
ஏது சங்கயமாய்ச் சாதித்தல்;
ஆவி, பனி. என ஐயுரு நின்றே,
"தூய புகை, நெருப்பு உண்டு" எனத் துணிதல்.
ஆசிரய-அசித்தம் மாறு ஆனவனுக்கு
ஏற்ற தன்மி இன்மை காட்டுதல்;
"ஆகாசம், சத்த குணத்தால், பொருளாம்" என்னின்,
"ஆகாசம் பொருள் அல்ல" என்பாற்குத்
தன்மி அசித்தம். அநைகாந்திகமும்
சாதாரணம், அசாதாரணம், சபக்கைக-
தேசவிருத்தி விபக்க வியாபி,
விபக்கைகதேச விருத்தி சபக்க
வியாபி, உபயைகதேச விருத்தி,
விருத்தா வியபிசாரி என்று ஆறு.
சாதாரணம் சபக்க விபக்கத்துக்கும்
ஏதுப் பொதுவாய் இருத்தல்; "ச
அநித்த ், அறியப்படுதலின்"
"அறியப்படுதல் நித்த அநித்தம் இ

அன்னியதரன் – இருவருள் ஓ ... அசித்தம்-அறியப்படாதது: இங்கு "அன்னிய ... தம்" என்னும் பாடம் பிழைபட்டதாகும்.

201-210 "சித்தவெளிப்பாடு" என்னும் பாடம் பிழை பாடத்து. சத்தவெளிப்பாடென்றே பாடங் கொள்ளுதல் வேண்டும். சத்தவெளிப்பாடு – சத்தத்தின் வெளிப்படுகை. உய்த்த – அனுமானத்தைக் கேட்டறியா நின்ற. சித்தாசித்தம் – சித்தமாகவும் அசித்தமாகவும் தெளிவுறு திருக்கும் ஏது. அஃதாவது உள்ளதோ இல்லையோ என்னும் ஐயத்தின்கட்பட்ட ஏது சங்கயமாய்–ஐயுறப்பட்டு நின்று. சாதித்தல்–சாதிக்கப் பயன்படுத்தப்படுவது. புகை – புகையுண்மையால். ஆசிரயாசித்தம் – எதிரி உடன்படாத பக்கத்தைப் பற்றிக் கூறப்படும் ஏது. ஏற்றதன்மி இன்மை காட்டுதல் – பேசப்படும் பக்கம் உடன்பாடில்லாத நிலையில் அதனைப் பற்றிக் கூறப்படும் பொருள்.

211-220 அனைகாந்திகம் – ஒரு முடிவற்ற ஏது. இது ஆறு வகைத்து 'விருத்தவியபிசாரி' என்னும் பாடம் பிழைபட்டதாகும் விருத்தாவியபிசாரி என்றிருத்தலே பொருந்தும். சபக்கவிபக்கத்தாக்கும் ஏது பொதுவாய் இருத்தல் – சபக்கத்திலும் விபக்கத்திலும் பொதுமையின் நிற்கும் ஏது.

செறியும்; கடம் போல் அநித்தத்து அறிவோ ?
ஆகாசம் போல நித்தத்து அறிவோ ?''
என்னல். அசாதாரணம் ஆவது தான்
உன்னிய பக்கத்து உண்டாம் ஏதுச்
சபக்க விபக்கம்-தம்மில் இன்றுதல்;
''சத்தம் நித்தம், கேட்கப்படுதலின்''
என்னின், ''கேட்கப்படல்'' எனும் ஏதுப்
பக்கத்து உள்ளதாயின் அல்லது,
சபக்க விபக்கத்து மீட்சித்து; ஆதலின்,
சங்கயம் எய்தி அநேகாந்திகம் ஆம்.
சபக்கைகதேச விருத்தி விபக்க
வியாபி ஆவது, ஏதுச் சபக்கத்து
ஓர் இடத்து எய்தி, விபக்கத்து எங்கும்
உண்டாதல் ஆகும்; ''சத்தம் செயலிடைத்
தோன்றுதாகும், அநித்தம் ஆகலின்''
என்றால், ''அநித்தம்'' என்ற ஏதுச்
செயலிடைத் தோன்றுமைக்குச் சபக்க
மின்னினும் ஆகாசத்தினும், மின்னின்
நிகழ்ந்து ஆகாசத்தில் காணுது ஆகலின்,
அநித்தம் கட-ஆதியின் ஒத்தலின், ''கடம் போல்
அழிந்து, செயலில் தோன்றுமோ ? மின் போல்
அழிந்து, செயலில் தோன்றுதோ ?'' எனல்.
விபக்கைகதேச விருத்தி சபக்க
வியாபி ஆவ ... விபக்கத்து
ஓரிடத்து உ ... ங்கு ஒத்து இயறல்;
''சத்தம் ... ன்றும், அநித்தம் ஆதலின்''
அநித்த ... டைத தோன்றற்கு [எனின்
விபக்க ... மின்னினும்,
மின்னி ... ாசத்துக் காணுது,
சபக்கக் கட-ஆ ... கள் தம்மில்

221–230 செறியும்-பொருந்திநிற்கும். அநித்தத்தறிவோ?-அநித்தத் தன்மையோடு சபக்கத்தில் உடனுறையும் அறிவோ? நித்தத்தறிவோ-நித்தியத்தன்மையோடு விபக்கத்தில் உடனுறையும் அறிவோ?. என்னல்-என்றுஐயுறநிற்றல். அசாதாரணமாவது பக்கத்திலுள்ள ஏது சபக்கத்திலும் விபக்கத்திலும் இலதாதல். மீட்சித்து-நில்லாது மடங்கும்தன்மைத்து-இல்லாதது. சங்கயம்எய்தி-ஐயுறவு தோன்ற நிற்றலால்.

231–240 சபக்கைகதேசவிருத்தி விபக்கவியாபியாவது. கூறப்படும் ஏது. சபக்கத்தில் முழுவதும் காணப்படாமல் ஒருபகுதியில் மட்டும் உளதாய் விபக்கத்தில் முழுவதும் பொருந்தி நிற்பதாகும். காணாது-காணப்படாமல். அநித்தம்-அநித்தம் ஆகிய ஏது.

241–250 விபக்கைகதேச விருத்தி சபக்கவியாபியாவது. விபக்கத்தில் ஒருபகுதியில் பொருந்தியுள்ளதாய் சபக்கத்தில் யாண்டும் நிற்றலுடைய ஏதுவாம். ஒத்து இயறல்-யாண்டும் பொருந்தி நடத்தலை உடையது.

எங்கும்ஆய் ஏகாந்தம் அல்ல; "மின் போல்
அநித்தம் ஆய்ச் செயலிடைத் தோன்ருதோ? கடம்போல்
அநித்தம் ஆய்ச் செயலிடைத் தோன்றுமோ ?" எனல்.
உபயைகதேச விருத்தி ஏதுச்
சபக்கத்தினும் விபக்கத்தினும் ஆகி,
ஓர் தேசத்து வர்த்தித்தல்; "சத்தம்
நித்தம், அமூர்த்தம் ஆதலின்" என்னின்,
அமூர்த்த ஏது நித்தத்தினுக்குச்
சபக்க ஆகாச பரமாணுக்களின்
ஆகாசத்து நிகழ்ந்து, மூர்த்தம் ஆம்
பரமாணுவின் நிகழாமையானும்;
விபக்கமான கட சுக-ஆதிகளில்,
சுகத்து நிகழ்ந்து, கடத்து ஒழிந்தமையினும்;
ஏகதேசத்து நிகழ்வது ஏகாந்தம் அன்று:
"அமூர்த்தவாகாசம்போல, நித்தமோ?
அமூர்த்தம், சுகம் போல்; அநித்தமோ?" எனல்.
விருத்தா வியபிசாரி திருந்தா ஏது ஆய்,
விருத்த ஏதுவிற்கும் இடம் கொடுத்தல்;
"சத்தம் அநித்தம், செயலிடைத் தோன்றலின்,
ஒத்தது" எனின், அச் செயலிடைத் தோன்றற்குச்
சபக்கமாயுள்ள கட-ஆதி நிற்க,
"சத்தம் நித்தம், கேட்கப்படுதலின்;
சத்தத்துவம் போல்" எனச் சாற்றிட[illegible]
இரண்டினும் சங்கயம் ஆய், ஏ[illegible]ல.
விருத்தம்-தன்னைத் திருத்[illegible]

251-260 ஏகாந்தமல்ல-ஒருமுடிவிற்கே[illegible]). உபயைகதேச விருத்தியாவது சபக்க[illegible] ஒருபகுதிக்கண் மட்டும் நிற்றலை உடைய ஏதுவாட[illegible] ஓர்தேசம்-ஒருபகுதி. வர்த்தித்தல்-இருத்தல். அமூர்த்தமாதலின்-வடிவுடைப் பொருளன்றாதலின். மூர்த்தம் வடிவுடைப் பொருள்.

261-270 ஏகதேசத்து நிகழ்வது-ஒருபகுதிக்கண்ணே இருத்தலின். "அமூர்த்தம் ஆகாசம்போல"-என்றிருப்பது "அமூர்த்தவாகா[illegible]

ஆகாசம் என்றவாறு. விருத்தாவியபிசாரியாவது விருத்த

ஏதுவிற்கும் இடந்தரும்
ஏதுவாகும். விருத்தம்–விருத்த
ஏது

வினை; அவ்வியபிசாரி – ஒருதலையாக உடையதாய ஏது. ஒத்தது–இயைந்தது. (சத்தம் அநித்தம் என்பது செயலிடைத் தோன்றல் என்னும் ஏதுவினுல் ஒத்தது எனின்.)செயலிடைத தோன்றற்கு–செயலிடைத் தோன்றல் என்னும் ஏதுவின் துணி பொருளாய்க்கூறிய அநித்தத்தன்மைக்கு.

271–275 கடாநிற்க–குடம் முதலியன துணி பொருளைத் துணிதற்கண் துணைசெய்து நிற்பவும். இரண்டினும்–செயலிடைத் தோன்றல், கேட்கப்படுதல் என்னும் ஏதுக்களிரண்டினுலும். சங்கயம்–ஐயம். ஏகாந்தம்–ஒருதலை துணிதல். (விருத்தம் நான்கு வகையது ஆகும்.)